பவுல்
ஒரு சகாப்தம்



தொகுப்பாசிரியர்

பணி. இ. ரெய்மண்ட் ஜோசப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பவுல் ஒரு சகாப்தம்

தொகுப்பாசிரியர்

பணி. இ. ரெய்மண்ட் ஜோசப்
விவிலியப் பேராசிரியர்
தூய பவுல் இறையியல் கல்லூரி
திருச்சி - 620 001

தேடல் வெளியீடு
தூய பவுல் இறையியல் கல்லூரி
அ.பெ.எண்: 36
திருச்சி 620 001
✆ 0431-2402500/2402501

நூல் : **பவுல் ஒரு சகாப்தம்**

தொகுப்பு: பணி. இ. ரெய்மண்ட் ஜோசப்

உரிமை : தேடல் வெளியீடு
தூய பவுல் இறையியல் கல்லூரி
திருச்சி - 620 001

முதல் பதிப்பு : ஏப்ரல் 2009

பக்கங்கள் : xiv + 166

தாள் : SS Maplitho 18:6 (GSM70)

அச்சிட்டோர் : ஜேம்ஸ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்
சிவகாசி

பிரதிகள் : 1500

விலை : ரூ.60/-

உள்ளே

அணிந்துரை vi

என்னுரை x

I. கட்டுரைகள்

அ. பவுல் பார்வையில் ஏழைகள் 03
பணி. இ. ரெய்மண்ட் ஜோசப்
விவிலியப் பேராசிரியர்
தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சி

ஆ. பவுலடியாரின் மேய்ப்புப்பணியில் பெண்கள் 23
திருத்தொண்டர் ஆரோக்கிய பெஸ்கி துரை
இறையியல் நான்காமாண்டு
தூத்துக்குடி மறைமாவட்டம்

இ. புறவினத்தாரின் திருத்தூதர் பவுல் 39
திருத்தொண்டர் ஆரோக்கியசாமி
இறையியல் நான்காமாண்டு
சிவகங்கை மறைமாவட்டம்

ஈ. பவுலின் சமூகங்களும் சமூகக் கருத்துக்களும் - ஒரு விமர்சனப் பார்வை 53
திருத்தொண்டர் பபியான்சு
இறையியல் மூன்றாமாண்டு
கோட்டாறு மறைமாவட்டம்

உ. பவுலடியாரும் ஆட்சியாளர்களும் 64
திருத்தொண்டர் ஆரோக்கியராஜ்
இறையியல் நான்காமாண்டு
தூத்துக்குடி மறைமாவட்டம்

ஊ பவுல் பார்வையில் திருமணமும் பாலுறவும் 83
திருத்தொண்டர் இலாரன்சு
இறையியல் நான்காமாண்டு
மதுரை உயர் மறைமாவட்டம்

எ பல் கலாச்சாரச் சூழலில் பவுலின் அணுகுமுறை 92
திருத்தொண்டர் ஜேம்ஸ் தம்புராஜ்
இறையியல் நான்காமாண்டு
செங்கல்பட்டு மறைமாவட்டம்

ஏ பவுலின் நற்செய்திப் பணியும்
இன்றைய நற்செய்திப் பணியும் 100
திருத்தொண்டர் பீட்டர் பாஸ்டியான்
இறையியல் மூன்றாமாண்டு
தூத்துக்குடி மறைமாவட்டம்

II. கவிதைகள்

அ. அடிமையல்ல சகோதரனே 117
வீரா. கல்கி மோகன், குடந்தை
ஆயுள் கைதி, மத்திய சிறைச்சாலை
திருச்சி

ஆ. அன்பு ஆயுதம் 120
திருத்தொண்டர் தாமஸ் அக்குவினாஸ்
இறையியல் மூன்றாமாண்டு
கார்மேல் சபை, திருச்சி

இ. இறைநம்பிக்கை 123
திருத்தொண்டர் இஞ்ஞாசி அற்புதராஜ்
இறையியல் நான்காமாண்டு
மதுரை உயர் மறைமாவட்டம்

ஈ. உழைக்காதவர் உண்ணலாகா 129
சகோ. எட்மண்ட்
இறையியல் இரண்டாமாண்டு
கோட்டாறு மறைமாவட்டம்

உ. சட்டத்தின் முகவரி 133
திருத்தொண்டர் கிறிஸ்டோ டாபின்
இறையியல் மூன்றாமாண்டு
கோட்டாறு மறைமாவட்டம்

ஊ. திருத்தூதர் பவுலும் சமத்துவமும் 135
திருத்தொண்டர் அம்புரோஸ்
இறையியல் நான்காமாண்டு
வேலூர் மறைமாவட்டம்

எ. சீடத்துவம் 142
சகோ. பன்னீர் ராஜா
இறையியல் முதலாமாண்டு
மதுரை உயர் மறைமாவட்டம்

ஏ. துன்பம் எனக்குத் துணைவன் 146
திருத்தொண்டர் தொன் போஸ்கோ
இறையியல் நான்காமாண்டு
வேலூர் மறைமாவட்டம்

ஐ. அழைப்பு விடுக்கும் அழைப்பு 154
திருத்தொண்டர் பால் வேளாங்கன்னி
இறையியல் நான்காமாண்டு
வேலூர் மறைமாவட்டம்

ஒ. தூய வாழ்வு 160
சகோ. ஜான் கென்னடி
இறையியல் முதலாமாண்டு
பாளையங்கோட்டை மறைமாவட்டம்

அணிந்துரை

கிறிஸ்தவம் வெறும் பக்திமார்க்கம் அல்ல. இயேசு வழியாகத் தம்மையே நமக்கு வாழ்வளிக்கும் அன்பாக வாரித் தந்துள்ள இறைவனுக்குப் பதில் அன்பு என்பது அதற்கு இன்றியமையாததுதான். ஆனால் இறைவன்பால் கொண்டுள்ள அன்போடு மட்டும் கிறிஸ்துவ வாழ்வு முடிந்துவிடுவதில்லை. எனினும் இன்றைய பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் வாழ்வை நோக்கினால் அது வெறும் பக்தி மார்க்கமாகவே தோன்றுகிறது. ஏனெனில் திருவழிபாடு, பக்தி முயற்சிகள், திருவிவிலிய வாசிப்பு, செபம், தியானம் என்பவற்றுடன் அவர்களது கிறிஸ்தவ வாழ்வு முடிந்து விடுகிறது. இயேசுவின்மீது அவர்கள் கொண்டுள்ள இறைபக்தி மனிதநேயமாக அதிகம் மலருவதில்லை; இயேசுவுக்கு அவர்கள் செய்யும் மாட்சிமை பிற மனிதர்களை மதிக்கவும், அவர்மீது அவர்கள் காட்டும் அன்பு பிற மனிதருக்கு அன்புப் பணி புரிய அவர்களை அதிகம் தூண்டுவதாகவும் தெரியவில்லை.

கிறிஸ்தவம் வெறும் ஞானமார்க்கமும் அல்ல. இயேசு வழியாக வெளிப்பட்டுள்ள இறைமையைப் பற்றிய மறைப் பேருண்மைகளை ஏற்றுக் கொள்வது கிறிஸ்தவ வாழ்விற்கு அடிப்படையானதுதான். எனினும் கிறிஸ்தவம் அறிவுப் பூர்வமாக அந்த மறைப் பேருண்மைகளை ஏற்றுக் கொள்வதோடு முடிந்துவிடும் வெறும் அறிவு நெறியும் அல்ல. அந்த மறை உண்மைகள் வாழ்வாக்கப்பட வேண்டும். மனித ஈடுபாடுகளின் தன்மைகளையும், முக்கிய நோக்கங்களையும் அவை நிர்ணயிக்க வேண்டும். இல்லையெனில் செயல்பாடற்ற அந்த நம்பிக்கைகள் செத்த நம்பிக்கைகளே.

கிறிஸ்தவம் வெறும் தர்மமார்க்கமோ அல்லது அறநெறியோகூட அல்ல. அறச் செயல்பாடு, நீதி நிலைப்பாடு இல்லாத கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமற்றதுதான். ஆனால் வெறும் அறநெறி

வாழ்வை மட்டும் நாம் முழுமையான கிறிஸ்தவ வாழ்வு எனக் கருதிவிடவும் முடியாது. சமூக சேவை மட்டுமே கிறிஸ்தவத்தின் சாரம், நீதிக்கான போராட்டங்களே கிறிஸ்துவத்தின் நிறைவு என எண்ணிச் செயல்படும் சில கிறிஸ்தவர்களும் இன்று உள்ளனர். திருவழிபாடு, திருவிவிலிய வாசகம், செபம் என்பவற்றின் வழியாக இயேசுவையும் அவரது திருவுளத்தையும் அதிகமதிகமாக அனுபவித்தறிவது, அன்பால் அவரோடு உள்ள ஒன்றிப்பில் வளருவது என்பன பற்றி அவர்கள் அதிகம் அக்கறைக் காட்டுவதில்லை. ஆனால், இத்தகைய சமய ஈடுபாடு இல்லாதவர்களை அவர்களது புதிய சமூக உருவாக்க முயற்சிகள் கிறிஸ்துவின் இறையாட்சி இலட்சியத்திலிருந்து தடம் மாற்றிவிடும் ஆபத்து அதிகம் என்பதே அண்மைக்கால அனுபவங்கள் காட்டும் உண்மை.

நாளுக்கு நாள் இயேசு கிறிஸ்துவை அதிகமதிகமாக அனுபவித்தறிந்து, அவரோடு உள்ள அன்புறவில் ஆழமடைந்து, அவரது இறையாட்சி இலட்சியச் செயலாக்கத்தில் முனைப்புடன் ஈடுபடுவது கிறிஸ்து வாழ்வு. அதாவது, அறிவு நெறியாக அரும்பி, அன்பு நெறியாக வளர்ந்து, அறநெறியாக முழுமை காண்பதே கிறிஸ்தவம். இதனை நமக்குத் தெள்ளத் தெளிவாகச் சொல்லி மட்டும் அல்ல, வாழ்ந்தும் காட்டிச் சென்றுள்ளவரே திருத்தூதர் பவுல்.

தமஸ்கு வழியில் அனுபவம் பெற்று, இயேசுவை முதன் முறையாக அனுவித்து அறியத் தொடங்கியவர் திருத்தூதர் பவுல். அந்த அறிவில் நாளுக்கு நாள் வளருவதில் தணியாத தாகம் கொண்டிருந்தவர் அவர். அதற்காகத்தான் அதுவரை முக்கியமானவை எனக் கருதியிருந்த அனைத்தையும் இழந்துவிடவும் முன் வந்தார். இதனால்தான் அவரே பின்வருமாறு கூறுகிறார்: "என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன்பொருட்டு மற்ற எல்லாவற்றையும் நான் இழப்பாகக் கருதுகிறேன்" (பிலி 3:8).

இயேசுவைப் பற்றி அறிந்து கொள்வதில் மட்டுமல்ல. அவர்மீது கொண்ட ஆழமான அன்பிலும் நாளும் வளர்ந்திட முனைந்தவர் பவுல். குறிப்பாக அவரது அன்பிலிருந்து தம்மை எதுவும் பிரித்துவிடக் கூடாது,

பிரித்துவிடவும் முடியாது எனும் உறுதிப்பாடும் அவருக்கு இருந்தது. இதனால்தான் அவர் எழுதுகிறார்: "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்கமுடியும்? (உரோ 8:35).

எனினும் இயேசுவின் மீது, பவுல் கொண்டிருந்த தணியாத, தளராத அன்பு வெறும் பக்தியாக நின்றுவிடவில்லை. இந்த மண்ணையும் மனிதர்களையும் மறந்த வானக ஒன்றிப்பாகவும் மாறிவிடவில்லை. மாறாக, மாந்தர் அனைவரையும் இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பில் சகோதர மனிதர்களாக ஒன்றிணைத்துச் சமத்துவச் சமூகங்களை உருவாக்கும் நற்செய்திப் பணியாக உருவெடுத்தது. ஆம், பவுலின் நற்செய்திப் பணி இன்று, பரவலாகக் காணப்படுவது போன்ற வெறும் வாய்ச்சொல் முழக்கம் அல்ல. மாறாக, அது மாந்தரை இயேசுவுடன் ஓருடலின் உறுப்புகளாக ஒன்றிணைக்கும் கூட்டொருமைச் சமூகங்களை உருவாக்குவது. அதில் ஆண் - பெண், கிரேக்கர்- யூதர். உரிமைக் குடிமகன் - அடிமை எனும் பாகுபாடுகள் இல்லை (கலா 3:28). மாறாக, அதில் "ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து மகிழ்ச்சியுறும்" (1கொரி 12:26).

இவ்வாறு, கிறிஸ்தவம் அல்லது சீடத்துவ வாழ்வு என்றால் என்ன என்பதை நன்கு புரிந்து, அதனைத் தம் திருமுகங்கள் வழியாக நமக்கு எழுதித் தந்துள்ளது மட்டும் அல்ல, வாழ்ந்தும் காட்டியுள்ளவர் இயேசுவின் மிகப்பெரும் திருத்தூதரானப் பவுல். அவருடைய படிப்பினைகள், பணிகள் போன்றவற்றை நாம் ஆழத் தெரிந்து கொள்வது இன்றைய நம் கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாத உதவியாகும்.

இந்நோக்குடன்தான் தூய பவுலைப் பாதுகாவலராகக் கொண்டு இயங்கும் எங்கள் இறையியல் கல்லூரியில் பயிலும் எங்கள் இறையியல் மாணவர்கள் 'பவுல் ஒரு சகாப்தம்' எனும் இந்நூலைப் படைத்துள்ளனர். இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளும் கவிதைகளும்

திருத்தூதரின் பல்வேறு படிப்பினைகளை ஆழமாகவும் தெளிவாகவும் படம் பிடித்துக் காட்டுகின்றன. பவுலின் இந்த மாபெரும் யூபிலி ஆண்டில் அவர் பற்றி ஏற்கனவே பல நூல்கள் தமிழில் வெளிவந்திருப்பினும் அவற்றுடன் இந்நூலுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இளம் இறையியலாளர்களின் படைப்பு என்பதுதான் அது.

இந்நூலில் உள்ள கட்டுரைகள், கவிதைகளை எழுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் என் உளமார்ந்த பாராட்டுக்கள். அவர்களின் முயற்சிகளை ஊக்குவித்து, ஒருங்கிணைத்துத் தொகுத்தளித்துள்ள எங்கள் கல்லூரியின் கல்வித்துறை முதல்வர் பணி இ. ரெய்மண்ட் ஜோசப் அவர்களுக்கும் என் இதய நன்றிகளும் பாராட்டுக்களும். இந்நூலை வாங்கிப் படித்துத் தங்கள் சீடத்துவ வாழ்க்கையைச் செழுமைப்படுத்தவும் இந்த இளம் இறையியலாளர்களின் எழுத்துப் பணியை ஊக்குவிக்கவும் அனைவருக்கும் அன்புடன் அழைப்பு விடுக்கிறேன்.

திருச்சி
12.04.2009

தே. அல்போன்சு
தூய பவுல் கல்லூரி, திருச்சி



என்னுரை

தான் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது, இன்று இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த பின்னும் கிறிஸ்துவத்தில் சர்சைக்குரிய மனிதராகத் திகழ்பவர் திருத்தூதர் பவுல் என்றால் அது மிகையாகாது. தொடக்கத்தில் கிறிஸ்துவை வெறுத்தார். கிறிஸ்துவத்தை எதிர்த்தார். வேரோடு அழிக்க முனைந்தார். தாம் தடுத்தாட்கொள்ளப்பட்ட பிறகு கிறிஸ்துவை நேசித்தார். அவருக்காக அனைத்தையும் இழக்கத் தயாரானார். கிறிஸ்து யூதருக்கு மட்டுல்ல, உலகினர் அனைவருக்கும் சொந்தம் என்று முரசு கொட்டி அறிவித்தார். புறவினத்தாரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர விருத்தசேதனத்தையும், மோசே சட்டத்தையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நீதித் தீர்ப்பு வேண்டி நின்றார்.

கிறிஸ்தவத்தை விருத்தசேதனம், மோசே சட்டம் ஆகிய இரண்டின் பிடியிலிருந்தும் விடுவிக்கும் எண்ணத்துடன் ஒரு காலத்தில் தான் அதிகம் நேசித்த யூத மறையோடு போராடினார். கிறிஸ்துவின் மிது நம்பிக்கை கொண்ட பிறகு யூதர், புறவினத்தார் என்ற வேறுபாட்டிற்கு வழியில்லை, எல்லாரும் சமம் என்று எடுத்துரைத்தார் (கலா 3:28). தீட்டுச் சமூகங்களின் சுவர்களை உடைத்தெறிந்து வீட்டுத் திருச்சபைகளை முன்னிலைப்படுத்தி கிறிஸ்தவர்களின் பாதங்கள் இன வேறுபாடின்றி எல்லோரின் வீடுகளுக்குள்ளும் பதியும் வாய்ப்பை ஏற்படுத்தினார். இதன் மூலம் இடத்தை மையப்படுத்தி கூடிச் செபிக்கும் (synagogue) யூதச் சமயத்திற்கு மாற்றாக உறவை மையப்படுத்திக் கூடிச் செபித்து உணவு உண்ணும் நட்புறச் சமூகங்களைக் (table fellowship) கட்டி எழுப்பினார். இவரது புதிய சிந்தனைகள் இவர் வாழ்ந்த காலத்தில் சர்ச்சைகளைக் கிளப்பின. யூதக் கிறிஸ்தவர்கள் இவரைப் போலிப் போதகர் என்றனர். பவுல் சென்ற இடங்களுக் கெல்லாம் பின் தொடர்ந்து சென்று அவரைத் துன்புறுத்தினர். பிரிதொரு கிறிஸ்துவைப் பவுல் போதிப்பதாகக் குற்றம் சாட்டினர்.

பவுல் குறித்த சர்ச்சைகள் இன்றும் தொடர்கின்றன. இன்றைய சர்ச்சைகள் யூதச் சமயச் சிந்தனைகள் என்னும் அடிப்படையில் எழவில்லை என்பது உண்மைதான். ஆனால் இன்றைய உலக மாந்தர்களின் சிந்தனைகளுக்கும் பவுலின் சிந்தனைகளுக்குமிடையே நடைபெறும் உரசல்களாக மோதல்களாக வெடித்துள்ளன.

பவுல் பெண்களின் எதிரி, இறைவாக்குரைக்கும்போது பெண்கள் தலையை மூட வேண்டும் (1கொரி 11:5), சபைகளில் பெண்கள் பேசாமல் அமைதியாக இருக்க வேண்டும் (1கொரி 14:34) என்று கூறுவதன் மூலம் பெண்ணடிமைத்தனத்தின் சார்பாளராகப் பவுல் உள்ளார் என்று எதிர்த்துக் கிளம்பும் பெண்ணியவாதிகள் ஒரு பக்கம்.

அடிமைகளே நீங்கள் உங்கள் அதிகாரிகளுக்கு, தலைவர்களுக்கு அச்சத்தோடும் நடுக்கத்தோடும் முழு மனத்தோடும் கீழ்படியுங்கள் (எபே 6:5) என்று கூறுவதன் மூலம் ஆண்டான் - அடிமைச் சமூகத்தைக் கட்டிக் காக்கப் பவுல் முயலுகிறார் என்று குற்றம் சுமத்தும் விடுதலைச் சிந்தனையாளர்கள் மறுபக்கம்.

பவுலடியார் குறித்து எழும் இது போன்ற சர்ச்சைகளை இன்றையக் காலக் கண்டோட்டத்துடன் ஆய்ந்து பார்த்து இன்றைய கிறிஸ்துவ வாழ்வுக்கானப் பதில்களைத் தேடும் முயற்சியின் விளைவுதான் "பவுல் ஒரு சகாப்தம்" என்னும் நூல்.

ஏழைகளின் சார்பாளர் பவுல் என்று உரக்கக்கூறி அதற்கான வலுவான ஆதரங்களைச் சொல்லுவதிலும், பெண்களை நற்செய்தித் தூதுரைப் பணியில் முன்னிலைப்படுத்தி ஆண்-பெண் சமத்துவத்திற்கான குரலை ஓங்கி உயர்த்தியச் சிந்தனையாளர் பவுல் என்று கூறுவதிலும், ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட புறவினத்தாரை மைய நீரோட்டத்திற்குள் இழுத்து வந்த புரட்சியாளர் பவுல் என்று கூறுவதிலும், சமதர்மச் சமூகங்களைக் கட்டி எழுப்புவதில் பவுலின் அக்கறையைக் கூறுவதிலும், ஆட்சியாளர்கள் அடக்கி ஆள்வதற்கல்ல பணியாற்றுவதற்கே என்னும் புதிய சித்தாந்தத்தைத் தன் உடன்பணியாளர்கள் வழி செயல்படுத்திக் காட்டுவதில் பவுல் ஒரு

முன் மாதிரி என்று விவாதிப்பதிலும், குடும்ப – மண வாழ்க்கையில் தூய்மையும் ஒழுக்க நெறியும் பேணப்பட்டு சிந்தனையிலும், செயலிலும், பேச்சிலும், ஒழுக்கக்கேடுகள் வேரறுக்கப்பட வேண்டும் என்று முழங்கும் அறநெறியாளர் பவுல் என்று கூறுவதிலும், பவுலைப் பல கலாச்சாரங்களையும் புரிந்து வாழ்ந்தவர் என்று கூறுவதிலும், நற்செய்தித் தூதுரைப் பணிக்கு இலக்கணம் வகித்தவர் பவுல் என்று சித்தரிப்பதிலும் இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் தெளிவான பார்வையும் கருத்தாழமிக்க சிந்தனைகளையும் கொண்டனவையாக உள்ளன.

இந்நூலில் இடம்பெற்ற பத்துக் கவிதைகளும் பவுலின் வாழ்வியல் சிந்தனைகளில் முக்கியமான பத்துச் சிந்தனைகளைத் தலைப்பாக கொண்டுள்ளன. இது பேராசிரியர்கள், இறையியல் வல்லுனர்களின் எழுத்தாக்கமாக இல்லாவிட்டாலும் வளரும் இறையியலாளரின் கைவண்ணத்தில் மிளிரும் அட்சயப் பாத்திரம் என்றே சொல்ல வேண்டும். எனவே இளம் இறையியலாருக்குரிய மிடுக்கும் துடுக்கும் இப்படைப்புகளில் உண்டு. தங்கள் சிந்தனைகளால் பவுலடியாரையும் சங்கடப்படுத்தும் துணிச்சலும் இவர்கள் எழுத்துக்களில் உண்டு. அதே வேளையில் பவுலடியாரைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்த ஞானம் படைப்பாளர்களின் படைப்புகளில் வெளிச்சமாகத் தெரிகிறது.

இப்படைப்புகளைத் தேடல் வெளியீடு புத்தகமாக வெளியிட இசைவு தந்த, உற்சாகமூட்டி அணிந்துரையும் வழங்கிய எங்கள் கல்லூரிக் குழுமத் தலைவர் பணி தே. அல்போன்சு அவர்களுக்கு நன்றி. புத்தகமாக வெளியிடும் பொறுப்பை ஏற்ற தேடல் வெளியீடு இயக்குனர் பணி. அந்துவான் அவர்களுக்கு நன்றி. படைப்புகளை அழகுறக் கணினியில் பதித்து அச்சிடுவதில் உதவிய ஆனந்தி அவர்களுக்கு நன்றி. பவுலடியாரின் இரண்டாயிரம் யூபிலியை முன்னிட்டு பவுலடியார் குறித்த இறையியல் மாணவர்களின் படைப்புக்களைப் புத்தகமாக வெளியிடுவதற்குப் பெரும் முயற்சி எடுத்தவர் திருத்தொண்டர் பீட்டர் பாஸ்டியான். இப்படைப்பை வெளியிடுவதில் என்னையே இயக்கியவர் அவர் என்றால் அது மிகையாகாது. விவிலிய

அருங்காட்சியகச் செயலராக அவர் இருந்து செயல்பட்டுப் பவுலடியாரின் இரண்டாயிரம் யூபிலி நினைவாக எடுத்த மா முயற்சி இது. அவரோடு ஒத்துழைத்துக் கட்டுரைகள், கவிதைகள் போன்ற படைப்புக்களைத் தந்த 17 இளம் இறையிளார்களையும் நன்றியுடன் நினைக்கிறேன். இப்புத்தகத்தை அழகுற அச்சடித்துக் கொடுத்த ஜேம்ஸ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ், சிவகாசி மற்றும் அட்டைப்பட தயாரிப்பில் உதவிய யூ அண்டு ஐ நிறுவனங்களுக்கும் நன்றி.

திருச்சி
14.04.2009

பணி. இ. ரெய்மண்ட் ஜோசப்
கல்வித் துறை முதல்வர்

I

கட்டுரைகள்

அ. பவுல் பார்வையில் ஏழைகள்

பணி. இ. ரெய்மண்ட் ஜோசப்
விவிலியப் பேராசிரியர்
தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சி

முன்னுரை

திருத்தூதர் பணிகளின் நூலாசிரியர் லூக்கா நமக்குப் படம் பிடித்துக் காட்டும் தொடக்கத் திருச்சபை உயிரோட்டமுள்ள ஒன்று; இயேசுவின்மீது நம்பிக்கை கொண்ட சமூகம்; இயேசுவின் நற்செய்தியைப் போதிக்கும் எண்ணத்துடன் எத்தகைய இழப்புக்கும் போராட்டத்துக்கும், துன்புறுத்தலுக்கும் தயாராக இருந்த சமூகம். இச்சமூகம் இறை நம்பிக்கையில் வேரூன்றியது மட்டுமல்ல, எண்ணிக்கையிலும் பெருகி வந்தது. நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றுபட்ட ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்த பொதுவுடைமைச் சமூகம் அது. எனவேதான் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லாருக்கும் எல்லாம் பொதுவாய் இருந்தது. நிலபுலன்களை, பிற உடைமைகளை விற்று அனைவரும் அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர். தனி உடைமைகள் என்று எவருக்கும் இல்லை. தேவையில் உழல்வோர் என்று அவர்களில் யாரும் காணப்படவில்லை (திப 2:43-47; 4:32-37). இது ஒரு இறையரசுக் கனவுச் சமூகம். அதே சமயத்தில் பாலஸ்தீனத்தில் தொடக்கத் திருச்சபையில் தேவையில் உள்ளவர்களும் இருந்தார்கள் என்னும் உண்மையைத் திருத்தூதர் பணிகளின் நூலாசிரியரால் மறைக்க முடியவில்லை. எனவேதான் கிரேக்க மொழி பேசுவோரிடையே உள்ள கைம்பெண்கள் கவனிக்கப்படவில்லை. அவர்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபட ஏழு பேரைத் திருத்தொண்டர்களாகத் திருத்தூதர்கள் நியமித்தார்கள் என்று விளக்குகிறார் (திப 6:1-6). திருச்சபைத் தனது தொடக்க நிலையிலே ஏழைகள், எளியோர், தேவையில் உள்ளோர் ஆகியோரை மனதில் வைத்துச் செயல்பட்டதை மேலே குறிப்பிட்ட

செய்தி வலியுறுத்துகிறது. இந்தக் கட்டுரையில் தொடக்கத் திருச்சபையின் அடிநாதமான பவுல் ஏழைகள், தேவையிலிருப்போர், ஒடுக்கப்பட்டோர் போன்றோருக்கு எத்தகைய பணியாற்றினார் என்பதைக் காண்போம்.

ஏழை – எளியோருக்குப் பவுல் ஆற்றியப் பணிகளை மட்டும் இங்கு பட்டியலிட்டுத் தொகுத்துத் தருவது நமது நோக்கமல்ல. மாறாக ஏழை – எளியோர் பணியில் பவுல் அக்கறை காட்ட அவரை உந்தித் தள்ளிய சூழ்நிலை என்ன? பவுலின் திருச்சபையில் ஏழைகள் உண்டா? எந்த விதங்களிலெல்லாம் ஏழை – எளியோர் சார்பான செயல்களைப் பவுல் முன்னெடுத்தார்? என்பன போன்ற சிந்தனைகளை ஆய்வு செய்யும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

எருசலேம் - ஏழைகளின் திருச்சபை

எருசலேம் திருச்சபை ஏழைகளின் கூடாரமாக இருந்தது என்பதற்கான நேரடி ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் அங்கும் ஏழை - எளியோர் அதிகமாக வாழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. பெந்தகோஸ்தே நாளில் எருசலேமில் உதயமான கிறிஸ்தவம் மிக வேகமாக எருசலேம் நகர யூதர்களைக் கவர்ந்திழுத்தது. இது யூதத் தலைவர்களை வெகுவாக அதிர்ச்சிக்குள்ளாக்கியது மட்டுமல்ல, இதனால் கிறிஸ்தவர்களை அவர்கள் துன்பத்திற்குள்ளாக்குவதும் அதிகமானது. இதன் காரணமாக, கிறிஸ்தவர்களுக்கு மன உளைச்சல் மட்டுமல்ல, பொருளிழப்பும் ஏற்பட்டது. சவுல் இத்தகைய மறைத் துன்புறுத்தல்களை முன்னின்று நடத்தியதாக நாம் திருத்தூதர் பணிகள் நூலில் காண்கிறோம் (திப 8:1-3). எனவே கிறிஸ்தவர்கள் சிதறி சமாரியா, யூதேயா நாட்டுப் புறங்களில் குடியேறினர். வழக்கமாகப் போர்களிலும், குழப்பங்களிலும் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் ஏழை – எளியோரே. இவர்களுக்கு எங்கு வாழ்ந்தாலும் ஒன்றுதான். அதனால் பெரும்பாலான ஏழை-எளியக் கிறிஸ்தவர்கள் எருசலேமிலேயே தங்கிவிட்டதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. அத்தோடு இவர்கள் பெரும்பாலும் ஆலயத்திற்கு வருவோர் வழங்கும் தான தர்மங்களை நம்பி வாழ்பவர்களாக இருக்க வேண்டும். எனவே வேறு இடம் சென்று வாழவும் இவர்களுக்கு வாய்ப்பில்லை. பெலிக்ஸ் என்னும் உரோமை ஆளுனருக்கு முன் பவுல் தனது எருசலேம் பயணத்தைக் குறித்துப் பேசும்போது தன் இனத்தாருக்குப் பண உதவி செய்ய எருசலேம் வந்ததாகக் குறிப்பிடுகிறார் (திப 24:17). சின்ன

ஆசியா, மாசிதோனியா, அக்காயா பகுதிகளுக்குத் தூதுரைப் பயணமாகப் பவுல் சென்றபோது எருசலேமில் வாழும் இறைமக்களுக்காக அப்பகுதிகளில் பணமும், பொருளும் சேகரித்ததற்கான குறிப்புகள் உள்ளன: கலாத்தியா (1கொரி 16:1), மாசிதோனியா (உரோ 15:28; 2கொரி 8:1), பிலிப்பி (பிலி 4:18), அக்காயா (உரோ 15:28). இவ்வாறு பவுலும் அவரது உடன்பணியாளர்களும் பணமும், பொருளும் சேர்த்தது "ஏழைகளுக்கு (ptochos) உதவி செய்ய மறக்க வேண்டாம்" (கலா 2:10) என்று திருத்தூதர்கள் கொடுத்தப் பொதுவான கட்டளையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இங்கு ஏழைகளைக் குறிக்கப் பயன்படுத்தும் கிரேக்கச் சொல்லான 'ptochos' ஒடுக்கப்பட்ட, வாழ்வாதாரம் இல்லாத வறுமையில் வாடிய ஏழை எளிய மக்களைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் எருசலேமில் பொருளுதவி பெறும் மக்கள் என்று பவுலால் குறிப்பிடப்படுபவர்கள், 'ptochos' என்னும் சொல்லால் அழைக்கப்படவில்லை, மாறாக 'இறைமக்கள்' என மொழிபெயர்க்கப்படும் 'hagios' என்னும் கிரேக்கச் சொல்லால் அழைக்கப்படுகின்றனர் (உரோ 15:26; 1கொரி 16:1; 2கொரி 8:4). பவுலின் மனமாற்றத்திற்குப் பிறகு அனனியாவை இயேசு தமஸ்குவில் சந்திக்கும்போது இயேசுவுக்கு மறுமொழி கொடுக்கும் அனனியா, "இம்மனிதன் எருசலேமிலுள்ள இறைமக்களுக்கு என்னென்ன தீமைகளைச் செய்தான் என்பதைப் பற்றிக் கேட்டிருக்கிறேன்" (திப 9:13) என்று கூறும்போது 'hagios - இறைமக்கள்' என்ற சொல்லையே லூக்கா பயன்படுத்துகிறார்.

'இறைமக்கள்' எனப் பொருள்தரும் 'hagios' என்னும் கிரேக்கச் சொல் குறித்துக் காட்டும் எருசலேம் வாழ் மக்கள் யார்? என்ற கேள்வி இங்கு எழும்புகிறது. 'இறைமக்கள்' என்று குறிப்பிடப்படுபவர்கள் சமூக பொருளாதார அளவில் ஏழைகளா? அல்லது நற்செய்தியின் பொருட்டுச் செல்வத்தைத் துறந்து எளிமை பூண்டு வாழ்ந்து வந்த 'அனாவிம்' போன்ற ஏழைகளின் மனதுடைய தூய சிந்தனையாளர்களா? H.D. பெட்ச் என்னும் விவிலிய அறிஞர் 'இறைமக்கள்' என்னும் சொல் செல்வத்தைத் துறந்து புனிதமான வாழ்வு வாழுவோரைக் குறிக்கிறது என்கிறார்.[1] அப்படியெனில் இவர்களை மத் 5:3இல் இடம்பெறும் 'எளிய மனத்தோருக்கு' ஒப்பிடலாம். ஆனால் 'இறைமக்கள்' என்னும் சொல் எளிய மனத்துடன் வாழ்ந்தவர்களைக் குறிப்பதற்கான எந்த சாத்தியக் கூறும் பவுலின் எழுத்துக்களில் இல்லை. தனது திருமுகங்களில் பவுல்

இரு இடங்களில் பொருளுதவி பெறுபவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பொருளாதார ஆதாரம் இல்லாத ஏழைகளைக் குறிக்கும் 'ptochos' என்னும் கிரேக்கச் சொல்லையே பயன்படுத்துகிறார் (உரோ 15:26; கலா 2:10). எனவே எருசலேம் திருச்சபையின் 'இறைமக்கள்' என்னும் சொல்வழக்குப் பொதுவாகச் செல்வத்தைத் துறந்து எளிமை பூண்டு வாழ்ந்த 'அனாவீம்' குழுவினரைக் குறிக்காமல் பொருளாதாரத்தில் கீழ்நிலையில் இருந்தச் சமூகத்தால் ஓரங்கட்டப்பட்ட வறுமையில் வாடிய ஏழை – எளிய மக்களையே குறிக்கிறது என்பது துணிபு.

எருசலேம் திருச்சபையின் ஏழ்மைக்கான காரணிகள்

முதல் நூற்றாண்டு எருசலேம் திருச்சபைப் பிற சபைகளின் உதவிகளை நாடி இருந்த ஓர் ஏழைத் திருச்சபை. இவ்வாறு ஏழ்மையும், வறுமையும் எருசலேம் திருச்சபையை ஆட்கொள்ளக் காரணங்களும் பல இருந்தன.

1. எருசலேமில் வாழ்ந்த கிரேக்க மொழி பேசுவோர் மத்தியில் உள்ள விதவைகள் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தனர். எருசலேம் நகர விதவைகளுக்கு ஆதரவு அளிப்பதும், அவர்களுக்குப் பொருளுதவி செய்வதும் தொடக்கத் திருச்சபையின் முக்கியமான பணிகளில் ஒன்றாக இருந்தது. இவர்களைக் கவனிப்பதற்காகவே திருத்தொண்டர் எழுவர் நியமிக்கப்படுகின்றனர் (திப 6:1-6).

2. கிளாதியு பேரரசர் ஆட்சிக் காலத்தின் (கிபி 41-54) முற்பகுதியில் உலகில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அது எருசலேம், யூதேயாப் பகுதிகளைப் பெரிதும் பாதித்து மக்களைப் பட்டினிச் சாவுக்கு இட்டுச் சென்றிருக்க வேண்டும். இந்தச் சூழலில் எருசலேம் திருச்சபையைத் தாங்கும் எண்ணத்தில் சிரியா நாட்டு அந்தியோக்கியாத் திருச்சபை பர்னபா, சவுல் வழியாகப் பொருளுதவிகளை அனுப்பி வைத்தது (திப 11:27-30; 12:25). இச்சூழல் எருசலேம் திருச்சபையில் உணவுப் பற்றாக்குறை உச்சத்தில் இருந்த நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.

3. திருச்சபையின் வளர்ச்சியைக் கண்ட யூதத் தலைவர்கள் எருசலேம் திருச்சபையினரைத் துன்புறுத்தினர். அவர்களுக்குப் பொருளாதார ரீதியாக இழப்பை ஏற்படுத்தினர். இதனால் எருசலேம் கிறிஸ்தவச்

சமூகத்தில் பொருளாதாரச் சமூகச் சீரழிவுகளும் வீழ்ச்சியும் ஏற்பட்டிருக்க வேண்டும்.[2]

4. ஏழை – பணக்காரரிடையே இருந்த வேறுபாடுகளை விளக்கிக் கூறுகிறது யாக்கோபின் திருமுகம் (யாக் 1:9; 2:1-6; 5:1-6). எருசலேம் நகர ஆயராக யாக்கோபு இருந்தார் எனக் கிறிஸ்தவப் பாரம்பரியத்தின் வழியாக நாம் அறிகிறோம். ஏழைகளைக் குறித்து யாக்கோபு கூறும் செய்திகளே எருசலேமில் ஏழைகள் இருந்ததையும், அவர்களது கீழான நிலையையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

5. எருசலேம் திருச்சபையில் தொடக்கக்காலக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த பொதுவுடைமை வாழ்க்கை முறையும் (திப 2:43-37 4:32-37) அவர்களை ஏழைகளாகவும் வறியவர்களாகவும் ஆக்கியிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் யாரும் தனியுடைமை வைத்திருக்க விரும்பவில்லை. எல்லாரும் எல்லாவற்றையும் விற்றுத் திருத்தூதர்கள் பாதங்களில் கொண்டுவந்து வைத்துவிட்டனர். திருத்தூதர்களும் எல்லாவற்றையும் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டனர். ஒரு கட்டத்தில் இனி விற்பதற்கு ஒன்றுமில்லாத நிலை கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். எருசலேம் கிறிஸ்தவர்கள் உடைமைகளை இழந்து அடுத்தவரை அண்டி வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். பிற சபைகளின் உதவிக்காக ஏங்கிய ஏழ்மை நிலைக்கு எருசலேம் திருச்சபை இவ்வாறு தள்ளப்பட்டிருக்க வேண்டும்.

6. உரோமையர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கிய செயலும் எருசலேம் திருச்சபையில் கிறிஸ்தவர்களுக்குப் பொருளாதார நெருக்கடியைக் கொண்டு வந்திருக்க வேண்டும். சிறியோர், பெரியோர், செல்வர், வறியோர், உரிமைக் குடிமக்கள், அடிமைகள் ஆகிய எல்லோரும் அவர்களது வலக்கையிலோ, நெற்றியிலோ விலங்கின் பெயரையோ அல்லது எண்ணையோ குறியாக இட்டுக் கொள்ள வேண்டுமென்றும், அப்படிச் செய்யாதவர்கள் பொருட்களை விற்கவோ வாங்கவோ முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் திருவெளிப்பாடு கூறுகிறது (திவெ 13:17). இச்சூழல் உரோமைப் பேரரசில் நிகழ்ந்தது.

கிறிஸ்தவர்கள் இத்தகைய உரோமைச் சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுத்ததால் அவர்களால் எவ்வித வியாபாரமும் நடத்த இயலாமல் பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாகினர். எருசலேம் திருச்சபையிலும் இந்நிலை நேர்ந்ததால் இச்சூழல் திருச்சபையை வறுமை நிலைக்குத் தள்ளியிருக்க வேண்டும்.

7. முதல் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் எருசலேமை நோக்கித் திருப்பயணிகள் பெருமளவில் வந்தனர். மெசியா விரைவில் வரப்போகிறார்; அவர் எருசலேமில் தோன்றுவார்; உரோமையரது ஆதிக்கத்திலிருந்து இஸ்ரயேல் மக்களை மீட்கப் போகிறார் என்ற செய்தி பெருமளவிலான மக்களை (கிறிஸ்தவர்கள் + யூதர்கள்) எருசலேம் நோக்கி வரத் தூண்டியது. இவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்ய வேண்டிய பணியை எருசலேம் கிறிஸ்தவர்கள் மனமுவந்து செய்திருக்கலாம். ஆனால் திருப்பயணிகளுக்கு உணவு கொடுக்கக்கூடிய பொருளாதாரச் சூழல் படிப்படியாகக் குறைந்து முற்றிலுமாக அதற்கான வாய்ப்புகள் அவர்களிடம் இல்லாமல் போயிருக்க வேண்டும். எனவே பிற சபைகளின் உதவி அவர்களுக்குப் பெரிதும் தேவைப்பட்டிருக்க வேண்டும்.

8. வயதான எல்லா யூதர்களின் இறுதி விருப்பம் எருசலேம் நகருக்குள் இறந்து நகருக்குள்ளேயே புதைக்கப்பட வேண்டும் என்பது. எனவே வயதான யூதர்கள் பெரும் எண்ணிக்கையில் நகரில் குடியேறி இருக்கலாம். இவர்களுக்கான உணவுத் தேவைகளை எருசலேம் திருச்சபை முன் நின்று செய்ததாலும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கலாம். இந்நிலை எருசலேம் கிறிஸ்தவர்களிடையே ஏழ்மையை உருவாக்கி இருக்கலாம்.

பவுலின் திருச்சபைகளில் யூதக் கிறிஸ்தவர்கள் நிலை

யூதேயாவில் மறைத்தூதுப் பணி ஆரம்பித்து 15 ஆண்டுகள் கழித்தே புறவினத்து நாடுகளில் பவுலடியாரின் மறைத்தூதுப் பணி தொடங்கி இருக்க வேண்டும். கிபி 46இல் பவுல் தனது புறவினத்து நாடுகளுக்கான தூதுப் பணியைத் தொடங்கினார். புறவினத்து நாடுகள் என்றாலும் முதலில் அங்கு வாழ்ந்த யூதர்களிடமே நற்செய்தியைப் போதித்தார். யூதர்கள் நற்செய்தியை ஏற்க மறுத்தபோதே, “கடவுளின் வார்த்தையை உங்களுக்குத்தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது.

ஆனால் நீங்கள் அதனை உதறித் தள்ளி நிலைவாழ்வுக்குத் தகுதியற்றவர்கள் என்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள். எனவே நாங்கள் பிற இனத்தாரிடம் செல்கிறோம்" (திப 13:46) என்று கூறிப் புறவினத்தாருக்குத் தூதுரைக்கத் தொடங்கினார். அப்படியெனில் புறவினத்து நாடுகளில் வாழ்ந்த யூதர்களின் சூழல் என்ன? பாலஸ்தீனாவிலிருந்து இடம் பெயர்ந்துப் பிற நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் மூன்று நிலையில் பாலஸ்தீனத்தைவிட்டு வெளியேறிவர்களாவர்:

1. முற்காலத்தில் வாணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கிழக்கு, மேற்கு நாடுகளை இணைக்கும் முக்கியமான சாலைகள் (பெருங்கடல் வழிப்பாதை, அரசர்கள் பாதை) பாலஸ்தீனாவின் வழியாகவேச் சென்றன. இதனால் யூதர்கள் வியாபாரம் செய்வதில் சிறப்புடன் விளங்கினர். எனவே நாடுகள் கடந்து சென்று வாழ்ந்து வாணிபத்தைப் பெருக்கினர்.

2. பாலஸ்தீனா நாடு பல நூற்றாண்டுகளாக ஆக்கிரமிப்புக்கு உள்ளான நாடு (கிமு 721 – கிபி 1948). எகிப்தியர், பாபிலோனியர், அசீரியர், பாரசீகர், கிரேக்கர், உரோமையர், கிறிஸ்தவர்கள், இசுலாமியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ரஷ்யர் ஆகிய எல்லா இனத்தாலும் பாலஸ்தீனா போர்களமாகப் பயன்படுத்தப்பட்ட பகுதி. போரினால் ஏற்பட்ட பாதிப்புகளால் இடம் பெயர்ந்த இஸ்ரயேலர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அகதிகளாகக் குடிறே வேண்டிய நிலை ஏற்பட்டது.

3. உரோமையர்களது ஆட்சிக்காலத்தில் தாம் போரில் வெற்றி கொண்ட பகுதியில் வாழ்ந்த மக்களை உரோமைப் படைகள் பிடித்து அடிமைகளாக அழைத்துச் சென்று அடிமை வியாபாரம் செய்வது வழக்கமாக இருந்தது. கிமு முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் கலிலேயப் பகுதியில் நடந்த போரில் உரோமையர்கள் யூதர்களைச் சிறைபிடித்துச் சின்ன ஆசியாவில் அடிமைகளாக விற்றதாக வரலாறு கூறுகிறது. சின்ன ஆசியா, மாசிதோனியா, அக்காயா பகுதிகளில் உள்ள துறைமுகங்கள் இத்தகைய அடிமை வியாபாரத்திற்கேப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன.

இதன் அடிப்படையில், புறவினத்து நாடுகளில் வாழ்ந்த யூதர்களில் சிலர் வணிகர்களாக (வசதி படைத்தோர்), பெரும்பகுதியினர்

பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக அகதிகளாகக் குடியேறியவர்களும், அடிமைகளாக விற்கப்பட்டவர்களுமேயாகும். இவ்வாறு அடிமைகளாக விற்கப்பட்டவர்களில் வெகுசிலரே தங்களது உழைப்பால் சேமித்த பணத்தைக் கொண்டு தங்களை அடிமைப்படுத்திய தலைவர்களுக்கு ஈட்டுத் தொகையைத் திருப்பிச் செலுத்திச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். ஆனால் இவ்வாறு சுதந்திரம் பெற்ற அனைவரது நிலையும் அடிமைகளின் நிலையைவிட முற்றிலும் மாறுபட்டு இருந்தது என்று சொல்ல இயலாது. விடுதலை பெற்ற முன்னாள் அடிமைகள் சமூகத்தில் தாழ்வாகவே எண்ணப்பட்டிருக்க வேண்டும். இவர்கள் மனித மாண்புக்காகவும் உண்மையான விடுதலைக்காகவும் ஏங்கி நின்றவர்கள். யூத சமயத்தைச் சேர்ந்த இத்தகைய அகதிகளும், அடிமைகளும், முன்னாள் அடிமைகளுமே புறவினத்தார் வாழ்ந்த நாடுகளில் பவுல் நற்செய்தி அறிவித்தபோது கிறிஸ்துவை ஏற்றுக் கிறிஸ்தவர்களாக மாறியவர்கள். இத்தகைய யூதக் கிறிஸ்தவர்கள் சமூகத்தில் தொடர்ந்து கீழ்நிலையிலும், பொருளாதாரத்தில் அடிநிலை யிலும் தள்ளப்பட்டு, ஏழை எளியவர்களாகவும், வறியவர்களாகவும் வாழ்ந்தனர்.

பவுலின் திருச்சபையில் புறவினத்து அடிமைகளின் நிலை

பவுல் மறைத்தூதுப் பணியாற்றிய சின்ன ஆசியா, மாசிதோனியா, அக்காயா பகுதிகளில் பெரும்பகுதியாக வாழ்ந்தவர்கள் கிரேக்கமொழி பேசிய யூதம் தவிர்த்த புறவினத்தார் ஆவர். இந்தப் புறவினத்தார் யாராக இருக்க இயலும்? கிபி முதலிரண்டு நூற்றாண்டுகளில் இத்தாலி, உரோமைப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் 85-90 சதவீதம் அடிமைகள் அல்லது அடிமைகளின் சந்ததியினர். உரோமையருக்குப் பூர்வீகமான பகுதிகளிலே இந்நிலை எனில் அவர்கள் கைப்பற்றிய கிரேக்க, மாசிதோனிய, சின்ன ஆசியாப் பகுதிகளில் முழுக்க முழுக்க அடிமைகளே குடிமக்களாக இருந்திருக்க வேண்டும். அப்படியெனில் பவுலடியாரின் போதனையால் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்ட எல்லாப் புறவினத்தாரும் ஒன்றில் அடிமைகள் அல்லது முன்னாள் அடிமைகளாகவே இருந்திருக்க வேண்டும். பவுலின் புறவினத்துத் திருச்சபையில் பெரும்பகுதியினர் அடிமைகள் என்பதற்குப் பவுலின் திருமுகங்களே சான்று பகர்கின்றன (1கொரி 7:21; எபே 6:5-9; கொலோ

3:22 – 4:1; 1திமொ 6:1-12; பிலமோன்). உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல் தரும் நன்றி கூறுபவர்கள் பட்டியலில் பெரும்பாலானோர் அடிமைகளே (உரோ 16:1-16). அந்திரோனிக்கு (உரோ 16:7), உர்பான் (உரோ 16:9) ஆகிய இரு பெயர்களும் பவுல் காலத்துக் கிரேக்க – உரோமை இலக்கியங்களில் எப்பொழுதும் அடிமைகளோடு தொடர்புடையவையே. அதேபோல அரிஸ்தோபுல் குடும்பம் (உரோ 1:10), நர்க்கிசு குடும்பம் (உரோ 16:11), குளோயி வீட்டார் (1கொரி 1:11), மற்றும் ஸ்தேவனா வீட்டார் (திப 11:14; 1கொரி 1:16) என்று குடும்பங்களும், வீடுகளும் குறிக்கப்படுவது அக்குடும்பத்து உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டும் எண்ணத்தில் மட்டுமல்ல, மாறாக அக்குடும்பத்திலுள்ள அடிமைகளையும் இணைத்துக் கூறும் நோக்கத்துடனேயாகும். பவுல் உருவாக்கிய திருச்சபைகளில் புறவினத்து அடிமைகள் பெருமளவில் இருந்தனர் என்பதற்கு மேற்குறிப்பிட்ட மேற்கோள்கள் சான்றாக விளங்குகின்றன.

"அடிமைகள் மனிதரின் பயனுக்குள்ள வெறும் கருவிகளே" என்ற அரிஸ்டாட்டிலின் கூற்று கிரேக்க- உரோமைப் பேர்ரசைப் பொறுத்த அளவில் முற்றிலும் உண்மை. கிபி முதல் நூற்றாண்டில் உரோமைப் பேரரசில் அடிமைகளுக்கு ஒரு சில உரிமைகள் வழங்கப்பட்டிருந்தது உண்மைதான். (உம்.) அடிமைகள் திருமணம் செய்ய உரிமை இருந்தது (ஒருவருக்குப் பிறக்கும் குழந்தை அக்குழந்தையின் தந்தை யாருக்கு அடிமையாக இருக்கிறாரோ அவருக்கே அடிமையாகிறது); தன்னை அடிமைப்படுத்தும் தலைவனின் குடும்பத்தில் ஒரு உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொள்ளப்படும் வாய்ப்பு இருந்தது; தனது கூலியைச் சேர்த்து வைத்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது; விவசாயக் கூலியாகவோ அல்லது கைவேலைத் திறமை இருந்தால் தனியாக உழைத்துப் பொருளீட்டும் வாய்ப்போ இருந்தது. ஆனால் அடிமைகள் தங்களது தலைவர்களாலே துன்பறுத்தப்படுவதும், அவமதிக்கப்படுவதும், மிரட்டப்படுவதும் சர்வ சாதாரணமாக நடக்கும் நிகழ்வுகள் (எபே 6:9; கொலோ 4:1). தங்களது தலைவர்களிடமிருந்து அவர்கள் விடுதலை பெறுவதும் அவ்வளவு எளிதானதல்ல, அது குதிரைக் கொம்புக்குச் சமம். தலைவர்களது கொடுமைகளுக்குத் தாக்குப்பிடிக்காமல் அடிமைகள் ஓடி ஒழிந்தாலும் அது நிரந்தரமான ஒன்று அல்ல. மீண்டும் அவர்கள் தங்களது பழைய தலைவர்களிடமே திரும்ப வேண்டும் (பில

15). ஏனெனில் அடிமைகளின் முதுகில் அவர்களது அடிமைத் தலைவர்களது பெயர் பச்சைக் குத்தப்பட்டிருக்கும்.

புறவினத்து அடிமைகளுக்கான பவுலின் தூதுரைப் பணி

பரிதாபகரமான சூழ்நிலையில் வாழ்ந்த அடிமைகளைப் பவுலடியார் இயேசுவிடம் எப்படி அழைத்துவர முடிந்தது? பவுலடியாரின் நறசெய்தித் தூதுரைப் பணி அடிமைகளுக்கு எப்படிப் பொருளுள்ளதாக அமைந்தது?

முதலாவது, பவுல் அடிமைகளின்பால் அக்கறையும், மரியாதையும், அன்பும் ஆர்வமும் கொண்டவர் என்பதை மறுக்க இயலாது (எபே 6:9; கொலோ 4:1; பில 10,16). பவுலடியார் நிறுவிய திருச்சபையில் பிலமோன் (பில 1), யூதப் பெண் லீதியா (திப 16:14-15) போன்ற வசதி படைத்தோரும் இருந்தனர். சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பொருளாதார, சமூக ரிதியாக வேறுபட்டிருந்தாலும் சமய ரிதியாக எல்லோரும் சரி சமமானவர்கள் என்ற பார்வை கொண்டவர் பவுல் (கலா 3:28). ஒனேசிமுவை அடிமையாக அல்ல, மாறாக அன்புச் சகோதரனாக ஏற்றுக்கொள்ளுமாறு பிலமோனுக்கு அறிவுரை வழங்கியவர் பவுல். ஏழை – பணக்காரர், இருக்கிறவர் - இல்லாதவர் என்ற பாகுபாடு கொரிந்தியத் திருச்சபையின் திருவிருந்துக் கொண்டாட்டத்தில் வெட்ட வெளிச்சமாக உள்ளது என்ற செய்தி பவுலுக்குத் தெரிய வந்ததும் அவரது இரத்தம் கொதிக்கிறது. திருவிருந்து நேரத்தில் பகிர்ந்துண்ணும் எண்ணத்துடன் வசதிப்படைத்தோர் கொண்டுவந்த உணவைப் பகிர்ந்து உண்ணாமல் அவரவர் முந்தியே உண்ணுவது ஆண்டவரின் திருவிருந்து அல்ல என்று சாடுகிறார். சிலர் பசியாய் இருக்க, வேறு சிலர் குடிவெறியில் இருப்பது முறையா? என்று கேள்வி எழுப்புகிறார். உண்பதற்கும் குடிப்பதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? என்று கொந்தளிக்கிறார். நீங்கள் இவ்வாறு செய்வதன்மூலம் இல்லாதவர்களை (ஏழைகளை, அடிமைகளை) வெட்கப்படுத்துகிறீர்கள் என்று மனம் வெதும்புகிறார் (1கொரி 11:17-22) ஏழைகளுக்கும், இல்லாதோருக்கும் அநீதி நிகழ்த்தப்படும்போது பவுலால் வாழா இருக்க முடியவில்லை. இத்தகைய பவுலின் மனப்பான்மை அடிமைகளை அவர்பால் ஈர்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கலாம்.

இரண்டாவது, பவுல் அறிமுகப்படுத்திய நற்செய்தியாகிய இயேசுவும், இயேசுவின் மனநிலையும் அதிகமாக அடிமைகளைக் கிறிஸ்துவத்தில் கொண்டு வந்து சேர்ந்திருக்கலாம். அடிமையாவதற்குத் தயார் நிலையில் இருந்த இயேசுவின் மனநிலையையேப் பவுல் இயேசுவின் மனநிலையாக இங்கு குறிப்பிடுகிறார். பவுல் சந்தித்தப் புறவினத்துச் சமூகத்தில் அடிமைகளின் நிலை மிகத் தாழ்வானது. அடிமைகளுக்கு இனி விடியலே இல்லை என்னும் அவலநிலை. அடிமையாகவே இனி வாழ்நாட்களைக் கழிக்க வேண்டும் என்று வாழ்க்கையில் பிடிப்பற்ற நிலை கொண்டு வாழ்விலே வெந்து, நொந்துபோன அடிமைகளுக்கு முன் பவுலின் மனக்கண்முன் தோன்றியது சிலுவைச் சாவை ஏற்ற இயேசுவின் மனநிலை.

இந்தச் சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும், கிரேக்கருக்கு மடமையாகவும் இருந்த ஒன்று. அத்தகையச் சிலுவைச் சாவைத்தான் இயேசு சந்தித்தார். கடவுளாக இருந்த ஒருவர், என்றென்றும் கடவுளாக இருக்க வேண்டிய ஒருவர், அத்தகைய நிலையை உதறித் தள்ளிவிட்டுச் சிலுவை மரணத்தை ஏற்றார் என்பது பவுலை வியப்பில் ஆழ்த்தியச் சிந்தனை. இயேசு தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு, மனிதருக்கு ஒப்பாகி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்குக் கீழ்படிய வேண்டியிருந்தது. இயேசு அடிப்படையில் ஓர் அடிமையாகவே (யூதர்கள் அரசியல் ரீதியாக உரோமையருக்கு அடிமையாகவே இருந்தனர்) சிலுவையில் மரிக்க நேர்ந்தது. ஆனால் இறைவன் அடிமையாக மரித்த இயேசுவை உயிர்த்தெழச்செய்தார், உயர்த்தினார். எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அளித்தார் (பிலி 2:5-11). ஆக இயேசு என்னும் அடிமையால் உயர்வடைய முடிந்தது. அப்படியெனில் அடிமைநிலையில் உள்ள ஒவ்வொருவருக்கும் இயேசு ஒரு உந்து சக்தி. இவ்வாறு இயேசுவைப் பின்பற்றும் ஒவ்வொரு அடிமைக்கும் விடுதலை வாழ்வு நிச்சயம்; அடிமை விலங்கு முறிவுபடும் காலம் தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கையைப் பவுலால் புறவினத்து அடிமைகளுக்கு கொடுக்க முடிந்தது.

பவுல் அகதியா? அடிமையா?

பவுல் நிதி திரட்டி அனுப்பிய எருசலேம் திருச்சபை ஏழைத் திருச்சபை. பவுல் நற்செய்தித் தூதுரைத்த சின்ன ஆசியா, மாசிதோனியா,

அக்காயா பகுதிகளில் பெரும்பான்மையோர், அவர்கள் யூதர்களாக இருந்தாலும், அடிமைகள் அல்லது அகதிகள். இப்படிப்பட்டவர்கள்மேல் பவுலுக்கு அக்கறை ஏற்படக் காரணம் என்ன? விவிலியப் பேரறிஞரான தூய ஜெரோம் பவுலின் குடும்பத்தைப் பற்றிக் கூறிய கருத்தை ஜெரோம் மர்பி ஒக்கானர் என்னும் விவிலிய அறிஞர் தம் நூலில்[3] குறிப்பிடுகிறார். அதாவது, கிபி 387 அல்லது 388இல் பிலமோன் திருமுகத்திற்குத் தூய ஜெரோம் எழுதிய விளக்கவுரையின் முன்னுரையில் பவுலின் பூர்வீகம் குறித்த செய்தி இடம் பெறுகிறது. இந்தக் குறிப்புப்படி, கிமு முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் யூதேயாப் பகுதியில்[4] உள்ள (கலிலேயா) கீசலா என்னும் ஊரை உரோமையர்கள் தாக்கித் தகர்த்தபோது அங்கிருந்தவர்களைச் சிறைப்பிடித்துச் சின்ன ஆசியாவில் செசிலியாவிலுள்ள தர்சு நகருக்குக் கொண்டு சென்றனர். அவர்களில் பவுலின் பெற்றோரும் இருந்திருக்க வேண்டும். எனவே பவுலின் பெற்றோர் உரோமையர்களால் தர்சு நகருக்கு அடிமைகளாகக் கொண்டு சென்றதற்கான சாத்தியக் கூறு உண்டு. ஆனால் தங்களது கடின உழைப்பாலும் தங்களுக்குத் தெரிந்த கூடாரத் தொழிலின் பயனாகத் தாங்கள் ஈட்டிய பணத்தைக் கொண்டும் தங்களை அடிமைத்தலைவர்களிடமிருந்து விடுவித்துப் பவுலின் பெற்றோர் முன்னேறியிருக்க வேண்டும். தங்கள் மகனான பவுலுக்குக் கிரேக்க மொழிக் கல்வி மட்டுமல்லாது எபிரேய மொழிக் கல்வி வாய்ப்பும் கிடைக்கும் சூழலை அவர்கள் உருவாக்கி இருக்க வேண்டும்.

மேலும் தங்கள் மகன் யூத மறையில் சிறந்து விளங்கும் வண்ணம் எருசலேமில் உள்ள ராபி கமாலியேலிடம் அனுப்பிக் கல்வி கற்க ஏற்பாடு செய்யும் அளவுக்கு (திப 22:3) வசதி உள்ளவர்களாகப் பிற்காலத்தில் திகழ்ந்திருக்க வேண்டும். எனவே கீசலாவிலிருந்து அடிமைகளாகத் தர்சுக்குச் சென்றாலும் படிப்படியாக வசதி வாய்ப்புக்களைப் பவுலின் குடும்பம் பெருக்கிக் கொண்டது இதன்மூலம் தெளிவாகிறது.

எருசலேமிலும் பவுல் செல்வாக்குடன் செயல்படுவதையே நாம் காணமுடிகிறது. தலைமைக் குருவிடம் அவரால் நெருங்கிச் செல்ல முடிகிறது (திப 9:1-2). அவர் உரோமைக் குடியுரிமையை விலைகொடுத்து வாங்கும் அளவுக்குச் செல்வாக்குடையவராக இருந்தார் (திப 16:37;

22:25). அவரது திருத்தூதுப் பணியிலும் பெருந்தொகையைக் கையாளுபவராக இருந்திருக்கிறார் (2கொரி 8:20). எருசலேம் இறைமக்களுக்காக நன்கொடை திரட்டிய வழியிலும் அவர் கைகளில் போதிய பண இருப்புக்கான வாய்ப்புள்ளது (உரோ 15:25-27; 1கொரி 16:1-4; 2கொரி பிரிவுகள் 8 – 9; கலா 2:10). அடிமையான ஒனேசிமு கடன்பட்டிருந்தாலோ அல்லது தீங்கு இழைத்திருந்தாலோ தானே பிலமோனுக்கு ஈட்டுத் தொகையை அளிப்பதாகப் பவுல் உறுதி அளிக்கிறார் (பில 17-18). எருசலேம் சென்றபோது தூய்மைச் சடங்கு செய்து கொள்ளும் பொருட்டு நான்கு பேருடைய பொருத்தனைத் தொகைகளை ஆலயத்துக்குச் செலுத்தும் நிலையில் பவுல் உள்ளார் (திப 22:23-24). உரோமை சென்றபோது வாடகை வீட்டில் தங்கும் அளவுக்கு வசதி அவரிடத்தில் இருந்தது (திப 28:30). இவ்வாறு பிற்காலத்தில் பொருளாதார, சமூக ரீதியாகப் பவுலின் குடும்பம் மேன்மையுடன் விளங்கினாலும் அடிப்படையில் அவர்களது குடும்பம் பாலஸ்தீன நாட்டிலிருந்து தர்சுக்கு வந்து சேர்ந்த பல்வேறு அடிமைகள் அல்லது அகதிகளில் ஒரு அங்கமே. தனது குடும்பம் அடிமையாக இருந்த ஒன்று என்னும் வடு பவுலுக்கு நீங்கா வடுவாக நிலைத்திருக்க வேண்டும். மேலும் பவுல் உரோமைக் குடியுரிமை உடையவராக இருந்தாலும் இதன் அடிப்படையில் பிறருக்கு அவர் அடிமையாக இல்லாவிடினும் (1கொரி 9:19) அவர் அடிக்கடிப் பெருமையாக கூறிக் கொள்ளும் 'நான் எபிரேயன்' என்ற அடிப்படையில் பிற யூதர்களைப் போன்று அரசியல் ரீதியாக உரோமையருக்கு அடிமையாகவே இருந்தார்.

இயேசுவைப்போல் ஏழையாக வாழ்ந்த பவுல்

பண வருவாய்க்கான வாய்ப்புகள் பவுலுக்கு இருந்தும், சமூக அளவிலும் பொருளாதார அடிப்படையிலும் பவுல் உயர்நிலையில் இருந்தும் அத்தகைய வாய்ப்பு வசதிகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாரா? என்னும் வினா எழுகிறது. பவுலைப் பொறுத்த அளவில் தனது நற்செய்தித் தூதுரையின் வழியாகக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு எத்தகைய கிறிஸ்துவின் மனநிலையை மாதிரியாகக் கொண்டு வாழும்படிப் பணித்தாரோ அதே கிறிஸ்துவின் மனநிலையைத் தனக்கும் மாதிரியாகக் கொண்டார். இயேசு "செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள்

செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" (2கொரி 8:9) என்பதே பவுலைப் பொறுத்தமட்டில் அவர் ஏற்றுக்கொண்ட இயேசுவின் மனநிலை. எனவேதான் இயேசுவைப்போல் ஏழையாக வாழ்வதில் பவுலுக்கு உடன்பாடு உண்டு.

1. பொருள்மீது பவுலுக்கு ஆசை இருந்ததில்லை: "எவருடைய பொன்னுக்கோ வெள்ளிக்கோ ஆடைக்கோ நான் ஆசைப்பட்டதில்லை" (திப 20:33).

2. தன்னுடைய தேவைகளுக்காகப் பிறரது உதவியை நாடவில்லை: "என்னுடைய தேவைகளுக்காகவும் என்னோடிருந்தவர்களுடைய தேவைக்காகவும் இந்த என் கைகளே உழைத்தன" (திப 20:34; மேலும் காண் 1கொரி 4:12; 2கொரி 11:23,27; 1தெச 2:9; 2தெச 3:7-10).

3. பசியோடும் பட்டினியோடும் வாழப் பவுல் பழக்கப்பட்டவர்: "இந்நேரம்வரைப் பட்டினியோடும் தாகத்தோடும் ஆடையின்றியும் இருக்கிறோம். அடிக்கப்படுகிறோம்; நாடோடிகளாய் இருக்கிறோம்... நாங்கள் உலகத்தின் குப்பை போலானோம். இதுவரை அனைத்திலும் கழிவுப் பொருட்கள் எனக் கருதப்பட்டு வருகிறோம்" (1கொரி 4:11-13; 2கொரி 11:27).

4. பவுல் தன் பிழைப்புக்காக நற்செய்தியை அறிவிக்கவில்லை: "உண்பதற்கும் குடிப்பதற்கும் எங்களுக்கு உரிமை இல்லையா?... நற்செய்தியை அறிவிக்கிறவர்கள் அந்நற்செய்தியின் மூலமாகவே பிழைப்புக்குரியவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நம் ஆண்டவர் பணித்திருக்கிறார்... நான் நற்செய்தி அறிவிப்போருக்குரிய உரிமையைக் கொஞ்சம் கூடப் பயன்படுத்திக் கொள்ளவில்லை (1கொரி 9:4,14,18).

5. எந்த நிலையிலும் மனநிறைவோடு வாழக் கற்றுக்கொண்டவர்: "எனக்கு வறுமையிலும் வாழத்தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சிப் பெற்றிருக்கிறேன்" (பிலி 4:12).

6. பொன், பொருள், செல்வம் எல்லாமே பவுலைப் பொறுத்தமட்டில் தூசிக்குச் சமம்: "உண்மையில், என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்றச் செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும்

இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன் (பிலி 3:8).

7. தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாவிட்டாலும் தனக்கு எல்லாம் நிறையவே உள்ளது என்று சொல்லக்கூடிய மனது படைத்தவர் பவுல்: "நீங்கள் அனுப்பியதெல்லாம் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது என்னிடம் நிறையவே இருக்கிறது" (பிலி 4:18).

8. பவுலின் உடனுழைப்பாளரான சைப்ரஸ் தீவைச் சார்ந்த பர்னபாகூட தமது நிலத்தை விற்று அந்தப் பணத்தைத் திருத்தூதர்களிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு நற்செய்திக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் (திப 4:36-37).

இவ்வாறு பவுலும், பவுலின் உடன் உழைப்பாளர்களும் தாங்கள் பணிபுரிந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றபடி தங்கள் வாழ்வையும் மாற்றிக் கொண்டவர்கள். இயேசு ஏழையானது போலத் தாங்களும் ஏழையானார்கள். எல்லாருக்கும் எல்லாமானார்கள் (1கொரி 9:22).

ஏழைகளிடம் பவுலின் அக்கறையும் நன்கொடை திரட்டுதலும்

பவுலின் புறவினத்துச் சபைகள் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மக்களைக் கொண்டது (2கொரி 8:2) என்பது மேலே நாம் கண்ட ஆய்வின் அடிப்படையில் தெளிவாகிறது. பவுல் உருவாக்கியத் திருச்சபைகள் பொருளாதார, பணத்தேவைகள் அதிகம் உள்ளவை என்பதை மறுக்க இயலாது. அப்படியெனில், பவுல் தான் உருவாக்கிய, தான் நற்செய்திப் பணியாற்றும் புறவினத்துத் திருச்சபைகளில் உள்ள ஏழை எளியோரை மறந்துவிட்டுப் புறவினத்துத் திருச்சபைகளிலிருந்து எருசலேம் திருச்சபையில் உள்ள ஏழைகளுக்காகப் பொருளும், பணமும் நன்கொடையாகத் திரட்டுவதை அவர் ஏழைகளின் மேல் அக்கறை கொண்டதால் இவ்வாறு செய்கிறார் என்று கூறுவது எப்படி நியாயமாகும்?

எருசலேம் திருச்சபையிலுள்ள ஏழைகள்பால் பவுல் அக்கறை கொண்டார் என்பதற்காகத் தான் உருவாக்கிய திருச்சபைகளில் உள்ள

ஏழைகளின் மீது பவுல் அக்கறை கொள்ளவில்லை என்பது பொருளல்ல. தெசலோனிக்காவில் பவுல் நற்செய்தித் தூதுரைப் பணியாற்றியபோது பிலிப்பியர் இருமுறை உதவி செய்ததாகப் பவுல் குறிப்பிடுகிறார் (பிலி 4:15-16). எப்பப்பிராத்து வழியாகப் பிலிப்பியர் கொடுத்தனுப்பிய உதவியைப் பெற்றுக் கொண்டதாகப் பிலிப்பியருக்கு நன்றி கூறி எழுதுகிறார் (பிலி 4:18). பவுல் எபேசில் சிறையிலிருந்தபோது பிலிப்பியருக்குத் திருமுகம் எழுதப்பட்டிருக்க வேண்டும் (கிபி 54-56) என்பது முடிவான கருத்து. அப்படியெனில் எபேசுத் தூதுரைப் பணிக்கும் பிலிப்பியர் உதவி செய்தது உறுதியாகிறது. வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்" (உரோ 12:13) என்று உரோமையருக்குப் பொதுவான அறிவுரையைப் பவுல் கூறுகிறார். எனவே தான் நிறுவிய சபைகளுக்கிடையேயும் பொருளுதவி, பண உதவி கொடுத்து உதவுவதைப் பவுல் உற்சாகப்படுத்தி வந்திருப்பது தெளிவாகிறது. அதேவேளையில் எருசலேமில் உள்ள ஏழை, எளியவர், வறியவர் மட்டில் புறவினத்துச் சபைகள் அக்கறை கொள்ள வேண்டுமென்பது பவுலின் பணிவான வேண்டுகோளாக உள்ளது.

1. இயேசுவின் வழி நின்று ஏழைகளுக்கு உதவுதல்

எருசலேமில் வாழும் எழை இறைமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது பவுலின் வேண்டுகோள் (கலா 2:10; உரோ 15:26). ஏழைகளுக்கு உதவுவது என்பது யூதச் சமயச் சட்டமும் மரபும் வலியுறுத்தும் நற்செயலாகும் (இச 24:10-22; திபா 10:2; 12:5; 16:6; எசா 3:14-15; 10:1-2; 58:6-7). எபிரேய விவிலியம் இறைவனை ஏழைகளின், வறியவரின், விதவைகளின், அனாதைகளின் பாதுகாவலராகப் பார்க்கிறது (திபா 149:9; எரே 50:34; நீமொ 23:11). தான தருமம் செய்யும் ஒருவர் இறைவனின் செயலைச் செய்வதாக யூதர் எண்ணினர். ஏழைகளுக்கு உதவுவதை யூதச் சமயநெறியின் அடிப்படையில் பவுல் பார்க்காமல் இயேசுவின் போதனை, அவரது பொதுப்பணி அடிப்படையில் பார்க்கிறார் (மத் 5:3, 47; 11:5; 25:34; மாற் 12:41; 10:21; லூக் 4:18; 19:2; யோவா 13:29). இயேசுவை, முன் மாதிரிகையாகக் கொண்டு ஏழைகளுக்குச் செய்யும் உதவி (2கொரி 8:9, 19) இறைவனுக்குச் செலுத்தும் நன்றியாகவும் (2கொரி 9:12), இறைவனுக்குப் போற்றுதலாகவும் (2கொரி 9:13) அமையும் என்பது பவுலின் எண்ணம்.

2. எருசலேம் சபையின் தேவைகளும் புறவினக் கிறிஸ்தவர்களின் கடமையும்

எருசலேமில் உள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு அவர்களது துயரத்தில் உடுக்கை இழந்தவன் கைபோல வந்து இடுக்கண் களையும் எண்ணத்தில் பொருளுதவி செய்வது புறவினத்துச் சபைகளின் கடமையாகவும் பவுல் பார்க்கிறார். ஏனெனில் புறவினத்துச் சபைகள் ஆவிக்குரிய கொடைகளை எருசலேம் சபை வழியாகப் பெற்றிருக்கின்றனர். அதற்கு நன்றிக் கடனாக எருசலேம் சபையின் உடல் சார்ந்த தேவைகளைப் புறவினத்துச் சபைகள் நிறைவேற்றுவது நீதியின் அடிப்படையிலேதான் என்பது பவுலின் வாதம் (உரோ 15:26-27).

3. புறவினத்துச் சபைகளின் வள்ளல் தன்மையின் வெளிப்பாடு

எருசலேம் திருச்சபைக்குத் தாராளமனத்துடன் உதவ வேண்டுமென்று பவுல் கொரிந்துத் திருச்சபைக்குக் கடிதம் எழுதியபோது மாசிதோனியாச் சபைகள் வள்ளல் தன்மையோடு வாரி வழங்கின, அளவுக்கு மீறிக் கொடுத்தன என்று பெருமையாகக் குறிப்பிடுகிறார் (2கொரி 8:2-3). மாசிதோனியச் சபைகளைப் போலக் கொரிந்துச் சபையும் வாரி வழங்க வேண்டும், வள்ளல் தன்மையுடன் பொருளுதவி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார் (2கொரி 9:11,13). அதற்கு ஆதாரமாக, "ஒருவர் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்" (திபா 112:9) என்ற திருப்பாடல் வரிகளைச் சுட்டிக் காட்டுகிறார். ஒவ்வொரு சபையும் தேவையில் உள்ள சபையைப் பொறுத்தமட்டில் 'வள்ளன்மை'யுடன் செயல்பட வேண்டும் என்பது பவுலின் ஆவல்.

4. நட்புறவின் (κοινωνια) அடையாளம்

எருசலேம் திருச்சபைக்குப் புறவினத்துச் சபைகள் செய்ய வேண்டிய பொருளுதவியை நட்புறவின் அடையாளமாகப் பவுல் பார்க்கின்றார் (உரோ 15:26-27; 2கொரி 8:4; 9:13). இங்கு பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல் 'κοινωνια' தொடக்கத் திருச்சபையில் இயேசுவின் இராவுணவின் நினைவாகக் கொண்டாடப்பட்ட அன்புறவுக் கொண்டாட்டங்களைக் குறித்து நின்றது (திப 2:42; 1கொரி 10:16). இவ்வாறு ஏழை எருசலேம் திருச்சபைக்குப் புறவினத்துத் திருச்சபைகள்

உதவிக்கரம் நீட்டுவதை இயேசுவின் இராவுணவுக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்குப் பவுல் ஒப்பிடுவதுபோல் உள்ளது. நட்புறவின் அடிப்படையிலான இத்தகைய உதவிகள் மூலம் யூத, புறவினத்துச் சபைகள் ஒன்றுக்கொன்று நெருங்கி வருவதற்கான சூழலையும் உருவாக்குகின்றன.

5. திருத்தொண்டு (**διακονία**)

எருசலேம் திருச்சபைக்குப் பொருளுதவி செய்வதைப் புறவினத்துச் சபைகளின் திருத்தொண்டாகப் (διακονία) பவுல் எண்ணுகிறார். திருத்தொண்டுக்குப் பவுல் பயன்படுத்தும் கிரேக்கச் சொல் 'διακονία' தொடக்கத்திருச்சபையில் பந்தியில் உதவுபவர்களைக் குறிப்பது. திருச்சபையின் தொடக்ககாலத்தில் வழிபாட்டுப் பணிகளுக்கும் வாழ்க்கையின் பிற பணிகளுக்கும் அதிகம் வேறுபாடு இல்லாத தன்மையையே இச்சொல் பயன்படுத்தும் விதம் சுட்டிக்காட்டுகிறது. ஏழைகளுக்குப் பொருளுதவி செய்யும் பணிகள் (உரோ 15:25; 2கொரி 8:4,10; 9:1,12,13) திருவிருந்துப் பந்தியில் பணி புரிவதற்குச் சமமாக எண்ணப்படுவது இங்கு புலனாகிறது (திப 2:46; 6:1; 1கொரி 11:2).

6. சபைகளுக்கிடையே சமநிலை ஏற்படுதல்

ஏழ்மை நிலையில் உள்ள எருசலேம் திருச்சபைக்குப் புறவினத்துத் திருச்சபைகள் உதவப் பவுல் வேண்டுவதற்கான முக்கியமான நோக்கம் சபைகளுக்கிடையேச் சமநிலையை உருவாக்கும் (2கொரி 8:13-15) எண்ணத்துடனேயாகும். புறவினத்துச் சபைகளில் மிகுதியாக இருப்பதைக் கொண்டு எருசலேம் திருச்சபையில் உள்ள குறையை நீக்க வேண்டும் (2கொரி 8:14) என்பது பவுலின் ஆவல். 'சமநிலை'யைச் சுட்டிக் காட்டப் பவுல் பயன்படுத்தும் கிரேக்கச் சொல் 'ισοτής' என்பது. இது வழக்கமாக 'சமத்துவம்' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அப்படியெனில் பவுல் சபைகளுக்கிடையே சமத்துவ நிலையை எதிர்பார்க்கிறார். பவுல் தனது சபைகளில் சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம், பகிர்வு நிலைகொள்ள வேண்டுமென விரும்பினார். இனம், வர்க்கம், நாடு என்ற பேதங்களற்றச் சமூகத்தை உருவாக்கப் பவுல் கனவு கண்டார். "இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை" (கலா 3:28)

என மொழிந்தார். இச்சிந்தனை எந்த அளவுக்கு அவரது மனதில் வேரூன்றி இருக்கிறது என்றால் தமது திருமுகங்களில் இச்சொற்றொடரை மீண்டும் மீண்டும் எடுத்தாளுகிறார் (உரோ 10:12; 1கொரி 12:13; கொலோ 3:11). பவுலைப் பொறுத்த அளவில் சமநிலை அல்லது சமத்துவம் என்பது சபைகளுக்கிடையேயான பொருளாதார ரீதியிலான சமநிலை மட்டுமன்று, மாறாக அரசியல், சமூக அளவிலும் தனது சபைகளில் சமத்துவ நிலையைப் பவுல் கனவு கண்டார். புறவினத்துத் திருச்சபைகள் ஏழை எருசலேம் திருச்சபையின்மீது கருணையின் அடிப்படையிலோ, அல்லது பரிதாப உணர்விலோ உதவவேண்டும் என்ற நிலையில் அல்ல, மாறாக ஏழை-பணக்காரர் என்ற வேறுபாட்டு நிலையை வேரோடு சாய்த்துத் திருச்சபைகளுக்கிடையே சமத்துவ நிலையை உருவாக்கும் எண்ணத்துடன் பொருளுதவி செய்ய வேண்டும் என்பது பவுலின் சித்தாந்தம்.

முடிவுரை

இன்றைய உலகம் பொருளாசையையும் பொருள் வாதத்தையும் விளம்பரப்படுத்தும் உலகம். ஒவ்வொரு மனிதரும் இவ்வுலகப் பொருட்களை மனித சமூகத்தின் நன்மைக்காக எப்படிப் பயன்படுத்த முனையலாம் என்று சிந்திப்பது விடுத்து, பிற மனிதரை அடிமைகளாகவும் ஏழைகளாகவும் ஒடுக்கும் கருவிகளாகப் பயன்படுவது மட்டுமல்ல. இவ்வுலகப் பொருட்களுக்குத் தாமே அடிமையாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. பவுல் இதிலிருந்து சற்று மாறுபட்ட மனிதராகத் தோன்றுகிறார். அவர் அரசியல், சமூக அடிமைத்தனங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவர் மட்டுமல்ல, பொருள்களின் மீது தனக்கு இருந்த பிடிப்புத் தன்மைகளைத் தூக்கி எறிந்துவிட்டு இயேசுவைப் போல ஏழையானார். ஏழை, எளிய, வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இயேசுவின் பணி பவுலுக்கு முன்னுரிமையாக மாறியது. ஏழை, எளியோர், வறியோர்மட்டில் பவுலுக்கு இருந்த அக்கறை அவர் உருவாக்கிய சபைகளையும் தாண்டித் தாய்த் திருச்சபையான எருசலேம் சபை மீதும் சென்றது. எருசலேம் திருச்சபையின் ஏழ்மை நிலைக்கு உதவுவதற்குப் பவுலுக்குப் பல காரணங்கள் இருப்பினும் திருச்சபைகளுக்கிடையே சமத்துவ நிலையை உருவாக்க வேண்டும் என்பது பவுலின் கனவு. எனவேதான் மிகுதியாக உள்ள புறவினத்துத் சபைகள் எருசலேமின்

குறையைப் போக்க அழைக்கப்படுகின்றன. சபைகளின் சமத்துவம் என்பது பவுலின் தாரகை மந்திரம். ஏழையர் மட்டில் பவுலுக்கு இருந்த ஆர்வமும், பவுல் ஏற்றுக்கொண்ட ஏழ்மையும் சபைகளில் சமத்துவம் படைக்கும் நோக்குடனேயாகும்.

End Notes:

1. Betz H.D., *Galatians*, Philadelphia, Fortress Press, 1979, Pg. 102.
2. Batara Sihombing, Paul's Fund – Raising Project and the Practice of Auction in the Batak Church in Indonesia, *Asian Journal of Theology* (2003, Vol. 17/1), Pg. 94.
3. Jerome Murphy – O'Connor, *Jesus and Paul Parallel Lives*, St. Paul's, Mumbai, 2008, Pg. 30-33.
4. Judea should not be understood here in a narrow sense meaning only the district of Jueda. It can mean the entire districts in Palestine, like Galilee, Judea etc. Ref. Acts 10:37; LK 1:5; 4:44; 23:5. Gischala was a town in Upper Galilee.

ஆ. பவுலடியாரின் மேய்ப்புப்பணியில் பெண்கள்

திருத்தொண்டர் ஆரோக்கிய பெஸ்கி துரை
இறையியல் நான்காமாண்டு
தூத்துக்குடி மறைமாவட்டம்

முற்றத்தில்

மேய்ப்புப்பணியில் பெரும்பகுதியை அபகரிப்பவர்கள் பெண்கள். வழிபாடுகளில் ஈடுபாட்டோடு பங்கெடுப்பவர்கள் பெண்கள். மற்ற மதங்களைவிட ஆன்மீக மற்றும் அறிவு ரீதியாக (Spiritual and Intellectual Freedom) பெண்களுக்கான சுதந்திரம் கிறிஸ்தவத்தில் உண்டு. கோயில் நுழைவில் கட்டுப்பாடு, கருவூலம் ஏறுவதில் தடை, வாய்விட்டுச் செபிப்பதில் வாய்பூட்டு, பாடல்கள் பாடினால் தெய்வக்குற்றம் போன்ற கெடுபிடிகள் பெண்களுக்குக் கிறிஸ்தவத்தில் இல்லை. அதைப்போல் கிறிஸ்தவப் பெண்கள் எதை வேண்டுமானாலும் ஆண்களுக்கு நிகராகக் கற்கலாம் என்ற மனநிலை முதிர்ச்சி உள்ளதால் கிறிஸ்தவப் பெண்கள் அறிவுத் துறையில் கோலோச்சுவதை நம்மால் காணமுடிகிறது. ஆன்மீக வானிலும் அறிவியல் வானிலும் சுதந்திரமாகச் சிறகடிப்பதனாலேயேப் பெண்கள் முழுவிடுதலையும் அடைந்துவிட்டார்கள் என்ற முடிவிற்கும் நாம் வந்துவிட முடியாது. ஏனெனில் பெண்கள் பேசாமடமைகளாகவும், வழிபாட்டில் ஆயத்த வாடிக்கையாளர்களாகவும், வாய்பொத்திச் சிரம் தாழ்த்தி நிற்கும் பொம்மைகளாகவும் நிற்பது நாம் ஏற்க வேண்டிய நிதர்சனம். செபிக்கவும், காணிக்கை செலுத்தவும், கீழ்படியவும் ஆண்டாண்டு காலமாகப் பெண்கள் பழக்கப்பட்டிருக்கின்றனர். இதனால்தான் இவைகளைச் செய்யாதபோது பெண்களிடம் குற்றப்பழி உணர்வு மேலோங்கி நிற்பதை நம்மால் காண முடிகின்றது. "நீக்ரோக்களைப் போல பெண்களும் ஒற்றுமில்லாதவர் களாகவும் கருதப்படுகின்றனர். அரசாங்கத்தில், அரசியலில், திருச்சபையில் அவர்களின் பங்கு மறுக்கப்படுகின்றது. சமையல் மட்டும்தான் அவர்களின் வேலையா? மறையுரை நிகழ்த்த முடியாதா? அரசியல் முடிவுகளை

மேற்கொள்ள முடியாதா? எழுதப்படிக்கத் தெரிந்தால் மட்டும் போதுமா? வீட்டை நிர்வாகம் செய்யத் தெரிந்தோருக்குத் தொழிற்சாலைகளை நிர்வாகம் செய்யத் தெரியாதா? நாட்டை வழிநடத்த முடியாதா?" என்று குமுறும் அமெரிக்கத் தேசியப் பெண்கள் கழகத்தின் தலைவி பெட்டி பிரைடன் என்பவரின் கோபக்கணல் நியாயமானது என நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெண்கள் பீடமேறி வாசகம் வாசிப்பது தவறு என நீதிமன்றம் சென்ற நிகழ்வுகள் தமிழகத் திருச்சபையின் வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லையா? அந்த வாதங்களுக்கெல்லாம் விவிலிய மேற்கோள்கள்தான் அஸ்திரமாக வைக்கப்பட்டது என்பது வேடிக்கையான செய்தி. பெண் குருத்துவம் என்பது எட்டாக்கனி. திருச்சபையின் பணிகளில் எந்தளவுக்குப் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது என்பதை மேய்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் சத்தியசோதனை செய்ய வேண்டியது அவசியம். ஆண்டாண்டு காலமாக திருச்சபையில் நிகழ்த்தப்படும் பெண்கள் மீதான புறக்கணிப்புகளுக்கும் அதனை நியாயப்படுத்தும் புனித அமைதிகளுக்கும் சப்பைக்கட்டுகளுக்கும் ஆதாரமாக்கப்படுவது பவுலடியாரின் வரிகள் என்றால் அது மிகையாகாது. பெண்கள் பொதுவிடத்தில் பேசக்கூடாது, தன் தலையை மூட வேண்டும், ஆண்களுக்குப் பணிந்தே இருக்க வேண்டும் போன்ற கற்பிதங்கள் பவுலடியாரின் வரிகளால் நேர்ந்த கொடுமைகள் என்றே சொல்லலாம். இவைகளெல்லாம் உண்மையா? பவுலடியார் உண்மையிலேயே பெண்களின் பிரதான எதிரியா? அவருடைய மேய்ப்புப் பணியில் பெண்களே இல்லையா? பவுலடியார் பெண்ணினத்தையே கேலிக்குள்ளாக்கினரா? வாருங்கள் கட்டுரைக்குள் நுழைவோம்.

1. பெண்கள் மீதான பவுலடியாரின் புரிதல்கள்

பவுலடியாரின் கடிதங்களில் ஆறு இடங்கள் பெண்களை முகம் சுளிக்கவும் புருவம் உயர்த்தவும் வைப்பவை. அவைகளாவன:

அ. 1 கொரி 11:1-16 — வழிபாட்டின் போது தலையை மூடிக் கொள்ளுதல்.

ஆ. 1 கொரி 14:34-35 — சபையில் பெண்கள் பேசாமல் அமைதியாக இருக்கவேண்டும். அவர்களுக்குப் பேச அனுமதி இல்லை. மாறாகத் திருச்சட்டம்

	கூறுவதுபோல அவர்கள் பணிந்திருக்க வேண்டும்.
இ. எபே 5:21	உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள்.
ஈ. கொலோ 3:18	உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள்.
உ. 1 திமொ 2:9-15	பெண்கள் அமைதியாக இருக்கவேண்டும்.
ஊ. தீத் 2:4-5	வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்து கணவருக்குப் பணிந்திருத்தல்.

இவைகளைப்பற்றிய விளக்கங்களை கட்டுரையின் பின்பகுதியில் சற்று ஆழமாக அலசலாம். இத்தகைய வரிகளைப் பவுல் எழுதினாரா? இல்லையென்றால் பவுலின் மனநிலையில் உதித்ததை இன்னொருவர் எழுதினாரா? இல்லையெனில் இன்னொரு ஆசிரியர் எழுதினாரா? என்ற விவாதத்திற்குச் செல்லுமுன் பவுலடியாரின் அரசியல், கலாச்சார, சமூகப் பிண்ணனியை நாம் புரிந்துக்கொள்ளுவது அவசியம். ஏனெனில் ஒருவரின் சிந்தனையை மற்றும் பிறரைப் பற்றிய புரிதல் இவைகளைத் தீர்மானிப்பதில் சமூகம், அரசியல், கலாச்சாரம் ஆகியவை பெரும் பங்காற்றுகின்றன. எதை ஒருவர் உள்வாங்குகிறாரோ அதையே அவரால் பிரதிபலிக்க முடியும் என்பது இயற்கை நியதிதானே. பவுலடியாரின் பின்னணி யூதம், உரோமை, கிரேக்கக் கலாச்சாரங்களின் சங்கமக் கலவை. இவைகள் பெண்களை எப்படி நோக்கியதோ அப்படியே பவுலடியாரும் நோக்கி யிருக்கலாம் என்பதற்காக இந்தப் பின்னணியைச் சற்று விரிவாகக் காண்போம்.

1.1. கிரேக்கப் பின்னணி

கிறிஸ்தவம் குழந்தையாகத் தவழ்ந்தபோது கிரேக்க மற்றும் யூதத் தொட்டில்களில் தாலாட்டப்பட்டது என்பது வரலாற்று உண்மை. தொடக்கத்தில் யூதம் உலகை வெறுத்தது; உலகு யூதத்தை வெறுத்தது. எனவே உலகிற்கும் யூதத்திற்கும் இணைப்புப் பாலமாக இருக்கக் கிரேக்கப் பின்னணியில் வளர்ந்த பவுலைக் கடவுள் அழைக்கிறார். யூதத்தின் இனவாதமும் கிரேக்கத்தின் அறிவுவாதமும் ஒன்றையொன்று கைகோர்க்கப் பெரும் பங்காற்றியவர் பவுல். அப்படியெனில் பவுலுக்கும் கிரேக்கத்திற்குமிடையான தொடர்பு என்ன? முதலாவதாக பவுல் பிறந்த ஊர் தர்சு. அது கிரேக்கக் கலாச்சாரத்தைச் சின்ன ஆசியாவில்

தூக்கிப்பிடித்த நகரங்களில் ஒன்று. இது வாணிபத்தளம் என்பதைவிட பல்கலைக்கழக நகரம். ஸ்டாயிக் மெய்யியலின் புகலிடமாக விளங்கியது தர்சு நகர். பவுலடியாருக்குக் கிரேக்கம் அத்துபடி. இந்தக் கிரேக்கக் கலாச்சாரம் பெண்களை எந்தவிதக் கலைகளிலும் பங்கெடுக்க அனுமதிக்கவில்லை. பொதுவிடங்களில் நடந்த நாடகங்களில் கூட பெண்களின் பங்கெடுப்பு மிகவும் குறைவு. வீட்டு வேலைகளுக்கு மட்டுமே அவர்கள் பணிக்கப்பட்டனர். அதிகாரம் மற்றும் சொத்து ஆண்களின் பெயரிலேயே இருந்தது என்கிறார் சூ எல்லன் கேஸ் என்ற அறிஞர். கிரேக்க உலகில் பொதுவாழ்விலிருந்து பெண்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டனர். அவர்கள் அரசியலில் ஈடுபடுவதிலிருந்து தடை செய்யப்பட்டனர். அவர்கள் வீட்டுவேலைகளைச் செய்வதிலே முடக்கப்பட்டனர். எனினும் உடல் உழைப்புச் சார்ந்த வேலைகளைத்தான் அவர்கள் செய்ய வேண்டும். அறிவுசார்ந்த, ஆன்மீகம் சார்ந்த வேலைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். அடிமைகள் போன்று பெண்களுக்கும் எந்தப் பங்கெடுப்பும் பொதுவாழ்வில் இல்லை. ஏதென்ஸ் குடியரசில் பெண்கள் குடிமக்களாகக்கூடக் கருதப்படவில்லை. இந்தச் செய்திகளை உள்வாங்கி வளர்ந்தவர் பவுல்.

1.2. யூதப் பின்னணி

யூதனாகப் பிறந்ததில் பெருமிதம் கொண்டவர் பவுல். “சுத்தமான யூதன்” என்பதைப் பல இடங்களில் இவருடைய கடிதங்களில் பதிவு செய்திருக்கிறார் (உம். 2 கொரி 11:22; பிலி 3:4-5; உரோ 11:1). பவுல் முன்னோர்களின் பாரம்பரியத்தையும் தோராவையும் மிகவும் கடுமையாகக் கடைபிடிக்கும் பரிசேயக் குழுவைச் சார்ந்தவர் (திப 26:5). பவுல் கமாலியேலின் மாணவன். ஹில்லல் பள்ளியின் மாணவர். ராபிகளின் கல்வியில் புலமை பெற்றவர். இதனால் யூதச் சட்டமும் இவரின் இரத்தத்தோடு பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த யூதச் சமூகம் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளையே பெரிதும் வரவேற்றது. காலையில் எழுந்ததும் ஒவ்வொரு யூத ஆணும் தன்னைப் பெண்ணாகப் படைக்காததற்கு நன்றி கூறுவது வழக்கம். அதைப்போல் பெண்கள் காலை எழுந்தவுடன் உம் திருவுளத்தின்படி என்னைப் பெண்ணாகப் படைத்ததிற்காக உம்மை புகழ்கின்றேன் (Praised be you who created me as woman according to your will) என்று செபிப்பர். சட்ட-சமயக்

கல்வி பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மறை போதனைப் பள்ளிகள் ஆண்களுக்கு மட்டுமே நடத்தப்பட்டன. தங்களது சொந்த வீட்டில் கூடப் பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை இருந்தது. கன்னிப் பெண்கள் வீட்டின் நடுக்கதவிற்கும், திருமணமான பெண்கள் வீட்டின் வெளிக்கதவிற்கும் அப்பால் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை இருந்தது. பெண்களின் முகம் இரு துணிகளால் மூடப்பட்டிருக்க வேண்டும். இவ்வழக்கத்தைப் பின்பற்றாத பெண்ணை விவாகரத்துச் செய்வதோடு, அதனால் அவருக்குக் கிடைக்கக்கூடிய பண உதவி நிறுத்தப்படுவதும் வழக்கமாக இருந்தது. இவ்வாறு பல தளங்களில் பல்வேறுபட்ட கொடுமை களுக்குப் பெண்கள் யூதச் சமூகத்தில் ஆளாக வேண்டியிருந்தது. இவைகளையெல்லாம் உள்வாங்கி வளர வேண்டிய சூழல் பவுலடியாருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

2. பெண்கள் மீதான பவுலின் தாக்குதல்கள்

தந்தை வழிச் சமூகத்தில் பிறந்து வளர்ந்த பவுல் அந்தச் சமூகம் நிர்ணயித்த கட்டுப்பாடுகளை உள்வாங்கிக் கொண்டு வளர்ந்தவர் என்பதை மேற்கூறியவைகளிலிருந்து அறிகிறோம். இப்போது பவுல் பெண்களைப் பற்றிக் கூறிய கூற்றுகள் ஒவ்வொன்றாக அலசுவோம்.

2.1 பெண்கள் தலையில் முக்காடிடுதல் (1கொரி 11:2-16)

இன்று கூட ஆலயத்திற்கு வரும்போது பெண்கள் தலையில் முக்காடிட்டுக் கொண்டே வருகின்றனர். அருட்சகோதரிகள் கூட தலையில் முக்காடிட்டுக் கொள்வதை நாம் அறிவோம். இவைகளெல்லாம் பவுலடியாரின் இந்த வரிகளினால் நியாயப்படுத்தப்படுகின்றன என்பது உண்மை. பெண்கள் தலையில் முக்காடிடுதல் எப்படி ஓர் அடிமைப்படுத்தும் செயல்பாடு ஆகும் என்ற வினா கூட நம் மனதில் எழலாம். இங்கு பெண்கள் முக்காடு அணிவதில் பிரச்சனை இல்லை. ஏன் ஆண்கள் அணியாமல் பெண்கள் மட்டும் அணிய அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதில்தான் பிரச்சனை எழுகின்றது. இத்தகைய ஒருதலைச் சார்புப் போக்கை ஏன் பவுல் மேற்கொண்டார் என்பதுதான் நம்மை வினா எழுப்ப வைக்கின்றது. பவுலடியாரின் இந்தக் கூற்றை எச்சூழலிலும் நியாயப்படுத்த முடியாது என்றாலும் அவர் அவ்வாறு கூறியிருப்பதன் பின்னணியை அவருடைய மனதோடும், அவர் வாழ்ந்த சமூகத்தின் மனதோடும்

வாசிப்பது நல்லது. இவைகள் பவுலை நியாயப்படுத்தவோ அவர் அவ்வாறு கூறவில்லை என மறுக்கவோ, அப்படி கூறினால் என்ன எனச் சப்பைக்கட்டு கட்டவோ அல்ல. மாறாக இன்றையச் சூழலில் மேய்ப்புப்பணியில் பெண்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படல் கூடாது என்பதற்காக இவ்விளக்கங்களைத் தருகின்றேன்.

1) பெண்கள் முக்காடு அணியவேண்டும் எனப் பவுலடியார் அறிவுறுத்துவதன் மூலம் அவர் ஓர் இறையியலை ஏற்படுத்த முயல வில்லை. மாறாக ஒரு சமூகத்தில் கடைபிடிக்கப்பட்ட ஒரு பழக்க வழக்கத்தைப் பற்றியே குறிப்பிடுகின்றார். ஏனெனில் யூதத்தோடு கிறிஸ்தவம் கைகோர்க்கவும் யூதத்தின் சில நடைமுறைகளைக் கிறிஸ்தவம் உள்வாங்கவும் இத்தகைய பழக்கவழக்கங்கள் முக்கியம் எனப் பவுல் நினைத்திருக்க வேண்டும்.

2) முற்காலத்தில் பெண்கள் தங்களுடைய முடி, காதுகள் மற்றும் நெற்றியை மறைக்க வலியுறுத்தப்பட்டனர். அப்படிச் செய்யாத போது அவர்கள் பெண்களாக மதிக்கப்படவில்லை. அதைப்போல் நீளமாக முடிவளர்த்திருந்த ஆண்கள் ஒருபால்ப்புணர்ச்சி (Homosexuals) யில் ஈடுபடுபவர்களாகக் கருதப்பட்டனர். எனவே புதிதாகத் தோன்றியிருக்கின்ற தன்னுடைய கிறிஸ்துவ நெறி மேற்கண்ட பாலியல் விமர்சனங்களுக்கு உள்ளாகக்கூடாது என்பதற்காகவும் இப்படிக் கூறியிருக்கலாம்.

3) பிலிப் சிடோன் என்ற அறிஞர் பெண்கள் முக்காடிடுவது அவர்கள் திருமணம் செய்து கொண்டதின் அடையாளம் என்கிறார். அதைப்போல் முக்காடு அணியாவிட்டால் அவர்களுடைய திருமணத்தில் முறிவு ஏற்பட்டிருக்கின்றது என்று அர்த்தம். அதைப்போல் கொரிந்து நகரில் முக்காடு அணியாப் பெண்கள் விபச்சரிகளாகக் கருதப்பட்டனர். எனவே இத்தகைய உடை அணியும் முறையைப் (dress code) பவுலடியார் அறிந்திருந்ததால் பெண்கள் முக்காடு அணிவதின் அவசியத்தைப் வலியுறுத்தி இருக்கலாம்.

4) செபிக்கின்றபோது வானதூதர்கள் தம்மோடு உடனிருப்பர் என்ற நமபிக்கை யூதர்களிடம் இருந்தது. இதனைக் கும்ரான் ஏடுகள் பதிவுச் செய்திருக்கின்றன. அதைப்போல் யூதர்கள் பிரிதொரு சிந்தனையையும் கொண்டிருந்தனர். இதற்குப் பின்னணியாக தொநூ 6:1-4 பகுதியை எடுத்தாண்டார்கள். அதன்படித் தெய்வப் புதல்வர்கள்

மண்ணிலுள்ள அழகான பெண்களைத் திருமணம் செய்தனர். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளே அரக்கர்கள் அல்லது பெரும் வீரர்கள் என அழைக்கப்பட்டனர். எனவே செபிக்கும்போது முக்காடிட வில்லையென்றால் அரக்கர்களாகக் கருதப்பட்ட தெய்வப் புதல்வர் களிடமிருந்து பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை எனப் பவுல் எண்ணி முக்காடிடப் பெண்களை அறிவுறுத்தியிருக்கலாம்.

5) நார்மன் கில்லியர் என்ற அறிஞர் 2கொரி 3:14ல் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளபடி ஆண்களும் பெண்களும், இருவருமே, செபிக்கும்போது முக்காடு அணிந்திருந்தனர் என்கிறார். அதைப்போல் கிரேக்கர்கள் மற்றும் உரோமையர்கள் செப நேரத்தில் முக்காடு அணிந்திருந்தனர். எனவே இந்த நடைமுறையைப் பின்பற்றிப் பவுல் அறிவுரை கூறியிருக்க வாய்ப்புள்ளது.

6) இன்னும் சில அறிஞர்கள், இந்த வரிகள் பவுலுடையதாக இருக்க வாய்ப்பில்லை; முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பவுலின் கடிதங்களைத் தொகுத்த அடிப்படைவாதச் சிந்தனை கொண்ட ஒரு நபர் இடைச்செருகலாகச் சேர்த்திருக்கலாம் என்பர்.

2.2. பெண்கள் சபையில் பேசாமலிருக்க அறிவுறுத்தல் (1கொரி 14:34-35; 1திமொ 2:11-12).

பெண்களுக்குக் குருத்துவநிலை வழங்கக்கூடாது என்பதற்கு ஆதாரமாகக்ச் சுட்டிக் காட்டப்படும் விவலிய மேற்கோள்களில் இதுவும் ஒன்று. இதனைப் பயன்படுத்தியே பெண்களுக்குத் திருச்சபையின் ஆசிரியத்தைப் (Magisterium) போதிக்கவும், சட்ட அதிகாரம் அல்லது சட்ட மேலுரிமை (Power of Juridiction) வைத்திருக்கவும் உரிமையில்லை என வாதிடுகின்றனர். இதைக் காரணம் காட்டியே பெண்கள் குறிப்பாக இறையியல் படிப்பதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். அதைப்போல் 1திமொ 2:9 பகுதியை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பொருள் கொண்ட அடிப்படைவாதக் குழுக்கள், பின்னற்சடை, பொன், முத்து, விலையுயர்ந்த ஆடைகள் அணிகின்ற பெண்களை வன்மையாகச் சாடினர்.

மேய்ப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் மேற்கண்ட அதே சிந்தனைகளோடு பெண்களை அணுகாமல் பவுலின் மனநிலையோடு அணுகுவதற்குப் பழகவேண்டும். ஏனெனில் பவுலடியார் அவ்வாறு

கூறியிருப்பதற்கான காரணங்களும் பின்னணியும் வேறு வேறு. இதைப் படிக்கும்போது பவுலடியார் வாழ்ந்த கலாச்சாரப் பின்னணியை மனதில் நிறுத்துவது நல்லது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி பெண்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியது. பெண்களில் பெரும்பாலோனோர் படிக்காதவர்கள். அவர்கள் பெரும்பாலும் வாயாடிகளாகக் கருதப்பட்டனர். யூதச் சமூகத்தில் ஆண்கள் பொதுவிடங்களில் பெண்களிடம் பேசுவது பெரிதாக வரவேற்கப்படவில்லை. சமூகத்தின் இத்தகைய இழி சொற்களால் கிறிஸ்தவப் பெண்கள் ஒருபோதும் காயப்படுத்தப்படக் கூடாது என்ற எண்ணத்தில் பவுல் பெண்களுக்கு இத்தகைய அறிவுரை கூறி இருக்கலாம்.

3. கணவருக்குப் பணிந்திருத்தல் (எபே 5:28; கொலோ 3:18)

திருமணத்தின்போது அதிகமாக மேற்கோள் காட்டப்படும் வரிகளில் இதுவும் ஒன்று என்றால் அது மிகையல்ல. பெண்களின் பணிவில்தான் திருமணத்தின் மொத்தச் சாரமும் உள்ளடங்கியிருக்கிறது போன்ற மாயைகளையும், தவறான படிப்பினைகளையும் திணிக்க இந்த வரிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது உண்மை. ஆனால் பவுலடியார் இதைத்தான் விரும்பினாரா? தன் சுயத்தை மறந்து, தன் உணர்வுகளைக் கட்டிப்போட்டு அனைத்திலும் கணவனுக்கு மனைவி உகந்த இல்லப் பணிப் பெண்ணாய் இருக்கத்தான் பவுலடியார் அறிவுறுத்தினாரா? இதற்கு இரண்டு வகையான விளக்கங்களை நாம் பார்ப்போம்.

முதலாவது, யோசேபுஸ் என்ற யூத வரலாற்று அறிஞர் யூதத் திருமணத்தைப் பற்றி விளக்கும்போது கீழ்காணும் புரிதலைக் காண முடிகிறது. அதன் அடிப்படையில் சட்டத்தின்படி பெண்கள் ஆண்களைவிட எல்லாவற்றிலும் கீழானவர்களே. அதன்படி அனைத்திலும் ஆண்களுக்கு அவர்கள் கீழ்படிந்திருக்க வேண்டும். இது அவர்களின் மாண்பைக் குலைக்க அல்ல; பெண்களுக்கு முறையான அறிவுறுத்தல்கள் வழங்கத்தான். ஏனெனில் அறிவுறுத்தும் அதிகாரம் ஆண்களுக்கே கடவுளால் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நியாயப்படுத்தல்களைப் பவுலடியாரும் யூதப் பிண்ணனியில் கையாண்டிருக்கலாம்.

இரண்டாவது, இந்தப் பகுதிகள் பவுலுடைய அறிவுரைப் பகுதியைச் சார்ந்தவை. அதன்படி இந்த அறிவுரைப் பகுதிகளில்

குடும்பத்தினரிடையே நிலவவேண்டிய ஒரு சில நன்னடத்தை விதிகளைப் (tables of household duties) பவுலடியார் குறிப்பிடுகின்றார். அதன்படி மனைவி- கணவர்களிடை யேயான கடமைகள் மட்டுமன்றி, கணவன்-மனைவி, குழந்தைகள்-பெற்றோர், அடிமைகள்-தலைவர்கள், தலைவர்கள்-அடிமைகள் இவர்களுக்கிடையேயான கடமைகளைப் பற்றியே இங்கு பவுலடியார் குறிப்பிடுகின்றார் என்பது, இதனுடைய நீட்சியும், நிறைவும் கிறிஸ்துவுக்குப் பணிந்திருக்க வேண்டும் (எபே 5:21) என்ற பவுலடியாரின் போதனையே என்பதும் கருத்தில் கொள்ளவேண்டியவை.

மேற்கண்ட பகுதிகளை ஆராய்ந்து பார்த்த நமக்குப் பவுலடியார் பெண்களின் எதிரி அல்ல என்ற முடிவுக்கு வர முடியும். ஒருவேளை பெண்களைக் காயப்படுத்தும் வரிகள் பலவற்றைப் பவுலடியார் எழுதியிருந்தாலும் பெண்களுக்கு மாண்பு வழங்கிய, பெண்களோடு தோழமைப் பாராட்டிய, பெண்களை ஆதரித்த பல்வேறு பகுதிகளை பவுலடியாரின் கடிதங்களில் நாம் காணலாம். தன்னுடைய மேய்ப்புப் பணியில் பெண்களுக்கு அவர் வழங்கிய முன்னுரிமையையும் முகவரிகளையும் அவருடைய கடிதத்தில் நாம் வாசிக்கின்றோம். மேய்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் பெண் விடுதலைக்குப் பதியம் போட்டவராக, பெண்களின் விடுதலைக்குக் கால்கோள் நாட்டிய முன்னோடிகளில் முதன்மையானவராகப் பவுலடியாரை ஏற்க வேண்டும். எவ்வாறு என்பதைப் பின்வரும் பகுதியில் காண்போம்.

3. பெண்களின் சினேகிதன் பவுல்

பவுலடியாரின் குடும்பத்தைப் பற்றிய நேரடிக் குறிப்புகள் அவரின் கடிதங்களில் இல்லை. திப 23:16ல் பவுலடியாரின் சகோதரியின் மகன் பற்றிய சிறிய குறிப்பு உள்ளது. பவுலின் தாயைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. திருமணமானவரா? இல்லையா? என்ற தெளிவும் இல்லை. திருமணமாயிருக்கலாம் என்ற ஊகங்களின் அடிப்படையிலான முடிவிற்கும் நாம் வர வாய்ப்புள்ளது. இதற்கு ஆதாரமாக 1கொரி 9:5யை சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறாக பவுலடியாரின் தனிவாழ்வில் பெண்களுடைய தொடர்பு குறைவானாலும் பொதுவாழ்வில் பவுல் பெண்களுக்குக் கொடுத்த முன்னுரிமை மெய்சிலிர்ப்பை உருவாக்க வல்லது. தன் கடிதங்களில் பெண் நண்பர்கள், தன்னை ஊக்குவிக்கும் பெண்கள், தன் பெண் சீடத்திகள், பெண் திருத்தொண்டர்கள் பற்றிப் பல இடங்களில்

குறிப்பிட்டிருக்கின்றார். இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் காண்போம்.

3.1 பெயிபா (உரோ 16:1-2)

இவர்தான் விவிலியத்தில் காணப்படுகின்ற ஒரே பெண் திருத்தொண்டர். இவரைப் பற்றிப் பவுல் நற்சான்று அளிக்கின்றார். இவரைச் சகோதரி, திருத்தொண்டர், உதவும் உள்ளம் கொண்டவர் என்றும் அடைமொழிகளோடு அழைக்கின்றார். எனினும் இவருடைய பெயர் திருஅவையில் பெரிதாகப் பேசப்படவில்லை என்ற உண்மையையும் நாம் ஏற்க வேண்டும். கெங்கிரேயாவை சேர்ந்த பெண் திருத்தொண்டரான இவரைப் பழைய மொழிபெயர்ப்பில் 'வேலையாள்' என்றே குறிப்பிட்டிருந்தது நினைவிருக்கலாம். இந்தப் பெயிபா கெங்கிரேயா திருச்சபையின் தலைவியாக இருந்தவர். கொரிந்து மாநிலத்தின் துறைமுக நகரங்களில் ஒன்று கெங்கிரேயா. பெயிபா தனிப்பட்ட எந்தப் பணியை முன்னெடுத்தார் என்ற குறிப்பு இல்லாவிட்டாலும் அவர் பவுலுக்கும் மற்றவர்களுக்கும் திருத்தூதுப் பணியில் உதவி செய்து வந்தார் என்ற குறிப்பு உள்ளது. திருத்தொண்டர் என்றாலே பணிபுரிவதுதானே. எனவே மற்ற திருத்தொண்டர்கள் போல இவரும் முழுமூச்சுடன் பணியில் ஈடுபட்டிருக்கலாம்.

3.2 பிரிஸ்கிலா மற்றும் அக்கிலா

இவர்கள் இருவரும் நற்செய்தி அறிவிப்புப்பணியில் ஈடுபட்டிருந்த தம்பதியினர். தன் கணவர் அக்கிலா சென்றவிடமெல்லாம் பிரிஸ்கிலா சென்றார் என்பதால் அக்கிலாவையும் பிரிஸ்கிலாவையும் இணைத்தே நாம் இங்கு குறிப்பிடுவோம். இவர்களைப் பற்றி பவுல் உரோ 16:3ல் ''கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்ற பிரிஸ்கிலாவுக்கும் அக்கிலாவுக்கும் என் வாழ்த்து. அவர்கள் என் உயிரைக் காக்கத் தலைகொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்கிறார். பவுலடியாரின் கடிதங்களில் மட்டுமல்ல திருத்தூதர் பணிகளிலும் இவர்களின் மகத்தான பணி பதிவு செய்யப்படுகின்றது. திப 18:1-3ன்படி இந்தத் தம்பதியினர் யூதர்களாக இருந்த காரணத்தினால் கி.பி. 49-ல் கிளாதியு அரசனால் உரோமையிலிருந்து நாடுகடத்தப்பட்டவர்கள். இவர்களைக் கொரிந்து

நகரில் பவுல் சந்தித்தார். இந்தத் தம்பதியினர் கூடாரம் செய்யும் தொழில் செய்து வந்தனர். இதே தொழிலில் பவுலடியாரும் ஈடுபட்டிருந்ததினால் இவர்களுக்கிடையே நட்பு மலர்ந்தது. அந்த நட்பின் விளைவில் பவுலடியாரின் பயணங்களில் உடன்பயணித்தனர். உதவிக்கரம் நீட்டினர். சிரியாவிற்குச் செல்லும்போது இந்தத் தம்பதியினரைப் பவுல் உடனழைத்துச் சென்றார். ஆனால் அவர்கள் எபேசு நகரிலே தங்கி நற்செய்தி அறிவித்தனர் (திப 18:18-21). இங்குதான் அவர்கள் தலைச்சிறந்த பேச்சாளரான 'அப்பொல்லோ'வைச் சந்தித்தனர். யோவானின் திருமுழுக்கை மட்டும் அறிந்திருந்த அவருக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தனர். இவர்களைக் 1கொரி 16:19லும் பவுல் வாழ்த்துகிறார். பிரிஸ்கிலா தன் கணவர் அக்கிலாவைவிட மிகவும் துடிப்புடன் நற்செய்தி அறிவித்து வந்தார். பிரிஸ்கிலா மற்றும் அக்கிலா என்ற இரு தம்பதியினர் ஒருசேர நற்செய்திப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் பவுலடியார் கடிதம் எழுதும்போது பிரிஸ்கிலாவின் பெயரை முதலில் குறிப்பிடுவதிலிருந்து பிரிஸ்கிலாவின் முக்கியத்துவத்தை நாம் அறியலாம். ஏனெனில் ஆண்களைவிட பெண்களுக்கு முதன்மை என்பது யூதச் சூழலில் குதிரைக் கொம்பு போன்றதல்லவா?

3.3 யூனியா

தொடக்கத் திருச்சபையில் பணியாற்றிய முக்கியத் திருத்தூதர்களில் ஒருவர் யூனியா. இவரும் இவருடைய கணவருமான அந்திரோனிக்கு என்பவரும் பவுலடியாரின் உறவினர்கள் மற்றும் உடன்கைதிகள் (உரோ 16:7). பெண்கள் திருத்தூதர்களாக இருக்க முடியாது, இருக்கக்கூடாது என்ற விவாதத்தின் அடிப்படையில் யூனியா என்ற இந்த பெண் திருத்தூதர் தொடக்கத் திருச்சபையின் பிற்காலத்தில் ஆணாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். பழைய ஆங்கில மொழிபெயர்ப்பில் 'Junia' என்ற பெண்பால் சொல் இருக்காது. 'Junias' என்ற ஆண்பால் சொல் இடம் பெற்றிருப்பதிலிருந்து இதனை அறியலாம். ஆனால் யூனியா பவுலடியாரால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தூதர். பவுலடியார் நிர்ணயித்தத் திருத்தூதராய் இருப்பதற்கான அளவுகோல் பாலின அடிப்படையிலானதல்ல. மாறாக, 1கொரி 4:8-13 மற்றும் 2கொரி 11-12 பிரிவுகள் அடிப்படையில் பவுல் நிர்ணயித்த "துன்பத்தை மகிழ்வுடன் ஏற்று அதை நற்செய்தி அறிவிப்பதில் ஒருங்கிணைத்தல்" என்பதன் அடிப்படையிலானது.

எனவே யூனியாவும் ஒரு தலைசிறந்த திருத்தூதர் என்ற முடிவிற்கு வரலாம்.

3.4 மரியா மற்றும் திரிபோசா, திரிபேனா

மரியாவைப் பவுலடியாரின் உடனுழைப்பாளர்; அதுவும் பாடுபட்டு உழைத்தவர் எனப் பவுலடியார் அழைக்கின்றார் (உரோ 16:16). திரிபேனா மற்றும் திரிபோசாவை ஆண்டவருக்காக உழைப்பவர் என்கிறார் (உரோ 16:12). இவர்களின் உழைப்பைக் குறிப்பிடக் கிரேக்கத்தில் 'kopian' என்ற சொல்லையேப் பவுல் பயன்படுத்துகிறார். தன்னுடைய உழைப்பைக் குறிப்பிடவும் 1கொரி 15:10ல் 'kopian' என்ற இதே சொல்லையேப் பவுல் பயன்படுத்துகிறார். இதிலிருந்து தன்னைப்போல் நற்செய்தி அறிவிக்கப் பாடுபட்டவர்கள் பெண்கள் என்பதைக் காட்டப் பவுல் முயலுவதுபோல் தெரிகிறது. இப்படிப் பாடுபட்டு உழைப்போருக்குப் பணிந்திருக்கக் கிறிஸ்தவச் சமூகத்திற்குப் பவுல் அறிவுறுத்துகிறார் (1கொரி 16:16). அவர்களுக்கு மதிப்புக் கொடுக்க அன்புக்கட்டளைக் கொடுக்கிறார் (1கொரி 16:18). இதிலிருந்து ஆண்களுக்கு மட்டுமே பணிந்து, மதிப்புக் கொடுக்கப் பவுல் கூறவில்லை. எல்லோருக்கும் பணிந்திருந்து மதிப்பளிக்க விரும்பினார் என்பது புரிகின்றது.

3.5 எயோதியா மற்றும் சிந்திக்கா

பவுலடியார் தன்னுடைய உடன்பணியாளர்களைத் தன்னோடு சேர்ந்து நற்செய்திக்காகப் போராடினவர்கள் என்கிறார். மேலும் அவர்களுடைய பெயர்கள் வாழ்வோரின் நூலில் எழுதப்பட்டுள்ளன என்கிறார் (பிலி 4:2-3). எயோதியா, சிந்திக்கா ஆகிய இவர்கள் இருவரும் கருத்து வேறுபாடுகளை விட்டுவிட்டு ஒன்றுசேர வேண்டும் என்கிறார். அவர்கள் இருவரின் பிரிவு பிலிப்பி நகரத் திருச்சபைக்குப் பாதகமாக அமையும் என்பதை உணர்ந்தவராய் அவர்களைச் சேர்ந்து பணிச்செய்ய அழைப்பு விடுக்கிறார். இதிலிருந்து பெண் தலைவர்களைப் பவுல் உருவாக்கினார் என்பது புலனாகிறது.

3.6 குலோயி

கொரிந்து திருச்சபையின் மிக முக்கியமான நபர் குலோயி. திருமணமாகிக் கணவனை இழந்தவர். குலோயி வீட்டார் மூலம் கொரிந்து நகரின் பிரிவினைகளையும் பிரச்சனைகளையும் பவுல் அறிந்துகொள்கிறார்.

இவர் எபேசில் வாழ்ந்தவராகக்கூட இருக்கலாம் என்கின்றனர். இவருடைய உறவினர்கள் கொரிந்து நகரில் வியாபாரத்தில் ஈடுபட்டதால் அவர்களிட மிருந்து கிடைக்கப் பெற்ற செய்திகளைப் பவுலோடு பகிர்ந்திருக்கலாம். ஏனெனில் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட திருமுகம் பவுலடியார் எபேசில் இருந்தபோது எழுதப்பட்டது.

3.7 வேறு சிலப் பெண்கள்

மேலே குறிப்பிட்ட பெண்கள் மட்டுமல்லாது இன்னும் பல்வேறு பெண்கள் பவுலடியாரின் நண்பர்களாகவும் உடனுழைப்பாளர்களாகவும் ஊக்கமூட்டுபவர்களாகவும் இருந்திருக்கின்றனர். குறிப்பாக அப்பியா (பில 1:2), பவுலின் கரங்களினால் திருமுழுக்கு அளிக்கப்பட்ட, பவுலடியாருக்கு நல்லதொரு உபசரிப்பை வழங்கிய லிதியா (திப 16:11-15), தன்னுடைய தாய் என அழைக்கும் அளவிற்குப் பவுலடியாரால் அன்பு செய்யப்பட்ட ரூபுவின் தாய் (உரோ 16:13), நேரேயுவின் சகோதரி யூலியா (உரோ 16:15) போன்றவர்கள் பெயர் குறிப்பிடப்பட்ட பெண்கள் ஆவர். இன்னும் பெயர் குறிப்பிடப்படாத எத்தனையோ பெண்கள பவுலடியாரோடு பணியிலும் வாழ்விலும் உடன்பயணித்திருக்கலாம்.

4. பெண்களின் எழுச்சிக்கானப் பவுலின் போதனைகள்

பெண்களைக் காயப்படுத்திய ஒரு சிலக் குறிப்புகளைப் பவுலடியாரின் கடிதத்தில் காண முடிந்தாலும் பெண்மை ஏற்றம் பெறப் பவுலடியார் முன்மொழிந்த சிந்தனைச் சிதறல்கள் ஏராளம். பெண்களின் எழுச்சிக்கு உரமூட்டுவதில், பெண்கள் மீதான சீழ்பிடித்தச் சிந்தனைகளை உடைத்தெறிவதில், பெண்களுக்குக் கரம் கொடுத்துக் கரைச்சேர்ப்பதில் பவுலடியாரின் சிந்தனைகள் அழியா முத்திரை பதித்தன என்றால் அது மிகையில்லை. குறிப்பாகக் கீழ்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

“கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். அவ்வாறெனில், கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமை குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை;

கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலா 3:27-28).

"ஆண்டவரோடு இணைக்கப்பட்ட நிலையில் ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை. ஏனெனில் ஆணிலிருந்து பெண் தோன்றியது போலவே, பெண் வழியாகவே ஆண் தோன்றுகிறார்" (1கொரி 11:11-12).

மேலும் பெண்களைச் 'சகோதரிகள்' என அழைப்பவர் பவுல் (உரோ 16:1, 1திமொ 5:1-2). பெண்களின் பணியைப் பாராட்டி அவர்களை வாயார வாழ்த்துகிறார் (உரோ 16:11-15). தங்களுடைய வீடுகளில் வழிபாடு நடத்த உதவிய பெண்களுக்கு நன்றி மாலையிட்டுக் கொலுவேற்றுகிறார் (கொலோ 4:15). ஆண்டவரின் நற்செய்திக்காக உயிரைப் பணயம் வைத்த பெண்களை அவர் மறந்திடவில்லை (பிலி 4:2; உரோ 16:11-12). அவர்களின் திருத்தூதுப் பணியை அங்கீகரிக்கிறார் (திப 18:24-26). இவை மட்டுமல்ல தன் உழைப்பாளர்களை அழைக்கப் பயன்படுத்திய 'அன்புக்குரிய' என்ற சொல்லையே பெண்களை அழைக்கவும் பயன்படுத்துகிறார். மேலும் மேய்ப்புப்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் திருமணமாகாதப் பெண்கள், விதவைகள் போன்றோர் எத்தகையப் பணிகளைச் செய்ய வேண்டுமென்ற தெளிவானத் திட்டங்களைத் தருகின்றார். இளம் விதவைகளை மறுமணம் செய்ய அவரே அறிவுறுத்துகிறார் (1கொரி 7:8-9; திப 5:11-15). இதுவே பவுல் முன்னெடுத்த பெண் விடுதலைப் பணிக்கான தலைச்சிறந்த சான்றாகும். விதவைகளை மேய்ப்புப்பணியில் சிறந்த முறையில் பராமரிக்கத் தன் கடிதத்தில் அன்புக் கட்டளையிடுகிறார் (1திமொ 5:3). அவர்களுக்குரிய மாண்பையும் மதிப்பையும் கொடுக்க உத்தரவிடுகின்றார்.

5. பவுலடியாரின் வாழ்வின் ஒளியில் திருச்சபையின் பதிலிறுப்புகள்

திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணியாளர்களோடு எங்கு பெண்கள் (பொதுநிலையினர்) உடனிருந்து உழைக்கவில்லையோ அங்கு திருச்சபை உண்மையாக நிறுவப்படவுமில்லை; நிறை அடையாளமாக வளரவுமில்லை (ந.அ.பணி 21) என்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு. அதன்படி மேய்ப்புப் பணியில் பெண்களுக்குத் தனிக்கவனம் செலுத்தப்படாதவரை மேய்ப்புப் பணியில் பெண்கள் ஈடுபடாதவரை, ஈடுபடுத்தப்படாதவரை திருச்சபை செத்த திருச்சபை என்ற முடிவிற்கும் வரலாம். அப்படியெனில்

திருச்சபையில் பெண்களுக்கான வலுப்படுத்தல்கள் நிகழ என்ன செய்யலாம். கீழ்காணும் இரண்டு தளங்களில் அவர்கள் திருச்சபையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

1. அங்கீகரிக்கப்பட வேண்டிய தலைமைத்துவம் பங்கு பேரவை, பங்கு நிதிக்குழு, பங்கிலுள்ள பிற குழுக்கள், மறைமாவட்டப் பேரவை, மறைமாவட்டப் பணிக்குழுக்கள், நிதிக்குழு போன்ற இன்னும் பல அமைப்புகளில் தலைவர்களாகப் பெண்களை நியமனம் செய்யலாம்.

2. திருச்சபைச் சட்டம் வழங்கிய சலுகையிலாவது முன்னுரிமை. 1983ல் வெளியிடப்பட்ட திருச்சபையின் சட்டத் தொகுப்புப் பொது நிலையினருக்குப் பல்வேறு சலுகைகளை அனுமதித்தது. அதன்படி

- திருமணங்கள் நடத்தக் கட்டளைப் பேராண்மை (தி.ச. 112.1).
- அருள்வேண்டல் குறிகள் நிறைவேற்றும் உரிமை (தி.ச. 1168).
- நீதிபதிகளாக நியமனம் செய்தல் (1421.2).
- மறைமாவட்ட நிதிக்குழுவில் உறுப்பினர்கள் (492.1).
- பங்கு நிதிக் குழுவில் (537).
- திருச்சபையின் சொத்துக்களின் நிர்வாகத்தில் (1282).
- மறைமாவட்ட மேய்ப்புப் பணியில் (512.1).
- பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் (536.8).

போன்றவை பொதுநிலையினருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற ஒரு சில உரிமைகள். அவைகளில் ஏன் பெண்களை முன்னிலைப்படுத்தக்கூடாது?

இறுதியாக

விடுதலைக்கு மகளிரெல்லோரும்
வேட்கை கொண்டனம்...
உடையவன் சக்தி ஆண் பெண் இரண்டும்
ஒரு நிகர் செய்துரிமை சமைத்தான்
இடையிலேபட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருமைப்பட்டிருப்போமா?

என்றான் முண்டாசுக் கவி பாரதி.

ஆதியிலே இல்லாது பாதியிலே வந்த இந்தப் பெண்ணடிமைத்தனங்களை உடைத்தெறிவது கிறிஸ்தவத்தின் நிபந்தனையாக உள்ளது. பாலின நீதி முன்னொரு காலத்தில் இருந்ததை விட இப்பொழுது சற்று மாறுபட்டும் மேம்பட்டும் உள்ளது என்று வீண் பெருமையடிப்பதைவிட பாலினநீதி பரிபூரணமடைய ஒவ்வொரு கிறிஸ்தவரும் முயலவேண்டும். இன்னும் எத்தனை காலம் பவுலடியாரின் வார்த்தையைக் கொண்டே பெண்ணினத்தை இழிவுப்படுத்தப் போகின்றோம்? காலம் கனியக் கனியச் சீழ்பிடித்தச் சிந்தனைகளும் களையப்பட வேண்டும். பெண்களுக்கென்று தனிப் பேருந்து, ரயிலில் தனி அறை, தனிக் கழிப்பறை, தனி உணவு விடுதிகள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதினாலோ அவ்வப்போது பேசப்படும் இடஒதுக்கீடுகளினாலோ பெண்ணடிமைத்தனம் தீரப்போவதில்லை. ஒவ்வொரு தனிமனிதனின் மனநிலையும் மாற்றம் பெற வேண்டும். மனச்சான்று உறுதிப்பட வேண்டும். அதற்கான ஒவ்வொரு அசைவும் ஆன்மீகமாக்கப்பட வேண்டும். இந்தப் புனிதப் பணியை முன்னெடுப்பது ஒவ்வொரு அருட்பணியாளர் மற்றும் மேய்ப்புப்பணியில் ஈடுபட்டிருப்பவர்களின் தன்னிகரற்ற தனிமுதல் கடமையாக வேண்டும். செபிக்கவும், காணிக்கையிடவும், கீழ்படியவும் எத்தனை காலம் பெண்ணினத்தைப் பயன்படுத்தப் போகின்றோம்? அவர்களை வலுப்படுத்துவதும், அவர்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதும், அவர்களைச் சமய, சமூக, பொருளாதார, கலாச்சார, பண்பாட்டுத் தளங்களில் தன்னிறைவு பெற்றவர்களாக்குவதும் மேய்ப்புப் பணியின் உன்னத நோக்கங்கள் என்பதை உணர்ந்து தார்மீக ரீதியாக மேய்ப்புப் பணியாளர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும். பெண்ணினத்தின் மீது திணிக்கப்பட்ட ஒருசில புனைவுகளை துடைத்தெறிய வேண்டும். ஆண் மையத் திருச்சபை மறைந்து சமத்துவத் திருச்சபை மலர வேண்டும். அதற்கான காலம் அண்மையிலில்லை. அசாத்தியமானவைகளையும் சாத்தியமாக்கிய பரமன் இயேசுவின் வழித்தோன்றல்கள் நாம் என்ற வகையிலும், உரமேறிய நற்செய்திப் பணியாற்றிய பவுலால் ஊட்டி வளர்க்கப்படுபவர்கள் என்ற முறையிலும் மானிடத்தின் சரிபாதியினர்களான பெண்ணினம் ஏற்றம் பெற சபதம் ஏற்போம். பெண் உரிமைத் தீபம் ஏற்றுவோம். அதற்கு நம் வியர்வைகளும் இதயங்களும் எண்ணெய்களாகவும் திரிகளாகவும் மாறட்டும்.

இ. புறவினத்தாரின் திருத்தூதர் பவுல்

திருத்தொண்டர் ஆரோக்கியசாமி
இறையியல் நான்காமாண்டு
சிவகங்கை மறைமாவட்டம்

1. முன்னுரை

ஆக்கிரமிப்பு அரசியலும் அடிமைத்தன வரலாறுகளும், இன்று நேற்று நடந்து வருவதல்ல. இது உலக வரலாற்றின் கசப்பான உண்மைகளாகத் தொடர்ந்து இருந்து வருவது கண்கூடு. ஆக்கிரமிப்பாளர்களும் வந்தேறிகளும் மண்ணின் மக்களை ஒடுக்கி, நிலங்களைச் சுரண்டி, அடிமைத்தனச் சித்தாந்தங்களைப் புகுத்தி மனிதமிழக்கச் செய்த வரலாற்று எச்சங்கள் ஏராளம். குறிப்பாக இந்திய நாட்டில் ஆரிய ஆக்கிரமிப்புச் சக்திகளும், மேல்தட்டு வர்க்கங்களும் தங்களுக்குச் சாதகமான சமூக அமைப்பை உருவாக்கி, அதில் சாதியப் படிநிலைச் சித்தாந்தத்தைப் புகுத்தி, அதற்கு ஒரு சமயச் சாயத்தையும் பூசிப் பல ஆயிரம் ஆண்டுகள் தங்களின் ஆதிக்க ஒடுக்குமுறையை நடைமுறைபடுத்தியுள்ளது. இந்திய வரலாற்றுக் கசப்பு எதார்த்தமாக உள்ளது. இந்நிலையில் ஒவ்வொரு மனிதனும் மாண்போடும் மதிப்போடும் வாழ வேண்டும் என்பது இறை நியதியாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் சக மனிதன்மேல் அன்பு கூறும் மனப்பாங்குதான் மனிதநேயம். இந்த மனிதநேய உணர்வு எல்லா மனிதனிடத்தும் இருக்கிறது. தனிமனிதனிடம் இருக்கும் இவ்வுணர்வைத் தட்டி எழுப்பி, உரமூட்டி, ஊக்கப்படுத்தி, உத்வேகம் தந்து ஒருவருக்கொருவர் உடனிருந்து உதவுவது தான் சமூகம். அந்த உடனிருப்பில் ஒவ்வொரு மனிதனும் தனக்கான நியாயத்தை, உரிமையை, மாண்பை, மதிப்பைப் பெறுவதும் வழங்குவதும்தான் சமூக நீதியாகும். இந்த நீதி தனிமனிதச் சுதந்திரத்தையும், தனி மனித நலன்களையும் மதிக்கிறது. ஆனால் சுதந்திரம், நலன்கள் என்ற பெயரில் ஒரு மனிதனுக்குத் தன் சக

மனிதனின் உரிமையைப் பறிக்கவோ வாழ்வு நலன்களை மறுக்கவோ, ஏற்றத்தாழ்வுடன் நடத்தவோ, அடிமைத்தனங்களைப் புகுத்தவோ எந்த உரிமையும் இல்லை. மனித உரிமைப் பிரகடனம், பிரிவு 1, "ஒவ்வொரு மனிதனும் தனக்கான உரிமையையும், சுதந்திரத்தையும் தடையின்றி அனுபவிக்க அடிப்படை மனித மாண்போடும், உரிமையோடும் சமத்துவத்தோடும் பிறக்கிறான் (All human beings are born free and equal in dignity and rights)" என்கிறது.

இத்தகைய அடிப்படை உரிமைகள் மனிதகுல முழுமைக்கும் படைப்பிலே கொடுக்கப்பட்டாலும், மனிதன் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவன் என்ற கருத்துருவாக்கம் இருந்தாலும் இன்றைய சமூக எதார்த்தம்போலவே அரசியல் அடக்கு முறைக்கும், சட்டத்தின் கோர அணுகுமுறைக்கும், உரிமையிழந்த அடிமைத்தனத்திற்கும், உரோமைக் காலனியாதிக்கத்திற்கும் இலக்காகி, தீட்டுக் கலாச்சாரப் போக்குக்குப் பலியாகி நிமிர்ந்து பார்ப்பதுகூட தடை செய்யப்பட்டு, வாழ்வு நலன்கள் பறிக்கப்பட்டுப் பச்சைப் பரிதாபத்திற்குத் தள்ளப்பட்டவர்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் பாலஸ்தீனப் பகுதியில் வாழ்ந்த பிற இனத்தவர்கள் (புறவினத்தார்). இது இயேசுவின் காலத்திற்கு முன்னும் பின்னும் முரண்பாடுள்ள மிகப்பெரிய பிரச்சனையாகும். இத்தகைய சமூகத்தின் கூட்டு அடிமைத்தனத்தை முதலில் இயேசு உடைக்கிறார். வாழ்வு மறுக்கப்பட்ட புறவினத்தவரை வாழ்வின் மையமாக்குகிறார் இயேசு. இயேசு நிகழ்த்திக் காட்டிய அதே சமூகப் புரட்சியைத் தானும் செய்து, இயேசுவை அடியொட்டிப் பின்தொடர்ந்து, புறவினத்தாரின் திருத்தூதராகும் அளவுக்குப் பவுலைத் தூண்டியது எது? புறவினத்தாருக்குப் பவுல் செய்த விடுதலைப் பணிகள் என்ன? என்பது பற்றி அறிய இக்கட்டுரை முயல்கிறது.

2. புறவினத்தவர் - சொல் விளக்கம்

புறவினத்தவர் (gentile) என்ற சொல் இலத்தினில் 'ஜென்ஸ்' (gens) என்றும், எபிரேயத்தில் 'கோயிம்' (goyim) என்றும் அழைக்கப் படுகிறது. இதற்கு 'இனம்', 'யூதரல்லாதவர்', 'பிற சமயம் சார்ந்தவர்' என்று பல அர்த்தங்கள் உண்டு. யூத வழக்கில் 'புறவினத்தவர்' என்று இச்சொல் பொருள் கொள்ளப்பட்டது. இவர்களுக்கான தனித்தன்மையாகத் திருவிவிலியம் ஏழு நாட்டு இனங்களைக், குறிப்பாக "எமோரியர், பெரிசியர்,

கானானியர், இத்தியர், கிர்காசியர், இவ்வியர் மற்றும் எபூசியர்" என்னும் இனங்களைச் சுட்டிக் காட்டுகிறது (யோசு 24:11).

யூதப் பாரம்பரியத்தில் இஸ்ரயேலர் புறவினத்தவரிடமிருந்து சமயம், திருமணம் மற்றும் அரசியலில் முற்றிலும் வேறுபட்டு விலகி இருந்தனர் (விப 23:28,33; இச 7:1-5; யோசு 23:4-13). இத்தோடு மட்டுமல்லாது இஸ்ரயேல் இனம் மட்டுமே உடன்படிக்கையின் மக்கள், புறவினத்தவருக்கு ஒளி தருபவர்கள் (எசா 42:6), சட்டத்தைக் கற்கத் தகுதியுடையவர்கள் (எசா 2:2-4), கடவுளின் அரசுரிமையின் பங்கேற்பாளர்கள் (எசா 45:22-24; 51:4-5) என்று கூறிப் புறவினத்தார் புறக்கணிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இயேசு தனது விடுதலைச் செய்தி மற்றும் பணி மூலம் புறவினத்தவருக்கு முன்னுரிமை தருகிறார் (மத் 21:31; மாற் 11:15; லூக் 10:30-35). தூய பவுலும் கடவுள் யூதருக்குமட்டுமல்ல; புறவினத்தவருக்கும் உரியவர் என்பதை அவரவர் நம்பிக்கைதான் முடிவு செய்ய முடியும் (உரோ 3:28-30) என்று வாதிட்டு நற்செய்தியின் வழி புறவினத்தவரும் கிறிஸ்து இயேசுவின் உடன் உரிமையாளர், ஒரே உடலின் உறுப்பினர், உடன் பங்காளிகள் (எபே 3:6) என்று கூறி புறவினத்தவரின் திருத்தூதராகத் தன்னை முழுவதும் மாற்றிக் கொள்கிறார்.

3. புறவினத்தவர் விடுதலையில் இயேசு வழியில் பவுல்

அடிமைத்தனங்களுக்கும், உரிமைப் பறிப்புக்கும். மாண்பு இழப்புக்கும், காலனியாதிக்கத்திற்கும், சுரண்டலுக்கும் நினைவுத் தூணாய் நின்ற பாலஸ்தீனாவில் பிறந்தவர்தான் இயேசு. ஆண் மகவின் பிறப்பு என்ற அடிச்சுவடு இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்ற ஆதிக்க அரசாணையின் விளைவான பிறப்புரிமை பறிப்புக்கு மத்தியிலும் தப்பிப் பிழைத்தவர்தான் இயேசு (மத் 2:16). ''தீட்டு-தூய்மை'' என்று எழுதப்பட்ட சட்டத்திற்கும் அதனால் தக்கவைக்கப்பட்ட அடிமைத்தனத்திற்கும் இயேசுவே நேரடிச் சாட்சி. "பெண்களும் புறவினத்தாரும், குழந்தைகளும் நாய்களைவிட என்றுமே உயர்ந்தவர்கள் இல்லை" என்ற யூத நெறியின் மேட்டுக்குடிச் சிந்தனைகள் அவருடைய எண்ணத்திரையில் நெருப்பாய்ப் பதிந்திருக்க வேண்டும். "ஓய்வுநாள் சட்டத்தைக் கடைபிடித்தால்தான் மீட்பு. அதற்காகத்தான் மூச்சே விடுகிறோம்'' (மாற் 2:23-27) என்று கூறி

மனித உரிமைக்குத் திரை போட்டு வந்த அடக்குமுறையாளர்களின் ஆணவக் கூடாரத்தையும், மூடத்தனத்தின் முகத்துவாரத்தையும் தன் முதுகில் சுமந்தவர் இயேசு. பின்னாளில் தான் அநீத முறையில் கொலை செய்யப்பட்டு அநாதைப் பிணமாய்த் தொங்க வேண்டியிருக்கும் என்ற தீர்க்கதரிசனப் பார்வையுடன் அதுவரைத் தன் உயிரைக் காக்க வேண்டி எகிப்து நோக்கித் தப்பி ஓடியவர் இயேசு (மத் 2:13). அவரது சிலுவை மரணம் கூட தக்க விசாரிப்பு இல்லாமல், பாஸ்காத் திருவிழாவில் எதிர்பார்க்கப்பட்ட கலவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டி அவசர அவசரமாய் அரங்கேறிய ஓரங்க நாடகத்தில் நடந்த படுகொலையே. இத்தகைய மனித உரிமைக்கு எதிரான அனைத்துக் கொடுமைகளையும் இயேசு அனுபவித்தார். அந்த அனுபவத்தை உள்வாங்கி, நிதானமாய் மூச்சு வாங்கிக் கொண்டே முன்னேறும் மலையேறிகள் போல் உள்ளத்தில் பதித்து, தனக்குள் உரமேற்றிக் கொண்டு, அவைகளைத் தூர்வாரும் தூய பணியில் முன்னின்றவரும் முதல் நபரும் இயேசு. அசீரிய இரத்தக் கலப்பு உள்ளதால் தீட்டுப்பட்டவர்களான சமாரியர்களையும் (லூக் 10:25-37; யோவா 4:9), ஆடு, மாடு, பன்றி மேய்த்தல், தோல் பதனிடுதல் போன்ற தொழில்களால் தீட்டுப்பட்ட ஆயக்காரர்களையும், சட்டம் தெரியாததால் தீட்டுப்பட்டவர்கள் என்று பட்டம் சூட்டப்பட்ட ஏழைகள் மற்றும் புறவினத்தாரையும் மனித உரிமையோடு நடத்தத்தான் முதலில் முயல்கின்றார்.

பிறகு செயல்வீரராக யூத சமூகத்தில் நுழைகிறார். அங்கு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்ல முயன்று அவரது வாழும் உரிமையைப் பறித்த பரிசேயர்கள் சதுசேயர்களுக்கு மத்தியில் தோன்றி அப்பெண்ணின் வாழும் உரிமையை (யோவா 8:1-11) உறுதிப்படுத்துகிறார். பெண்ணை இச்சையோடு பார்ப்பதே பாவம் என்று கூறி மகளீரின் அடிப்படைச் சுதந்திரத்தை மதிக்கிறார் (மத் 5:28). அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்களுக்குத் தன் சீடர் குழாமில் கணிசமான இடஒதுக்கீட்டைக் கொடுத்து பெண்ணுரிமையைப் போற்றுகிறார் (லூக் 8:1-8) இயேசு. ஆண்களும் பெண்களும் ஒன்றுதான் என்ற சமத்துவச் சித்தாந்தத்தைத் தன் பாதத்தைக் கூந்தலால் துடைக்க அனுமதித்ததின் மூலம் இயேசு (லூக் 7:36-48) நிறைவு செய்கிறார். அன்றாடங் காய்ச்சிகளான வரிதண்டுபவர் மற்றும் மீனவ ஏழைகளைத் தன் சீடர்களாக்கி அழைப்புக்கு அர்த்தம் கொடுக்கிறார் (மத் 9:9-13;

லூக் 5:1-11). ஏழை. எளியவர், ஒடுக்கப்பட்டோர். பாவிகள், வரிதண்டுவோர், புறவினத்தார்மீது அக்கறைகொண்டு அவர்களின் நல் வாழ்வுக்காகச் சார்பு நிலைப்பாடு எடுப்போருக்கு மட்டுமே இறையாட்சியில் இடம் (மத் 25:31-46) என்று புரட்சி விதை தூவுகின்றார். இறுதியாக பாதிக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர், புறந்தள்ளப்பட்டோர், ஆதரவற்றோர், அந்நியருக்குச் செய்கின்ற உரிமைச் செயல்பாடு அடிப்படையில்தான் நடுத்தீர்வையும் உண்டு என்று எடுத்து இயம்புகின்றார்.

இத்தகைய எதார்த்தமான உரிமைச் செயல்பாடுகள் மூலம் தனது தொழுவம் முதல் இறப்பு வரை ஆட்சியாளர்களுக்கும் ஒடுக்குவோருக்கும் கலக்கத்தைத் தந்தார் இயேசு. தொழுவத்தில் பிறந்து புறவினத்தாரின் வாழ்வில் ஒளியாகச் சுடர்விட்ட இயேசுவைச் சிக்கென்று பிடித்துக் கொண்டு செயல்படத் துடித்தவர்தான் பவுல். இவ்வாறு பவுலுடைய சிந்தனை, சொல், செயல் முழுவதும் கிறிஸ்துமயமானது. எனவே கிறிஸ்து அருளிய வெளிப்பாட்டின் வழியாகத் தான் பெற்றுக்கொண்ட கிறிஸ்து மைய நற்செய்தியை (கலா 1:12-16) உலகெங்கும் பறைசாற்ற முனைகின்றார். தன்னுடைய நற்செய்திப் பணியில் அடித்தட்டு மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு நலன் குறித்துச் செயல்படுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பது "ஏழைகளுக்கு உதவி செய்ய மறக்க வேண்டாம்" என்ற அவரது கூற்றுலிருந்து தெளிவாகிறது (கலா 2:10). தன்னுடைய இறுதிப் பயணத்தில் எபேசு நகர மூப்பர்களிடம் பிரியாவிடை பெறும்போது "நானே பாடுபட்டு உழைத்து நலிவுற்றோர்க்குத் துணை நிற்க வேண்டும் என்பதில் உங்களுக்கு வழிகாட்டியானேன்" (திப 20:35), என்று கூறுவதின் மூலம் தனது பணியின் இலக்கை இயேசுவின் வழியில் பவுல் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறார் என்பது நமக்குப் புலப்படுகிறது.

4. புறவினத்தவர் வாழ்வில் பவுலின் விடுதலை விருட்சங்கள்

பவுல் ஒரு யூதர். இஸ்ராயேல் இனத்தவர். பென்யமின் குலத்தவர். எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்த எபிரேயர். திருச்சட்டத்தைக் கடைபிடிப்பதில் பரிசேயர் (பிலி 3:5); மிகுந்த இனப்பற்றுள்ளவர் (உரோ 9:3). இத்தகைய பின்புலம் கொண்ட பவுலடியார் உயிர்த்த ஆண்டவரின் சந்திப்புக்குப் பின் கடவுள் அருளும் மீட்பு யூதருக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் பொதுவானது. எனவே தம் மகனைப் பற்றிய நற்செய்தியைப்

புறவினத்தவருக்கு அறிவிக்குமாறு தாயின் வயிற்றிலிருந்தே என்னைத் தமக்கென ஒதுக்கி வைத்துத் தமது அருளால் என்னை அழைத்தார் (கலா 1:15-16) எனப் பூரிப்புடன் கூறுகின்றார். இத்தகைய சிறப்பு அழைப்பைப் பெற்ற பவுல் புறவினத்தவர்மேல் கொண்ட அன்பைத் தனது விடுதலைப் பணி மூலமாக எண்பிக்கிறார்.

4.1 ஏழ்மையிலிருந்து விடுதலை

முதலாவதாக, ஏழைகள் என்போர் அடிப்படையில் பொருளாதாரத்தில் வறியவர்கள். வாழ்வுக்கான ஆதாரம் அற்றவர்கள். வாழ்வின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய வகையின்றி பட்டினிக்கும் பாதுகாப்பின்மைக்கும் ஆளானவர்கள். தெருவோரத்துப் பிச்சைக்காரர்கள், வேலையற்றோர், அநாதைகள், ஆதரவற்ற கைம்பெண்கள், முதியவர்கள், உழைக்க இயலாத ஊனமுற்றோர், ஊரை விட்டு ஒதுக்கப்பட்ட தொழுநோயாளர்கள் என்கிறார் ஆல்பர்ட் நோலன்.

இரண்டாவதாக, ஏழைகள் என்போர் சமூகப் பண்பாட்டு ஏழ்மைக்கு உள்ளானவர்கள். இவர்கள் சமூக உயர்நிலையும் மதிப்பும் இல்லாதவர்கள், இழிவாகவும் தீட்டாகவும் கருதப்பட்ட தொழிலைச் செய்கிறவர்கள். பெண்கள், அடிமைகள் இதில் அடங்குவர்.

மூன்றாவதாக, ஏழைகள் என்பது ஏழைகளின் மனநிலையை உடையோரையும் குறிக்கும். இதையே ஜான் பியூலன்பர்க் என்பவர் "ஏழைகள் அடிப்படையில் வறுமையில் உழல்பவர்கள் மற்றும் தங்களின் பலவீனங்களை ஏற்றுக்கொண்டு கடவுள் ஒருவரையே நம்பியிருப்பவர்கள்" என்று கூறுகின்றார்.

இயேசுவும் தன் பிறப்பு மூலம் ஏழைகளின் வாழிடத்தைத் தேர்ந்தெடுக்கிறார் (லூக் 2:2). எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணிப்பு நேரத்தில் ஏழைகளின் காணிக்கையாக ஒரு ஜோடி புறாக்களை அளித்தது அவர் ஏழைகளின்பால் கொண்ட (லூக் 2:23-24) உறவைக் காட்டுகிறது.

ஏழைகளுக்கு நற்செய்தி என்பதே அவரது கொள்கையாக (லூக் 4:18) அறிவிக்கிறார். ஏழைகளின் வாழ்வு நலன்களே அவரது பணியாகவும் இருக்கிறது. தான் வாழ்ந்த காலத்து ஏழைகள் போன்று தானும் பசி, பயணக் களைப்புக்கு உள்ளாகின்றார் (யோவா 4:6).

தனக்கென்று தலைசாய்க்கக்கூட இடமில்லாத நிலையை (மத் 8:20) அவரே ஏற்றுக் கொள்கின்றார். ஏழைகளோடு உள்ள இந்தத் தோழமை உறவைச் சிறப்பான முறையில் உணவருந்துவதன் மூலம் எண்பிக்கின்றார்.

இயேசு ஏழைகள் பால் கொண்ட உறவு, பவுலின் வாழ்வைப் பாதித்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பவுலும் தன் பணியைப் புறவினத்து மக்களாக நடத்தப்பட்டுப் பொருளாதாரத்தில் வறியவர்களாகக் கடவுளை மட்டும் நம்பியிருந்த ஏழைகள் சார்பாக அமைத்துக் கொண்டார் என்பதை அவரது திருமடல்களில் நிறையவே காண்கிறோம். குறிப்பாகத் தான் செய்த கூடாரத் தொழில் மூலம் ஏழைகளான உழைக்கும் வர்க்கத்தோடுத் (திப 18:3) தன்னை இனம் கண்டு கொண்டார். வலுவற்று இருக்கின்ற மக்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்து அவர்களுக்கான வலுவின்மையிலும் ஏழ்மையிலும் வல்லமையை வலிமையைக் கொடுக்கத் தானே வலுவற்ற நிலையை (1கொரி 9:2) அனுபவித்து எல்லோருக்கும் எல்லாமானார். தான் ஒரு ஏழை என்பதை (2கொரி 6:10) ஏற்றுக்கொண்டு அத்தகைய ஏழ்மை நிலையில் உள்ளோரைச் செல்வராக்கி மனித மாண்பைக் கொடுத்திருக்கிறேன் என்று கூறுகிறார். இயேசு செல்வராக இருந்தும், ஏழ்மையில் உள்ளோரைச் செல்வராக்க ஏழையானார் (2கொரி பிரிவுகள் 8 – 10). எனவே இயேசுவைப் போலவே ஏழையாக மாறுவது நற்செய்திப் பணியாற்றும் எல்லாரின் கடமையும் பொறுப்பும் என்பது பவுலின் எதிர்பார்ப்பு. மேலும் யூதேயாவில் வாழ்ந்த (திப 11:29), குறிப்பாக எருசலேமில் வாழ்ந்த (உரோ 15:26-27) ஏழைகளின் நலனை முன் வைத்து நிதி திரட்டி அனுப்பி வைத்தார். பவுலைப் பொறுத்தமட்டில் சமய வாழ்வு என்பது யாக்கோப்புவை அடியொட்டித் (யாக் 1:27) துன்புறும் அநாதைகளையும் கைம்பெண்களையும் கவனித்தலே ஆகும். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் (உரோ 12:13) என்பதின் மூலம் பகிர்வுக் கலாச்சாரத்திற்குப் பாதை காட்டுகிறார். மேலும் இயேசுவைப் பின்பற்றி ஏழைகள் போல் பாடுபட்டு உழைத்தேன்; பன்முறை கண்விழித்தேன்; பசிதாகமுற்றேன்; பட்டினி கிடந்தேன்; குளிரில் வாடினேன்; ஆடையின்றி இருந்தேன் (2கொரி 11:27) என்று சுயசரிதை கூறுவதன் மூலம் ஏழைகளாக இருந்த புறவினத்து மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு அவர்களின் திருத்தூதராக விளங்குகிறார்.

4.2 சட்டத்தினின்று விடுதலை

இஸ்ரயேல் மக்களை ஒரு சமூகமாக இறைவன் அழைத்தார். இந்தச் சமூக உணர்வு அடிப்படையில் மக்களின் நலன்களை முன்னிறுத்தி மக்களே கடைபிடிக்க வேண்டிய சட்ட முறைமைகளை இறைவனே வழங்கினார் (திபா 40:6-8). இத்தகையச் சட்டங்கள் இறைவனாலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வழியாக வழங்கப்பட்டன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு மோசே அருளிய பத்துக் கட்டளைகளும் (விப 20:1-17), தோரா என்றழைக்கப்பட்ட திருவிவிலிய முதல் ஐநூல்களும் ஆகும். இச்சட்டங்கள் அறிவுரை, சாட்சி, கட்டளை, ஒழுங்கு, தீர்மானம், நியமங்கள், சமூகம் சார்ந்ததாகவும், வழிபாடு, குடும்பம், பொருளாதாரம், நீதி போன்ற மக்களின் வாழ்வு சார்ந்ததாகவும் இருந்திருக்கின்றன. இத்தகைய சட்ட அனுசரிப்புகள் இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே நிலவிய நெருங்கிய உறவுகளை வெளிக் கொணர்ந்ததாக அமைந்தன.

அதே நேரத்தில் "யூதர்களின் சட்டங்கள்" என்ற பெயரில் ஏராளமான சடங்கு ஆசாரங்கள், ஒழுங்கு முறைகள் நடைமுறையில் இருந்து வந்தன. எடுத்துக்காட்டாக, உணவருந்துமுன் கை கழுவுதல்; பாத்திரங்கள், கிண்ணங்கள் பயன்படுத்தும்முன் தூய்மைப்படுத்துதல்; ஓய்வுநாள் கடமை (மாற் 7:1-23) போன்றவைகளை மட்டும் நுணுக்கமாகப் பின்பற்ற வலியுறுத்துதல். இதனைக் கடைபிடிக்காதவர்களைத் தூய்மை, தீட்டு என்ற பெயரில் யூதச் சட்டம் தெரிந்தவர்கள் ஒதுக்கத் தொடங்கினர். இதனால் பாமர மக்களும், ஏழைகளும் தாங்கமுடியாத சுமைகளை நாளொரு மேனியாய்ச் சுமக்க வேண்டியிருந்தது.

இத்தகைய சட்டத்தின் கோர முகத்தைக் கண்ட இயேசுவும் ஏழை எளிய மக்களுக்குச் சுமைகளாகிப் போன யூதச் சட்டங்களைக் கடுமையாகக் கண்டிக்கிறார் (மத் 15:1-20; 23:1-46; லூக் 11:39-42)). மனிதன் சட்டங்களுக்காகத்தான் என்னும் அடிமைத்தனத்தைத் தகர்த்துத் தரைமட்டமாக்கி மனிதனுக்காகவே சட்டங்கள் என்னும் மேல்வரிச் சட்டத்தை வழங்குகிறார் (மத் 12:1-14; மாற் 21:23-28). அர்த்தமற்ற பாரம்பரியச் சட்டங்களைக் கடைபிடித்துத் தங்களை நீதிமான்கள் எனக் காட்டிக் கொண்ட பரிசேய ஓநாய்களைக் (லூக் 18:9) கடுமையாகச் சாடுகின்றார். அதேவேளையில் அன்பு, நீதி, சமத்துவம், இரக்கம், மனிதநேயம் முதலியவற்றை முன்வைக்கின்ற சட்டங்களை (மத் 17:24-27; மாற் 1:44) அவரே நடைமுறைப்படுத்துகிறார். அத்துடன் கடவுளையும்

மனிதரையும் அன்பு செய்வதே (மத் 22:34-40; மாற் 12:28-34) மனித மையம் கொண்ட, மனித நலம் கொண்ட புதிய கட்டளை. அதுவே சட்டத்தின் அடிப்படை என்று கூறி அதையே வாழ்ந்து வழிகாட்டினார்.

பவுலும் சட்டத்தின்மீது வெறிபிடித்து அலைந்தவர்தான். ஆனால் கிறிஸ்து தடுத்தாட்கொண்டதிலிருந்து சட்டத்தை இறைத்திருவுளத்தின் வெளிப்பாடாகக் காண்கிறார். இதற்கு அடிப்படைக் காரணம் சட்டத்தை வைத்து மீட்பைப் பெற முனைந்த யூதக் கிறிஸ்தவர்கள் புறவினக் கிறிஸ்தவர்கள்மீது தங்களின் சட்டங்களைத் திணிக்க முயன்றதேயாகும். சட்டம் இல்லையேல் மீட்பு இல்லை (திப 15:1) என்ற கடுமையானச் சட்ட அணுகுமுறை இருந்தது. இதனை எதிர்த்துப் புறவினக் கிறித்தவர்களும் மீட்புக்கு நம்பிக்கையே போதுமானது (திப 6:8) என்று போராடத் துணிந்தனர். இந்நிலையில் பவுலும் புறவினத்தவருக்குச் சார்பான நிலைப்பாடு எடுத்தவராக யூதச் சட்டம் எவருக்கும் பாதிப்பு ஏற்படுத்துவதையும், எவர் மீதும் திணிக்கப்படுவதையும் கடுமையாக எதிர்த்தார். விருத்தசேதனம் இன்றி புறவினத்தவரை திருச்சபைக்குள் சேர்த்தார். சட்டத்தைக் கடைபிடிக்கும் குலத்திலே பிறந்த ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு, புறவினத்தவரைப் பாவிகள் என்று குறைத்து மதிப்பிட்ட யூதர்களுக்கு (கலா 2:15) எதிராகக் குரல் கொடுக்கும் விதமாகச் சட்டம் மனிதருக்குச் சாபத்தை வருவிக்கிறது, அழிவைத் தருகிறது, கடவுளுக்கு ஏற்புடைய நிலையிலிருந்து அந்நியப்படுத்துகிறது (கலா 3:10-11) என்று வாதிட்டுச் சட்டத்தைக் கடைபிடிப்போரைவிட புறவினத்தவர்கள் எந்நிலையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல (உரோ 1:18-32) என்று ஆணித்தரமாகக் கூறினார். மேலும் சட்டத்தின் கொடுமுடியிலிருந்து கிறிஸ்து மனிதர்களாகிய எல்லோரையும் மீட்டுவிட்டதால் (கலா 4:1-7) இனி யாரும் சட்டத்துக்கு உட்பட்டவரல்ல. மாறாக, அருளின் ஆட்சிக்கு உட்பட்ட உரிமை மக்கள் (உரோ 6:14) என்று தெளிவுபடக் கூறினார். இறுதியாக இயேசுவைப் போன்று பவுலும் சட்டத்தின் பயன்பாடு அன்பின் பயன்பாடாக மனிதநேய அணுகுமுறையாக, அருளை விளைவிக்கின்ற ஒன்றாக இருக்க ஆவல் கொண்டார். அதன்பொருட்டுச் சட்டத்தைப் பின்பற்றி வாழாது அன்பை எல்லாச் சூழலிலும் கடைபிடித்து வாழ்ந்து கிறிஸ்துவைப் (கலா 6:1-5) பறைசாற்ற கலாத்தியத் திருச்சபைக்கு அழைப்பு விடுத்தார். இவ்வாறு சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட, விலக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட புறவினத்தவர்மேல்

பவுலின் பணித்தடங்கள் பதிந்திருந்ததால் அவர் புறவினத்தவரின் திருத்தூதராக இன்று போற்றப்படுகிறார்.

3.3 அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

யூதச் சமூகம் ஒரு ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூகம். பணக்காரர்கள், சட்ட நுணுக்கங்களைக் கற்றோர், சமய ஒழுங்குகளைக் கடைபிடித்தோர், நகரவாசிகள் அனைவரும் உயர்வாகக் கருதப்பட்டார்கள். மாறாக ஏழைகள், நோயாளிகள், சட்டம் அறியாதோர், சமயச் சட்டங்களைக் கடைபிடிக்காதோர், கிராமவாசிகள், கல்வியறிவற்றோர், அன்றாடக் கூலிகள் அனைவரும் ஒதுக்கப்பட்டவர்களாக, இகழ்ச்சிக் குரியவர்களாக, புறக்கணிக்கப்பட்டவர்களாக, அடிமைகளாகக் கருதப்பட்டனர். இதில் குறிப்பாக விலைமாதர்கள், பெண்கள், வரி வசூலிப்போர், தாழ்நிலைத் தொழில்புரிவோர், பிச்சை எடுப்போர், தொழுநோயாளிகள் அடங்குவர். இவ்வாறு கடைநிலையில் உள்ளோர், அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய இயலாதவர்கள், தாங்கள் வேற்று நாட்டுக் குடியேறிகள் என்ற தாழ்வு நிலையால் யூதப் பெருங்குடிகளை நம்பி வாழுகின்ற நிலை ஏற்பட்டது. இந்நிலையில் யூதரல்லாத புறவினத்தவருக்கும் யூதருக்கும் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றது. இதில் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாதவர்கள் குறிப்பாக, புறவினத்தார் தங்கள் மனைவி, பிள்ளைகள், ஏன் தங்களையே விற்று யூதருக்கு அடிமைகளாயினர். இதில் யூதரும் அடங்குவர். இதோடு கொடிய குற்றங்கள் புரிந்தோர் குறிப்பாக கொள்ளையர், கொலைக் குற்றவாளிகள், சமூக விரோதிகளும் அடிமைகளாக மாற்றப்பட்டனர். இதனால் உரோமைப் பேரரசு முழுவதும் அடிமைகளின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தது. இங்கு அடிமைகள் மிகவும் தாழ்நிலையில் நடத்தப்பட்டார்கள். மனிதர் என்ற நிலையை மறுத்து விலங்காக, பொருளாக வாழ உரிமையற்ற நிலையில் நடத்தப் பட்டனர். மனித மாண்பு, சுதந்திரம். சமத்துவம் அனைத்தும் மறுக்கப்பட்டு இழிநிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் அடிமைகள் தங்களைத் தாங்களே பழிக்கவும், ஏற்க மறுக்கவும், தாழ்ந்தவராகவும். ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும், வாழ்ந்து பயனற்றவர்களாகவும் கருதத் தொடங்கினர்.

இத்தகைய அவல நிலையைப் பொறுக்க இயலாத இயேசுவும் அடிமை நிலையோடும், அடிமைப்படுத்தும் சக்திகளோடும் சமரசம்

செய்யாமல், ஆதிக்கம் செலுத்துபவர்கள், அநீதி புரிபவர்கள், கொடுங்கோலர்கள், அழிவுக்குக் காரணமானோர், சட்டக் கைப்பாவைகள் அனைவரையும் எதிர்க்கிறார். அடிமைகளுக்கு ஆதரவாக உரிமைக் குரல் எழுப்புகிறார். முதன்மையானோர் கடைசியாவார், கடைசியானோர் முதலாவர் (மாற் 10:31) என்கிறார். அடிமைத்தனத்தை நியாயப்படுத்தும் யூதச் சமயச் சடங்குகளை எதிர்க்கிறார். "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" (மத் 9:13) என்கிறார். "உண்மையாக வழிபடுவோர், இறைவனை அவரது உண்மை இயல்பிற்கேற்ப உள்ளத்தில் வழிபட" அழைக்கிறார் (யோவா 4:24). இவ்வாறு மக்கள் தன்னுரிமையுடன் செயல்படவும், மனித மாண்பு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற விழுமியங்களைத் தனதாக்கி வாழப் புதிய வாழ்க்கை முறையைக் காட்டி இறையாட்சிக்கு வித்திடுகிறார். இயேசுவின் வழியில் பின்தொடரும் பவுலும் தமது காலத்தில் அடிமைகளாக்கப்பட்டு, மனித மாண்பிழந்து வாழ்ந்தவர்களைத் தமது பணியில் இணைத்துக் கொள்கிறார். அதன் விளைவாகக் கிறிஸ்து பற்றிய தனது நற்செய்திப் பணியை மிகவும் ஆழமாகச் செய்கிறார். "இனி உங்களிடையே யூதர் - கிரேக்கர் என்றும்; அடிமை-உரிமைக் குடிமக்கள் என்றும்; ஆண்-பெண் என்றும் வேறுபாடு எதுவும் இல்லை" (கலா 3:28; கொலோ 3:11;). மாறாக அனைவரும் கிறிஸ்துவின் உரிமைப் பேறுடையவர்கள் (கலா 4:7) என்று சமத்துவம் பேசுகிறார். அடிமைப்படுத்துபவருக்கு எதிராகப் பவுலும் "தலைவர்களே, உங்கள் அடிமைகளை உங்களுக்கு இணையாகக் கருதி நேர்மையோடு நடத்துங்கள்" (கொலோ 4:1) என்று வலியுறுத்துகிறார். ஒனேசிமை ஏற்றுக் கொள்ள பிலமோனுக்குக் கடிதம் எழுதும் போது "என்னை ஏற்றுக்கொள்வது போல அவனையும் ஏற்றுக்கொள்" (பில 1:17) என்று கூறுவது தானும் ஒரு அடிமையும் ஒன்றுதான் என்று பவுல் சொல்வதுபோல் உள்ளது. அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பவர்களுக்கு "அடிமை நிலைபற்றிக் கவலைப்படாதீர்கள்" (1கொரி 7:21) என்று ஆறுதல் கூறும் பவுல், கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொள்ளும் எல்லாருமே கிறிஸ்துவின் அன்பின் அடிமைகள் (கலா 5:13) என்று மனுக்குலத்தோர் அனைவரையும் அடிமைகள் என்று கூறிச் சம உறவு நிலைக்குப் பாதை காட்டுகிறார். இறுதியாக "மனிதருக்கு ஒருபோதும் அடிமையாக வேண்டாம்" (1கொரி 7:21-23) என்று கூறுவதின் மூலம் அடிமைத்தனம் இனி வேண்டாம், அடிமைத்தனம் ஒரு மனித

உரிமை மீறல் என்று ஆணித்தரமாக வலியுறுத்திப் புரட்சி பேசித் தன்னைப் புறவினத்தவரின் திருத்தூதரென அடையாளம் காட்டுகிறார்.

இறுதியாக

யூத சமூகத்தில் எவ்வாறு இன வேறுபாடு சமத்துவமின்மைக்கும் ஏற்றத்தாழ்வுக்கும் பெரும் காரணமாக அமைந்ததோ, அதுபோலவே இந்திய – தமிழகச் சூழலிலே ஏற்றத்தாழ்வுக்கும், அடிமைத்தனத்திற்கும், ஏழ்மைக்கும் அடிப்படைக் காரணமாகச் சாதியம் இருக்கிறது. சாதி என்ற வர்ண பேதம் சமூகத்தை உயர்ந்தவன் - தாழ்ந்தவன்; ஏழை பணக்காரன்; படித்தவன்-பாமரன்; ஆண்டான் - அடிமை என்று கூறுபோட்டு மனித மாண்பைக் குழைக்க மூல காரணமாக அமைகின்றது. இன்று இந்திய - தமிழகச் சூழலிலே புறவினத்தவர்களைப்போல வாழ்க்கைப் போராட்டங்களாலும், சமூக அவலங்களாலும் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்கள் தலித்துகள். இவர்கள் சமூக அங்கீகாரத்தையோ, பொருளாதாரத் தன்னிறைவையோ, அரசியல் அதிகார உரிமையையோ கனவிலும் நினைத்துப் பார்க்கமுடியாதவர்கள். உயிர் பிழைப்புக்கான வாழ்க்கைப் போராட்டமே வாழ்வாக ஆக்கப்பட்டவர்கள். சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், மதம் அனைத்திலும் தமக்குரிய பங்கு மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுத் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டவர்கள். இவ்வாறு சமூகத்தின் கடைநிலை வர்க்கத்தார் அடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஊரைத் துப்புரவு செய்வதும், மலம் அள்ளித் தலை மீது சுமப்பதும். ஊரில் செத்த விலங்குகளைத் தூக்கி அகற்றுவதும், செருப்புத் தைப்பதும், பிணம் சுமப்பதும், சவக்குழி தோண்டுவதும், புதைப்பதும், எரிப்பதும், அடிமையாகக் கைகட்டி வாய்பொத்திச் சேவகம் செய்வதும், நிலப் பிரபுக்களின் குண்டராக, அடியாட்களாகச் சட்ட விரோதச் செயலுக்குக் கூலிப்படை வேலை செய்வதும், தாய் தந்தையை இழந்த குழந்தைகள் பிச்சையெடுப்பதும், கணவரை இழந்த கைம்பெண்கள் வீட்டு வேலைக்காரிகளாகவும் பாலுறவுத் தொழிலில் ஈடுபடும் பரத்தைகளாகவும் தள்ளப்பட்டு விற்கப்படுவதும் இன்று எதார்த்த நாட்டு நடப்புகளாக இருக்கின்றன.

இதில் புள்ளிவிவர உண்மைகள் பின்வருமாறு...

25 கோடி இந்தியருக்குக் குடியிருக்க வீடு இல்லை

42 கோடி இந்தியருக்கு இரவு உணவு இல்லை

58 சதவீத குடும்பத்தினருக்கு மின்சார வசதியில்லை

38 சதவீத கிராம மக்களுக்குக் கழிப்பிட வசதி இல்லை

10 சதவீத கிராமங்களில் பள்ளிக்கூடங்களில்லை

40 சதவீத பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லை

8.5 சதவீதமே தாழ்த்தப்பட்ட பெண்களில் படித்தவர்கள்

53 சதவீத தலித் குழந்தைகள் குறைந்த எடையால் அவதிப்படுகின்றனர்

2.5 மில்லியன் குழந்தைகள் வலுவூட்டம் (vitamin) குறைவினால் இறக்கின்றனர்

20 சதவீத மேல்மட்டப் பணக்காரர்கள் 90 சதவீத நிலங்களுக்கு உரிமையாளர்கள்

20 சதவீத மக்கள் வாழும் நகரங்களில் 80 சதவீத வசதிகள் உள்ளன

6,27,000 கிராமங்களில் வாழும் மக்களுக்குக் குறிப்பாகத் தலித் மக்களுக்கு 15 சதவீத வசதிகளே உள்ளன.

இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு 12,000 வன்முறைகள் தலித் மக்கள்மீது நடத்தப்படுகின்றன. இதில் சராசரி கொலைகள் 550; சராசரி கற்பழிப்புகள் 800.

இத்தகையச் சூழலில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும், முதலாளிக்கும் தொழிலாளருக்கும். ஆள்பவருக்கும் அடிமைக்கும் உள்ள இடைவெளி பெரிதாகிக் கொண்டே போகிறது. பணமுள்ளவருக்கும் சாதியிலே உயர்ந்தோருக்கும் தனி மருத்துவமனை, தனி ஆலயம், தனி படிப்பு, பணத்திற்கு எற்ற அரசு வேலை, பாதுகாப்பான வீடு, சமூக அங்கீகாரம், அடிப்படை உரிமைகள் அனைத்தும் உண்டு. ஆனால்

ஏழைகளுக்கோ. பிற்படுத்தப்பட்ட தலித்துகளுக்கோ, ஆசிரியரில்லாப் பள்ளி, நாற்றம் பிடித்த பொதுமருத்துவமனை, அங்கும் இங்கும் கையூட்டு, குறைந்த ஊதிய வேலைகள், உழைப்புச் சுரண்டல், உரிமையைப் பெற கைக்கூலி கொடுக்கும் சூழ்நிலை, ஏழை வளர்ச்சி நிதியில் அரசு பொறுப்பாளர்களின் பங்கீடு, அடிப்படை உரிமை மறுப்பு, சமூக அங்கீகார மறுப்பு போன்றவைகளால் கூனிக்குறுகிக் கண்ணீரோடு காலத்தைக் கடத்தும் அவலம் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில் இயேசுவைப் போல "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதும்; ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்வதும்" (லூக் 4:18-19), பவுலைப் போல "புறவினத்தாரின் திருத்தூதராக" (கலா 2:7-9) பணி ஆற்றுவதும் காலத்தின் தேவையாகவும் கடமையாகவும் இருக்கிறது.

இந்தத் தேவையும் கடமையும் பவுலின் பயணத்தில் பயணிக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பிற சமயச் சகோதரர்களையும் தொடவேண்டும். அதிலே முழு மனித விடுதலைக்கான செயல்பாட்டில் வரும் இன்னல்கள் இடுக்கண்களைக் சுமந்து, இறைத் திருவுளத்தைத் தேர்ந்து தெளிந்து, இன்று நம்முடைய சமூகத்தில் ஒடுக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்டு, பிற இன மக்களாக்கப்பட்டுள்ள அனைவரையும் சமூக, அரசியல், பொருளாதார, சமயத் தளங்களில் அங்கீகாரமும், பங்கேற்பும் நல்கிப் பவுலைப் போல புறவினத்துக் கிறிஸ்தவரை இனம் கண்டு கொண்டு இறையாட்சி அமைக்க முயலவேண்டும். புதிய வானமும் புதிய வையகமும் மண்ணில் மலரட்டும்.

ஈ. பவுலின் சமூகங்களும், சமூகக் கருத்துக்களும் – ஒரு விமர்சனப் பார்வை

திருத்தொண்டர் பபியான்சு
இறையியல் மூன்றாமாண்டு
கோட்டாறு மறைமாவட்டம்

1. முன்னுரை

சமூகம் என்பது தனித்துவிடப்பட்ட மனிதரைக் குறிக்கும் சொல்லாடல் அன்று; சமூகம் என்பது ஒருமைப் பண்பு கொண்டதும் அன்று; சமூகம் என்பது குறிப்பிட்ட குழுக்களுக்கு மட்டும் உரியதும் அன்று. மாறாக சமூகம் பலத்தரப்பட்ட மனிதர்களைக் கொண்ட குவலயம்; சமூகம் பன்மையின் வெளிப்பாடு; சமூகம் எல்லோருக்கும் பொதுவானது- இது உலக நியதி. எல்லோருக்கும் பொதுவான சமூகம், சமத்துவத் தையும், நீதியையும் அடித்தளமாகக் கொண்டு இயங்கியிருந்தால் சமூகத்தில் வாழும் எல்லோரும் சமமாக இருந்திருப்பார்கள். அதுதான் இன்று இல்லை. ஏனெனில் சமூகம் ஒரு சிலரின் கைகளில் சிக்கிவிட்டது. இதனால் சமூகத்தின் மதிப்பீடுகள் மாற்றம் அடைந்தன; சில பார்வைகள் நியாயப்படுத்தப்பட்டன; ஏற்றுக்கொள்ளப்பட்டன. இன்று விழிப்புணர்வு பெற்றுவரும் மனித சமுதாயம் கேள்வி கேட்கத் தொடங்கிய நேரத்தில், ஆதிக்கச் சக்திகள் மக்கள் கூட்டத்தை மகிழ்ச்சிப்படுத்த சமத்துவத்தையும், நீதியையும் கொண்டு சமூகம் செயல்படவேண்டும் என்கின்றன. சமத்துவ- நீதி அளவீடுகள் சமத்துவமற்ற சமூகத்தில் சமத்துவத்தைக் கொண்டு வராது. இங்கே சமூக-நீதி முன்வைக்கப்பட வேண்டும். சமூக நீதி என்பது சமத்துவமற்ற சமூகத்தில், சமத்துவம் மறுக்கப்பட்ட மானிடருக்கு முன்னுரிமைக் கொடுப்பது ஆகும். பவுல் ஏற்றத்தாழ்வு, பிரச்சனைகள் நிறைந்த சமூகத்தில் வாழ்ந்தவர். பவுல் தன் சமூகத்தில், தான் சந்தித்த சமூகத்தில் 'சமூக-நீதி'யை மையமாக வைத்துச் செயல்பட்டாரா? பிளவுகள், பிரிவினைகள், ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்திற்குப் பவுலின் படிப்பினை என்ன? ஆதிக்கச் சக்திகளின் அமைப்புகளுக்குப் பவுல்

உடன்பட்டுச் சென்றாரா? அல்லது மாற்றுச் சமூகம் படைக்க ஆவல் கொண்டாரா? பவுல் எப்படிப்பட்ட சமூகத்தை முன்வைத்தார்? போன்ற கேள்விகளுடன் இக் கட்டுரையில் நாம் நுழைவோம்.

2. இன்றையச் சூழல் சமூகமும் அதன் தாக்கமும்

நாம் வாழும் தமிழ்ச் சமூகமாயினும் இந்தியச் சூழல் சமூகமாயினும் பல தனித்தன்மைகளை, வேறுபாடுகளை, ஏற்றத்தாழ்வுகளை, முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. தனித் தன்மைகளும் வேறுபாடுகளும் மொழியின் தன்மை அடிப்படையில், மதங்கள் அடிப்படையில், உடை நடை பாவனை அடிப்படையில், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் விழுமியங்கள் அடிப்படையில் அமைந்துள்ளன. ஏற்றத்தாழ்வுகளும் முரண்பாடுகளும் ஆண் X பெண் அடிப்படையில், ஆண்டான் X அடிமை அடிப்படையில், ஆளுபவன் X ஆளப்படுபவன் அடிப்படையில், முதலாளி X தொழிலாளி அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த ஏற்றத்தாழ்வையும் முரண்பாட்டையும் அனுபவித்த ஒருவர் இப்படிச் சொல்கிறார்: "உழைப்பவன் வீதியில்; அதாவது மாடாய் உழைப்பவர்க்கு வீடில்லை, சோறில்லை; தூசியின்றி நெல்மணியைத் தூற்றிடும் தோழர்கட்குக் காசில்லை, கட்டத் துணியில்லை; ஆனால் சுரண்டுபவன் மாடியறையில்". ஒரே சமூகத்தில் ஒரு சிலர் உயர்ந்தவர்களாகவும் மற்றும் சிலர் தீண்டத்தகாதவர்களாகவும் தாழ்த்தப்பட்டவர்களாகவும்; நல்லவர்களாகவும் கெட்டவர்களாகவும்; படித்தவர்களாகவும் படிப்பறிவு அற்றவர்களாகவும் இருக்கின்றனர்.

தனித்தன்மைகள், வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள், சமத்துவமற்ற சமூகத்தின் இன்றைய வெளிப்பாடுகள்; இவை சமத்துவமற்ற சமூகத்தை நியாயப்படுத்தியும் வருகின்றன. சமூகத்தின் இச்சூழலுக்கு யார் காரணம்? சமூகத்தில் வாழும் எல்லா மனிதர்களுமா? நிச்சயம் எல்லா மானிடர்களுமே? இவர்களில் ஒரு சில குழுக்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள இத்தகைய சமூகச் சூழலை வளர்த்து வருகின்றனர். இன்னும் சிலர் கைக்கட்டி, வாய்பொத்தி வேடிக்கை பார்த்து வருகின்றனர். மீதிச் சிலர் எதிர்க்கத் துணிவில்லாமல் வலுவிழந்து இருக்கின்றனர். இதனால் பணக்காரன் X ஏழை; உயர்ந்தவன் X தாழ்ந்தவன்; ஆண் X பெண்; முதலாளி X தொழிலாளி; ஆளுபவன் X

ஆளப்படுபவன்; உயர்குடி மக்கள் X தீண்டத்தகாதவர்; படித்தவர் X படிப்பறிவு அற்றவர் எனச் சமூகம் பிளவுப்பட்டு, சிதறுண்டு கிடக்கிறது.

3. பவுல் காலச் சமூகச் சூழல்

பவுல் ஒரு யூதர். சின்ன ஆசியா நகரான தர்சு நகரத்தைச் சேர்ந்தவர் (திப 22:3). பவுல் ஒரு உரோமைக் குடிமகன் (திப 22:28). இக்குறிப்புகளிலிருந்து பவுல் கிரேக்கச் சமூகச் சூழலில் பிறந்தவர், யூத சமூக நெறியில் வளர்ந்தவர், உரோமைச் சமூகத்தில் கொல்லப்பட்டவர் என்பது புலனாகிறது. பவுல் காலச் சமூக சூழலை ஆராயும்போது பன்மைத் தன்மைகள் பல அடங்கி இருக்கின்றன என்பது தெளிவு. யூதச் சமூகத் தனித்தன்மைகள், கிரேக்கச் சமூகத் தனித் தன்மைகள், உரோமைச் சமூகத் தனித்தன்மைகள் பவுல் வாழ்க்கையைப் பலப்படுத்தியிருக்கின்றன. யூதச் சமூகம் ஆணாதிக்கச் சமூகம். கிரேக்கச் சமூகம் தன் மொழி இனக் கலாச்சாரத்தைத் திணித்து நியாயப்படுத்திய சமூகம். உரோமைச் சமூகம் அடிமைக் கலாச்சாரத்தையும் ஒடுக்குமுறைச் சட்டங்களையும் நியாயப்படுத்திய அரசவைச் சமூகம். இச்சமூகங்களின் தாக்கங்கள்தான் பவுலின் திருமுகங்களில் சமூகம் பற்றிய சிந்தனையில் விரவிக் காணப்படுகின்றன.

4. பவுல் சந்தித்தச் சமூகச் சிக்கல்கள்

யூத நெறியில் தீவிரப் பற்றுக் கொண்ட பவுல் புதிய நெறியான கிறிஸ்தவத்தை அழிக்கத் துணிந்தவர் (கலா 1:13). ஆனால் கடவுளின் குறுக்கீட்டால் கிறிஸ்தவ நெறியைக் கட்டிக்காக்கும் திருத்தூதராக ஆக்கப்பட்டார் (திப 9:1-19). திருத்தூதராகப் பணி செய்த பவுல் பல சமூகச் சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தது.

யூத (கிறிஸ்தவர்களின்) அடையாளம் விருத்தசேதனம் – சமூகத்தில் விருத்தசேதனம் செய்யாத மனிதர்களை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? யூத மரபு ஆண் வழி மரபு – இதில் பெண்களின் நிலை என்ன? கட்டுக்கடங்கா பாலுணர்வால், தீய நடத்தையால் சமூக நெறி களங்கப்பட்டு வருகிறது – திருமணத்தின் பங்கு என்ன? ஏழைகளும் பணக்காரர்களும் ஒரே சமூகத்தில் – மாணிடர்களின் கடமை என்ன? உரோமை அரசில் அடிமை நிலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சூழலில் புதிய நெறியான கிறிஸ்தவம் சமத்துவ சமூகத்திற்கு அழைப்பு விடுக்கும்

சூழலில் (கலா 3:28; கொலோ 3:10) அடிமை மனிதர்களின் நிலை என்ன?. இச்சமூகச் சிக்கல்களுக்குப் பவுலின் சமூகப்பார்வை எப்படி அமைந்தது.

4.1 யூதர் x புறவினத்தார்

யூதர்-புறவினத்தார் ஒரே இன மக்களா? அல்லது பிளவுபட்ட மக்களா? வரலாற்றை ஆராயும்போது யூதர், புறவினத்தார் இரு குழுக்களும் வெவ்வேறு மொழி, கலாச்சாரம், சமயச் சிந்தனை கொண்டவர்கள். பாலஸ்தீனத்தில் யூதர்கள் மத்தியில் வாழ்ந்த புறவினத்தார்களும் இந்நிலையில் உள்ளவர்களே. யூதர்கள் தூய்மைச் சடங்கை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்கள். புறவினத்தார் சமூகங்களில் தீட்டு, தூய்மை குறித்த நிலைப்பாடுகள் இல்லை. எனவே யூதர்கள் புறவினத்தாரைத் தீண்டத்தகாதவர்களாகவே கருதினர். புறவினத்தாரின் பல கடவுள்கள் கொள்கையும் அவர்களை யூதர்களிடமிருந்து அன்னியப்படுத்தக் கூடியதாக இருந்தது. புறவினத்தாருடனான எத்தொடர்பும் யூதர்களைத் தீட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. உணவுப் பழக்கவழக்கங்களிலும் புறவினத்தார் யூதரிடமிருந்து மாற்றுச் சிந்தனை கொண்டிருந்தனர். புறவினத்தார் எல்லா வகை உணவுகளையும் உண்டபோது யூதர்கள் தூய்மையான உணவுகள் என்று தாங்கள் வரையறுத்துக் கொண்ட உணவை மட்டுமே உண்டனர்.

பவுல் காலச் சமூகச் சூழலில் இப்பிளவு மேலோங்கியே இருந்தது. யூதர்கள் வழிபடும் கடவுள் யூத இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே என்ற சிந்தனை ஆதிக்கம் செலுத்தியது. இதனால் புதிய நெறியான கிறிஸ்தவம் அச்சமூகத்தில் சவாலைச் சந்திக்க நேர்ந்தது. கிறிஸ்தவம் சுட்டிக்காட்டும் கடவுள் யூதர்களுக்கா? அல்லது புறவினத்தார்களுக்கா? பல குழப்பங்கள், சர்ச்சைகள், விவாதங்கள், விமர்சனங்கள். இச்சமூகச் சிக்கலுக்குப் பதிலிருக்க முனைந்த பவுல், கடவுள் யூதர்களுக்கு மட்டுமா? புறவினத்தாருக்கும் அவர் கடவுள் அல்லவா? ஆம் புறவினத்தாருக்கும் அவரே கடவுள் (உரோ 3:2) என்கிறார். யூத மரபுப்படி விருத்தசேதனம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்கு அடையாளம். இதற்கு மாற்றாக பவுல் அச்சமூகத்தில் முன் வைப்பது கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கை (உரோ 3:30).

இக்கொள்கையை, இம்மாற்றுச் சிந்தனையைப் பவுல் முன் வைத்ததால் யூதக் கிறிஸ்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டாரா? என்றால் கேள்விக்குரியே. ஏனெனில் பவுல் புறவினத்தாரின் திருத்தூதர் என்றே அழைக்கப்பட்டார்.

4.2 ஒழுக்கம் X கூடா ஒழுக்கம்

சமூகம் குடும்பங்களின் கட்டமைப்பு. குடும்பம் மனிதர்களின் கட்டமைப்பு. குடும்ப ஒழுக்கம் சரியாக இருந்தால் சமூகம் சீர் நோக்கிச் செல்லும். தனி நபர் ஒழுக்கம் நேர்த்தியாக இருந்தால் குடும்பம் தலை நிமிர்ந்து நிற்கும்.

பவுல் சமூகத்தைக் கட்டியெழுப்பும் குடும்பக் கட்டமைப்பைப் பேணும் எண்ணத்தில் கூடா ஒழுக்கத்தைத் தைரியத்தோடு சாடுகிறார் (1கொரி 5:1-12). குடும்ப ஒழுக்கத்தில் கணவனுக்கு உள்ள அதிகாரத்தை, மனைவிக்கு உள்ள அதிகாரத்தை சமத்துவமாகச் சிந்தித்துச் சொல்கிறார் (1கொரி 7:1-15). இது திருமண உறவுக்கு மதிப்புத் தருகிறது. சமூகத்தில் உடல் உறவு வாழ்வுக்கு அழகு சேர்க்கிறது.

4.3 ஆண் X பெண்

"ஒரு பெண்ணாகவோ, ஓர் அடிமையாகவோ, அல்லது ஒரு புறவினத்தைச் சேர்ந்தவராகவோ பிறவாதது குறித்து ஒவ்வொரு யூதனும் காலையில் கடவுளுக்கு நன்றி கூறவேண்டும்" என்பது ராபிகளின் போதனை, ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண் இரண்டாம் தரமாகவே சட்டத்தின் முன், குடும்பத்தில், சமயவாழ்வில் நடத்தப்பட்டார். ஏனெனில் அச்சமூகம் பெண்களின் சாட்சியத்தை ஏற்பதில்லை; அச்சமூகம் பெண்களைச் சமைப்பதற்கும், துவைப்பதற்கும், பிள்ளை பெறுவதற்கும் மட்டும் பயன்படுத்தியது; அச்சமூகம் பெண்களின் மேல் பல கட்டுப்பாடுகளை விதித்தது – பரிமாறும் போது நிற்க வேண்டும்; வீடுகளில் தான் இருக்க வேண்டும்; வீட்டுத் திரையின் வெளியே பார்க்கக்கூடாது (நீமொ 5:25); முகத்திரை அணிந்திருக்க வேண்டும்; தெருவில் ஆடவரோடு பேசக்கூடாது; படிப்பு மறுக்கப்பட்டது; சமய உரிமைகள் பறிக்கப்பட்டன. ஆக பெண் சமூகத்தில் கீழ்த்தரமாகவே கருதப்பட்டார். இது ஒரு சமூகச் சிக்கல். பெண்ணின் மாண்புப் பிரச்சனை.

இச்சமூகப் பிரச்சனைக்குப் பவுல் "உங்கள் மத்தியில் ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை" (கலா 3:28) எனச் சமூகத்தில் மாற்றுச் சிந்தனையைத் தருவதோடு சமூகத்தில் பெண்களை அங்கீகரிக்கிறார். உதாரணமாக "நம் சகோதரியாகிய பெயிபாவைக் குறித்து நற்சான்று அளிக்கிறேன்", "கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு உழைக்கின்ற பிரிஸ்கிலா, அக்கிலாவுக்கும் என் வாழ்த்து" என அருட்பணியில் பல பெண்களின் பங்கைக் குறிப்பிடுகின்றார். ஆண்களுக்குச் சமமாக பெண்களை மதிக்கிறார் (உரோ 16:1-16).

இருப்பினும் இயேசுவைப் போல சமூகத்தில் பெண்களுக்குள்ள பிரச்சனைகளைப் பவுல் கையிலெடுத்து ஏன் விமர்சிக்கவில்லை என்ற வினா எழும்புகிறது. இவரது திருமுகங்களில் இடம்பெறும் ஒருசில பகுதிகள் பெண்ணடிமைத்தனத்தைப் பவுல் ஊக்கப்படுத்துவது போலத் தோன்றுகிறது.

- வழிபாட்டின் போது பெண் தலையை மூட வேண்டும். ஆண் மூடத் தேவையில்லை. ஏனெனில் ஆண் கடவுளின் சாயலும் மாட்சியும் ஆவார். ஆனால் பெண் ஆணின் பெருமையுமாய் இருக்கிறார் (1கொரி 1:17).
- பெண்களுக்காக ஆண்கள் படைக்கப்படவில்லை. ஆணுக்காகவே பெண் படைக்கப்பட்டார் (1கொரி 11:8).
- சபையில் பேச பெண்களுக்கு உரிமையில்லை. அறிய விரும்பினால் கணவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் (1கொரி 14:34-35).
- பெண்கள் கற்றுக் கொடுக்க அதிகாரம் இல்லை. ஆணைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லை (1திமொ 2:11-13).
- பெண் பலவீனமானவள் (1திமொ 2:14).

பவுல் சமத்துவமற்ற சமூகத்தில் சமத்துவ நெறியைப் போதித்தாலும் மேற்கூறப்பட்ட உதாரணங்களின் பின்னணியில் அவர் சமத்துவத்தை விரும்பவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

4.4 ஏழை X பணக்காரன்

சமூகத்தில் ஏழைகளும் பணக்காரர்களும் இணைந்து வாழும் சூழ்நிலை. யூதச் சமூகத்தில் கடவுளை மட்டும் நம்பியிருக்கும் ஏழைகளை

'அனாவிம்' என்று அழைத்தனர். பொருளாதார அடிப்படையில் வறியவர்களாக இருந்தவர்களை 'அம்-ஹ-அரஸ்' என்று அழைத்தனர். 'அம்-ஹ-அரஸ்' என்றால் நாட்டுப்புற மக்கள்; 'பட்டிக்காட்டார்' என்பது பொருள். இவர்கள் மனிதர்களேயொழிய இவர்களுக்கு 'ஆன்மா' இல்லை என்று ஹில்லல் என்ற சட்டநூல் ஆசிரியர் சொல்கிறார். இவர்கள் பொருட்கள் போன்று கருதப்பட வேண்டும். இவர்களுக்கு ஆலயச் சடங்கு முறைகள் தெரியாது, சட்டம் தெரியாது என புறக்கணிக்கப்பட்டனர்.

ஏழை-பணக்காரன் நிலை சமத்துவமற்ற, ஒழுங்கற்ற சமூகத்திற்கு எடுத்துக்காட்டு. பவுல் இச்சமூகப் பிரச்சனைக்கு முன்வைக்கும் தீர்வுகள்:

- பிறரை உங்களைவிட மதிப்புக்குரியவரென எண்ணுங்கள் (உரோ 12:11; பிலி 2:3).
- எல்லோரும் சமம் (கலா 3:28; கொலோ 3:11).
- வறுமையுற்ற பிற மக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள் (உரோ 12:13).
- அறப்பணிகள் செய்யுங்கள் (2கொரி 9).

பவுல் ஏழை-பணக்காரன் என்ற சமத்துவமற்ற சமூகச் சூழலில் மனித மாண்பை முதன்மைப்படுத்துவது, பகிரங்க அழைப்பு விடுப்பது மிகவும் போற்றுதற்குரியது. இருப்பினும் ஏழை-பணக்காரன் என்ற அநீத அமைப்புச் சூழலுக்கான காரணத்தை ஆழமாகச் சிந்திக்காமல், பேசாமல் இருப்பது முழுமையான சமத்துவ சமூகத்திற்கு வழி வகுக்குமா?

4.5 அதிகாரப் படி நிலை X வழிபாடு

ஒரு சமூகம் சமத்துவ மாண்புடன் திகழ அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். பரவலாக்கப்படும் போது அனைவரும் பங்காளிகளாகின்றனர். சமத்துவம் வளர வாய்ப்புகள் பெருகுகிறது. ஆனால் அதிகாரம் படிநிலைகள் ஆக்கப்படும்போது ஒரு சிலரிடம் குவிக்கப் படுகிறது. ஒரு சிலரிடம் குவியும் போது அச்சமூகம் சமத்துவ சமூகமாக, நீதியான சமூகமாக இருக்க வாய்ப்புகள் மிகக் குறைவு. ஏற்றத் தாழ்வுகளை, முரண்பாடுகளை, பிளவுகளை, பாரபட்சங்களை முன் வைக்கும் சமூகமாகவே மலரும்.

சமூகத்தில் அதிகாரப் படிநிலையை மையப்படுத்தி, அதிகாரப் படிநிலைக்கு அடித்தளமாகத் தனது போதனையை முன் வைக்கிறார் பவுல் (உரோ 13:1); அதிகாரத்தால் அடக்கப்படுபவர்கள் எதிர்த்துக் குரல் கொடுப்பதைக் கண்டிக்கிறார் (உரோ 13:2). அதிகாரம் உள்ளவர்கள் கடவுளின் தொண்டர்கள் எனப் புகழ்கிறார் (உரோ 13:4) பவுல். இவைகள் சமூகத்தின் ஆதிக்கக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் போதனைகளாக, ஆள்பவர்களை நியாயப்படுத்தும் முறைகளாகத் தோன்றுகின்றன.

ஆனால், உரோமை அரசவைச் சமூகத்தை எதிர்த்து, சிறுபான்மை இனமக்களாக இருக்கும் கிறிஸ்தவத்தால் நடைபயில முடியாது, வளர முடியாது. கிறிஸ்துவை நம்பி வாழும் மக்கள் மேல் அன்பும் அக்கறையும் கொண்ட பவுல், ஆட்சி செலுத்தும் அதிகாரத்துக்குப் பணிந்து அதே வேளையில் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல ஆகுங்கள் (எபே 5:1) என அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.

"அவரைப் போல் ஆகுங்கள்" என்பது வழிபாட்டின் முக்கிய அம்சம். வழிபாடு என்றாலே வழி நின்று படுதல் - அதவாது அவர் வழி செல்லதல். அவரைப்போல் ஆகுதல். ஆக, பவுல் இலை மறைக்காயாய் அதிகாரப் படிநிலையை எதிர்த்து சமத்துவ மாண்புடன் வாழ அழைப்பு விடுப்பதாக தோன்றுகிறது. ஏனெனில் வழிபாடு சமத்துவமானது. அதிகாரப் படிநிலை சமத்துவமற்றது.

4.6 அரசியல் X அடிமை

எங்கே ஆதிக்க அரசியல் இருக்கிறதோ அச்சமூகத்திலே அடிமைக் கலாச்சாரமும் எவ்வித குற்ற உணர்ச்சியின்றி நடைபயிலும். ஆதிக்க அரசியல் அடிமைக் கலாச்சாரத்தை ஒரு சமூகத்தில் ஊக்கப்படுத்தும், நியாயப்படுத்தும், வளரச் செய்யும். சமூக மாற்றத்திற்காக உழைக்கும் சமூக ஆர்வலர்களும் பல நேரங்களில் இதை இனம் கண்டுக்கொள்வதில்லை. ஏனெனில் ஆதிக்க அரசியலின் நண்பர்களாகத் தங்களையறியாமலேயே ஆகிவிடுகின்றனர். எனவே அடிமைக் கலாச்சாரத்தைச் சமூகத்தில் ஒரு பகுதியாகக் கருதி அதைத் தவிர்க்கத் துணிகின்றனர்.

பவுல் இதைச் சமூகப் பிரச்சனையாகப் பார்க்கிறாரா? பவுல் தனக்கு விருப்பமான ஒனேசிமுக்குகாகப் பரிந்துரைக் கடிதம் எழுதி

பிலமோனிடம் மீண்டும் அனுப்புகிறார். முன்பு பயனற்றவன் இப்போது பயனுள்ளவன். எனவே உம்மிடம் திருப்பி அனுப்புகிறேன் (பில 1:12) என்று அதில் குறிப்பிடுகிறார். மேலும் அடிமைகள் தலைவனுக்குக் கீழ்படிந்து இருப்பதை வலியுறுத்திச் சொல்கிறார் (கொலோ 3:32); அடிமை நிலையில் இருப்போர் தலைவரை முழு மதிப்புக்குரியவராகக் கருதவேண்டும் (1திமொ 6:1). அடிமைகள் பணிந்து நடக்க வேண்டும். எதிர்த்து பேசக்கூடாது (தீத் 2:9) என்கிறார் பவுல்.

அடிமைக் கலாச்சாரம் அரசவை ஆதிக்கத்தில் பரவலாக, நடைமுறையாக இருந்த நேரத்தில், பவுல் அரசவை அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு அதே வேளையில் "அடிமையின் மாண்பை" உயர்த்தப் பாடுபட்டார். "இனி அவனை நீர் அடிமையாக அன்று; அடிமையைவிட மேலானவனாக. அதாவது அன்பு மிக்க சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்" என்ற கிறிஸ்துவின் கண்ணோட்டத்தை அளிக்கிறார் (பில 1:16). இருப்பினும் தலைவருக்குப் பணிந்து இருங்கள் என்பது தலைவர் X அடிமை என்ற நிலையை வழிமொழிகிறது போலத் தோன்றுகிறது.

5. பவுல் காட்டும் சமூகம்

பவுல் தம் காலச் சமூகச் சூழலில் பலவித சிக்கல்களையும் பிரச்சனைகளையும் சந்தித்த வேளையில், அவரது படிப்பினை முன்வைக்கும் சமூகம் "கிறிஸ்தவ அறநெறிச் சமூகம்". அச்சமூகத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் உடலின் மேல் பாவம் ஆட்சி செலுத்தாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவோடு இறந்தவர்கள் (உரோ 6:2-11; கொலோ 3:3). கிறிஸ்தவர்கள் மேலுலகு சார்ந்தவற்றையே நாடவேண்டும். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்கள் (கொலோ 3:1). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உடலின் உறுப்பினர்கள் (1கொரி 6:5). ஆதலால் பிளவுகளைத் தவிர்க்க வேண்டும் (1கொரி 12:12-31). கிறிஸ்தவர்கள் புதிய மனித இயல்பை அணிந்துள்ளதால் (கொலோ 3:10) பழைய மனித இயல்பை அதற்குரிய செயலைக் களைந்துவிட வேண்டும் (கொலோ 3:9). தூய ஆவி கிறிஸ்தவருக்குள் குடி கொண்டுள்ளதால் (கலா 4:6) அந்த ஆவி காட்டிய நெறியில் வாழவேண்டும் (கலா 5:16-25).

இந்தக் கிறிஸ்தவ அறநெறிச் சமூகம் அன்பை அடித்தளமாகக் கொண்டு செயல்பட வேண்டும். ஏனெனில் சட்டத்தின் நிறைவு அன்பு

(உரோ 13:10). அன்பே தலைசிறந்தது (1கொரி 13:3). அன்பை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் கிறிஸ்தவ அறநெறிச் சமூகம் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும் (உரோ 2:3-8). கட்சிகள், பிளவுகள் இருக்கக்கூடாது (1கொரி 1:11). வழக்குகளைத் தங்களுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டும் (1கொரி 6:1). பிறரை மதிக்க வேண்டும் (உரோ 12:11, பிலி 2:3); பொறாமைப்படக்கூடாது (கலா 5:26). ஊக்கம் ஊட்ட வேண்டும் (1தெச 5:11), மகிழ்வாரோடு மகிழவும், அழுவாரோடு அழவும் வேண்டும் (உரோ 12:14).

6. விமர்சனம்

❖ யூதரையும் புறவினத்தாரையும் சரிசமமாகப் பார்க்கத் துணியும் பவுல் இங்கே சமத்துவச் சமூக நீதியாளராகக் காட்சி அளிக்கிறார்.

❖ குடும்ப ஒழுக்கத்தில் - திருமணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள சமத்துவத்தை இனம் காட்டிய நீதியாளர் பவுல்.

ஆனால், பவுல் முக்கியத்துவம் கொடுக்கும் கிறிஸ்தவ அறநெறிச் சமூகத்தில் சமத்துவ சமூக நீதி வலியுறுத்தப்படாதது கேள்விக்குறியாக உள்ளது.

❖ பவுல் வலியுறுத்தும் கிறிஸ்தவ அறநெறிச் சமூகத்தில்

- அடிமை நிலை நியாயப்படுத்தப்படுகிறது.
- பெண்களைக் கட்டுக் கோப்புக்குள் வைக்கிறது.
- அதிகாரப் படிநிலைக்கு ஆதரவாகப் பேசுகிறது.
- ஏழை-பணக்காரன் காரணங்கள் அலசப்படவில்லை

இவைகள் சமத்துவ சமூகநீதி சமூகத்திற்கு எதிரானவை மட்டும் அல்ல, கிறிஸ்தவ விழுமியத்திற்கும் எதிரானவை.

❖ கிறிஸ்தவ மனநிலையில் சமூகம் வாழ அழைக்கும் பவுல் - பணிந்து போவதை, ஆதிக்கச் சக்திகளுக்கு ஏதுவாக முன்வைப்பது கிறித்தவ மனநிலைக்கு முரண்பாடு.

- சமூகத்தில் பல அடிமைத்தனங்கள், ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும் சமூக மறுமலர்ச்சிக்குத் துணிந்து குரல் கொடுக்காமல், கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளையும், கிறிஸ்தவ அறவாழ்வையும் மட்டுமே பவுல் வலியுறுத்துவது கிறிஸ்துவ சமயம் கடந்து தன் சமதர்ம சமூகச் சிந்தனைகளைப் பவுல் வலியுறுத்த முடியாத கிரேக்க – உரோமை அசியல் சூழ்நிலையையே நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. கிறிஸ்துவோடு இணைந்துள்ள நாம் எல்லோரும் சமம் என்று கூறிக் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமான சமூக அறநெறிப் பார்வையை வலியுறுத்துவது இயேசுவின் மனநிலையை இயேசு காட்டிய இறையாட்சியை எந்த அளவு பிரதிபலிக்கும் என்பது விடைகூறமுடியாத கேள்வி.

7. முடிவுரை

சமூகத்தில் இயேசுவை மையமாக வைத்துப் போதித்த பவுலால் அக்கால ஆதிக்கச் சமூகக் கலாச்சாரத்தோடுதான் நீச்சல் போட முடிந்தது. இருப்பினும் கிறிஸ்துவின் மனநிலையை மையப்படுத்தி, அதைச் சமூகத்தில் வளர்த்தெடுக்க எதிர்நீச்சல் போடவும் துணிந்திருக்கிறார். எனவே பவுலுக்கு அடித்தளமான இயேசு பார்வையில் சமூகத்தைக் கட்டியெழுப்ப நம் சமூகச் சூழலை ஆராய்வோம், கட்டியெழுப்புவோம்.

உ. பவுலடியாரும் ஆட்சியாளர்களும்

திருத்தொண்டர் ஆரோக்கியராஜ்
இறையியல் நான்காமாண்டு
தூத்துக்குடி மறைமாவட்டம்

தொடக்கமாக

இருளில் ஒளி ஏற்றுவார்
பிறருக்கு வழி காட்டுவார்
சாரமுள்ள உப்பாக இருப்பார்
பிறரின் சுமைகளைப் பகிர்ந்து கொள்வார்
பிறருக்குத் தன்னையே கொடுப்பார்
தேவைப்பட்டால் தன் உயிரையும் கொடுப்பார்

என்ற நம்பிக்கையில் ஆட்சியில் ஏற்றி வைக்கப்பட்ட அத்தனைபேரும் ஒளிரும் விளக்கை அணைப்பவர்களாகவும், வழிநடந்த பாதைகளை அழிப்பவர்களாகவும், உப்பைச் சாரமற்றதாக்குபவர்களாகவும், பிறரின் முதுகில் சுமைகளை ஏற்றி வைப்பவர்களாகவும், தனக்காகப் பிறரை உறிஞ்சுபவர்களாகவும், தேவைப்பட்டால் பிறரின் உயிரையும் எடுப்பவர்களாகவும் மாறுவதை எங்கு போய்ச் சொல்வது. மக்கள் நலமோடும் வளமோடும் வாழ்வதற்குத் தேவையான அனைத்துவகை உதவிகளையும் செய்து கொடுப்பது ஆட்சியாளர்களின் கடமை. இத்தகைய நலமான பணிகள் செய்யப்படாதபோது அவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வது மக்களின் உரிமை. இன்று உரிமைகள் முற்றிலுமாக மறுக்கப்படுவதும், கடமைகள் பிறருக்குக் கடத்தப்படுவதும் எதார்த்தமாகிவிட்டன. தங்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும் என்று காத்துக்கிடக்கும் இதயங்கள் ஏராளம். மதச்சார்பற்ற நாட்டில் கிறிஸ்தவர்களின் உரிமைகள் நிச்சயமாக நிலைநாட்டப்படும் என்ற நல்லெண்ணத்தில் இருந்த மக்களின்மேல்தான் எத்தனை இடிகள். ஒரிசா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு போன்ற இடங்களில் கிறிஸ்தவர்களின் உணர்வுகள் தூண்டப்பெற்று வன்முறைக்குத் தயாரித்த நிகழ்ச்சிகள் எத்தனை எத்தனை. இந்தச் சோதனைகளுக்கு மத்தியிலும் "உங்களுக்கு

ஏற்படுகின்ற சோதனை பொதுவாக மனிதருக்கு ஏற்படும் சோதனையே அன்றி வேறு அல்ல. கடவுள் நம்பிக்கைகுரியவர். அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார். சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார். அதிலிருந்து விடுபட வழி செய்வார்" (1 கொரி 10:13) என்ற நம்பிக்கையில்தான் இன்றளவும் திருச்சபையானது நாளும் எதிர்கொள்ளும் சவால்களையும், சோதனைகளையும் தாங்கிக்கொண்டு செல்கிறது. நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள்தான் இப்படி இருக்கிறார்கள் என்று நினைத்தால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருஆட்சியாளர்களும் தங்களின் இறைமக்களின் உரிமைகளைப் பறித்துக்கொண்டு தங்களின் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்குவது மனதில் உள்ள காயத்தின்மீது மீண்டும் ஈட்டியால் குத்துவது போன்று உள்ளது. படிநிலைத் திருச்சபை மறைந்து மக்களை மையப்படுத்திய, அதிகாரங்கள் பகிரப்பட்ட வட்ட வடிவத் திருச்சபை உருவாக வேண்டும் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கமே திட்டங்களைத் தீட்டிக்கொடுத்த பின்பும் இன்றளவும் அதற்கான முயற்சிகள் தோல்வியைச் சந்திப்பதற்குக் காரணமாக அமைவது திருஆட்சியாளர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பங்கு நிதிக்குழு, பங்குப்பேரவை, அன்பியங்கள் போன்ற பங்கேற்பு அமைப்புகள் வட்டவடிவ, மக்கள்மைய திருச்சபை உருவாக துணையாக அமையும் என்றால் அதற்கான முயற்சிகள் ஆமை வேகத்தில் நடந்தேறுகின்றன. மக்களை வழிநடத்துகின்ற ஆட்சியாளர்களாக இருந்தாலும் சரி, இறைமக்களை வழிநடத்துகின்ற திருஆட்சியாளர்களாக இருந்தாலும் அவர்களின் வாழ்வும் பணியும் மக்களை மையப்படுத்தியதாக இல்லை.

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற ஒற்றை வரிக் கட்டளையை மட்டும் தங்கள் வாழ்க்கையில் இறைவாக்காக எடுத்துக்கொண்டு இறைபணியில் தங்களையே கரைத்துக்கொண்டவர்கள் ஏராளம். இதிலும் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பயணம் சென்று, பல துன்பங்களையும் மேற்கொண்டு இறைபணியில் தன்னைக் கரைத்துக்கொண்டவர் பவுலடியார். தான் ஏற்படுத்திய திருச்சபைகளுக்கும் அதை வழிநடத்துவதற்காக ஏற்படுத்திய தலைவர்களுக்கும் பல மடல்கள் எழுதியுள்ளார். திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் மடல்களின் எண்ணிக்கை

பதிமூன்று. இம்மடல்களில் ஆட்சியாளர்கள் பற்றியும், திருஆட்சியாளர்கள் பற்றியும் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கால ஆட்சியாளர்களுக்கும், திருஆட்சியாளர்களுக்கும் அவர் கொடுக்கும் சிந்தனைத் தொகுப்பாக இக்கட்டுரை அமையும்.

பணிவே துணிவாய்

> "ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லாரும் பணிந்திருங்கள். ஏனெனில் கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை. இப்பொழுதுள்ள ஆட்சிப் பொறுப்புகளைக் கடவுளே ஏற்படுத்தினார். ஆகையால் அதிகாரத்தை எதிர்த்து நிற்போர் கடவுளின் ஏற்பாட்டையே எதிர்த்து நிற்கின்றனர். அவ்வாறு எதிர்ப்பவர்கள் தங்கள் மீது தண்டனைத் தீர்ப்பைத் தாங்களே வருவித்துக் கொள்கிறார்கள். நற்செயல் செய்வோர் ஆள்வோருக்கு அஞ்ச வேண்டியதில்லை. தீச்செயல் செய்வோரே அஞ்ச வேண்டும். அதிகாரிகளுக்கு அஞ்சாமல் நீங்கள் வாழ விரும்பினால் நன்மை செய்யுங்கள். அப்போது அவர்களிடமிருந்து உங்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும். ஏனெனில் அவர்கள் உங்களுக்கு நன்மை செய்வதற் கென்றே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட தொண்டர்கள். ஆனால் தீமை செய்தால், நீங்கள் அஞ்ச வேண்டியதிருக்கும். அவர்கள் கையில் தண்டிக்கும் அதிகாரம் இருக்கிறது. அது வீணாக அவர்களிடம் கொடுக்கப்படவில்லை. தீமை செய்வோர் மீது கடவுளின் தண்டனையை நிறைவேற்ற அவரே ஏற்படுத்திய தொண்டர்கள் அவர்கள். ஆகவே கடவுளின் சினத்தின் பொருட்டு மட்டும் அல்ல, மனச்சான்றின் பொருட்டும் நீங்கள் பணிந்திருத்தல் வேண்டும். இதற்காகவே நீங்கள் வரி செலுத்துகிறீர்கள். அவர்கள் தங்கள் பணியை ஆற்றும்போது கடவுளுக்கே ஊழியம் செய்கிறார்கள். ஆகையால் அனைவருக்கும் நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறை வேற்றுங்கள். தலைவரி செலுத்த வேண்டியோருக்குத் தலைவரியும் சுங்கவரி செலுத்த வேண்டியோருக்குச் சுங்க

வரியையும் செலுத்துங்கள். அஞ்ச வேண்டியவர்களுக்கு அஞ்சுங்கள். மதிக்க வேண்டியவர்களை மதியுங்கள்." உரோ 13:1-7

"அடிமைகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப் படிவதுபோல் இவ்வுலகில் உங்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்களுக்கு அச்சத்தோடும் நடுக்கத்தோடும், முழு மனத்தோடும் கீழ்ப்படியுங்கள். மனிதர்களுக்கு உகந்தவர் களாகுமாறு, வேலை செய்வதாகக் காட்டிக் கொள்பவரா யிராமல் கிறிஸ்துவின் பணியாளராய்க் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள்." எபே 6:5-6

ஆட்சியாளர்களுக்கும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏனைய பணியாளர்களுக்கும் விவிலியத்தில் சிறப்புச் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் ஆளும் அதிகாரம் கடவுளால் உருவாக்கப்பட்டது என்றும் அவர்களுக்குப் பணிய மறுப்பவர்கள் கடவுளுக்கே பணிய மறுப்பவர்கள் என்றும், இவ்வாட்சியாளர்கள் கடவுளின் பணியாளர்கள் என்றும், அவர்களுக்குப் பணிவும் வணக்கமும் செலுத்த வேண்டும் என்றும் விவிலியம் குறிப்பிடுகின்றது. ஆனால் இன்றைய காலச் சூழலில் விவிலியத்தின் இச்சிறப்புச் சலுகை பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. இறைமக்களை அழிப்பதற்காகப் பல முயற்சிகள் எடுத்துவரும் ஆட்சியாளர்களுக்கு எப்படி அடிபணிந்து நடப்பது? தனது இன மக்களைத் தவிர மற்ற இனம் அழிய வேண்டும் என்று சட்டங்கள் தீட்டி அதற்காக உழைத்த நீரோ, ஸ்டாலின், ஹிட்லர் போன்றோர்களுக்கு எவ்வாறு பணிந்து செல்வது. மனசாட்சியை மழுங்கடிக்கச் செய்யும் தவறுகளும், மனசாட்சிக்கு எதிராகச் செல்லும் அரசின் திட்டங்களும் எவ்வாறு இப்பணிவை எதிர்பார்க்க இயலும்? ஆட்சியாளர்களிடையே எழும் ஊழல், தவறான போக்குகள், பேராசை, மக்களை அழிக்கும் கொள்கைகள் இவைகள் எல்லாவற்றையும் எப்படி நியாயப்படுத்த இயலும்? பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை நெருப்புக்கும், வாளுக்கும் இரையாக்கிய உரோமை அரசாட்சிக்கு அடிபணிந்து செல்லுங்கள், அவர்கள் கடவுளின் பணியாளர்கள் என்று பவுலடியார் உரோமையருக்கு எழுதிய திருமடலில் கூறியிருப்பது நமக்கெல்லாம் வியப்பாகத்தான் உள்ளது.

"பன்முறை சிறையில் அடைபட்டேன், கொடுமையாய் அடிபட்டேன், பன்முறை சாவின் வாயிலில் நின்றேன். ஐந்துமுறை யூதர்கள் என்னைச் சாட்டையால் ஒன்று குறைய நாற்பது அடி அடித்தார்கள். மூன்றுமுறை தடியால் அடிபட்டேன், ஒருமுறை கல்லெறிபட்டேன், மூன்றுமுறை கப்பல் சிதைவில் சிக்கினேன், ஓர் இரவும் பகலும் ஆழ்கடலில் அல்லலுற்றேன். பயணங்கள் பல செய்தேன், அவற்றில் ஆறுகளாலும் இடர்கள், கள்வராலும் இடர்கள், என் சொந்த மக்களாலும் இடர்கள், நாட்டிலும் இடர்கள், காட்டிலும் இடர்கள், கடலிலும் இடர்கள், இப்படி எத்தனையோ இடர்களுக்கு ஆளானேன்" (2 கொரி 11:23-26) என்று உரோமை ஆட்சியாளர்களாலும், யூத சமய ஆதிக்க ஆட்சியாளர்களாலும் துன்பப்பட்ட பவுலடியார், தன்னைத் துன்புறுத்தியவர்களையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பணிந்திருங்கள் என்று கூறி அவர்களுக்குப் பணிந்தும் போவது இவற்றை வாசிக்கும் நமக்கெல்லாம் வியப்பாய் உள்ளது.

ஒவ்வொரு நாளும் உயிருக்குப் பயந்து, உணர்வுகளை இழந்து, உரிமையை இழந்து அகதிகளாக உண்ண உணவின்றி, உடுத்த உடையின்றி, தங்குவதற்கு ஏற்ற இல்லிடமின்றித் தவித்துக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களைப் பார்த்து உங்களைக் கொடுமைப் படுத்துபவர்கள் கடவுளின் பணியாளர்கள், நீங்கள் அவர்களுக்கு அன்பு காட்டுங்கள், அவர்களுக்குப் பணிந்திருங்கள், அவர்களுக்குப் பணியா விட்டால் கடவுளின் சினம் உங்கள் மீது வரும் என்று பவுலடியார் கூறுவது இப்பகுதியைப் படிக்கும் நமக்கெல்லாம் வியப்பைக் கொடுக்கிறது.

ஆட்சியாளர்களுக்குப் பணிந்து போகச் சொல்லும் இப்பகுதியானது எதார்த்த நிலையை அடிப்படையாகக் கொண்ட பகுதி அல்ல. மக்கள் இவ்வுலக வாழ்க்கையை விட்டுவிட்டு மறுஉலகை, இயேசுவின் இரண்டாம் வருகையை மையப்படுத்திச் சிந்தித்துக் கொண்டிருந்த காலத்தில் இவ்வுலக ஆட்சியைப் பவுலடியார் நினைவு படுத்துகிறார். மக்களை நல்வழிப்படுத்துவதற்குச் சட்டதிட்டங்களும், ஆட்சியாளர்களும் கட்டாயம் தேவை என்னும் கொள்கைளை வலியுறுத்துகிறார். ஆனால் ஆட்சியாளர்கள் அடக்குமுறையாளர்களாக இருக்க வேண்டும் என்று கூறவில்லை.

ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்குப் பணிந்திருங்கள் என்று கூறுவதற்கு அன்றைய கால வரலாற்றுப் பின்னணியும் உண்டு. எகிப்து

நாட்டில் அடிமைகளாக இருந்த மக்கள் அனைவரும் மோசேயின் தலைமையில் விடுதலை பெற்றுச் சீனாய் மலை உடன்படிக்கையின் காரணமாக ஒரு இனமாக உருவெடுக்கிறார்கள். ஒருங்கிணைந்த குழுவாக அவர்கள் இணைந்த நாளிலிருந்து பல நாடுகளுக்கு அவர்கள் மீண்டும் அடிமைகளாகச் சென்றுள்ளார்கள். பல நாடுகளுக்கு அடிமைகளாகவும் இருந்துள்ளார்கள். குறிப்பாக அசீரிய நாட்டிற்கு நாடுகடத்தப்பட்டார்கள்; பாபிலோனிய நாட்டிற்கு நாடுகடத்தப்பட்டார்கள்; பாரசீகர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள்; கிரேக்கர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள்; இறுதியில் இயேசு மற்றும் பவுலடியார் காலத்தில் அவர்கள் உரோமையர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். உரோமானிய ஆளுநர்கள் அவர்களை ஆட்சிசெய்து கொண்டிருந்தார்கள். இவர்களின் ஆட்சியில் ஆதிக்க ஆட்சியாளர்களுக்கு உரித்தான இயல்பான ஆணவமும் அடக்குமுறைகளும் அதிகமாகவே இருந்தது. தங்களின் சுயநலத்திற்காகப் பல வகைகளில் மக்களைச் சுரண்டி நாட்டைக் கொள்ளையடித்தார்கள். அதிகமாகக் கையூட்டுக் கொடுப்பவர்களுக்குத் தலைமைக்குரு பதவியை விற்றார்கள். இக்காலக் கட்டத்தில் இவர்களின் கொடுமைகளுக்கு எதிராகத் தன்மான உணர்வும், சமய நம்பிக்கையும் மக்கள் மையச் சிந்தனையும் கொண்ட பலர் போர்க்கொடி தூக்கினார்கள்; விடுதலைப் போராளிகளாக மாறினார்கள். உரோமை ஆதிக்க ஆட்சியாளர்களையும் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்த உள்நாட்டுத் தலைவர்களையும் குறிப்பாகச் சதுசேயர்களையும், தலைமைக் குருக்களையும் நேரடியாக எதிர்த்தனர். உரோமையருக்கு வரி கொடுப்பதை மிகவும் வன்மையாகக் கண்டித்தனர். வாளேந்திப் போரிட்டும் வந்தனர். எனவே ஆதிக்க ஆட்சியாளர்களால் இவர்கள் திருடர்கள், கொள்ளையர்கள் என்றும் பெயர் சூட்டப்பட்டனர். இந்தப் புரட்சியாளர்கள் இறைவனைத் தவிர வேறு எவரையும் தங்கள் அரசராக ஏற்க மறுத்தனர். இச்சூழ்நிலையில்தான் பவுலடியார் இயேசு படைக்க விரும்பிய இறையாட்சியை அடக்குமுறைகளாலும், வன்முறைகளாலும் கொண்டுவர இயலாது; உண்மை, அன்பு, நீதி, சமத்துவம், மன்னிப்பு, கீழ்ப்படிதல் போன்ற இறையாட்சியின் விழுமியங்களால்தான் கொண்டு வர இயலும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஆட்சியாளர்களுக்குப் பணிந்திருங்கள் என்றும், இவர்கள் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

ஆளும் ஆட்சியாளர்களுக்குப் பணிந்திருங்கள் என்று கூறும் பவுலடியார் உரோமையர்களின் பாக்ஸ் ரோமானா (Pax Romana) என்ற திட்டத்தை மறந்தவரில்லை. அமைதியை ஏற்படுத்தும் நோக்கோடு செயல்படும் ஒவ்வொருவருக்கும் சிறப்புச் சலுகைகள் உண்டு என்பதை நன்கு உணர்ந்திருந்ததனால்தான் இக்கூற்றையும் அவர் கூறியுள்ளார் என்று விவிலிய அறிஞர்கள் கூறுவார்கள். இயேசுவின் மீட்புத் திட்டத்தை இப்பாரெங்கும் பரப்பிட வேண்டும், இயேசுவினால் தான் வாழ்வு பெற்றதை நினைத்து மழிச்சியால் துள்ளும் அவர், இம்மகிழ்ச்சியை அகிலத்தில் உள்ள அனைவரும் பெற்றிட வேண்டும் என்ற நோக்கோடு செயல்படுகிறார். எனவேதான் தனது நற்செய்திப் பணிக்கு இடையூறு ஏற்படாவண்ணம் இக்கூற்றை அவர் குறிப்பிடுகிறார்.

இயேசுவின் இறையாட்சி இம்மண்ணில் நிலைபெறப் பணிவினால் எழும் துணிவு மிகவும் அவசியமாகிறது. கடவுள் தன்மையில் விளங்கிய இயேசு தன்னையே முழுமையாகத் தாழ்த்தியதன் வழியாகத்தான் இவ்வுலகமானது மீட்புப் பெற்றது. அவர் இந்நிலைக்கு இறங்கி வராவிட்டால் நாம் இன்னும் நமது பாவ நிலையிலே தொடர்ந்திருப்போம். எனவே நமது மீட்புக்குப் பணிவு கட்டாயத் தேவை. பிலி 1:20-21இல் "என்ன நேர்ந்தாலும் வெட்கமுறமாட்டேன். இன்றும் என்றும், வாழ்விலும் சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப் படுத்துவேன். இதுவே என் பேராவல், இதுவே என் எதிர்நோக்கு. ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" என்று பவுலடியார் குறிப்பிடுகின்றார். பணிவு என்பது நாம் மீண்டும் அடிமைகளாக மாறவேண்டும் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. பணிவே ஒரு எதிர்ப்பின் அடையாளம்தான். இவர்களும் தீவிரவாதிகளாக மாறுவார்கள் என்று எண்ணி நம்மீது ஏவப்படும் அடக்குமுறைகளுக்கு இரையாகி நாமும் தீவிரவாதிகளாக மாறினால் அவர்கள் தீட்டிய திட்டத்திற்கு நாம் இரையாகிறோம். அதற்கு மாறாக அவர்களின் திட்டத்திற்குப் பணிவோடு எதிர்த்து நிற்கும்போது நாம் துணிவு பெற்றவர்களாக மாறுகிறோம். அவர்களின் திட்டத்தைச் சிதறடிக்கிறோம்.

மக்களின் தேவைக்கு ஏற்பத் திருச்சபையில் பல தலைமை உருவாகின. அவைகளுள் ஒன்று திருத்தொண்டர் திருப்பணி ஆகும். கிரேக்க மொழி பேசுவோரின் கைம்பெண்கள் ஒழுங்காகக் கவனிக்கப் படவில்லை என்னும் சிக்கல் எழுந்ததால், நற்சான்று பெற்றவர்களும், தூய ஆவியின் வல்லமையும் ஞானமும் பெற்றவர்களுமான எழுவரைத் திருத்தொண்டர்களாகத் திருத்தூதர்கள் நியமித்தார்கள். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்ற கட்டளையைப் பெற்றுத் தங்களையே அர்ப்பணித்துக்கொண்ட திருத்தூதர்களால், நிலைப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ சமூகங்களுக்குத் தங்களது உடனிருப்பைத் தொடர்ந்து கொடுக்க இயலவில்லை. இக்காரணத்தால் திருச்சபையை வழிநடத்துவதற்கு மூப்பர்கள், சபைக் கண்காணிப்பாளர்கள் என்னும் இரண்டு தலைமைத்துவ நிலைகள் உருவாயின. சபைக் கண்காணிப்பாளர்கள் என்பது கிரேக்க முறையைச் சார்ந்தது. மூப்பர்கள் என்பது யூத முறையைச் சார்ந்தது. கிரேக்கச் சமூகத்தில் தோன்றிய பல்வேறு பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளுக்கு *எப்பிஸ்கோப்போய்* என்பது பெயர். யூத சமூகத்தில் தொழுகைக்கூடங்களைக் கண்காணிப்பது, மக்களிடையே எழும் சிக்கல்களையும், வழக்குகளையும் தீர்த்து வைப்பது மூப்பர்களின் பணியாக இருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இம்மூப்பர்கள் நிதி, நிர்வாகம் போன்ற அமைப்புகளில் ஈடுபட்டுச் சிறப்பான பணியைச் செய்ததால் மக்களிடையே அதிகமான செல்வாக்கு இவர்களுக்கு இருந்தது. எனவே இவர்கள் சில இடங்களில் மூப்பர்கள் என்றும் சில இடங்களில் சபைக் கண்காணிப்பாளர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

திருத்தொண்டர்களும், மூப்பர்களும், சபைக் கண்காணிப்பாளர்களும் திருத்தூதர்களால் நேரடியாக ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் போகத் தொடக்கத் திருச்சபையில் ஆவியின் அருட்கொடைகளைப் பெற்று இறைமக்களின் நல்வாழ்வுக்காகவும் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் பணியாற்றிய தன்னார்வத் தொண்டர்கள் பலர் இருந்தனர். "சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளராகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும்,

மக்களின் தேவைக்கு ஏற்பத் திருச்சபையில் பல தலைமை உருவாகின. அவைகளுள் ஒன்று திருத்தொண்டர் திருப்பணி ஆகும். கிரேக்க மொழி பேசுவோரின் கைம்பெண்கள் ஒழுங்காகக் கவனிக்கப் படவில்லை என்னும் சிக்கல் எழுந்ததால், நற்சான்று பெற்றவர்களும், தூய ஆவியின் வல்லமையும் ஞானமும் பெற்றவர்களுமான எழுவரைத் திருத்தொண்டர்களாகத் திருத்தூதர்கள் நியமித்தார்கள். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்ற கட்டளையைப் பெற்றுத் தங்களையே அர்ப்பணித்துக்கொண்ட திருத்தூதர்களால், நிலைப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ சமூகங்களுக்குத் தங்களது உடனிருப்பைத் தொடர்ந்து கொடுக்க இயலவில்லை. இக்காரணத்தால் திருச்சபையை வழிநடத்துவதற்கு மூப்பர்கள், சபைக் கண்காணிப்பாளர்கள் என்னும் இரண்டு தலைமைத்துவ நிலைகள் உருவாயின. சபைக் கண்காணிப்பாளர்கள் என்பது கிரேக்க முறையைச் சார்ந்தது. மூப்பர்கள் என்பது யூத முறையைச் சார்ந்தது. கிரேக்கச் சமூகத்தில் தோன்றிய பல்வேறு பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளுக்கு *எப்பிஸ்கோப்போய்* என்பது பெயர். யூத சமூகத்தில் தொழுகைக்கூடங்களைக் கண்காணிப்பது, மக்களிடையே எழும் சிக்கல்களையும், வழக்குகளையும் தீர்த்து வைப்பது மூப்பர்களின் பணியாக இருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இம்மூப்பர்கள் நிதி, நிர்வாகம் போன்ற அமைப்புகளில் ஈடுபட்டுச் சிறப்பான பணியைச் செய்ததால் மக்களிடையே அதிகமான செல்வாக்கு இவர்களுக்கு இருந்தது. எனவே இவர்கள் சில இடங்களில் மூப்பர்கள் என்றும் சில இடங்களில் சபைக் கண்காணிப்பாளர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

திருத்தொண்டர்களும், மூப்பர்களும், சபைக் கண்காணிப் பாளர்களும் திருத்தூதர்களால் நேரடியாக ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் போகத் தொடக்கத் திருச்சபையில் ஆவியின் அருட்கொடைகளைப் பெற்று இறைமக்களின் நல்வாழ்வுக்காகவும் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் பணியாற்றிய தன்னார்வத் தொண்டர்கள் பலர் இருந்தனர். "சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளராகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும்,

கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்" (எபே 4:11-12).

தலத்திருச்சபையை வழிநடத்துபவர் 'தலைவர்' அல்ல. மாறாக 'தலைவர்கள்'. பவுலடியார் தலத்திருச்சபைக்கு எழுதக்கூடிய கடிதங்களில் சபைக் கண்காணிப்பாளர்கள்', 'திருத்தொண்டர்கள்' என்று பன்மையில் குறிப்பிடுகின்றார். ஒருமையில் குறிப்பிட வேண்டு மென்றால் கிறிஸ்துவை மட்டும்தான் குறிப்பிட இயலும். ஏனென்றால் கிறிஸ்து இயேசுவே திருச்சபை என்னும் உடலுக்குத் தலையும் தொடக்கமுமாக உள்ளார் (கொலோ 1:16).

பணியாளர்கள் என்னும் அடிப்படையில் இறைமக்கள் திருச்சபையின் தலைவர்களுக்குத் தாழ்ந்தவர்கள் இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழ்பவர்கள் என்னும் அடிப்படையில் இறைமக்களும், சபைக் கண்காணிப்பாளர்களும், திருத்தொண்டர்களும் சமமானவர்களே. திருமுழுக்கின் வழியாகத் திருச்சபையின் உறுப்பினர்கள் என்னும் விதத்தில் அனைவரும் பணியாளர்களே. ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சார்ந்த அலெக் மோட்யர் கூற்றுப்படி தலத்திருச்சபைக்குள் சகோதரத்துவமும் (அனைத்துப் புனிதர்கள்), தலைமைத்துவமும் (சபைக் கண்காணிப்பாளர்கள், ஆயர்கள், திருத்தொண்டர்கள்) உள்ளது. தலைமைத்துவம் என்பது சகோதரத்துவத்தின் மேல் புகுத்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக சகோதரத்துவத்தின் நீட்சியாகும். கி.பி. 418இல் ஒப்தாத்துஸ் என்பவருக்கு தூய அகஸ்டின் எழுதிய மடலில் அதிகாரம் ஆதிக்கம் செலுத்துவதற்கு அல்ல. பணியாற்றுவதற்கே எனக் குறிப்பிடுகிறார். அவர் தனது வாழ்க்கையிலும் இதைக் கடைபிடித்தார். "உங்களுக்கு நான் ஆயர், உங்களோடு நான் ஒரு கிறிஸ்தவன்" என்றும் கூறுகின்றார். தெர்த்தூலியன் "அதிகாரம் என்பது ஆள்வதற்காக அன்று, தொண்டாற்றுவதற்கே தரப்பட்டுள்ளது" என்று கூறுகிறார். ஓரிஜன் "ஆயர் நிலைக்கு அழைக்கப்பட்டவர் பிறரைக் கட்டளையிடாமல் திருச்சபை முழுவதற்கும் பணிவோடு தொண்டாற்ற வேண்டும்" என்று கூறுகிறார். "தூய அதிகாரம் பெற்ற பணியாளர் எல்லாரும் தங்கள் சகோதரர் சகோதரிக்குத் தொண்டு புரிகின்றனர்" என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம், *திருச்சபை*, எண் 18 சுட்டிக்காட்டுகின்றது.

திருச்சபைத் தந்தையர்கள் சுட்டிக்காட்டிய பணிவின் அதிகாரமும், இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்மொழிந்த பணிவின் அதிகாரமும் இயேசுவின் சிந்தனையைப் பிரதிபலிக்கும் பவுலடியாரின் சிந்தனைகளின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும்.

வளர்ச்சியே அதிகாரமாய்

அதிகாரம் என்பது இலத்தீன் மூலத்தைக் கொண்ட ஒரு சொல். *Augere* எனப்படும் இலத்தீன் சொல்லின் பொருள் "வளர்ச்சியடையச் செய்தல்" என்பதாகும். இதற்கு இணையான ஆங்கிலச் சொல் *Authority* ஆகும். ஆனால் ஆங்கிலத்தில் பெரும்பாலும் இச்சொல் பிறர் மீது அதிகாரம் செலுத்துதல் என்னும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அதிகாரம் என்னும் சொல்லைப் பிரித்துப் பார்க்கும்போது 'அதி' என்று தொடங்குவதால் இது 'அதிகரித்தல்' என்று பொருள்படும். இலத்தீன் சொல்லும், தமிழ்ச் சொல்லும் இணைந்து செல்கிறது. ஆனால் பல வேளைகளில் ஆங்கிலப் பொருளே இச்சொல்லுக்குப் பயன்படுத்தப படுகிறது. மக்களை வழிநடத்தும் பொறுப்புக் கொண்டவர்கள், மக்களின் வளர்ச்சிக்காகவே உழைக்க வேண்டும் என்பதை இச்சொல் சுட்டிக் காட்டுகின்றது. இவ்வதிகாரம் யார் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சிந்திப்பது பொருந்தும்.

கடவுளின் அதிகாரம்

ஆண்டவர் அகில உலகத்தின் மீதும் முடிவில்லா ஆட்சி செய்கின்றார் (விப 15:18, யோபு 26:12, திபா 29:10, 93:1-2, 95:3-5, 103:19, 146:10, 147:5, எசா 40:12, 50:2). அவர் தனது அதிகாரத்தால் நேரங்களையும் காலங்களையும் குறித்து வைத்துள்ளார் (திப 1:7). கடவுளின் ஆட்சியுரிமை என்றும் அழியாதது (தானி 4:34). ஆளும் அதிகாரிகளின் அதிகாரம் கடவுளிடமிருந்து வந்தவை ஆகும் (உரோ 13:1). மனிதனைப் பாதுகாப்பதும், வரலாற்றில் குறுக்கிடுவதும் மட்டும் கடவுளின் அதிகாரம் அல்ல. மாறாக மனிதனைத் தனது திட்டங்களுக்குக் கீழ்ப்படிய வைப்பதும், பொறுப்புணர்வு கொண்டு வாழ அழைப்பதும் கடவுளின் அதிகாரம்தான். முதல் பெற்றோரின் ஏதேன் தோட்ட நிகழ்வும், கடவுள் கொடுத்த பத்து கட்டளைகளும் இதற்குச் சான்றுகளாக அமைகின்றன. மனிதனை வாழ்விக்கும் அதிகாரம் மட்டுமல்ல, மனித

மாண்புகளை அழிப்போரை நரகத்தில் தள்ளுவதற்கும் கடவுளுக்கு அதிகாரம் உள்ளது (லூக் 12:5).

இயேசுவின் அதிகாரம்

இறைமகன் மற்றும் மானுடமகன் என்னும் அளவில் இயேசுக் கிறிஸ்துவுக்கு அனைத்து அதிகாரமும் உண்டு. பாவங்களை மன்னிக்கிறார் (மாற் 2:5-8), குணமாக்குகிறார் (மாற் 1:34), பேய்களை ஓட்டுகிறார் (மாற் 1:27), இயற்கையின் மேல் அதிகாரம் கொண்டுள்ளார் (லூக் 8:24-25), இறந்தோரை உயிர்ப்பிக்கிறார் (லூக் 7:11-17; யோவா 11:38-44), அதிகாரத்தோடு போதிக்கிறார் (மத் 7:28-29). தனது சிலுவையால் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர், அதிகாரம் செலுத்துவோர், வலிமையுடையோர் ஆகிய அனைவரையும் அழித்துவிட்டுத் தன் தந்தையிடம் இவ்வாட்சியை ஒப்படைப்பார். இறுதிப் பகைவரை அழிக்கும் வரை அவரே ஆட்சியும் செலுத்துவார் (1கொரி 15: 24-25, கொலோ 2:15). இயேசு கிறிஸ்து இறைத் தந்தையிடமிருந்து இவ்வதிகாரத்தை பெற்றுள்ளார். "உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அதிகாரம் உண்டு" (யோவா 10:18) என்று இயேசுவே சான்றும் பகர்கிறார். "விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய் அவருக்காய் படைக்கப்பட்டன" (கொலோ 1:16) என்று இயேசுவின் அதிகாரத்தின் ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் குறித்து பவுலடியார் குறிப்பிடுகின்றார்.

திருத்தூதர்களின் அதிகாரம்

கடவுள் தன் அதிகாரத்தை நேரடியாக மட்டுமல்லாமல் தனது பணியாளர்கள் வழியாகவும் பயன்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள், நீதித்தலைவர்கள், அரசர்கள் மற்றும் குருக்களின் வழியாகத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் இவ்வதிகாரம் கிறிஸ்து இயேசுவின் வழியாக அவரது பணியைத் தொடர்ந் தாற்றுவதற்கு அழைக்கப்பட்ட திருத்தூதர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. இறைவார்த்தையை எடுத்துரைப்பதற்கும், நம்பிக்கையில் இறைமக்களை ஊன்றச் செய்வதற்கும், வழிநடத்துவதற்கும் அதிகாரம்

கொடுக்கப்பட்டுள்ளது (2கொரி 5:20; கலா 1:11; 2:7-9; 1தெச 2:13; 2தெச 2:15).

திருச்சபையின் அதிகாரம்

இறைமக்களை அன்பிலும் மனத் தாழ்மையிலும் வழிநடத்திட கிறிஸ்து தனது அதிகாரத்தைத் திருச்சபையின் தலைவர்களுக்குக் கொடுத்துள்ளார் (1திமொ 3:5). இவர்களுக்கு அன்பின் வழியில் பணிந்திருப்பது இறைமக்களின் கடமையாகும் (1தெச 5:12-13) என்று பவுலடியார் குறிப்பிடுகின்றார்.

தாங்கள் பெற்றுக்கொண்ட அதிகாரத்தைத் தக்கவைக்கத் திருச்சபை தலைவர்களிடையே பெரும் போட்டி நிலவிய காலங்களும் உண்டு. அதிகாரப் போதை கொண்டு பதவிகளை விலைக்கு வாங்கிய நேரங்களும் உண்டு. திருத்தந்தை, கர்தினால், பேராயர், ஆயர், மறைமாவட்ட முதன்மைகுரு போன்ற பதவிகள் திருச்சபைத் தந்தையர்களால் விலைக்கு வாங்கப்பட்டன. சில வேளைகளில் தங்களின் பதவிகள் வேறொருவருக்குச் சென்றுவிடக்கூடாது என்பதற்காகத் தங்களின் குடும்ப உறுப்பினர்கள் மத்தியிலேயே அதிகமாகப் பகிரவும் பட்டன. இவ்வாறாகத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட அதிகாரத்தை இறைமக்கள் கேள்விக்குள்ளாக்கினார்கள். இவர்களில் முக்கியமானவர் மார்ட்டின் லூதர் ஆவார். இறைவார்த்தையின் அதிகாரம்தான் உண்மையானது, மனித அதிகாரம் உயர்ந்ததல்ல என்றும், தனிமனித அதிகாரத்தைவிட பொதுச்சங்க அதிகாரமே இறுதியானது என்றும் அவர் சவால் விடுத்தார். திருத்தந்தையை 'எதிர்க்கிறிஸ்து' என்றும் திருச்சபையைப் 'பாபிலோனிய அடிமைத்தனத்தில்' சிக்கித் தவிக்கும் அமைப்பு என்றும் சித்தரித்துத் திருச்சபையை விட்டும் விலகிச் சென்றார்.

"ஆயர்களின் அதிகாரம் திருச்சபையில் ஒற்றுமையை ஏற்படுத்தவே தரப்பட்டுள்ளது" என்று கூறி ஆயர்களின் அதிகாரத்தைத் திருச்சபையில் நிலைப்படுத்த முயன்றவர் கார்த்தேஜ் ஆயர் சிப்ரியான் ஆவார். "அருள்பணியாளர்களுக்கு ஞான அதிகாரம் அளிக்கப்படுகிறது, திருச்சபையின் வளர்ச்சிக்காக இவ்வதிகாரம் அளிக்கப்படுகிறது" என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம், *அருள்பணியாளர்களின் பணியும் வாழ்வும்*, எண் 6 சுட்டிக்காட்டுகின்றது.

பவுலடியார் தான் பெற்றுக்கொண்ட அதிகாரம் அனைத்தும் மக்களின் வளர்ச்சிக்கு என்று கூறுகிறார். 2கொரி 13:10இல் "உங்கள் அழிவுக்காக அல்ல, உங்கள் வளர்ச்சிக்காகவே ஆண்டவர் இந்த அதிகாரத்தை எனக்கு அளித்துள்ளார்." என்றும், 2கொரி 10:8இல் "எங்களுடைய அதிகாரத்தை உங்கள் அழிவுக்காக அல்ல, உங்கள் வளர்ச்சிக்காகவே ஆண்டவர் தந்திருக்கிறார்" என்றும் குறிப்பிடுகின்றார். தன்னை முழுவதும் கிறிஸ்துவின் ஊழியனாகவே, பணியாளனாகவே அடையாளப்படுத்திக் கொள்கிறார் (1கொரி 4:1). அவரால் ஏற்படுத்தப்பட்ட சபைகள் ஒவ்வொன்றின் மீதும் அளவுகடந்த அன்பும் பாசமும் கொண்டுள்ளார். அவர்களின் பணியாளராகப் பணியாற்றுவது தனக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது என்றும் கூறுகிறார் (2கொரி 1:24)

மலரவேண்டும் மக்களாட்சி

"மாதம் மும்மாரி பொழிகிறதா?" என்று தனது அமைச்சர்களைப் பார்த்துக் கேட்டுக்கொண்ட பிறகுதான் மழை பொழிகிறதா? இல்லையா? என்று தெரிந்த கொள்ளக்கூடிய அளவுக்கு மக்களுக்கும் மன்னர்களுக்கும் மத்தியில் இடைவெளி இருந்தது மன்னராட்சி காலத்தில். அரசாட்சி என்பது மன்னரின் ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே உண்டு என்ற நிலையும் மன்னராட்சி காலத்தில் நிலைபெற்றிருந்தது. இன்று இந்நிலை ஒரு சில நாடுகளில் மட்டும்தான் உள்ளது, அதுவும் பாரம்பரியங்களைக் கட்டிக்காப்பதற்காக மட்டுமே உள்ளது. இன்று பெரும்பான்மையான நாடுகளில் மக்களாட்சி முறைதான் நடைபெறுகிறது. மக்களே தங்களை வழிநடத்த, தங்கள் மத்தியிலிருந்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து ஆட்சியைக் கொடுப்பது மக்களாட்சி முறை. மக்களை ஆட்சிசெய்யும் தலைவருக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய உறவு உண்டு. மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதால் மக்களின் தேவைகளைத் தெரிந்து கொண்டு அதை மையப்படுத்திய வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு வாய்ப்புகள் உண்டு. மக்களின் நலனை மையப்படுத்தி ஆட்சி செய்வது வரை மக்கள் தங்கள் தலைவரை ஏற்றுக்கொள்ளவும், மக்கள் நலனிலிருந்து விடுபட்டுச் செல்லும்போது அவரைத் தூக்கி எறிந்து விட்டு மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் ஏனைய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவும் மக்களுக்கு அதிகச் சக்தி உண்டு. இதனால் அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்படுவதும், இவ்வதிகாரம்

தனது தலைமுறைக்குக் கடத்தப்படுவதும் தடுக்கப்படுகிறது. ஆனால் இன்று நடைமுறையில் இதறகு முற்றிலும் மாற்றான மக்களாட்சி முறைதான் செயல்படுகிறது. உலக நாடுகள் அனைத்திலுமுள்ள மக்கள் இருக்கக்கூடிய இரண்டு தீமைகளில் எது குறைவான தீமை என்று தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இத்தீமைகள் ஆட்சி செய்யும்போது மக்களுக்கும் இத்தீமைகளுக்கும் இடையில் நல்லுறவுக்கு வாய்ப்புகள் இல்லை. இத்தீமைகளுக்கு மத்தியிலே அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. இவ்வதிகாரக் குவிப்புக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும்போது மக்கள் மீது வன்முறைகளும் அடக்குமுறைகளும் ஏவி விடப்படுகின்றன. இத்தீமைகளின் ஆதிக்க மக்களாட்சி அரசியலைப் பார்க்கும்போது மக்களாட்சி முறை வேண்டாம் என்று எண்ணத்தோன்றும். இயேசு விரும்பியதும் மக்களாட்சி முறையைத்தான். ஆனால் இத்தீமைககளின் ஆதிக்க மக்களாட்சி முறையை அல்ல. மாறாக, உண்மை, அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற விழுமியங்களைக் கொண்ட மக்களாட்சி முறையைத்தான். பவுலடியாரும் ஆதிக்க வெறியும் பணமோகமும் கொண்ட ஆட்சியாளர்களிடம் அடிமைகளாகச் சிக்கித் தவிக்கும் மக்களைப் பார்த்துக் கூறுகிறார் "கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்" (கலா 5:1).

திருப்பணியாளர்களின் படைக்கலன்கள்

திருத்தொண்டர்கள், மூப்பர்கள், சபைக் கண்காணிப்பாளர்கள் என்று மூவகைப் பணியாளர்களைத் தொடக்கத் திருச்சபை கொண்டிருந்தது. பல்வேறு காலச் சூழல்களில் எழுந்த தேவைகளின் அடிப்படையில் எழுந்தவர்கள்தான் இம்மூவகைப் பணியாளர்கள். இவர்களின் பணியைச் செய்பவர்கள்தான் தற்போதைய திருச்சபைப் பணியாளர்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கையில் எப்படிப்பட்ட பணியினைச் செய்யவேண்டும் என்பதற்குப் பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. 10 ஆண்டுகள் தொடங்கி 15 ஆண்டுகள் வரை பல்வேறு பயிற்சிகளை முன்னெடுக்கிறார்கள். தேர்ச்சி பெற்றவர்கள் இப்பணியில் ஈடுபடுகிறார்கள். ஆன்மீகப் பயிற்சியும், அறிவுசார் பயிற்சியும், ஆளுமைசார் பயிற்சியும், உறவுசார் பயிற்சியும், உடல்சார் பயிற்சியும், மேய்ப்புப்பணிப்

பயிற்சியும் அளிக்கப்படுகிறன. ஆயினும் இத்தனை ஆண்டுகள் மேற்கொண்ட பயிற்சியின் முடிவிலும் இவர்கள் இயேசு எதிர்பார்க்கின்ற பண்பு நலன்களைக் கொண்டிருக்கிறார்களா? சில வேளைகளில் பலரின் பண்பு நலன்களும், பல வேளைகளில் சிலரின் பண்பு நலன்களும் இல்லை என்ற பதிலுக்குக் காரணமாகவே அமைகின்றன. மறுகிறிஸ்துவாக மாற வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு பணியாளருக்கும் கொடுக்கப்படும் பயிற்சியின் நோக்கம். ஆனால் சில வேளைகளில் இவர்கள் மனிதர்களாகவே வாழாமலிருப்பதுதான் பயத்தை ஏற்படுத்துகின்றது. ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவர்களாக விளங்க வேண்டும்; கட்சி மனப்பான்மையையும், வீண் பெருமையையும் நீக்க வேண்டும்; கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் என்பது பவுலடியாரின் விருப்பம் (பிலி 2:2-5). தனது திருமுகங்களில் பல இடங்களில் திருத்தொண்டர்களும், மூப்பர்களும், சபைக் கண்காணிப்பாளர்களும் எப்படிப்பட்ட பண்பு நலன்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று பவுலடியார் குறிப்பிடுகிறார்.

சபைக் கண்காணிப்பாளர் பண்புகள் (1திமொ 3:1-7)

- குறைச் சொல்லுக்கு ஆளாகாதவராக இருக்க வேண்டும்
- ஒரு மனைவி கொண்டவராய் இருக்க வேண்டும் (அன்றைய் காலப் பண்பாட்டுத் தாக்கங்களைக் கொண்டது)
- அறிவுத் தெளிவு பெற்றவராய் இருக்க வேண்டும்
- கட்டுப்பாடு நிறைந்தவராய் இருக்க வேண்டும்
- விருந்தோம்பல் பண்புள்ளவராய் இருக்க வேண்டும்
- கற்பிக்கும் ஆற்றல் பெற்றவராய் இருக்க வேண்டும்
- குடிவெறிக்கு அடிமையாய் இருக்கக் கூடாது
- வன்முறைக்கு இடங்கொடுக்கக் கூடாது
- கனிந்த உள்ளத்தவராய் இருக்க வேண்டும்
- சண்டையிடாதவராக இருக்க வேண்டும்
- பொருளாசையைத் தவிர்ப்பவராக இருக்க வேண்டும்.

- தமது சொந்தக் குடும்பத்தை நல்ல முறையில் நடத்தத் தெரிந்தவராக இருக்க வேண்டும்
- திருச்சபையில் புதிதாகச் சேர்ந்த உறுப்பினராக இருக்கக் கூடாது
- தற்பெருமை கொள்ளக் கூடாது
- திருச்சபைக்கு வெளியே உள்ளவர்களிடம் நற்சான்று பெற்றவராயிருக்க வேண்டும்.
- அலகையின் கண்ணியிலும் விழக்கூடாது.

திருத்தொண்டர் பண்புகள் (1திமொ 3:8-13)

ஆண் திருத்தொண்டர்கள்

- கண்ணியமுடையவர்களாக இருக்க வேண்டும்
- இரட்டை நாக்கு உள்ளவர்களாக இருத்தல் கூடாது
- குடிவெறிக்கு அடிமைப்பட்டவர்களாக இருக்கக் கூடாது
- இழிவான ஊதியத்தின் மேல் ஆசை உள்ளவர்களாக இருத்தலாகாது
- தூய மனச்சான்று உடையவர்களாய் இருக்க வேண்டும்
- விசுவாசத்தின் மறைபொருளைக் காத்து வர வேண்டும்
- ஒரு மனைவி கொண்டவராய் இருக்க வேண்டும்
- சொந்தக் குடும்பத்தையும் நல்ல முறையில் நடத்துகிறவர்களாய் இருக்கவேண்டும்
- நன்கு திருத்தொண்டு ஆற்ற வேண்டும்
- இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையைக் குறித்து அதிகத் துணிவோடு பேச வேண்டும்

பெண் திருத்தொண்டர்கள்

- கண்ணியமுடையவராய் இருக்க வேண்டும்
- புறங்கூறாதவராய் இருக்க வேண்டும்
- அறிவுத் தெளிவு உடையவராய் இருக்க வேண்டும்
- எல்லாவற்றிலும் நம்பத்தக்கவராயும் இருக்க வேண்டும்.

மூப்பர்கள் (1திமொ 5:17, 21-22;
2திமொ 2:16,24-25; தீத்து 1:6-9; 3:1-2)

- இறைவார்த்தையை அறிவிக்க வேண்டும்
- கற்பிப்பதிலும் ஈடுபட்டு உழைக்க வேண்டும்
- முன்கூட்டியே முடிவெடுக்கக் கூடாது.
- நடுநிலை தவறக் கூடாது.
- அவசரப்பட்டு யார் மேலும் கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்தக்கூடாது.
- பிறருடைய பாவங்களில் பங்கு கொள்ளக்கூடாது.
- தூய்மையுள்ளவனாகக் காத்துக்கொள்ள வேண்டும்
- உலகப் போக்கிலான வீண் பேச்சுகளை விலக்க வேண்டும்
- சண்டையிடாதவராயிருக்க வேண்டும்.
- அனைவரிடமும் கனிவு காட்டுகிறவராய் இருக்க வேண்டும்
- தீமையைப் பொறுத்துக் கொள்பவராய் இருக்க வேண்டும்
- மாற்றுக் கருத்துடையோருக்கும் பணிவோடு பயிற்றுவிப்பவராக இருக்க வேண்டும்
- குறைச்சொல்லுக்கு ஆளாகாதவராய் இருக்க வேண்டும்
- ஒரு மனைவியைக் கொண்டவராய் இருக்க வேண்டும்
- தாறுமாறாக வாழ்பவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டவர்களாக இருத்தல் கூடாது
- கட்டுக்கடங்காதவர்களாக இருக்கக்கூடாது
- அகந்தை இருத்தல் கூடாது
- முன்கோபம் இருத்தல் கூடாது
- குடிவெறி இருத்தல் கூடாது
- வன்முறை இருத்தல் கூடாது
- இழிவான ஊதியத்தின்மேல் ஆசை ஆகியவை அவர்களிடம் இருக்கக்கூடாது.
- விருந்தோம்பல் இருக்க வேண்டும்

- நன்மையில் நாட்டம் இருக்க வேண்டும்
- கட்டுப்பாடு இருக்க வேண்டும்
- நேர்மை இருக்க வேண்டும்
- அர்ப்பணம் இருக்க வேண்டும்
- தன்னடக்கம் இருக்க வேண்டும்
- தங்களுக்குக் கற்பிக்கப்பட்ட உண்மைச் செய்தியைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.
- நலந்தரும் போதனையை அறிவுறுத்தவும் எதிர்த்துப் பேசுவோரின் தவறை எடுத்துக் காட்டவும் வல்லவர்களாய் இருக்க வேண்டும்
- அனைத்து நற்செயல்களையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்
- எவரையும் பழித்துரைக்கலாகாது
- சண்டையிடலாகாது
- நிறைந்த பணிவுடன் பழக வேண்டும்

நிறைவாக

உண்மை, அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் அனைத்தையும் பண்பு நலனாகக் கொண்டிருந்தால்தான் எந்த ஒரு சமூகத்தாலும் அதன் இயல்பில் தொடர்ந்திருக்க இயலும். இப்பண்பு நலன்கள் இல்லையென்றால் அதன் இயல்பிலிருந்து மாற்றம் பெற்றுவிடும். இவ்வியல்பைத் தக்கவைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அரசுகளும், அதன் ஆட்சியாளர்களும் இவ்வியல்பைத் தக்கவைக்கும் பணியைச் செய்ய வேண்டும். இப்பண்பு நலன்களை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை நாம் நலமான சமூகம் என்று அழைப்போம். இதே சிந்தனையை இயேசுவின் போதனை மற்றும் பணியின் பின்னணியில் பார்க்கும்போது இறையாட்சி என்று அழைப்போம். நலமான சமூகத்தை உருவாக்குவதில் ஆட்சியாளர்களும், இறையாட்சியை உருவாக்குவதில் திருஆட்சியாளர்களும் முக்கியப் பங்காற்றுகிறார்கள். வேலியே பயிரை மேயும் அளவிற்கு இவ்விரு அமைப்புகளின் ஆட்சியாளர்களும் செயல்படுவதைத் தவிர்க்கப் பவுலடியார் ஆட்சியாளர்களுக்குத் தேவையான பண்பு நலன்களை, படைக்கலன்களை வரிசையாக

அடுக்குகிறார். மேலும் பணிவே துணிவாய் மாற வேண்டும் என்றும், பணியே ஆட்சியாய் அமைய வேண்டும் என்றும், வளர்ச்சியே அதிகாரமாய்ச் செயல்பட வேண்டும் என்றும், மலர வேண்டும் மக்களாட்சி என்றும் அறிவுறுத்துகிறார். பவுலடியாரின் இச்சிந்தனைகளை நலமான சமூகத்தை வழிநடத்தும் ஆட்சியாளர்களும், இறையாட்சியை வழிநடத்தும் திருஆட்சியாளர்களும் கடைபிடிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. எனவே நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் உண்மை யானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற் குரியவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துவோம் (பிலி 4:8) என்று இறைமக்கள் அனைவரையும் பார்த்து அறிவுறுத்துகிறார் பவுலடியார்.

ஊ. பவுலின் பார்வையில் திருமணமும் பாலுறவும்

திருத்தொண்டர் இலாரன்சு
இறையியல் நான்காமாண்டு
மதுரை உயர் மறைமாவட்டம்

முன்னுரை

திருமணம் "ஆயிரங்காலத்துப் பயிர்" என்று நம் முன்னோர் கூறினர். ஆம், மனித சந்ததியின் தோற்றத்திற்கும். வளர்ச்சிக்கும், மாண்புக்கும் தொன்றுதொட்டு ஆதாரப்புள்ளியாய்த் திகழ்வது திருமணம். இறைவனின் படைப்புச் செயலில் பங்காளியாவதற்கு வழங்கப்பட்ட அருட்கொடையாகிய பாலுறவைச் சரியான முறையில் பயன்படுத்தி, கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபையைத் தொடர்ந்து புத்துருவாக்கம் செய்யத் தம்பதியர் திருமணத்தின் வழியாக அழைப்புப் பெற்றுள்ளனர். எனவேதான் கிறிஸ்துவத் திருமணம் ஒப்பந்தமல்ல. மாறாக புதிய உடன்படிக்கை என அழைக்கப்படுகிறது. ஆனால் இன்று திருமணம் தன் மாண்பை இழந்து வருகிறது. மண முறிவு, கருத்தடை. கருக்கலைப்பு, திருமணமின்றிக் கூடி வாழுதல். திருமணத்திற்கு முன்பே உடலுறவு, திருமணத்திற்குப் புறம்பே பாலுறவு, விபச்சாரம், பலதார மணம், பிராமாணிக்கமற்ற தன்மை போன்றவை திருமணத்தின் புனிதத் தன்மையைக் கெடுத்துப் பாலுறவுச் சீர்கேட்டிற்கு இட்டுச் செல்கின்றன. இந்தச் சீர்கேடு கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபைக்கும் பங்கம் விளைவிக்கிறது. பவுல் தம் போதனைகள் மற்றும் நற்செய்திப் பணி வழியாக இத்தகைய பாலுறவு ஒழுக்கக்கேட்டைக் கண்டித்து, அற வாழ்வு பேணி கிறிஸ்தவ நம்பிக்கை சிறக்குமாறு வாழ அறிவுறுத்துகிறார். இதனை ஆய்வுப்பூர்வமாக, அவரது மடல்களை ஆராய்ந்து. இன்றைய நமது வாழ்வியலுக்கு வழிகாட்டியாக ஆக்கும் முயற்சியே இப்படைப்பு.

புறவினத்தாரின் திருத்தூதரான பவுல், உலக மக்கள் அனைவரின் வாழ்வுக்கும், வல்லமையையும், மகிழ்ச்சியையும் தரும் ஒப்பற்ற செல்வமாக இயேசுவின் நற்செய்தியை அறிவித்தவர். இயேசுவைப் பற்றிய இவரது சீரான, ஆழமான கருத்துக்கள் திருச்சபையின் அடிப்படை இறையியல் கோட்பாடுகளாக விளங்கின. இவர் தம் அரிய முயற்சியால் ஏற்படுத்திய பல்வேறு திருச்சபைகளுக்கு, அவ்வப்போது பல்வேறு மடல்களை எழுதி அவர்களின் அறநெறி விசுவாச வாழ்வை நெறிப்படுத்தினார். இதன்மூலம் கிறிஸ்தவ மறைபோதனைகளைக் கண்டிப்போடும் கரிசனையோடும் எடுத்தியம்பும் ஆசானாக அவர் திகழ்ந்தார். பல்வேறு தலத் திருச்சபைகளில் எழுந்த வாழ்வியல் பிரச்சனைகளுக்குப் பவுல் அளித்த அணுகுமுறையும், தீர்வும், அவரது மனப்பான்மையை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

எருசலேமில் புகழ்பெற்ற கமாலியேலிடம் யூத மறைக் கோட்பாட்டுப் பயிற்சி பெற்று அறிவில் சிறந்து விளங்கிய பவுல், அன்றையக் காலத் தத்துவங்களோடு தொடர் உரையாடலை ஏற்படுத்தி, அதற்குத் தக்க பதிலிருப்புச் செய்து வந்தவர். குறிப்பாகக் கிரேக்க நகரமான ஏதென்சில் வாழ்ந்த எப்பிக்கூரியர், ஸ்தோயிக்கர் ஆகிய தத்துவவியல் குழுக்களோடு அவர் தொடர் உரையாடல் நடத்தியதற்கான சான்று நமக்குள்ளது (திப 17:16-34). எப்பிக்கூரின் போதனையான, "இம்மையின் நோக்கம் இன்பமே, தீமை என்பது இல்லவே இல்லை. ஆதலால் தீமையிலிருந்து விடுதலை செய்யும் ஒரு மீட்பர் வேண்டாம்" என்பதையும், ஸ்தோயிக்கரின் போதனையான, "பகுத்தறிவில் நடப்பவனே உத்தமன், அவனைத் தேவனைப்போல் புகழ்ந்து கொள்ளலாம். அவனுக்கு மீட்பரே அவசியமில்லை" என்பதையும் எதிர்த்து உயிர்த்த இயேசுவைப் பற்றிப் போதித்து அறநெறி வாழ்வை முறையாக வாழத் தூண்டுகிறார்..

பவுல் தமது அறநெறிப் பார்வையை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கக் காரணம். அவர் நிறுவிய தலத் திருச்சபைகளில் மலிந்து போன அறநெறிச் சீர்கேடுகளேயாகும். கலாத்தியருக்கு எழுதிய திருமடலில், ஊனியல்பின் செயல்களான பரத்தமை, கெட்டநடத்தை, காமவெறி இவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாகப்

பெறுவதில்லை என்று எச்சரிக்கிறார். அவர்களை ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய் வாழ அறிவுறுத்துகிறார் (கலா 5:19-23).

அவ்வாறே, கொரிந்துத் திருச்சபையில் கூடா ஒழுக்கம் (1கொரி 5:10); கெட்ட நடத்தை (1கொரி 6:15); திருமணத்தோடு தொடர்புடைய பிரச்சனைகள் (1கொரி 7:10) போன்றவற்றிற்கு எதிராக, இயேசுவின் இறப்பு – உயிர்ப்பு மறைபொருளில் முகிழ்த்த மணத்துறவு பற்றிய தெளிவான பார்வையைத் தருகிறார். கொலோசையத் திருச்சபைக்கு எழுதிய மடலில் காமுகர்களும், விபச்சாரத்தில் ஈடுபடுவோரும் கடவுளின் கட்டளையைக் கடைபிடிப்பதில்லை. இவர்கள் கடவுளின் தீர்ப்புக்குள்ளாவார்கள் என்கிறார் (கொலோ 3:18-25). உரோமைத் திருச்சபைக்கு, "மனித உடல் மேன்மையானது. அந்த உடலும் கடவுளின் மீட்புக்கு உட்பட்டது" (உரோ 8:23) எனப் பவுல் விளக்குகிறார். இவ்வாறாக இவர்தம் தலத்திருச்சபைகளில் காணப்பட்ட முறைகளைச் சரி செய்யும் பொருட்டு அறிவுறுத்திய போதனைகளின் வழி, அவரின் பாலுறவு பற்றியக் கண்ணோட்டத்தை அறியலாம்.

பவுலின் பார்வையில் திருமணம்

பவுல், எல்லோரும் தன்னைப்போல் மணத்துறவு கொண்டு வாழ விரும்பினாலும், அதை மக்களிடம் திணிக்கவில்லை (1கொரி 7:7). அவர் திருமணத்தை இறைவன் தரும் அழைத்தலாக, அருங்கொடையாக, புனிதமானதாகப் பார்த்தார். ஏனெனில், இதுதான் அன்றைய யூதப் பண்பாடாக இருந்தது. திருமணத்தைப் புனிதமாகப் போற்றி மணவாழ்க்கை நெறியை யூதர்கள் பின்பற்றினர். இத்திருமணத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை உண்டு (1கொரி 7:7) எனவும், அவர்கள் திருமண உறவின் மூலம் கடவுளின் படைப்புச் செயலில் பங்கேற்கிறார்கள் எனவும் கூறுகிறார். திருமணத்தின் முறிவுபடாத்தன்மை மற்றும் ஒற்றுமையை நிலைநாட்டி (1கொரி 7:10) அதனை ஓர் அருளடையாளமாக, புனிதத்தின் ஊற்றாக முன் வைக்கிறார். இக்கண்ணோக்கில், திருச்சபைக்குக் கிறிஸ்து காட்டும் பிரமாணிக்கமான அன்பைப்போல, கணவன் - மனைவி தத்தம் அன்பைப் பரிமாறிக்கொள்ள வலியுறுத்துகிறார் (கொலோ 3:29). இந்த அன்பின் வெளிப்பாடாக நிகழ்வதே பாலுறவு எனப் (எபே 5:21-33) பவுல் கூறுகிறார்.

பாலுறவு பற்றிய பவுலின் அறநெறிக் கண்ணோக்கு

பவுல், "தன்னலமற்ற அன்பால் தன் மனைவியை ஆட்கொள்ளும் கணவன், தம் இயல்பான அன்பினால் பாலுணர்வில் மனைவிக்குத் தன்னைக் கையளிக்க வேண்டும்" எனத் தெளிவுபடுத்துகிறார் (எபே 5:21). இந்தப் பாலுறவில் நிகழ்ந்த முறைகேடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவற்றிலிருந்து விடுபட்டு நேரிய வாழ்வு வாழத் தூண்டுகிறார். இவற்றை அவரது மடல்களில் காணலாம்.

நெருங்கிய உறவுப் பாலுறவு

இரத்த உறவு அல்லது திருமணத்தால் நெருங்கிய உறவினராக இருப்பவரிடையே நடக்கும் உடலுறவே "நெருங்கிய பாலுறவு" என்பது. இவ்வகைப் பாலுறவு, பாசம் நிறைந்த குடும்ப உறவைக் காமம் கலந்து நச்சாக்குகிறது, கொச்சைப்படுத்துகிறது. கொரிந்துத் திருச்சபையில் ஒருவன் தன் தந்தையின் மறுமனைவியையே வைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு ஒழுக்கக்கேடு மலிந்திருந்தது. கிறிஸ்தவர்களும் இத்தகைய இழி செயலைத் தவிர்க்கவில்லை. எனவே, பவுல் அத்தகையச் செயலைச் செய்தவனைச் சபையிலிருந்தே நீக்குமாறு கட்டளையிடுகிறார் (1கொரி 5:1-10).

பரத்தமை

பணத்திற்காக உடலுறவில் ஈடுபடுவது பரத்தமை எனப்படுகிறது. இதை ஒரு தொழிலாகக் கொண்டிருப்பவரை பரத்தையர் என்பர். கொரிந்தில் உள்ள அப்ரோதித்துவின் கோவிலில் 1000 அடிமைகள் தேவதாசிகளாகப் பணி புரிந்தனர். இரவில் இவர்கள் விலைமாதுகளாக நகரில் வலம் வந்தனர். "கொரிந்துக்குச் செல்பவன், விலைமாதின் வீட்டுக்குச் செல்பவன்" என்ற கிரேக்கப் பழமொழி அதன் இழிவைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் பவுல், "உடல் பரத்தமைக்கு அல்ல. ஆண்டவருக்கே உரியது... கடவுள் உங்களை விலைகொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்" (1கொரி 16:20) என்கிறார்.

கூடா ஒழுக்கம்

திருமணம் முடிந்த ஒருவர் தம் கணவரோ அல்லது மனைவியோ அல்லாதவரோடு கொள்ளும் பாலுறவு - கூடா ஒழுக்கம் ஆகும். இது திருமண வாழ்வின் கற்பொழுக்கத்திற்கு எதிரானது. மணவாழ்வு மற்றும் குடும்ப வாழ்வின் சிறப்பை வேரறுப்பது. கூடா ஒழுக்கம் திருமண வாக்குறுதிக்கு எதிரானது. தாம்பத்திய ஒழுக்க நெறிக்கு எதிரானது. பவுலின் சிந்தனைப்படி திருமணத்தை அனைவரும் உயர்வாக மதிக்க வேண்டும். மணவறைப் படுக்கை மாசுபடாமல் இருக்க வேண்டும். காமுகரும் விபச்சாரத்தில் ஈடுபடுவோரும் கடவுளின் தீர்ப்புக்கு ஆளாக வாய்ப்புண்டு. கடவுளின் சினத்தையும் வரவழைக்க நேரிடும். இத்தகையோர் கிறிஸ்துவுக்கும், கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப்பேறு அடையார் (எபே 5:5). திருமண வாக்குறுதியை மீறுவது உண்மை, நீதி ஆகியவற்றிற் கெதிரான குற்றமாகிறது. திருமண அன்பிற்கு ஊறு விளைவிக்கிறது. தங்கள் பிள்ளைகளுக்கும், பிறருக்கும் தவறான முன்மாதிரியாகவும், இடறலாகவும் இருக்க நேரிடுகிறது.

ஓரினப் பாலுறவு

பாலியல்பு தன்னிலே ஈரினத்தன்மை கொண்டது என்பதே பொதுவான நடைமுறை (இலக்கணம்) வழக்கம். அதாவது, ஆண்-பெண் என்ற இருபாலரிடையே இருக்கும் ஈர்ப்பு, தேர்வு, மணம், தாம்பத்திய உறவுகள் என்ற வரிசையில் இயங்குவது. ஆயினும் ஆண் இன்னொரு ஆணிடமும், பெண் இன்னொரு பெண்ணிடமும் ஈர்ப்புக் கொள்வதும், பாலுறவில் ஈடுபடுவதும் தவறானது. ஓரினச் சேர்க்கை என்பது மனிதனின் வீழ்ச்சியால் ஏற்பட்டது. கடவுளுக்கு எதிராக மனிதன் செயல்பட்டதால் அவனின் மனித இயல்பு மறுக்கப்பட்டதற்கு அறிகுறியாக இது உள்ளது எனப் பவுல் கூறுகிறார் (உரோ 1:26). கிரேக்க மெய்யியல் சிந்தனைகளால் பாதிக்கப்பட்ட பவுல், "ஓரினச்சேர்கை என்பது மனிதத் தன்மைக்கும் ஆண்-பெண் பாலியல் உறவிற்கும் முரணானது. இத்தகையோருக்கு இறையாட்சியில் இடமில்லை" (1கொரி 6:9) எனக் கனமான குற்றமாக சுட்டிக்காட்டுவது பலரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்தாகும்.

பாலுணர்வைத் தூண்டும் அநாகரிகச் சொற்கள்

பேசுவது ஒரு சொல்லானாலும் கெட்ட அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருந்தால், நம் செயலும், அடக்கமுடைமையும் பாழ்படும். இன்று திரைப்படங்களிலும், கதைகளிலும், பாடல்களிலும் இரண்டு பொருள்பட சிலேடைகளில் பேசுவது பழக்கமாகிவிட்டது. இது பெண்மையை நுகரத் துடிக்கும் வக்கிரமுள்ள ஓர் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாகும். காமுகர்கள் அடக்கி வைக்கப்பட்ட தங்கள் பாலியல் அனுபவங்களில் இருந்து வெளிவர இவ்வாறு நடந்து கொள்கின்றனர். இதனையே, வெட்கங்கெட்ட மடத்தனமான பேச்சு, பகடி பண்ணுதல் ஆகியவை தகாதவை (எபே 5:4) என்று பவுல் எழுதுகிறார்.

பெண்ணைப் பாலுணர்வுப் பொருளாக நடத்துதல்

தெசலோனிக்கியருக்கு எழுதிய முதல் திருமுகம் இதனைக் குறிப்பிடுகிறது. தெசலோனிக்கர் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றிருந்தும் பிற இனத்தாரைப்போல திருமண வாழ்வில் ஈடுபட்டனர். அதில் தங்கள் மனைவியரைப் பாலுணர்வுப் பொருளாக நடத்தும் கட்டுங்கடங்காதப் பாலுணர்வுச் செயலைத் தவிர்த்து, தம் மனைவியைத் தூயாகக் கருதி, மதிப்புடன் நடத்த அறிந்திருக்க வேண்டும் என்று பவுல் எச்சரிக்கிறார் (1தெச 4:4). இவ்வாறு கடவுளின் குழந்தைகளைப்போல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, கட்டுக்கடங்காப் பாலுணர்வைக் கட்டுப்படுத்தித் தூயவராக வாழ அழைக்கிறார்.

மாந்தர் உடலின் மேன்மை

மனித உடல் மேன்மையானது. அந்த உடலும் கடவுளின் மீட்புக்கு உட்பட்டது (உரோ 8:23). திருமணத்தில் கணவன் - மனைவி இருவரும் ஒரே உடலாயிருப்பர். அதுவே பிரமாணிக்கம் நிறைந்த புனிதமான கற்பு வாழ்வு. அந்த கற்பு வாழ்வில் தவறிப் பரத்தமையில் ஈடுபடக் கூடாது. உடல் பரத்தமைக்கு அல்ல. ஆண்டவருக்கே உரியது (1கொரி 6:13). மனித உடல்கள் கடவுளின் ஆலயங்கள். கற்பு நெறி வாழ்வு வாழ்வதன் வழியாக மனிதர் தங்கள் உடலால் கடவுளை மகிமைப்படுத்தலாம் (1கொரி 6:15) எனப் பவுல் விளம்புகிறார்.

ஆய்வுப் பார்வை

அன்புறவை மையமாகக் கொண்டு வாழ்வில் உயர்ந்த பண்புகளுடன் வளரும் நோக்கில் செய்யும் பயணம்தான் இல்வாழ்க்கை. குடும்ப வாழ்வில் சிறிய பிணக்குகளால் பெரிய அன்பு ஒருபோதும் அழிந்துவிடுவது இல்லை. ஏற்ற இறக்கங்களில் தடுமாறலாம். ஆனால், வீழ்ந்து நிலைகுலையாமல் வெற்றிநடை போட முயல்வதே குடும்ப வாழ்வு. சரியான புரிதலின்மை போன்ற சூறாவளிகளால் வாழ்வின் அன்புச்சுடர் அணைந்து கொண்டிருக்கும் நேரத்தில் ஆணும் பெண்ணும் இருகரம் குவித்து அரவணைத்துக் காக்கும் வேள்விதான் குடும்ப வாழ்வு. இவற்றை வலுப்படுத்துவது முறையான பாலுறவு வாழ்வு. இதை வீழ்த்துவது முறைகேடான பாலுறவு வாழ்க்கை எனப் பவுல் கூறுகிறார். அக, பிராமாணிக்கமுள்ள, ஒருமனப்பட்ட அன்பின் அடிப்படையில் உருவான குடும்பங்களே இன்பமான, அமைதியான, நீதியான, ஒற்றுமையான புனித உறவின் அடித்தளங்கள் என்ற சிந்தனையே பவுலின் பார்வையில் இழையோடுகிறது.

பவுல் காட்டும் பாலுறவு அறநெறி

பாலியல் உணர்வு என்பது தம்மிலே தவறானது அன்று. மாறாக, இயற்கையானது மற்றும் புனிதமானது என்பது இன்று நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆண்-பெண் குறிப்பிட்ட பருவத்தில் ஒருவர் ஒருவரின் துணையை நாடுவதும், அரவணைப்பிற்காக ஏங்குவதும், மனித ஆளுமையின் அடிப்படைப் பண்பு.

தூய பவுலின் பார்வையில் பாலியல் செயலானது (பாலுறவு), மனிதத்தன்மையைவிட மேலான அர்த்தமுடையது. அதாவது இறைவனின் படைப்புச் செயலில் ஒன்றிணைவதாகும். ஆகவே, பாலியல் செயலைக் கிறிஸ்தவக் கண்ணோக்கில் அணுகும்போது விபச்சாரம் செய்யும் ஒருவனுக்குக் கிறிஸ்துவோடு ஒன்றிப்பு என்பது இயலாத ஒன்றாக மாறிவிடுகிறது. திருமணமான தம்பதியரின் பாலுறவு என்பது ஆழமான அன்புறவின் வெளிப்பாடாகும். இது உடல் உவகை என்பதைத் தாண்டி ஒருவரின் தான்மையின் வெளிப்பாடு எனவும் புரிந்து கொள்ளலாம். தம்பதியரின் பாலியல் உறவானது அவர்களின் நம்பகத்தன்மையையும், தனிப்பட்ட அன்பையும் வெளிப்படுத்த ஏதுவான ஒரு சாதனமாகும்.

இது இயேசு தனது திருச்சபையின்மேல் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் சின்னமாக உள்ளது.

பெண்ணைத் தொடாமல் இருப்பதே நல்லது (1கொரி 7:1) என்ற பவுலின் கருத்துக்கள் சற்று முரண்பட்ட சான்றாகத் தெரிகிறது. இதைச் சற்று விளக்கமாக ஆய்ந்தோமென்றால், கொரிந்து நகரில் அறநெறியானது மிகவும் மோசமான நிலையில் இருந்தபோது பவுல் இவ்வாறு கூறுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதாவது பெண்ணோடு உடலுறவு என்பதை அவர் பாவம் எனக் கூறவில்லை. மாறாக, உண்மைத் திருமண அன்புறவுக்கு எதிரான செயலைக் கடவுளின் அன்புக்கு எதிரான செயலாகக் குறிப்பிடுகிறார்.

உடல் என்பது இழிவானது என்ற கிரேக்கக் கருத்தியலிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று இன்று உடலுக்கென்று தனி மரியாதையும், மாண்பும் கிடைத்துள்ளது சிறப்பான அம்சமாகும். இயேசுவின் பிறப்பால், உயிர்ப்பால் மனித உடல் மகத்துவம் பெற்றது. இயேசுவின் தியாகத்தால் மீட்கப்பட்ட கிறிஸ்தவர் அவருக்குரியவரல்ல. மாறாக கிறிஸ்துவுக்குரியவர். கிறிஸ்து நமது உடலுக்கும் ஆண்டவர். நமது உடலானது உயிர்ப்பு மற்றும் மகிமை ஆகியவற்றிற்குரியது. ஆகவே, நமது உடல், கிறிஸ்துவின் உடலைப் பிரதிபலிக்கிறது. கிறிஸ்தவரின் உடலும், ஆன்மாவைப்போல் உயிர்பெற்று எழுவது. ஆகவே, கிறிஸ்தவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடும்போது தங்களின் இயல்பு மற்றும் இறுதி முடிவு ஆகிய தனித்தன்மைகளை இழக்கிறார்கள் (1கொரி 12:12).

கூடா ஒழுக்கம், நெருங்கிய உறவுப் பாலுறவு, திருமணத்திற்கு முன் உடலுறவு போன்ற பாவங்கள் ஒருவன் தனது உடலால் செய்யும் பாவமாகும். அது கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு எதிரான பாவமாகும். "நமது உடலானது தூய ஆவியின் ஆலயம்". ஆகவே தூய ஆவி என்பது கடவுளின் ஆவி. கடவுளே நம்முள் குடிகொண்டிருக்கிறார். ஆகையால், ஆண்டவரின் ஆவியோடு ஒன்றிணைந்துள்ளோம் என்பதை உணர்ந்து கடவுளின் மகிமைக்காகவே நமது உடலைப் பயன்படுத்தவேண்டும்.

நிறைவாக

மேலைநாட்டு எப்பிக்கூரியர் சிந்தனை இவ்வுலகு சார்ந்த இன்பங்களையும், இதமான வாழ்வையும் முன் வைத்தன. இவை பெரும்பாலும் மனித அறநெறி வாழ்வைச் சீரழித்து இழிவுக்கு இட்டுச்சென்றன. தொடர்ந்த காலசக்கரச் சூழ்நிலை மாற்றத்தில் பல்வேறு சிந்தனைகள் தோன்றின. இந்தியப் பெருநாட்டில் கூட கடந்த 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய ரஜினிஷ் சித்தாந்தம் பாலுறவின் சீர்கேட்டிற்கு வழிகோலியது. இன்றைய நுகர்வு மற்றும் அதிநவீன தகவல் தொடர்புக் கலாச்சாரத்தில் மனிதஉறவுகள் மதிப்பிழந்து போய்விட்டன. புனிதமான திருமண உடன்படிக்கை தம் நிலை இழந்து மீண்டும் ஒப்பந்த நிலைக்குச் செல்லும் அபாயம் உள்ளது. பாலியல் நெறிகேடுகள் அபரிமிதமாகப் பெருகி வருவது, அறவாழ்வின் அழிவினைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்நிலையில், காலம் கடந்து பொருள் தரும் வாழ்வளிக்கும் இறைவார்த்தைகள் நம்மை நேரிய வழியில் திசை திருப்பும் கருவியாகின்றன. இல்லறமாம் நல்லறம் தளைக்க, அதன் மாண்புகள் நீக்கப்பட நாம் பவுலின் போதனைகளை மீட்டெடுப்புச் செய்து, நம் காலத்திற்கு ஏற்பக் கருக்கொள்ள வேண்டும். இரு மனங்களின் இலட்சிய வாழ்வில் மலர்ந்து, ஒருமனப்பட்ட அன்புறவில் இணைப்புச் சங்கிலியாகி, அன்பு, அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமை மூலம் திருமணவாழ்வை வளர்ப்போம். இத்தகைய பக்குவப்பட்ட முதிர்ந்த திருமண அன்புறவில் சுயநலம் அழியும். பிறர்நலம் பெருகும். குடும்ப உணர்வு மிளிரும். இவ்வுறவானது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூலம் பிரமாணிக்கமான தாயாக வாழ்வில் தற்கையளிப்பு நிகழ்த்தும்போது, சந்தேக மனங்களும், தாறுமாறான வாழ்க்கை முறையும், நெறிகேடான ஒழுக்க முறையும் அகன்றுபோகும். இயேசுவின் மறையுடலின் உயிருள்ள உறுப்புகளாய், உயிருள்ள ஆலயங்களாய், திருமண உறவு மலர, பவுலின் பாதையில் / பார்வையில் பதம் பதிப்போம்.

எ. பல் கலாச்சாரச் சூழலில் பவுலின் அணுகுமுறை

திருத்தொண்டர் ஜேம்ஸ் தம்புராஜ்
இறையியல் நான்காமாண்டு
செங்கல்பட்டு மறைமாவட்டம்

முன்னுரை

பவுல் பல கலாச்சாரங்களின் சொந்தக்காரர். பல கலாச்சாரச் சூழலில் வளர்ந்தவர். ஓர் யூதனாகப் பிறந்து யூதச் சட்டங்களைத் துல்லியமாகச் செயல்முறைப்படுத்துபவராகவும், யூத சமயத்தின் மீது தீராப் பற்றுக் கொண்டவராகவும் வளர்ந்து காலமாற்றத்தால் ஒரு புறவினத்துத் திருத்தூதராக மாறியவர். கிரேக்கச் சிந்தனைகளின் ஊற்றாகத் திகழ்ந்த "தர்சு" நகரில் பிறந்து கிரேக்கத்தைக் கற்றவராக இருந்தாலும் இலத்தீன், எபிரேயம், அரமேயம் எனப் பண்மொழிப் புலமை பெற்றவராகவும், கல்வியில் சிறப்பும், தத்துவங்களின் ஆழமும் கொண்டவராகவும் விளங்கியவர். யூதச் சிந்தனை, கிரேக்கப் பண்பாடு, எபிரேய வழக்குகள் இவரின் இரத்த நாளங்களில் ஆறாகப் பாய்ந்து ஓடின. இதற்கு மத்தியில்தான் இவரின் மனமாற்றமும் நற்செய்திப் போதனையும் நடந்தது. இவர் இயேசுவோடு உடன் வாழவில்லை என்றாலும் தான் கற்றறிந்ததின் பின்னணியில் இருந்தும், தான் வளர்க்கப்பட்டதின் பின்னணியிலிருந்தும், தமஸ்கு வழியில் தான் பெற்ற இயேசு அனுபவத்தின் வாயிலாகவும் இயேசுவிடம் நேரடி அழைப்பைப் பெற்றவராகக் கிறிஸ்துவின் போதனைகளுக்கு விளக்கம் தந்தார். எனவேதான் அவரின் கடிதங்களில் பல்வேறு கலாச்சாரங்களின் சாயம் படிந்திருக்கின்றது. சில மரபுகளின் தத்துவங்கள், நம்பிக்கைகள் பிரதிபலிக்கின்றன. இவரின் இந்தப் பின்னணி புதிய நெறியாக இருந்த கிறிஸ்துவத்தை வளர்க்க, மக்கள் எளிமையாய்ப் புரிந்து கொள்ள உதவியது. பவுலின் இத்தகைய அணுகுமுறை இன்றைய இந்திய, தமிழகச் சூழலில் வாழும் நமக்கு ஓர் அழைப்பை விடுக்கின்றது. பல

இனம், மொழி, கலாச்சாரப் பிணைப்புகளோடு வாழும் நமக்கு ஒரு சவாலான அழைப்பாக இது இருக்கின்றது. பிற கலாச்சாரங்களில் இருக்கும் நன்மைக் கூறுகளை எடுத்துக் கையாளவும், பாராட்டவும், நாம் வாழுகின்ற சூழலுக்கேற்ப நற்செய்தியைப் போதிக்கவும் ஒரு உந்து சக்தியாகப் பவுலடியாரின் கடிதங்கள் நமக்கு இருக்கின்றன. இந்தியச் சூழலிலும், தமிழகக் கலாச்சாரப் பின்னணியிலும் இறை வார்த்தையை விளக்குவதும் புரிந்துகொள்வதும் பவுலின் இரண்டாயிரம் ஆண்டு யூபிலி கொண்டாடும் நமக்குச் சிறப்பானதாக இருக்கும்

யூதத்தை ஆட்கொண்ட கிரேக்கக் கலாச்சாரம்

பேரரசர் அலெக்ஸ்சாண்டர் மாபெரும் கிரேக்க நகரங்களைக் கட்டியெழுப்பிய சிறப்பிற்குறியவர். இவரின் இறப்பிற்குப் பின்பு கி.மு. 323-ல் பேரரசு இரண்டாகப் பிரிந்தது. எகிப்தை மையமாகக் கொண்டு தாலமியும், சிரியாவை மையமாகக் கொண்டு செலுக்கசும் ஆட்சி செய்து கிரேக்கக் கலாச்சாரத்தைப் பரப்பி வந்தனர். செலுக்கியரை எதிர்த்து மத்தத்தியாஸ் தலைமையில் கி.மு.167இல் ஒரு புரட்சி கிரேக்கப் பேரரசுக்கு எதிராக வெடித்தது. இது மக்கபேயருக்கு வெற்றியாய்ச் சாதகமாய் அமைந்தது. ஆயினும் இவர்கள் யூதக் கலாச்சாரத்தின் மீது ஆர்வம் காட்டாமல் கிரேக்கக் கலாச்சாரத்தின் பிடியிலே வாழ்ந்தார்கள் என்பது வெள்ளிடைமலை. இதற்கும் முன்னதாக சீராக்கின் மகன் ஏசு யூத மரபுகளையும் சட்டங்களையும் மக்கள் மறந்துவிடக்கூடாது என்பதற்காக யூதர்கள் வாழும் பகுதிகளில் கிரேக்கப் பள்ளிகளை நிறுவிப் பயிற்சி அளித்தார் (சீராக் 51:23-28). இப்படிபட்ட பள்ளிகள் பவுலின் காலத்திலும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதன் விளைவாக இவர் எழுதிய மடல்களில் கிரேக்கத் தாக்கம் அதிகமாக இருக்கின்றது. எபிரேயம் முதல் மொழியாகவும், கிரேக்கம் இரண்டாவது மொழியாகவும் பவுல் கற்றிருக்க வேண்டும். எழுபதின்மர் எழுதிய கிரேக்க நூலின் நடை, மேற்கோள்கள் பவுலிடம் இருக்கின்றன. கிரேக்க உரையாடல்கள் (Rhetoric) இவரது எழுத்துக்களில் பிரதிபளிப்பாதாக உள்ளது.

பரிசேய மரபு

பரிசேயன் என்றால் (One who cut off, set apart) 'பிரித்தெடுக்கப்பட்டவர்' என்பது பொருள். சதுசேயர், எசேனியர், சாமானிய

மக்கள் போன்றவர்களிடமிருந்து இவர்கள் மாறுபட்டு வாழ்ந்தவர்கள். இவர்கள் மோசேயின் சட்டங்களை ஆழமாகக் கற்றது மட்டுமல்ல அதை எல்லோரும் அணுபிசகாமல் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்திய வர்கள். இந்த மரபில்தான் பவுலடியாரும் வந்தார். எனவே தான் ஒரு பரிசேயனைப் போல சட்ட அறிவு பெற்றவராகத் தோராவை ஆழமாக அறிந்தவராகப் பவுல் இருந்தார். தான் ஒரு எபிரேயன் என்றார். இந்த மரபிலே அதிகப் பற்றுகொண்டு திருசட்டத்திற்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார்.

யூதப் பாரம்பரியம்

பழைய ஏற்பாட்டுப் பகுதியிலிருந்து பவுல் பலவற்றை மேற்கோள்களாகக் காட்டுகின்றார். யூத ராபிக்களின் எழுத்துக்களையும், கும்ரான் எழுத்துக்களையும் சில வேளைகளிலே பிரதிபலிக்கின்றார். ராபிகளைப்போல பழைய ஏற்பாட்டுப் பகுதிகளுக்குப் புதிய விளக்கங்களைத் தருகின்றார். பவுலடியார் தர்சு நகரில் பிறந்தவராக இருந்தாலும் எருசலேமில் வளர்ந்தவராகக் கமாலியேலின் கீழ் பயின்றவராகத் தன் மூதாதையரின் கலாச்சாரத்தை உள்வாங்கியவராக இருக்கிறார் (திப 22:3; 23:6; 26:4-5; பிலி 3:5).

கிரேக்க வார்த்தைகளின் பயன்பாடு

ஆண்டவர், இறைமகன், உடல், உடல் - ஆவி, மறைபொருள் (Lord, son of God, body, flesh and spirit, mystery) போன்ற கிரேக்க வார்தைகளை அப்படியே பவுல் பயன்படுத்துகின்றார். கிரேக்க ஞான ஒளிக் கொள்கையாளர்களின் (Hellenistic Gnostiticism) தாக்கம் நிறைந்தவராக ஆதாம் (Adom), மனிதன் (Man), மீட்பர் (the redeemer), கட்டுக்கதை (Myth), முன்பே இருந்தது (Pre-existence, instrumentality in creation) போன்றவற்றைக் கிரேக்கச் சிந்தனைகளில் கையாளுகிறார். பவுலின் கடிதங்களைப் படிக்கும் நாம் இன்று கிரேக்கக் கலாச்சாரச் சிந்தனை, இறையியல் போன்றவற்றை மறு ஆய்வு செய்து பார்க்க வேண்டியிருக்கின்றது.

இயேசு ஒரு நாடோடிப் போதகர். இவர் கொடுத்த எடுத்துக் காட்டுகள், உவமைகள் எல்லாம் விவசாயம் சார்ந்ததாகக் கிராமச் சூழலை விளக்குவதாக இருந்தன. நம் கிராமங்களில் பெரியவர்கள்

பயன்படுத்ததுகின்ற பழமொழிகள் விடுகதைகள் போன்றவை எளிமையாய் புரியக்கூடியவை. ஆனால் பவுலடியாரின் போதனைகள், எடுத்துக்காட்டுகள் நகரத்தை மையப்படுத்தியதாகக் கிரேக்கத்தை உள்வாங்கியதாக இருக்கின்றன.

1. பவுல் கிரேக்க அரசியல் சொல்லாடல்களைப் பயன்படுத்துகின்றார் (பிலி 2:16; 3:14; 1கொரி 9:24-27; 2கொரி 4:8-9).
2. கிரேக்க வியாபாரச் சொல்லாடல்கள் (பிலி 18; கொலோ 2:4).
3. கிரேக்க அடிமை விற்பனை (1கொரி 7:22; உரோ 7:14)
4. அரசர்களை மையப்படுத்திய விழாக்கள் (1தெச 2:19)

   விளையாட்டுக்கள், விழாக்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் போன்றவைகள் கிரேக்கக் கலாச்சாரத்தின் தாக்கமே
5. செபக்கூடம், தலைமைச் சங்கம் போன்றவற்றைக் குறிக்கப் பயன்படுத்தும் வார்த்தைகளும் கிரேக்க வார்த்தைகளே

எனவே கிரேக்கக் கலாச்சாரத் தாக்கம் யூதர்களை மட்டுமல்ல பவுலையும் வெகுவாகவே பாதித்திருக்கின்றது என்பதை அவரின் எழுத்துக்களே வெளிப்படுத்துகின்றன.

எழுபதின்மர் விவிலியம் கிரேக்க மொழியில் மொழி பெயாக்கப்பட்ட ஒன்று. இதையே பவுலும் தம் திருமுகங்களில் பயன்படுத்துகின்றார். கிபி முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிலோ என்னும் தத்துவவியலாரின் கிரேக்க, யூத இலக்கியத்தின் தாக்கங்கள் கூட பவுலடியாரின் எழுத்துக்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

பவுலின் பெயர்

பவுல் என்ற பெயர் 'Paulos' என்று கிரேக்கத்தில் கூறப்படுகிறது. இது இவரது குடும்பப் பெயர். பிறந்தது யூதராக இருந்தாலும் கிரேக்கப் பெயரையும் தாங்கியுள்ளார். இதையே இலத்தீனில் 'Paulus' என்று அழைக்கின்றனர். 'சிறிய' (small, little) என்று இப்பெயருக்குப் பொருள் கொள்ளலாம். பவுலின் மனமாற்றத்திற்குப் பின்பு அவர் மேற்கொள்ளும் சின்ன ஆசியா மறைபரப்புப் பணியின்போது இப்பெயரே இவருக்கு விளங்குகிறது. பாலஸ்தீனத்தைவிட்டு வெளியில் வாழ்ந்த ஒவ்வொரு

யூதனுக்கும் இரு பெயர்கள் இருந்ததாகத் திருச்சபைத் தந்தையர்களின் எழுத்துக்களில் படிக்கிறோம். பவுலைப் பொறுத்தமட்டில்,

1. செமித்திய மொழியில் (எபிரேயம்) சவுல் (Saul) என்றும்
2. கிரேக்க/ரோமானிய மொழியில் 'பவுல்' (Paulo) என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம்

பவுலின் கடிதங்களில் கிரேக்க மொழி

ஜான் சீஸ்லரின் கருத்துப்படி கிரேக்கக் கடிதங்கள் என்பது கடிதம் எழுதுபவரை நேரடியாகவே பிரசன்னப்படுத்துவது (substitute for personal presence). பவுலின் கடிதங்கள் என்பது மறைப்போதகப் பணியில் திருத்தூதரின் பிரசன்னத்தின் வெளிப்பாடு (substitute for authoritative apostolic presence) என்று சீஸ்லர் கூறுகிறார். மேலும் முறையான செய்தியைச் சொல்ல அனுப்பப்பட்ட ஆள் (emissary) என்றும் குறிப்பிடுகிறார். இதைத்தான் 1கொரி 4:14-21; 2கொரி 12:4-13; 13:1; 1தெச 2:17-3:5 ஆகிய மேற்கோள்கள் சுட்டிக்காட்டுகின்றன. கிரேக்கக் கடிதங்களின் பானியைத் தன்னுடைய கடிதத்திலும் பவுல் கையாளுகிறார். சின்ன ஆசியா, மாசிதோனியா, கிரேக்க நாடுகளில் பேசப்பட்ட மொழி கிரேக்கம். இப்பகுதிகளில் மக்கள் நம்பிக்கை, கலாச்சாரம், பண்பாடு இவைகளின் ஊற்றுக் கண்ணாய் இருந்து மக்களின் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாய் இருந்தது கிரேக்கமொழி. பவுலின் இரத்தத்தோடு கலந்து போயிருந்த கிரேக்கக் கலாச்சாரமும் யூதப் பண்பாடும் இவரது எழுத்துக்களில் வெளிபட்டிருக்கின்றன. இது ஒவ்வொரு கலாச்சாரத்திலும் வாழும் எழுத்தாளனுக்கும் நற்செய்திப் போதகனுக்கும் பொருந்தும். இன்று தம் நாட்டை விட்டு வெளியேறி அகதிகளாய் வாழும் மக்கள் தங்கள் நம்பிக்கையைப் பண்பாட்டை மறக்கவில்லையென்றாலும் தாங்கள் வாழுகின்ற வேற்றின நாட்டின் கலாச்சாரத் தாக்கத்தை நிறையவே தங்களின் எழுத்துக்களிலும் பண்பாடுகளிலும் சிந்தனைகளிலும் வெளிப்படுத்துகின்றனர். பவுலின் அணுகுமுறையிலும் இத்தகைய தாக்கங்கள் தவிர்க்கமுடியாதது.

பவுலின் மடல்களில் கிரேக்கச் சொல்வழக்குகள்

உலகம்

இவ்வுலகைத் தீயதாகப் பார்த்தனர் கிரேக்கர்கள். மேலும் இவ்வுலகைத் தீமையின் வடிவமாகவும், தீய சக்திகளின் இருப்பிடமாகவும்,

நிலையில்லாதது என்றும் கிரேக்கர்கள் எண்ணினர். இந்தக் கருத்தாக்கம் பவுலின் எழுத்துக்களிலும் வெளிப்படுகின்றது. இந்தத் தீமையான உலகினின்று விடுதலையளிப்பவர் கிறிஸ்துவே என்பதையும் இக்கருத்தாகத்தின் முத்தாய்பாய்ப் பவுல் முன்னிலைப்படுத்துகின்றார். மேலும் கிரேக்கக் கலாச்சாரத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் ஆன்மா, மேலுலகு, விடுதலை போன்ற சொற்களையும் பவுல் அதிகம் தன் எழுத்துக்களில் பயன்படுத்துகிறார்.

பாவம் (ஹமார்தியா) என்னும் சொல் வழக்கும் பலமுறை பவுலின் திருமுகங்களில் ஒருமையிலும் பண்மையிலுமாக பயன் படுத்தப்பட்டுள்ளது: உ.ம். ஹமார்தோமாத்தேன் - பாவத்தின் செயல் (உரோ 3:25); பாராப்தோமாத்தா - பாவத்தில் வீழ்வது (உரோ 4:25).

கடவுளை மறந்து வாழ்வது, கடவுளின் திருச்சட்டத்தை மீறுவது, பாவச் செயல்பாடுகளில் ஈடுபடுவது எனப் பல்வேறு சிந்தனைகளில் பவுல் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றார். கடவுளின் அன்பிலிருந்து, உடன்படிக்கையிலிருந்து விலகிச் செல்லும் நிலையை இச்சொல் குறிக்கிறது.

உடல் - ஆன்மா

கிரேக்கச் சமூகம் மனிதனை உடல் - ஆன்மா எனப் பிரித்துப் பார்க்கும்போது யூதச் சமூகம் மனிதனை முழுமையாகப் பார்க்கின்றது. உடலின் உயிர்ப்பின் மீது அல்ல ஆன்மாவின் உயிர்ப்பின் மீதுதான் கிரேக்கர்களுக்கு நம்பிக்கை உண்டு. உடல் அழிவுக்குரியது. ஆன்மாவை அடக்கிவைத்திருக்கும் கூடு அது. அதினின்று ஆன்மா விடுபடுதலே விடுதலை. இந்தப் போராட்டத்தின் உச்சமாகத்தான் ஆன்மா அழியாமையைப் பெறுகிறது. இன்பம் - துன்பம் இவைகளைக் கடந்து ஆன்மா நிற்கின்றது. ஆனால் உடலின் நிலையோ வேறு. அழிவுக்குறிய ஒரு பொருள் அழியா நிலையை எவ்வாறு அடைய முடியும்? தீயதாகக் (Evil) கருதப்பட்ட உடல் புனிதத்தை எப்படி அடைய முடியும்? என்பது கிரேக்கர்களின் கேள்விகள். இருப்பினும் பவுலின் அணுகுமுறை முழுமையான அணுகுமுறையாக இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் பெற்றதாக இருக்கின்றது. உடலைப் போற்றுவதாக மேன்மைபடுத்துவதாக இருக்கின்றது.

சிலுவை

கிரேக்கர்களுக்குச் சிலுவை என்பது மடமையாகக் கருதப்பட்ட ஒன்று. ஆனால் பவுலின் அணுகுமுறை மாறுபட்டதாக இருக்கின்றது. மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கபட்டோர் (கலா 3:13). இதிலும் பவுலின் பார்வை வித்தியாசமானதாக இருகின்றது. "நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை அன்றி வேறெதைப் பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன்" (கலா 6:14) என்று பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். சிலுவை (துன்பம்) நம் அன்றாட வாழ்வின் அனுபவம் என்கிறார். "நான் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். வாழ்வது நானல்ல; என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்" என்கிறார். சிலுவை அனுபவங்கள் இவரைச் செதுக்கியிருக்கிறது. தன்னுடைய போதனையின் தொடக்கம் வேறெதுவாக இருந்தாலும் முடிவு என்பது சிலுவையை மையப படுத்தியதாக நிறைவு செய்வதாக எண்ணுகிறார். இவரின் துன்பங்களைச் சிலுவையின் ஒளியில் பட்டியலிட்டுக் காட்டுகின்றார் (2கொரி 11:23). எனவேப் பவுலைப் பொறுத்தவரைச் சிலுவை அனுபவம் இயேசுவின் சீடரின் தனி வாழ்வின் அனுபவம். சிறந்த சீடரின் அடையாளம். தான் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தின் வெளிப்பாடு. சிலுவையைப் பற்றி மட்டும் பேசினால் போதாது. மாறாக இயேசுவின் சிலுவைப்பாடுகளில் பங்கேற்கவும் தயாராக இருக்க வேண்டும் என்பது இவரது வாழ்வு எண்பிக்கும் பாடமாக இருக்கிறது. கிரேக்கர்கள் ஞானத்தைத் தேட பவுலோ மடமை எனக் கருதிய சிலுவையைக் குறித்துப் பெருமைப் பாராட்டுகின்றார். இது பவுலின் தனிப்பட்ட அனுபவம்.

அரசர்

அரசர்களை ஆண்டவராகப் பார்ப்பது கிரேக்கக் கலாச்சாரம். ஆனால் இதில் பவுலின் பார்வை சற்று மாறுபட்டதாக உள்ளது. இவர் இயேசுவை அரசர்களுக்கெல்லாம் அரசராக, உலக அரசராக, அனைத்தையும் தருபவராக, விடுதலை அளிப்பவராகக் (2திமொ 4:17-18) காட்டுகின்றார்.

அடிமை

ஓர் அடிமை தன்னை மீட்டுக்கொள்ள தனக்கு இணையான பணத்தை ஆலயத்திற்கு வழங்கித் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதே வேளையில் ஓர் அடிமை உரிமைக் குடிமகனாக மாற தன்னுடைய தலைவனுக்குப் பணம் கொடுத்து மாறவேண்டியுள்ளது.

இதனையே பவுல் தன்னுடைய கடிதத்தில் "நீங்கள் விலை கொடுத்து வாங்க பெற்றீர்கள்" (1கொரி 7:22) என்று கூறுகிறார்.

முடிவுரை

பவுலின் பல கலாச்சாரப் பின்னணி நற்செய்தியை விளக்கமாக விரிவாகப் புறவினத்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல, விளக்கம் அளிக்க ஓர் வாய்க்காலாக அமைந்தது. கேட்போர் எளிமையாகப் புரியும் வண்ணம் புறவினத்தாரின் கலாச்சாரச் சூழலுக்கேற்ப அமைந்தது. எனவே புறவினத்தாரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர பவுல் வலுவற்றவருக்கு வலுவற்றவரானார். ஒரு சிலரையேனும் மீட்க எல்லாருக்கும் எல்லாமானார். கிறிஸ்துவைச் சந்திப்பதற்கு முன்பாகத் தன் கலாச்சாரத்தைப் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தவர் கிறிஸ்துவைச் சந்தித்த பின்பாக அவரது நற்செய்தியை ஊர் ஊராக எடுத்துச்சென்றதின் சூழலில் "கிறிஸ்துவே நான் பெரும் ஒப்பற்ற செல்வம். இந்த ஒப்பற்ற செல்வத்தை அடைய மற்ற அனைத்தையும் குப்பை எனக் கருதுகிறேன்" என்கிறார். ஏனெனில் பண்பாடுகளைக் கடந்து சமயத்தைக் கடந்து சாதிகளைக் கடந்து போதிக்கப்படவேண்டியவர் இயேசு என்பதை இவரது வாழ்வு நமக்கு எடுத்துச்சொல்கிறது. பிற தெய்வ வழிபாடுகளால் சிலைவழிபாடுகளால் தாக்கத்துக்கு உட்பட்ட கிறிஸ்துவச் சபைகளுக்கு அவர்களின் பின்னணியிலிருந்தே விளக்கம் அளிக்கிறார். கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு விளக்கம் அளிக்கப் பல்வேறு கலாச்சாரங்களில் இருந்த நல்ல கோட்பாடுகளை எடுத்துத் தம் திருமுகங்களில் கையாளுகிறார். எப்படியிருப்பினும் இந்தியா போன்ற பல கலாச்சாரப் பின்னணிகளைக் கொண்ட நாடுகளுக்குப் பவுலின் அணுகுமுறை நல்ல பாடமாக அமையும். இன்று ஒடுக்கபட்டோர், மலைவாழ் மக்கள் எனப் பல இனக்குழுக்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல பல்வேறு கலாச்சாரங்களின் பின்புலம் நமக்கு வேண்டியிருக்கிறது. பவுலைப்போல நற்செய்தியின் தூதுவராக மாறவேண்டுமெனில் பல்வேறு கலாச்சாரங்களைப் பல மொழிகளைப் பல இனக்குழுக்களின் சாரத்தை அறிந்து கொண்டால் பவுலைப் போல எல்லாமாய்ப் பல கலாச்சாரப் பின்னணியில் நற்செய்தியை எடுத்துரைக்க முடியும். இதுவே இன்றைய தேவையாகவும் இருக்கின்றது.

ஏ. பவுலின் நற்செய்திப் பணியும் இன்றைய நற்செய்திப் பணியும்

திருத்தொண்டர் பீட்டர் பாஸ்டியான்
இறையியல் மூன்றாமாண்டு
தூத்துக்குடி மறைமாவட்டம்

முன்னுரை

"ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்ற இயேசுவின் கேள்விக்குப் பதில்மொழி தான் சவுலின் மனமாற்றம். எந்த அளவுக்குக் கிறிஸ்தவர்களைப் பவுல் துன்புறுத்தினாரோ அதற்குப் பல மடங்கு அதிகமாகக் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்திப் பாருலகெங்கும் பரவச் செய்தது அவரது மனமாற்றம். அதற்காகவே அவர் இரத்த சாட்சியானார்.

பவுலின் மனமாற்றமும் அவரது நற்செய்திப் பணியும் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சவாலாகவே உள்ளது. ஏறக்குறைய அவருக்குக் கிடைத்த அதே அனுபவத்தைத்தான் இன்று ஒரிசாவிலும் மற்றும் இந்தியாவில் பல பகுதிகளிலும் கிறிஸ்துவை அறிவிக்கும் பணியாளர்கள் அனுபவிக்கிறார்கள்.

இந்தக் கட்டுரையானது பவுலின் நற்செய்திப் பணியின் ஒளியில் நமது நற்செய்திப் பணியை ஆய்வுக்குட்படுத்த விளைகின்றது. நுழைவோம் ஆய்வுக்கூடத்திற்குள்.

1. யார் இந்தப் பவுல்?

பவுல் பிறந்த ஆண்டு தோராயமாக கி.பி. 6–10. இவர் சிலிசியாவிலுள்ள தர்சு என்ற நகரில் பிறந்தார். இவர் நற்செய்திப் பணியாற்றியது சிரியா, சின்ன ஆசியா, மாசிதோனியா மற்றும் கிரேக்க நாட்டுப் பகுதிகளாகும். ஏறக்குறைய தனது 25வயதில் இவர் நற்செய்தித் தூதுரைப் பணியை ஆரம்பித்திருக்க வேண்டும். இவர் அறுபது வயதைத் தாண்டி வாழ்ந்திருக்க வேண்டும்.

உரோமைக் குடிமகன் என்ற உரிமையையும் பவுல் பெற்றிருந்தார். எருசலேமில் சில காலம் வாழ்ந்தார். அந்நாளில் யூத மறை தத்துவத்தைப் போதிப்பதில் தலைசிறந்த ஆசிரியரான கமாலியேலிடம் யூதச் சமய நெறிகளைக் கற்றுத் தேர்ந்தார் (திப 22:3). எவராவது யூத இனத்திற்கும், யூதச் சமயத்திற்கும் புறம்பாகப் பேசினாலோ செயல்பட்டாலோ அவர்களை அழிக்க முன்வந்தார். அவரைப் போலவே அன்று பலர் யூத மறைப் பற்றாளர்களாக இருந்தனர்.

பவுல் பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவராக இல்லாமல் இருந்தாலும் கூட, ஏனைய திருத்தூதரை விட மிகவும் அதிகமாகவே கிறிஸ்துவை அறிவித்தார் என்றால் அது மிகையாகாது. இவர் கிறிஸ்தவத்தின் முதல் இறையியலார். திருச்சபைக்கு, இயேசு கிறிஸ்துவைத் தலைவரென்றும், இறைமக்களை உடல் என்றும் கூறிய இறையியலார். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் ஒவ்வொருவருமே கிறிஸ்துவின் பணியைச் செய்ய அழைக்கப் பெற்றவர்கள் என்பதைச் சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் வாழ்ந்து காட்டியவர்.

பவுல் ஒரு சகாப்தம். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். தம் காலத்தில் பல இல்லத் திருச்சபையையும் சிறுசிறு நம்பிக்கைச் சமூகங்களையும் கட்டி எழுப்பினார்.

2. பவுலின் இறை அழைப்பு

தாயின் கருவிலே புறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கும் பணிக்காகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாகப் பவுல் கூறினாலும் யூத நெறியிலே பற்றுக் கொண்டு அவர் கிறிஸ்தவத்தை ஆரம்பத்திலே எதிர்த்தவர்.

தமஸ்கு வழியில் உயிர்த்த இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டுத் தனது சீடத்துவத்தை அறிக்கையிட்டு இருபத்துமூன்று ஆண்டுகள் தனது நற்செய்தி அறிவிப்புப்பணியில் ஈடுபட்டுப் பல எதிர்ப்புகளையும் தோல்விகளையும் சந்தித்தவர்.

ஏறக்குறைய தனது 28ஆவது வயதில் பர்னபாவால் திருத்தூதுப் பணிக்கு அறிமுகப்படுத்தப்பட்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை முழுமூச்சோடு அறிவித்தவர். இவர் புறவினத்தாரின் திருத்தூதர் எனவும் அழைக்கப்படுகிறார்.

பெந்தகோஸ்து நாளுக்குப்பின் இயேசுவின் புதிய நெறியானது யூதமக்கள் மத்தியில் பரவியபோது யூதர்கள் முதலில் எதிர்த்தனர். சவுலும் எதிர்ப்பாளர்களுடன் கரம்கோர்த்து ஸ்தேவானின் சாவில் மிக முக்கிய பொறுப்பேற்றிருந்தார். இந்த ஸ்தேவானே திருச்சபையின் முதல் மறைசாட்சி (திப 8:1). ஸ்தேவானின் மரணத்துக்குப்பின் பவுலின் யூதச் சமயவெறி அதிகரித்தது. கிறிஸ்தவர்களைச் சாகும் அளவுக்குத் துன்புறுத்தினார். பவுல் கிறிஸ்தவர்களைக் கட்டி இழுத்து வெட்டிச் சாய்த்தபோதும் அவர்கள் மனம் தளரவில்லை. மதவெறியின் உச்சகட்டமாக பவுல் தமஸ்கு சென்றபோது கிறிஸ்து ஆண்டவர் அவரை ஆட்கொண்டார் (திப பிரிவு 9).

இயேசு எருசலேமில் பணியாற்றிய போது சவுலும் எருசலேமில் வாழ்ந்தரா என்பது கேள்விக்குறி. எப்படியானாலும் ஆரம்பத்தில் இயேசுவைப் பற்றி அறிய சவுல் அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்றே தெரிகிறது. மேலும் சிலுவையில் இறந்த இயேசுவைப் பறைசாற்ற முயன்றவர்களையும், அவரை ஏற்றுக்கொண்டவர்களையும் அவர் துன்புறுத்த முயன்றார். ஆனால், அவர் இயேசு கிறிஸ்துவால் தடுத்தாட்கொள்ளப்பட்டபோது, இயேசு கிறிஸ்துவை உயிர் உள்ளவராகக் கண்டார். பேசுகிற நீர் யார் என்று கேட்டார். "நீ துன்புறுத்தும் இயேசு நானே" என்ற பதில் அவருக்குக் கிடைத்தது. இறந்துபோன இயேசு இன்றும் உயிர் வாழ்கிறாரா என்று சவுல் திகைப்புக்குள்ளானார்.

மதவெறி என்னும் குருட்டுதன்மையால் குருடாகிப்போன அவர் இயேசுவால் தடுத்தாட்கொள்ளப்பட்டபோது உண்மையிலேயே கண் பார்வை இழந்து குருடானார். கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் மீது தாம் கொண்ட விசுவாசத்தில் உறுதியாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். உயிர்த்த கிறிஸ்துவுக்காகத்தான் கிறிஸ்தவர்கள் தம் வாழ்வை அர்ப்பணிக்கின்றனர் என்பதை நம்பினார். மூன்று நாட்கள் உண்ணா நோன்பிருந்து செபித்தார். அப்போது கிறிஸ்தவர்களைத் தான் படுத்தியபாட்டையும் அவர்களது உறுதியையும் நினைத்துப் பார்த்தார். உயிர்ப்பில்தான் உண்மையான ஆற்றல் உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டார். "நீ துன்புறுத்தும் கிறிஸ்து நான்தான்" என்று கூறிய இயேசு கிறிஸ்துவோடும் மற்றும் கிறிஸ்தவர்களோடும் தம்மையே

ஐக்கியப்படுத்திக் கொண்டார். அதன்பிறகு அனனியாவிடம் திருமுழுக்குப் பெற்றபோது கண் பார்வையும் பெற்றார்.

3. பவுலின் ஆன்மீகம்

பவுலின் ஆன்மீகம் முழு மனித விடுதலையை மையமாகக் கொண்டது. கிறிஸ்துவின் விழுமியங்கள் அனைத்தையும் தன்னுள் கொண்டது.

பவுல் உருவாக்கிய சிறு சிறு திருச்சபைகள் இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளில் வேரூன்றியவை. ஆண்டவரின் ஆவியாரின் வழி நடத்தலில் வாழும் வாழ்வுதான் பவுல் காட்டிய ஆன்மீகம்.

பவுல் தூய ஆவியில் வாழ்ந்ததை இன்றைய ஆன்மீக வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். எனவேதான், "கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல" (உரோ 8:9) என்றும், "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்" (உரோ 8:14) என்றும், "கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையைப் பெற்றுக்கொண்டீர்கள். அதனால் நாம் 'அப்பா, தந்தையே' என அழைக்கிறோம்" (உரோ 8:15) என்றும் பவுல் வலியுறுத்திக் கூற முடிந்தது.

4. பவுலின் நற்செய்தி அறிவிப்புப்பணி

4.1 ஆண்டவரின் திருவிருந்து: சமத்துவ விருந்து

பவுல் ஆண்டவரின் திருவிருந்தைச் சமத்துவ விருந்தாகப் பார்க்கிறார். ஆண்டவரின் திருவிருந்திற்குக் கூடி வரும்போது பிளவுகள் இருக்கக்கூடாது என்கிறார் (1 கொரி 11:18). ஆண்டவரின் திருவிருந்து பகிர்ந்துவாழ அழைப்புவிடுக்கிறது என்கிறார் (1 கொரி 11:21).

எவராவது தகுதியற்ற நிலையில் ஆண்டவரின் உடலை உண்டாலோ அல்லது அவரது இரத்தத்தைப் பருகினாலோ, அவர் ஆண்டவரின் உடலுக்கும், இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார் (1 கொரி 11:27). எனவே ஒவ்வொருவரும் ஏற்றத்-தாழ்வு பாராட்டாமல், ஏழை-பணக்காரர் என்ற பாகுபாடு காட்டாமல் சமத்துவ விருந்து உட்கொள்ள வேண்டுமென அழைப்பு விடுக்கிறார்.

4.2 சிலுவையைப் பற்றிய போதனை

பவுல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை எங்கும் பறைசாற்றினார் (1 கொரி 1:23). நாம் நம்முடைய நற்செயல்களின் அடிப்படையில் கடவுளுக்கு ஏற்புடையவராவதில்லை. மாறாக, கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கையால் ஏற்புடையவராகிறோம் என்பது பவுலின் சிலுவையைப் பற்றிய நற்செய்திப் போதனையாகும்.

"நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு" (1கொரி 9:16) என்ற தெளிவைப் பவுல் கொண்டிருந்தார். இந்தத் தெளிவுதான் அக்கால உரோமைப் பேரரசின் நகரங்கள் பலவற்றிற்குச் சென்று நற்செய்தியை அறிவிக்கவும் திருச்சபையை நம்பிக்கையில் உறுதிப்படுத்தவும் உருவாக்கவும் பவுலைத் தூண்டியது. கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்வதையும் பவுல் ஒரு நற்செய்திப் பணியாகவே கொண்டிருந்தார். கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார் என்பது பவுலின் ஆழமான நம்பிக்கையாகும். பிரச்சனைகள் நிறைந்த கொரிந்து திருச்சபைக்குக் கடிதம் எழுதும் போதும் கூட "நான் உங்களிடையே இருந்தபோது மெசியாவாகிய இயேசுவைத் தவிர அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, வேறு எதையும் அறிய வேண்டும் என்று நினைக்கவில்லை" (1கொரி 2:2) என்று சிலுவையை உதாரணம் கூறுகிறார் பவுல். எந்தச் சூழலிலும் இந்த மையச் செய்தியைவிட்டுத் திருத்தூதர் பவுல் தடம் புரண்டதில்லை.

4.3 பிற சமயத்தினரிடையே பவுலின் நற்செய்திப்பணி

பவுல் பிற சமயங்களை மதித்த ஒரு பண்பாளர், மாபெரும் சாதனைச் சகாப்தம் (திப 17:16-34). மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அன்றே செயல்பட்டவர் (திப 19:11-40). அடிமைகளுக்கு உரிமை வாழ்வு வழங்கிய சீர்திருத்தவாதி (பில 1:1-25). திருச்சபையின் வாழ்வில் பலரோடு இணைந்து பணியாற்றிய சிறந்த தலைமைப் பண்பு கொண்டவர் (உரோ 16:1-24).

4.4 இயேசுவுக்காகத் துன்புறும் பவுல்

இயேசுவுக்காக இறப்பதற்கும்கூட தயாராக இருக்கும் தமக்குச் சங்கிலிகளும், சிறைச்சாலைகளும் துன்பங்களும் ஒரு பொருட்டு அல்ல என்று அவர் கருதினார். இறை அழைப்பைப் பெற்ற பொழுதே பவுல் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியத் தொலை நோக்குப் பார்வை அவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. அந்த இறைவாக்கில் எதிர்காலத்தில் பவுல் துன்புற வேண்டும் என்று முன்னுரைக்கப்பட்டது (திப 9:15,16). எருசலேமுக்குச் சென்றால் தாம் கைது செய்யப்படக்கூடும் என்பதை இறைவாக்காக முன்னறிந்திருந்தும் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக எருசலேமுக்குத் துணிவுடன் பயணம் மேற்கொள்கிறார். இயேசுவின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்காகத் தன் உயிரையே கொடுக்கும் அளவுக்கு பவுல் வாழ்ந்தார்.

நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே என்று அவரால் பிலிப்பியருக்கு எழுத முடிந்தது என்றால் (பிலி 1:21-21), அந்தக் கிறிஸ்துவை அவர் மற்றவர்க்கு எடுத்துரைக்குமுன் தான் அக்கிறிஸ்துவோடு எப்படி ஒன்றித்திருந்தார் என்பதை அது சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பற்றிய போதனைதான் அன்றைய திருச்சபையின் முதன்மையான போதனையாக அமைந்தது.

"கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காகத் தொடர்ந்து ஓடுகிறேன்" என்று ஆரம்பத்தில் கூறியவர் (பிலி 3:12) "என் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று தனது வாழ்வின் இறுதியில் கூறுகிறார் (2திமொ 4:7). இந்த வார்த்தைகளில் அவரது சொந்த ஆன்மீக வளர்ச்சியும், அவரது ஆன்மீக வாழ்வும் தெளிவாகிறது.

நற்செய்திப் பணியாளராக ஒருவர் அழைக்கப்படும்போது அந்த நற்செய்திக்கு உரியவராக அவர் மாற வேண்டும். அப்போதுதான் அவரது பணிகள் சிறக்கும் என்பதற்குப் பவுல் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

4.5 எழுத்தின் மூலமாக நற்செய்தி அறிவிப்புப் பணி

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைக்கத் தனது வாழ்வையே நற்செய்திப் பாடமாக்கியவர் பவுல். பயணங்கள் பல செய்து,

தழும்புகள் பல ஏற்று அதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவின்பால் ஒன்று சேர்த்தார் (கலா 6:17). தனது எழுத்துக்களால் பல்லாயிரக்கணக்கான மக்களை இயேசுவின் சீடர்களாகக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக உருவாக்கி வருகிறார். மக்களின் தேவைகளை உணர்ந்து அந்தந்தச் சமூகத்தின் சூழலுக்கு ஏற்பத் தலத் திருச்சபைகளில் நிலவிய குழப்பங்களை களையவும், அவர்களை உண்மைக் கிறிஸ்தவர்களாக உருவாக்கவும் கி.பி. 51 முதல் கி.பி. 64 வரையில் பதிமூன்று மடல்களை எழுதியுள்ளார்.

பவுல் தாம் சந்தித்த மக்களுக்கு ஒரு நல்ல ஆசானாகவும், நற்செய்தியாளராகவும், செயல் வீரராகவும், பாசமுள்ள தந்தையாகவும், ஏற்றுக்கொள்ளும் சகோதரனாகவும், அன்பு செய்யும் நண்பனாகவும் திகழ்ந்தார் என்பது மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் மேலாக, ஓர் ஆன்மீக வாதியாகத் திகழ்ந்து, மனிதரை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் இணைப்பாளராகச் செயல்பட்டார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. திருமுழுக்கின் வழியாக நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ள கடமை: கிறிஸ்து என்னும் நற்செய்தியை அடுத்தவருக்கு அறிவிப்பது; இம்மேலான கடமையை நாம் பவுலின் பாதையில் செய்திட முற்படுவது; நற்செய்தியாளர்களாக மாறுவது.

5. பவுலும் **உடன்-பணியாளர்களும்**

“இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் அன்பே” அவரது கருச்செய்தி. இயேசு கிறிஸ்து ஆண்டவரே பவுலின் சொல்லுக்கும், செயலுக்கும் உயிர்மூச்சாய் இருந்தார் (1 கொரி 3:21-22; 2 கொரி 5:14; கலா 2:2; 5:6; பிலி 1:18).

பவுல் மூலம் இயேசு கிறிஸ்துவை அறிந்தவர்கள், இயேசு கிறிஸ்துவின் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார் (பிலி 1:27). தூய ஆவியாரின் தூண்டுதலுக்கேற்ப நாம் வாழ்ந்தால் (கலா 5:16) அது சாத்தியமாகும்.

தமது தூதுரைப் பணியில் பேதுரு, யாக்கோபு போன்ற தலைமைத் திருத்தூதர்களுடனும் ஏனைய திருத்தூதர்களுடனும் நல்லுறவில் நிலைத்திருந்தார் (திப 15; 21:17).

திருத்தொண்டர்களான பர்னபா (திப 9:27), எரஸ்து (திப 9:22), பிலிப்பு (திப 21:8), பெயிபா (உரோ 16:3) போன்றவர்களுடன் பவுலடியாருக்கு அதிகத் தொடர்பு இருந்தது.

பவுலுடன் பெண் சீடர்களும் இணைந்து நற்செய்திப் பணியாற்றினர். குறிப்பாக, பிரிஸ்கிலா போன்றோர்.

தம் முயற்சியால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுடன் தனிப்பட்ட தொடர்பு கொண்டிருந்தார். அவர்களது வாழ்க்கைச் சூழல் மற்றும் நிறை, குறைகளை நன்கு அறிந்திருந்தார். வாழ்க்கையில் எதார்த்தங்களோடு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைத் தொடர்புபடுத்திப் படிப்பினைகள் பல தந்தார் (1கொரி பிரிவுகள் 5–6).

இவ்வாறு பவுல் இன்றைய இயேவின் நற்செய்திப் பணியாளர்கள் எவ்வாறு ஒற்றுமையோடும் நட்புறவோடும் வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணமாய்த் திகழ்கின்றார்.

6. பவுலின் தூதுரைப் பயணங்கள்

6.1 முதல் தூதுரைப் பயணம் (கி.பி. 46-49)

சிரியா நாட்டு அந்தியோக்கியா, சைப்ரஸ், பம்பிலியாவிலுள்ள பெருகை, பிசிதியா நாட்டு அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை ஆகிய நகர்களுக்குத் தூதுரைப் பயணம் மேற்கொண்டார்.

இந்தத் தூதுரைப் பயணத்தில் யூதக் குழுக்கள் பவுலைக் கொல்லத் தேடியன. லிஸ்திராவில் கால் ஊனமுற்றவரைப் பவுல் குணமாக்கிய வல்ல செயல் நிகழ்ந்தது.

6.2 இரண்டாம் தூதுரைப் பயணம் (கி.பி. 50-52)

சிரியா நாட்டு அந்தியோக்கியா, தெருபை, லிஸ்திரா, இக்கோனியா, பிசிதியா நாட்டு அந்தியோக்கியா, துரோவா, பிலிப்பி, பெரோயா, தெசலோனிக்கா, கொரிந்து, ஏதென்சு, கெங்கிரேயா, எபேசு, செசரியா, எருசலேம் போன்ற நகர்களுக்குத் தூதுரைப் பயணம் மேற்கொண்டார்.

இந்தத் தூதுரைப் பயணத்தில் பிலிப்பி நகரில் பவுலும் சீலாவும் சிறையிலடைக்கப்பட்டனர். அன்று நள்ளிரவில் பயமூட்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைக்காவலர் மனம் மாறினார். மேலும் கொரிந்து நகரில்

பிரிஸ்கிலா, அக்கிலாவோடு சேர்ந்து பவுல் கூடாரவேலை செய்தது சிறப்பான நிகழ்வுகளாகும்.

6.3 மூன்றாம் தூதுரைப் பயணம் (கி.பி. 53-58)

சிரியா நாட்டு அந்தியோக்கியா, கலாத்தியா, பிரிகியா, தெருபை, லிஸ்திரா, இக்கோனியா, பிசிதியா நாட்டு அந்தியோக்கியா, எபேசு, துரோவா, மாசிதோனியா, ஏதென்ஸ், கொரிந்து, மிலேத்து, தீர், செசரியா போன்ற நகர்களுக்குத் தூதுரைப் பயணம் மேற்கொண்டார். இந்தத் தூதுரைப் பயணத்தில் எருசலேமில் யூதர்கள் பவுலைக் கொல்லத் திட்டமிட்டனர்.

நாம் நம்மையே இழந்து, நமது சிலுவையைத் தூக்கிக் கொண்டு இயேசுவைப் பின்பற்றி நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும் என்ற அழைப்பினைப் பவுலின் தூதுரைப் பயணங்கள் நமக்கு முன் வைக்கின்றன. இது இன்றுள்ள நற்செய்திப் பணியாளர்களுக்கு மிகப்பெரிய சவால்!

7. பவுலின் நற்செய்திப் பணியில் திருமுழுக்கு

பவுலின் நற்செய்திப் பணியில் முழுமையானதும் முக்கியமானதும் திருமுழுக்குக் கொடுத்தல் ஆகும். திருமுழுக்கினால் ஒருவர் திருச்சபையின் உறுப்பினர் ஆகிறார். அவர் கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு ஆகிய மறைபொருளோடு இணைந்து புதுவாழ்வில் மலர்கிறார் (உரோ 6:1-4; கொலோ 2:12).

பவுலின் எண்ணப்படி திருமுழுக்கு என்பது ஒருவர் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படுதல் ஆகும் (உரோ 6:6). நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு இறந்தார். அந்த கிறிஸ்துவின் இறப்பில் நாம் திருமுழுக்குப் பெற்றோம் என்று பவுல் கூறும்போது கிறிஸ்துவுக்கும் திருமுழுக்குப் பெறுபவர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய தொடர்பைச் சுட்டிக்காட்டுகிறார் (1கொரி 1:13).

கிறிஸ்துவின் பெயரால் ஒருவர் திருமுழுக்குப் பெறுவதால் அவர் கிறிஸ்துவையே சார்ந்திருக்க வேண்டும் என்பது பவுலின் போதனையாகும். திருமுழுக்கின் வழியாக ஒருவர் இயேசுவின் இறையாட்சிக் கனவில் பங்கு பெறுகிறார். மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமயம் ஆகிய பிரிவுகளைத் தாண்டி ஒருவரைத் திருச்சபையின் உறுப்பினராக்கி

இறைவனோடும், பிற மனிதரோடும் தொடர்பு கொள்ளும் உறவை திருமுழுக்கு ஏற்படுத்தித் தருகிறது (2கொரி 5:19; உரோ 8:8; 1கொரி 12:13; 2கொரி 1:22; எபே 4:4).

"பழையன கழிந்து புதியன புகுதலில்" திருமுழுக்குப் பெரும் பங்கு வகிக்கிறது. திருமுழுக்கு வெளியடையாளச் செயலாக இருந்தாலும் கூட, அது மனிதரின் உள்ளத்தில் மாபெரும் தாக்கத்தை, மாற்றத்தை, வளர்ச்சியை உருவாக்குகின்றது.

திருமுழுக்கின் வழியாக ஒருவர் பழமையில், தீமையில், தீய வாழ்வில் இறந்து புதுமையில், நன்மையில், புதியவாழ்வில் புதுப்பிறப்பு எடுக்கிறார். திருமுழுக்கின் வழியாக ஒருவர் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்படுகிறார். திருமுழுக்கின் வழியாக இயேசுவின் சீடராகும் ஒவ்வொருவரும் கனிதரும் வாழ்வு வாழ உறுதிசெய்யப்படுகின்றார் (2கொரி 1:22; உரோ 8:11) என்று பவுலடியார் குறிப்பிடுகிறார்.

8. இன்றைய நற்செய்தி அறிவிப்புப் பணியும் நற்செய்திப் பணியாளர்கள் சந்திக்கும் சவால்களும்

தம்முடைய சீடர்கள் தமது நற்செய்திப்பணியைத் தொடர்ந்து செய்திட வேண்டுமென்று இயேசு விரும்பினார். ஆகவேதான் தமது இறுதிக் கட்டளையாக உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் (மாற் 16:15) என்று கூறினார். நம்பிக்கை கொண்டோர் அனைவரையும் "சீடராக்குங்கள்" (மத் 28:19) என்றும் தெளிவுபடக் கூறினார்.

நற்செய்தி அறிவிப்பதும், நோய் பிணிகளைக் குணமாக்குவதும், சிறையிலிப்பவர்களுக்கு விடுதலை கொடுப்பதும் (மத் 25:36,40), அனைவரையும் சீடராக்குவதும், இயேசு தமது மறையுடலாம் திருச்சபைக்குத் தந்த கட்டளைகள் மட்டுமன்று, திருச்சபையின் தலையாய கடமையுமாகும்.

நாம் வாழும் இக்காலத்தில் நற்செய்திப்பணி பல்வேறு சவால்களுக்கு இலக்காகி உள்ளது. பல்றே சவால்களுக்குப் பதிலளிக்க வேண்டிய கடமையும், கட்டாயமும் நமக்கு இருக்கின்றது. குறிப்பாக, இன்று இந்தியாவின் பல இடங்களில் நடந்து வரும் மதவெறிச் செயல்களே இதற்கு முதற்சான்று ஆகும்.

இயேசு கிறிஸ்து எல்லாக் கிறிஸ்தவரிலும் வாழ்கிறார், செயல்படுகிறார் என்பதைக் கிறிஸ்துவின் உயிர்ப்பு உறுதி செய்தது. இயேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கை இல்லையென்றால் நமது கிறிஸ்தவ நம்பிக்கை பொருளற்றதாகிவிடும் (1கொரி 15:19). கிறிஸ்தவ நம்பிக்கைக்கு உயிர் அளிப்பது உயிர்த்த கிறிஸ்துவே. உயிர்த்த கிறிஸ்து ஒவ்வொரு கிறிஸ்தவரிலும் வாழ்கிறார். எனவேதான் இன்று இந்தியாவில் ஒரிசா, குஜராத், கர்நாடகா மாநிலங்களிலும் மற்றும் உலகின் பல்வேறு இடங்களிலும் துன்புறும் கிறிஸ்தவர்களோடும் இணைந்து இயேசுவும் துன்புறுகிறார் என்பது பவுலின் மனமாற்ற அனுபவம் நமக்குப் பறைசாற்றும் ஒன்று.

இன்று கிறிஸ்தவம் இந்த அளவுக்கு உலகின் பல முனைகளுக்கும் சென்றடைந்துள்ளது என்றால், அதற்கு மூலக்காரணமும் அச்சாணியுமாக விளங்குபவர் பவுல் என்றால் அது மிகையாகாது.

இந்தியாவில் கிறிஸ்தவம் இன்று துன்புறுத்தப்படும் திருச்சபையாக இருப்பதற்குக் காரணம் கிறிஸ்தவத்தின் விழுமியங்கள், அதாவது இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு விட்டுச்சென்ற இறையாட்சிக் கனவு ஆகும். கிறிஸ்தவ மறைசாட்சிகள் யாரும் புதைக்கப்படுவதில்லை. மாறாக விதைக்கப்படுகிறார்கள். மறைசாட்சிகளின் இரத்தம், நம்பிக்கையின் வித்து.

9 பவுலும் கிறிஸ்தவத்தின் விழுமியங்களும்

இன்றைய இந்தியாவில் நற்செய்திப் பணியாளர்கள் பல வகையான வன்கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். எடுத்துக்காட்டாக மத்தியப்பிரதேசத்தில் கன்னியர் இல்லக் காவலாளி சுடப்பட்டார். மத்தியப் பிரதேசத்தில் உள்ள பந்துகா எனும் ஊரில் கார்மேல் சபைக் கன்னியரின் இல்லம் தாக்கப்பட்டது. நாடு முழுவதும் கிறிஸ்தவக் கோயில்கள், நிறுவனங்கள் தாக்கப்பட்டு வருகின்றன. ஒரிசா, குஜராத், கர்நாடகா போன்ற மாநிலங்களில் இந்தத் தாக்குதல்கள் தீவிரமாக நடத்தப்பட்டதைக் கண்டு இந்தியா ஒரு சமயச் சார்பற்ற நாடா? என்று வேதனையுடன் கேட்க வேண்டியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் பொருள் சேதம் மட்டுமல்ல, உயிர் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. உத்தரகாந் மாநிலம் சோட்டா நாக்பூரில் கிறிஸ்தவ ஆசிரமம் ஒன்று உள்ளது. அதில் தங்கியிருந்த சாமுவேல் என்ற பாதிரியாரும் (61), மெர்சி என்ற அருட்சகோதரியும் (35) அண்மையில் கழுத்து நெறிக்கப்பட்டுக் கொல்லப்

பட்டுள்ளனர். ஒரிஸாவில் மட்டும் அண்மையில் நடந்த கலவரத்தில் 100-க்கு மேற்பட்ட கிறிஸ்தவக் கோவில்கள் சேதம் அடைந்துள்ளன. 3000-க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் வீடின்றித் தவிக்கின்றனர். இக்கலவரத்தில் 11 பள்ளிக்கூடங்கள், 4 தொண்டு நிறுவன அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. தாக்குதலுக்குள்ளான கிராமங்கள் 300. தகர்க்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட வீடுகள் 4000. இன்னமும் 40,000 பேர் காடுகளில் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 12,000 பேர் அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்படடுள்ளனர். இவற்றையெல்லாம் சில இந்துத்துவ அமைப்புகள் நாங்களே இவற்றை நடத்தினோம் என்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது இன்னும் வேதனையும் அதிர்ச்சியும் அளிக்கிறது. இயேசுவின் நற்செய்திப் பணியாளர்கள் தங்களின் கிறிஸ்தவ அடையாளத்தை மறைத்து வாழக்கூடிய அளவுக்குத் துன்புறுத்தப்படுகின்றனர்.

கர்நாடகா மாநிலம் மங்களூரில் உள்ள தேவாலயங்களை இந்து மதத் தீவிரவாதிகள் அடித்து நொறுக்கினர். விவிலியங்களையும், செப நூல்களையும் அழித்தனர். நற்கருணையை அவமரியாதை செய்தனர். இந்தியக் கத்தோலிக்கச் சமூகத்தின் முக்கிய அங்கமாய்த் திகழ்பவர்கள் மங்களூரைச் சார்ந்த கத்தோலிக்கர்களாவர். எனவேதான் கர்நாடகக் காவல் துறையினரின் தடியடிக்கு ஆளான அருள்சகோதரி செல்மா, "மிகக் கொடூரமான காலத்திலும் கிறிஸ்தவ நம்பிக்கையை விட்டுவிடாத எம் முன்னோர்களின் வழிவந்தவர்கள் நாங்கள்; இந்து அடிப்படை வாதிகளின் அச்சுறுத்தலும் காவல் துறையினரின் துன்புறுத்தலும் எங்கள் நம்பிக்கையை அசைக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

இன்று இந்தியாவில் பல பகுதிகளில் முளைத்து எழும் இந்துத்துவா வெறியாட்டம் பெரும்பான்மை இந்துக்களுக்கே எதிரானது. தாழ்த்தப்பட்ட பழங்குடி இந்துக்களுக்குக் கல்வியும், விழிப்புணர்வும், வழங்கியதால்தானே கிறிஸ்தவர்கள் தாக்கப்படுகிறார்கள்? வர்ணாசிரம தர்மத்தை அரசியல் சாசனமாக மாற்றத் துடிக்கும் சங்கப்பரிவாரங்களின் துடிப்பு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இந்துக்களின் உயர்வுக்கு அடிக்கப்படும் சாவு மணி அல்லவா!

'சமயங்களின் தொட்டில்' எனப்படும் இந்தியாவில் சமய நம்பிக்கைகள் நிறைய உண்டு. இந்திய அரசியலைப்பின்படி, சமயச் சார்பற்ற இந்தியாவின் எந்த ஒரு சமயத்தைச் சார்ந்தவரும் தம் மதத்தைப் பின்பற்ற, பரப்ப, சேவை செய்ய, நிறுவனங்களை அமைக்க, நடத்த அடிப்படை உரிமை உண்டு. ஆனால், சமய அடிப்படைவாதக் குழுக்கள் புற்றீசலாய்த் தோன்றி, நச்சு விதைகளையும், நாச வேலைகளையும் ஏவி விடுவதே நம் தேசத்தைப் பிடித்திருக்கின்ற மிகக் கொடிய புற்றுநோய். ஆம், இந்தியச் சுதந்திரத்திலேயே அரும்பிய இந்து-முஸ்லீம் பிரச்சினை தொடங்கி, நேற்று (2002) குஜராத்தில் இஸ்லாமியருக்குக் கல்லறை, இன்று (2008) ஒரிசாவில் கிறிஸ்தவர்களுக்குக் கல்லறை என இதன் கோர முகம் தலைதூக்குவது அவலம்.

தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவர்களைக் கொன்று குவித்த உரோமை வீரர்களைப் பார்த்த ஒரு யூத அதிகாரி கூறினார்: "கிறிஸ்தவர்களை நசுக்காதீர்கள், ஏனென்றால் அவர்கள் மூட்டைப்பூச்சி போன்றவர்கள். நசுக்கப்பட்ட இரத்தத்திலிருந்து அவர்கள் ஆயிரமாயிரம் எண்ணிக்கையில் மீண்டும் பலுகிப் பெருகுவர்". இவ்வாறே கிறிஸ்தவம் தாம் முளைவிட்ட நாளிலிருந்து ஒவ்வொரு நாளும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய், எண்ணற்ற பிரச்சனைகளைச் சந்தித்துச், சவால்களை முறியடித்து முன்னேறி வருகிறது. கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையைக் கூட்டியுள்ளதே வரலாறு. உலக மறையான கிறிஸ்தவத்திற்கு உரு கொடுத்தவையே இத்தகைய மறைத் துன்புறுத்தல்களே.

துன்புறும் ஊழியனாகத் தம்மை வெளிப்படுத்திய இயேசு, தம் மரணத்திற்குப் புதிய அர்த்தம் தருகிறார். அவரின் மரணம் அகில உலக மனித இனத்தின் மரணத்தையே பிரதிபலிக்கிறது. ஆம், எங்கெல்லாம் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்களோ, அநீதியைத், தீமையை எதிர்த்துத் தங்களையே கையளிக்கிறார்களோ அங்கெல்லாம் இயேசுவின் மரணம் நடக்கிறது. புதிய மாற்றுச் சமுதாயத்திற்கான விதை அங்கு தூவப்படுகிறது.

எவ்வாறு பவுல் தன்னுடைய தூதுரைப் பயணங்களில் தாக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு, இறுதியில் கொலை செய்யப்பட்டாரோ அதனைப்போன்று இந்தியாவில் மட்டுமன்று உலகெங்கும்

இயேசுவின் நற்செய்திப் பணியாளர்கள் தாக்கப்படுவார்கள். உலகம் அவர்களை வெறுக்கும். ஆனாலும் அவர்கள் சோர்வடையமாட்டார்கள். நீதிக்காக, உண்மைக்காக உயிர்கொடுப்பார்கள். கிறிஸ்தவம் நாளுக்கு நாள் வளரும். கிறிஸ்தவ சமயம் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இல்லை. மாறாக கிறிஸ்தவ சமயத்தின் விழுமியங்கள் தான் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக உள்ளன. இருள் உலகை ஆட்சி செய்வது போலத் தோன்றினாலும் ஒளி வரும்போது இருளுக்கு அங்கு வேலையில்லை. கிறிஸ்தவ விழுமியங்கள் உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் செயல்படுகின்றன. நன்மையால் தீமையை வெல்கின்றது கிறிஸ்தவம். இயேசுவின் இறையாட்சிக் கனவு, சமபந்தி உணவு, உயர்வு-தாழ்வு களைந்தது போன்றவையே இயேசுவின் அரசியல் படுகொலைக்குக் காரணங்கள். அதே இறையாட்சிக் கனவினை முன்வைத்து வாழ்ந்ததால் ஸ்தேவான் முதல் மறைசாட்சியானார். அவரைத் தொடர்ந்து பவுலும் அதே இறையாட்சிக் கனவைக் கண்முன் கொண்டு சொல்லாலும். செயலாலும் வாழ்ந்து காட்டியதால் அவரும் கொலை செய்யப்பட்டார். பன்னிரு சீடர்களுள் தலைமைச் சீடராகிய பேதுருவும் கொலை செய்யப்பட்டார். இது தொடரும் ஒரு இறையாட்சிக் கனவுப் பாரம்பரியம். இதில் இணைபவர்கள் தான் ஒரிஸா, கர்நாடகா, குஜராத் மறைசாட்சிகள். ‘சந்திரயான்’ விண்ணைத் தொடுகிறான், ஆனால் மனிதமோ இந்தியாவில் மண்ணைத் தொடுகிறது.

பவுல் போதித்தக் கிறிஸ்தவம் இந்தியாவில் விளைச்சலைக் கொடுக்கிறது. காரணம், கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் (யோவா 12:24).

முடிவாக

- இயேசு கிறிஸ்துவின் விழுமியங்களைப் பாரெங்கும் எடுத்துச் செல்லும் பணியில், பவுலடியாரைப் பொன்று நாமும் மறை சாட்சியாகத் தயாரா!

வேதசாட்சிகள் புதைக்கப்படுவதில்லை
விதைக்கப்படுகிறார்கள்
அது துளிர்விடும்

கிறிஸ்தவ விழுமியங்கள் உலகில்
விருட்சமாகும்

- ஆண்டவரின் திருவிருந்தில் பங்குகொள்ளும் கிறிஸ்தவர்கள் சமத்துவ வாழ்வு வாழ வேண்டும் என்பது பவுலின் நற்செய்திப்பணி நமக்கு விடுக்கும் சவால்!
- இன்றைய நற்செய்திப் பணியாளர்கள் எவ்வாறு ஒற்றுமையாய் வாழ வேண்டும் என்பதற்குக் கலங்கரை விளக்கமாய் திகழ்கின்றார் பவுல். அவரது வாழ்வே நமக்கு ஒரு சவால்!
- இயேசுவின் நற்செய்திப் பணியாளர்களும் தங்களுடைய உணவிற்காக உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பது பவுல் நமக்கு விடுக்கும் சவால். அவரின் பணிவாழ்வில் தமது பிழைப்புக்காகக் கூடாரத்தொழில் செய்தார் என்பது வரலாற்று உண்மையாகும்.
- நாம் நம்மையே இழந்து, நமது உயிரையும் இயேசுவின் பணிக்கென இழக்க முன்வர வேண்டும் என்பது இன்றைய நற்செய்திப் பணியாளர்களாகிய நமக்கு பவுலின் தூதுரைப்பயணங்கள் விடுக்கும் ஒரு சவால்.
- புறவினத்தாரின் நற்செய்தியாளர் என்று பெயர் சூட்டப்பட்ட பவுலடியார், மொழி, இனம், பண்பாடு, கலாச்சாரம் இவைகளைக் கடந்து, இன்றைய நற்செய்திப் பணியாளர்கள் செயல்பட வேண்டுமென்ற சவாலினை நமக்கு முன் வைக்கிறார்.

சுயநலம் துறந்து
பொதுநலம் நாடி
பவுலைப் போன்று
நற்செய்தித் தூதுவராவோம்
புது உலகம் படைப்போம்

"மறைசாட்சிகளின் இரத்தம், நம்பிக்கையின் வித்து".

II

கவிதைகள்

அ. அடிமையல்ல சகோதரனே

வீரா. கல்கி மோகன், குடந்தை
ஆயுள் கைதி, மத்திய சிறைச்சாலை, திருச்சி

❶

நான் வாழும்
சிறை உலகம்
நல்லோர் வாழ் நல்லுலகம்
சுவர் மறைத்த
சிறை அறையில்
படும் துயர் யாவும்
தூய மனம் பிறக்க
தூண்டு கோலாய்
துணை இருக்கும்

பந்த பாச நினைவுகளால்
படும் மனத்துயர் பல உண்டு
உன் உடலை உலகாக
நினைத்துப்பார். அதில்
உள்ளத்தைச் சிறையாக
உளவு பார்
சினம் சீறிய சிதைவுகளால்
சிறைப் பட்டோர் என் மக்கள்

தப்பான எண்ணங்களால்
தவறுக்கு வழி பிறக்கும்
தவறான செயலாக்கம்
உன்னைத் தரம் தாழ்த்தி, இருக்க வைக்கும்

மலர் மென்மை மனித உள்ளத்தில்
புயல் துயர் துளிர் விட்டால்

பூவாய் மனதும்
புழுவாய்த் துடித்து
புழுதியில் புரண்டு
சடுதியில் மறையும்

❷

படும் துயர் யாவும்
பாவங்கள் தீரும்
பாவிகள் ஆவி
கர்த்தரைச். சேரும்

வீண்பழி சுமந்து
விழிநீர் நனைந்து
விதியாய் நினைந்து
விடியலைத் தேடும்
மதிவிழி அறியா?
மானிடப் பிறப்பே!

கர்த்தர் உலகில்
கடல்போல் உதிரம்
சிந்திய மனதில்
நல் மனம் விளையும்
நற்குணம் மறந்து
நஞ்சாய் விளைந்த
எஞ்சான் மனிதா

துன்பச் சுமையனைத்தும்
தூக்கி வந்தான்
தூயவன் என் கர்த்தர்

❸

ஓ அன்பர்களே...
இரவும் பகலும்
சுழன்றால் தான்
இயற்கை ஒழுங்காய்
முழுமை பெறும்

வறுமை செழுமை
இருந்தால் தான்
வாழ்வின் அர்த்தம்
புரிதல் தரும்

உழைப்பவன்
உயிரை உறிஞ்சும்
மனிதா?
உனக்கு மனித நேயம்
மலர்வதெப்போ

சிறையில் வாழும்
மனிதன் யாரும்
சிதைந்த வாழ்வு
வாழவில்லை
சிதைந்த வாழ்வை
சிலரால் பெற்று
சிறையில் சிந்தனை
நூல் படித்தேன்

❹

அய்யோ பாவம்
மனிதன் என்று
அல்லும் பகலும்
நான் அழுதேன்

அழுவாக் குழந்தை
மண்ணில் உண்டா
அத்துணை பாவமும்
நான் சுமந்தேன்

கல்லாய் மரமாய்
காற்றாய் ஒளியாய்
நிலமாய் நீராய்
இருக்கும் இறைவா

உன்னால் சுழலும்
உயிர்கள் யாவும்
உன்போல் பிறருக்கு
பயன் தரட்டும்

வீண் பழி சுமந்து
விடியலை நினைத்து
விதையாய்ச் சிறைபட்ட
என் போன்றோர்

❺

ஒவ்வொரு தவறிலும்
உண்மை ஒளிரும்
உத்தம மனிதன்
சிறையில் உண்டு

உத்தமர் போர்வையில்
உலகைச் சுருட்டும்
மெத்தன மேன்மை
மனிதர் உண்டோ

அத்துணை பிலோமினுக்கும்
நற்செய்திப் பணியென்ற
உன்னத காரணத்திற்காய்
சிறையில் அடைபட்ட
பவுலாய் உரைக்கின்றேன்

உலகத்தார் பாவங்களை
உதிரம் சிந்தியும்
உடல் சிதைவும் கண்டு
உயிர் பிரியும் வேலையிலும்

மன்னிப்புத் தந்த
கர்த்தர் ஆவி
உங்கள் உடலில் குடிபுகட்டும்
உலக மாந்தரும்
நலம் பெறட்டும்

ஆ. அன்பு ஆயுதம்

திருத்தொண்டர் தாமஸ் அக்குவினாஸ்
இறையியல் மூன்றாமாண்டு, கார்மேல் சபை, திருச்சி

அன்பாகி அகிலம் வென்ற ஆண்டவனால்
ஆட்பட்ட அடியான் அன்பாகி அதை
அவன் நெறியாக்கினான் அகிலம் வாழ - இந்த

பவுலின் வரிகள் எல்லாம் வெறும்
வார்த்தை சாலங்கள் அல்ல வியக்க – அது
உள்ளத்தின் ஊற்று வெடிக்குது அன்பாய்

அறிவைச் சொல்ல ஆயிரம் மொழிகள்
மனித உறவைச் சொல்ல ஒரே மொழி – அது
இதயம் பேசும் அன்பு மொழி

மானிடரின் மகத்துவ இலக்கிய மொழியோ
விண்ணவரின் வியக்கும் பரவச மொழியோ
அத்தனையும் அடங்கும் அன்பு மொழியில்

ஒலிக்கும் ஓட்டை வெண்கலம் குப்பையிலே
மனதைக் குப்பையாக்கும் கோபக் கொந்தழிப்பு - இங்கு
ஆடி அடங்குது அன்பின் சந்நிதியிலே

ஒழுங்கு இல்லாத் தாளம் ஓசையாகுது
அன்பு இல்லா வாழ்வு வேசமாகுது - இதனால்
மனம் நிம்மதி கெட்டு மோசமாகுது

ஆண்டவனின் வார்த்தை அறிவிக்கும் அருளோ
அவனியையே அடக்கி ஆட்டுவிக்கும் புகழோ – எல்லாம்
அன்பின்றிப் போகுது இங்கு புதைந்து

வருவதை வகுக்கும் நுண் அறிவோ
அறிவுரை அளிக்கும் அளப்பெரிய ஆற்றலோ - இவை
அத்தனையும் அலையுது அன்பின்றி அழியுது

மலை பெயர்க்கும் மனிதனின் நம்பிக்கை
குணப் பெயரான அன்பின்றிப் போனால் - அவன்
நம்பிக்கை பெயர்ப்பது மனிதத்தை அன்றோ

உள்ளதை உள்ளபடியே கொடுத்தான் பாரி
உள்ளத்தையே உவந்து கொடுத்தாள் கைம்பெண்
உடலையே உணவாய்க் கொடுத்தார் இயேசு - இப்படி

கொடுப்பதற்கு என்ன என்று எண்ணாமல்
உடமை எல்லாம் வாரிக் கொடுத்தாலும் - இங்கு
கொடுப்பதில் அன்பின்றிக் கொடுத்தால் கொடுப்பதா?

அன்புக்கு என்றுமே உண்டு பொறுமை
அத்தனையும் பொறுக்கும் அந்தப் பொறுமை
அதுவே அந்த அன்புக்குப் பெருமை

எல்லோர்க்கும் இருக்கும் வெற்றி என்ற
எதிர்நோக்கு அதுதான் அவர்கள் எதிர்பார்ப்பு – ஆனால்
அன்புக்குத் தோற்றாலும் உண்டு மனவுறுதி

குழந்தை உள்ளம் வேண்டும் தெய்வமாக – ஆனால்
குழந்தைபோல் குறைவாய்ச் சிந்தித்தால்
குறுகிப்போகும் நம் அறிவு – எனவே

அரைகுறை அறிவு அன்புக்கு இல்லை
பிம்பமாய் பிரதிபலிப்பது அன்பு இல்லை
அன்பு உண்மையை உள்ளதாய் உணர்த்தும் - ஆகவே

நம்பிக்கை எதிர்நோக்கு அன்பு என்ற
மூன்றுமே நிலையான பண்பு என்றான்
அதிலும் சிறந்தது அன்பு என்றான் - எனவே

சிலுவையில் தன்னைத் தந்தவன் தொட்டான்
பவுலின் வறண்ட இதயத்தை இதனால் - பவுலுக்கு
இழப்பு என்பது வாழ்வல்ல வாளே

வாளைத் தொலைத்தவன் வீரனாய்ப் போனான்
அவன் ஆயுதம் இல்லா நிராயுதபாணியல்ல – அவனுக்கு
அன்பு ஆயுதம் ஆயிரம் அம்புகளாய்

அவன் அன்பு மாரிப் பொழிந்த
வார்த்தை அம்புகள் இன்னும் வைரவரிகளாய்
நம் நெஞ்சைத் துளைத்துப் பதம் பார்க்குது

ஆகவே பவுலுக்குக் கிறிஸ்துவே அன்பு – அந்த
அன்பிலிருந்து எந்த நெருக்கடியும் நிற்காது
நம்மைப் பட்டினியும் பிரிக்காது என்றார்

வேதனையா? சாவா? இடரா? – நம்மை
அப்புறப்படுத்த? அல்லது ஆடையின்மையா? – என்று
அடிப்படை உணர்வுகளுக்கே அன்பு விடுத்தது சவால்

இவை அனைத்தும் என்ன? ஒன்றுமில்லை
விண்ணில் பூக்கும் விண்மீனோ சிரிக்கும்
சந்திரனோ எரிக்கும் சூரியனோ என்று

விண்ணுக்குச் சென்றது அவன் சவால்
சாவா? வாழ்வா? வானதூதரா? – என்று
பட்டியல் பரந்துபட்டுப் போனது

வாழ்வா? ஆட்சியாளரா? வலிமை மிக்கதா?
ஆழத்தில் உள்ளதா? உள்ளத்தில் உள்ளதா? –அல்லது
வேறெந்த படைப்போ என்று எல்லாவற்றையுமே

தாண்டியது இறைவன் - இயேசு வழியாய்
வழங்கிய அன்பு, அன்பை வர்ணிக்க
அவனுக்கு வார்த்தை போதவில்லை போலும்

ஆகவே அன்பு அனைத்திலுமே சிறந்தது
என்று முடித்துவிட்டார் ஆனால்
அது முற்றுப்புள்ளியாய் முடியவில்லை

அவன் வார்த்தை வரிகள் முடிவின்றி – அன்பாய்
என்றும் நம் வாழ்வில் தொடர - இந்த
அன்பே நம் வாழ்க்கை நெறியாகட்டும்

இ. இறைநம்பிக்கை வேர்கள்

திருத்தொண்டர் இஞ்ஞாசி அற்புதராஜ்
இறையியல் நான்காமாண்டு
மதுரை உயர் மறைமாவட்டம்

❶

சிலிசியா என்னும் உரோமை மாநிலத்திலே
தர்சு என்னும் தலை நகரிலே
கிறிஸ்தவத்தின் புத்துலகச் சிற்பியாக
தலைவன் பவுல்தான் உதயமானாரே

சவுல் என்னும் எபிரேயப் பெயரிலே
“கடவுளை வேண்டிக் கிடைக்கப் பெற்றவர்’
என்ற சிறப்புடன்
இறை அருள் பெற்றவராக
தன்னம்பிக்கையில் தழைத்தோங்கியவர்
பிறர் நம்பிக்கையில் சிகரமாகவும்
இறைநம்பிக்கையில் இமயமாகவும்
இருந்தவர் தூய பவுல்தானே!

நம்பிக்கை வை என்று போதித்தவர்
உழைப்பின்மீது நம்பி கை வை – ஆம்
உழைக்காதவன் உண்ணலாகாது என்று
உரக்கக் கூறவும் அவர் தயங்கவில்லை

அழைப்பில் இறை அனுபவம் பெற்று
உழைப்பில் உறுதியாக நின்று
இறை நம்பிக்கையோடு
நற்செய்தியை அறிவித்திட
பவுல் மேற்கொண்ட நெடும் பயணம்
பயணிக்கும் திருச்சபைக்கு
முன் மாதிரியே!

---

❷

பாதை இல்லை என்று நிற்காதே!
நீ நடந்தால்...
பாதை தானே உருவாகும்
என்பதற்கிணங்க
பல தூதுரைப் பயணங்களால்
பலருக்கும் பாதை காட்டியவர் தூய பவுல்!

பல பூக்கள் பூப்பதுண்டு – அதனால்
பல காய்கள் ஆவதுண்டு
ஒரே ஒரு பூ பூத்து – ஆனால்
பல காய்கள் கொடுப்பது
வாழை மரம் மட்டுமே...

❸

ஒரே ஒரு முறை மட்டும் பூமியில்
வாழ்ந்தாலும்
உடல் பொருள் ஆவி என
அனைத்தையும்
மானிடச் சமூகம் வாழ
தன்னையே தரணிக்குக் கொடுத்த
தூய பவுல்
இறை நம்பிக்கையின்
வித்தாகத் திகழ்ந்தாரே!

நம்மைப் படைத்த இறைவனிடம்
நம்மையே நாம் சரணாகதியாக்குவது
இறை நம்பிக்கை ...
ஆபிரகாம் இறைநம்பிக்கையில்
நங்கூரம் போன்று
ஊன்றி நின்றதால்தான்
வாக்குறுதி பெற்று
சிறப்பாக வாழ்ந்தாரே!

இறைவாக்கினர் எசாயா,
ஆமோஸ், ஓசேயா
இறைநம்பிக்கையில் ஆழமாக
வேரூன்றியதால்தான்
சமூகக் கட்டமைப்பில்
சிக்குண்ட ஏழைகளுக்கு
மகிழ்ச்சி தரும் செய்தியை
ஆறுதல் தரும் செய்தியை
ஊக்கம் தரும் செய்தியை
அறிவிக்க முடிந்ததே!

❹

இறைமகன் இயேசு கிறிஸ்து
பணி வாழ்வில் பிராகசிக்க
தந்தையிடம் நம்பிக்கையோடு
செபித்தார்

தூய பவுலின் இறை நம்பிக்கையும்
ஆற்றல் வாய்ந்தவை
நமது நம்பிக்கையால்
கடவுளுக்கு ஏற்புடையவராகலாம்
அதற்குச் சிறந்த வழி
இயேசு கிறிஸ்து மீது
நாம் கொள்ளும் நம்பிக்கையே (உரோ 8:22)

திருச்சட்டங்கள் எடுப்பார் கைப்பிள்ளை
ஆகிவிட்ட சூழலில்
இயேசுகிறித்து மீது நம்பிக்கை
கொள்வோர் மட்டுமே
மீட்புப் பெற முடியுமென
நீதிக்கு வித்திட்டவர் பவுல்

உழைப்பவர்கள் நிச்சயம் பலன்
பெறுவது உறுதி

உழைப்பாளர்களுக்குக் கூலி
அன்பளிப்பு அல்ல; அது
அவர்களது உரிமை
அதுபோல
கடவுள் மீது நம்பிக்கை
கொள்வோருக்கு
கடவுள் நீதியைத் தருவார்!

5

ஏன் இறைநம்பிக்கை கொண்டிருக்க
வேண்டும்?
ஆட்சி புரிவோர். அதிகாரம் செலுத்துவோர்
இருளின் சக்திகள்
ஆகியவற்றை எதிர்த்துப் போராட
இறைநம்பிக்கை அவசியம் (எபே 6:12)

சண்டை சச்சரவு, பொறாமை
சீற்றம், கட்சி மனப்பான்மை
அவதூறு பேசல், புறங்கூறல்,
இறுமாப்பு, குழப்பம்
ஆகியவற்றை அடியோடு நீக்கி
மகிழ்வோடு வாழ
இறைநம்பிக்கை அவசியம் (2கொரி 12:20)

ஆண்கள் கோபமும் சொற்பூசலும்
இல்லாமல் இருக்கவும்
இறைநம்பிக்கை ஊட்டச்சத்தாக
இருக்கிறது (1திமொ 2:8)

இறைநம்பிக்கையை உற்சாகமாக
எடுத்தரைத்தலில் தூய பவுலின்
பங்கு அளப்பெரியது
நீங்கள் உண்டாலும் குடித்தாலும்
எதைச் செய்தாலும்

இறைவனின் மாட்சிக்காகவே
செய்யுங்கள் என்று (1கொரி 10:31)
இறை நம்பிக்கையை அனைவரது
உள்ளத்திலும் வளர்த்தவர்
தூய பவுல்!

வயிற்றுக்கு ஊழியம் செய்வோர்
பிரிவினைகளையும் தடைகளையும்
ஏற்படுத்துபவர்கள்; இவர்கள்
இறைப்பற்று உள்ளவர்களை
பற்றற்றவர்களாக மாற்றிவிடுவர் (உரோ 16:17-18)
இறைநம்பிக்கை கொண்டோர்
இவர்களைக் குறித்துக் கவனமாயிருக்க
பவுல் அறிவுறுத்துகிறார்

❻

உடற்பயிற்சி ஓரளவுதான்
பலன் தரும்
இறைப் பற்று எல்லாவகையிலும்
பலன் தரும்
இம்மையிலும் மறுமையிலும்
வாழ்வு தரும்
வாக்குறுதியைக் கொண்டுள்ளது (1திமொ 4:8)
இறைநம்பிக்கை நமது வாழ்வில்
ஆதாரம் தானே!

'உழைப்பை நம்பி வாழும் இவனுக்கு
கடவுள் பராமரிப்பில் நம்பிக்கை இல்லை"
என்ற குற்றச்சாட்டை
ஒவ்வொரு நிலையிலும்
ஒவ்வொரு மனிதரும்
இறைநம்பிக்கையோடு
வாழும்போது
மறுமையில் வாழ்வு

பெறுவர் என்று
பசுமரத்தாணி போல
அனைவருக்கும் உணர்த்திய
தூய பவுல்...

இம்மண்ணுலகில் சோதனையை
சாதனையாக்கிய
தடைகளை தடங்களாக்கிய
இறைப் பற்றிலும் நம்பிக்கையிலும்
இறுதி வரை உறுதியாக இருந்த
அவரது வாழ்க்கை
இன்றும்
வாழும் நமக்கு
மாபெரும் சகாப்தமே!!

ஈ. உழைக்காதவர் உண்ணலாகா

சகோ. எட்மண்ட்
இறையியல் இரண்டாமாண்டு, கோட்டாறு மறைமாவட்டம்

❶

ஒரு தச்சனின் கனவு
உச்சமடைய...
பவுலின் உழைப்பு
அழைப்பு விடுக்கிறது

பருவ மழையின் முத்தத்தில்
பருவமடைவாய் நிலமே! – எங்கள்
வியர்வைத் துளியின் முத்தத்தால்
நித்தம் கருத்தரிப்பாய் நிலமே!

மேகம் கறுத்து
நனைந்த நிலம் - நம்
தேகம் கறுத்தால்
சோகம் தீர்க்கும் கனவுடன்
காத்துக் கிடக்கிறது

குனியவிடா நம் தொப்பைகள்
தப்பை உணரும் வரை
பசுமை... பட்டினி கிடக்கிறது

இலட்சங்கள்
கொட்டிக் கிடக்க
நித்தம் விடிகிறது
முதலாளிக்கு!
இலக்கு நோக்கி
ஓடினாலும் வாடினாலும்
இடுப்பில் கட்ட
இல்லை துண்டு தொழிலாளிக்கு!

த..தா..உ...
என ஊளையிடும்
பன்னாட்டு நரிகளுக்கு
பொன்னாடை போர்த்தி
தாவி விளையாடுகின்ற
நம்நாட்டுக் குரங்குகளுக்கு
கூரைவீட்டு குசையின்
கால்காணி நிலம்
கண்களை உறுத்துகிறது

ஒருகண் உறங்காமல்
வருந்தி உழைத்தாலும்
ஓட்டுவீட்டுக் கனவில்
ஓட்டை விழுந்து
அவனும் ஓடாயத் தேய்கிறான்

❷

உழைத்து...
உடல் கறுத்து...
உழலும் சேதாரம்
பெருத்த...
உளம் சிறுத்த...
பண்ணைகளின் திண்ணைகளில்
கூனிக் குறுகுதல்
சகியோம்!
அறிவு புகட்ட வா – பவுலே
அறிவு புகட்ட வா!

நித்தம் உழைத்து
நித்திரை தொலைத்து...
வாடும் சித்திரம்
இங்கே
வீழும் சரித்திரம்
சகியோம்!
அறிவு புகட்ட வா – பவுலே
அறிவு புகட்ட வா!

கண்டபடி கதைபேசி
உண்டபடி உறங்கும்
பொல்லாத போலிகள்...
இறையாட்சிப் போதையில்
சமத்துவம் பேசுதல்
சகியோம்!
அறிவு புகட்ட வா – பவுலே
அறிவு புகட்ட வா!

உழைப்பு...
பரமனது அழைப்பு!
பரமனின் வரம்
பாரமென்றால்
ஏதேன் தோட்டத்து
பாவமென்றால்
அறிவு புகட்ட வா – பவுலே
அறிவு புகட்ட வா!

❸

இஸ்ரயேல் இனத்தவர்...
பென்யமின் குலத்தவர்...
ரொம்பப் படித்தவர்...
பணம் படைத்தவர்...

அத்தனை இருந்தும்
அர்த்தம் இல்லையோ...?
இழப்பு...
எல்லாம் இழப்பு...
என்றாலும்
உழைப்பில்
அர்த்தம் கண்டவர்
சோம்பல் பேயின்

வாயடைத்த
பவுலின் மந்திரம்
'உழைக்காதவன் உண்ணலாகா'

சோம்பல் சிறையில்
ஆயுள் கைதிகள்
ஆயிரமாயிரம்!
சோம்பித் திரியும்
ஊராளிகள் -உடல்
சூம்பித்திரியும்
ஊதாரிகள்
நோக்கம் இழந்து
அடுத்தவர் போக்கில்
மூக்கை நுழைப்பது
முறையோ?
உழைக்காதவன் உண்ணலாகா!

யூபிலி நாயகன்...
அழைப்பை மறக்கவில்லை
அல்லும் பகலும்
உழைக்க மறுக்கவில்லை.
இந்த உணர்வில்
இருந்த உயிரை
இங்கு பலரும்
இழந்தது முறையோ?
உழைக்காதவன் உண்ணலாகா!

தன்னோடு உழைப்பவரை
மண்ணோடு போ என்பதும்
பிறர்க்காக உழைப்போரின்
தன்மானம் சீண்டுவதும்
சில்லறை மனிதர்களின்
சித்தாந்தமென்றால்
பவுலின் சித்தம்
வேறென்போம்!

4

உடன் உழைப்பவர்
உடன் பிறந்தவர்
என்பது போல்
சகோதரன் என்றழைத்து
கந்தல் மனங்களில் - அவர்
பந்தல் அமைத்தவர்
நமக்காக உழைப்போரை
நாவால் சுட்டது போதும்!
நம்மோடு உழைப்பவர்
நம்மால் கெட்டது போதும்!

உழைப்பது கொடை
கூலி நன்கொடையல்ல
உழைப்பது பெருமை
பெறும் கூலி
உரிமை...
ஆம் உரிமையென்போம்!

5

உழைப்பதுபோல் நடிப்பதும்
களைத்ததுபோல் புலம்புவதும்
சோம்பலின் வேடிக்கை!
சிலரது வாடிக்கை!
இதைக் கண்டதும்.
பவுலின் கண்டனம்
சோம்பல் சேட்டைகளின்
கோட்டைகள் நோக்கி
சீறிச் செல்வதால்...
நண்பர்களே
நல் மனதுடன் உழையுங்கள்!
முழுமைபெற
முழுமனதுடன் உழையுங்கள்!

திருடும் மானிடர்
தரும் பேரிடர்
நேர்மையின் கண்களை
நெருடும் இருள் கண்டு
நேர்மையுடன் உழையுங்கள்!

வெறுமனே உழைப்பவர்தம்
வெறுமை கண்டு
பரமனே அருளும்
மீட்புப்பெற உழையுங்கள்!

எல்லாம் இலவசம்
என்னும் பரவசம்
நெஞ்சைக் கெடுக்கும்
நஞ்சென்பதால்...
உழைக்க மறுக்கும்
இறைப் பணியாளரே!
அலட்டாமல் அதட்டாமல்
ஆண்டவருக்காக உழையுங்கள்!

6

உழைப்பு...
பரமனது அழைப்பு1
பரமனின் வரம்
பாரமென்றால்
ஏதென் தோட்டத்து
பாவமென்றால்
அறிவு புகட்டுவோம்!

சோம்பல் சிறையில்
ஆயுள் கைதிகள்
ஆயிரமாயிரம்!
இவர்கள்
மானம் மறந்து
மாண்பில் இறந்து
தாழ்வது தகுமோ?
உழைக்காதவன் உண்ணலாகா?

எனவே...
சோம்பலுக்கு
சாம்பல் பூசி
பாவம் தொலைப்போம்
அங்கே...
இறையாட்சியின்
போதை தெளியும்!
மனசாட்சியின்
பாதை தெரியும்!

உ. சட்டத்தின் முகவரி

திருத்தொண்டர் கிறிஸ்டோ டாபின்
இறையியல் மூன்றாமாண்டு
கோட்டாறு மறைமாவட்டம்

❶

மனிதமே
புவியின் மையம்

மனித தீபம்
அணையாது காக்கும்
சிம்னியே சட்டம்!
மனிதம் பூத்துக் குலுங்கும்
பூங்காவின் வேலியே
சட்டம்!

மனிதத்தின் முகமே
சட்டத்தின் முகவரி!

❷

சட்டங்கள்
பாவத்தின் சூட்டில்
குளிர் காய்வது
மனிதத்திற்குச் சாவுமணியே!
புனிதத்தின்
வண்ணமிகு கோலம்
சட்டம் - ஏனோ
பாவத்தின் கரும்புள்ளியாய்
மாறிப் போனதேன்?
சட்டங்கள்
வெளிச்சப் புள்ளிகளை
விதைக்காது
இருளின் வாசல்
காவலாளி ஆனதேன்?
சட்டத்தின் பக்கங்களில்
சாவின் மரண ஓலம்
குடிகொண்டதே!

❸

இயேசு
வாழ்வின் தூரலாய்
புவியினை நனைத்தார்
அருளின் நிலவை
வானில் பொருத்தினார்

கடவுளின் சாயலாக
மனிதத்தின் முகவரியாக
வாழ்வின் ஊற்றாக
உறவின் தொடக்கமாக
சட்டத்தின் முடிவாக
பூமியின் கரங்களில்
இயேசு பிறந்தார்

அன்பின் கரங்களை
வாழ்வின் பாதையை
சட்டத்தின் மறுகரையாய்

பாமரனில் பதித்தார்
சிலுவையில் கரம் விரித்து
சட்டத்தின் சாகசங்களை
முடித்து வைத்தார்!
மனிதத்தின் மூச்சாக
இறையாட்சி விதையை
விதைத்தார் இயேசு!

4

மனிதத்தை
செதுக்கும் சிற்பியே அன்பு!
இறையாட்சியின் வித்து அன்பு!
சட்டங்களை
திருத்தி அமைப்போம்!
அன்பை
உயிர்மூச்சாக்குவோம்!

ஊ. திருத்தூதர் பவுலும் சமத்துவமும்

திருத்தொண்டர் அம்புரோஸ்
இறையியல் நான்காமாண்டு
வேலூர் மறைமாவட்டம்

❶

விண்ணகம் இறைவனின் அரியணையாம்
மண்ணகம் மன்னவரின் கால்மனையாம்
வான்கோள்கள் வட்டமாகக் கூடிட
வான்மேகங்கள் மெத்தையாகச் சூழ்ந்திட
விண்மீன்கள் நடனம் ஆடிட
நாற்திசைக் காற்றும் நல்லிசை முழங்கிட
நானோ! கண்டேன்! கண்டேன்! காட்சி
மூவொரு இறைவனை முழந்தாள் பணியும்
தூய பவுலின் வருகையை

வற்றாத நீரூற்றாய் வழிந்தோடும் பயணம்
திருத்தூதரின் இறைதூது நெடும்பயணம்
மனிதமும் மனித மாண்பும் மறையுரையாய்க் கொண்ட
மகத்தான பயணம்
இதுவேநம் திருத்தூதரின் திருப்பணம்

❷

தாயின் வயிற்றில் உருவாகும் முன்னே
என்னை அறிந்த ஆதவனாய், அம்மையாய், அப்பனாய்
எனக்கு உரியவன் என்றே எனைத் தேர்ந்தீர்
நானோ! நீ என அறியா உன் மக்களை அழித்தேன்
அன்பே உன் வடிவம் மன்னிப்பு உன் சொரூபம்

மனமாற தமஸ்கு செல்லும் வழியில் உன்மயமாக்கினீர்
அனனியா என்னும் இறையடியாரிடம் அழியா

அருளடையாளத் திருமுழுக்கை எமக்களித்தீர்
அதனாலே ஆவியானவர் எனக்குள் அசைவாட

சமத்துவத்தின் உயிரிடமாம்
எந்தையின் இருப்பிடமாம்
எளிமையின் பிறப்பிடமாம்
தூய்மையின் வெள்ளிடமாம்
நம்பிக்கையின் இறைவிடமாம்
நானிலமே என் பணியிடமாம்
உலகமே நற்செய்தியின் உரைவிடமாம்
நானே வாழ்வது இயேசுவிடமாம்
நானே சாட்சியின் முதலிடமாம்

தர்சு நகரில் பென்யமின் குலத்தில்
பிறந்த யூதச் சிங்கமாய்
கமாலியேல் திருப்பாதம் சட்டம் பயின்ற
மறைநூல் அறிஞராய்
நற்செய்திப் பணியில்
காட்டுத் தீயாய்
காட்டாற்று வெள்ளமாய்
கடல் அலையாய்
புவியில் புகுந்த பூந்தென்றலாய்
இறை நற்செய்தியின் கருவியாய்
இறைத்தொண்டாற்றும் தொண்டனாய்
நாற்புறமும் நாற்றம் வீசும் நானிலத்து மக்களெல்லாம்
சமத்துவச் சமூகம் படைக்க
சத்தியனின் திருதூதனாய்
பிறஇனத்து ஞாயிறாய்
பிதாமகனால் அனுப்பப்பட்டவனாய்
அவர் பணியைத் துவங்கினேன் அடியேன் சவுல் பவுலாய்!

❸

ஆயன் வழியில் சமத்துவம் படைக்க
முப்பெரும் பயணம் முறையாய்ச் சென்றார்

வறுமைக் கோட்டில் வாழ்ந்த மக்களுக்கு
வளம்சேர்க்கும் இறைவார்த்தையின் வடிவாய்
ஏழ்மையில் மெலிந்தோர் எல்லோர்க்கும்
எல்லாமுமாய் இறையடியனாய்ச் சொல்லும் கவி

பண்பட்ட நிலம் பலன் கொடுக்கும் நிலம்
பண்பட்ட உள்ளம் பாசத்தையள்ளும்
சமத்துவ உள்ளம் சமுதாயத்தை வெல்லும்
பொறுத்த உள்ளம் பொருளைக் கொள்ளும்
அறிந்த உள்ளம் அரசியலில் நில்லும்
நம்பிக்கை உள்ளம் நல்லதைச் சொல்லும்
கற்ற உள்ளம் கவிதையைச் சொல்லும்
அன்பே உன் உள்ளம் அனைத்தையும் வெல்லும்
தூய ஆவியின் சொல்லும் அதுவும் உன் உள்ளம்
உள்ளமே இறைவனின் இல்லம் (கோவில்)
இதில் இல்லை பாவம் என்னும் பள்ளம்
இதனால் ஆனது நானிலம் நன்மை நல்கும்
படைத்தவனின் பாதையில் சமத்துவப்பணி தொடர்வோம்

4

சாதியானாலும் சமயமானாலும்
இனமானாலும் மொழியானாலும்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
வாழ்ந்தாலும் இறந்தாலும்
பணத்தாலும் பொருளாலும்
குணத்தாலும் மனத்தாலும்
இடத்தாலும் நிறத்தாலும்
ஆண் ஆனாலும் பெண் ஆனாலும்
உரிமையானாலும் அடிமையானாலும்
யூதரானாலும் கிரேக்கரானாலும்
கிறிஸ்துவில் ஒன்றாய் என்றும்
சமத்துவ உலகம் படைக்க
சீர்மிகு சிந்தனை ஈந்தவரே!

யூதரின் பாவனையில் விருத்தசேதனம்
பெற்றவனும் பெறாதவனும்
நாகரிகம் அறிந்தவனும் அறியாதவனும்
கற்றவனும் கல்லாதவனும்
திருச்சட்டம் அறிந்தவனும் அறியாதவனும்
என்னிலும் எல்லாரிலும்
நம்பிக்கையில் இன்று அனைவருக்குள்ளும்
அனைத்துமாய் இருக்கிறோம்
சமத்துவ சமுதாயத்தில் - இதுவே
கிறிஸ்துவின் மனிதமும் - புனிதமும்
மனித மாண்பும் - மனித நேயமும்
இறையன்பும் பிறரன்பும் இணைந்திருப்போம்

5

படைப்பின் சிகரமாய் படைப்பின் மேன்மையாய்
படைத்தவரின் சாயலாய் உருவானான் மனிதனாய்
மனுசனின் மார்பெலும்பில் மனுசியைப் படைத்தவனாய்

ஆணும் பெண்ணும் படைப்பில் சமம்
ஆணும் பெண்ணும் உழைப்பில் சமம்
ஆணும் பெண்ணும் சமத்துவத்தில் சமம்
ஆணம் பெண்ணும் சமுதாயத்தில் சமம்
ஆணும் பெண்ணும் அன்பில் சமம்
ஆணும் பெண்ணும் உறவில் சமம்
ஆணும் பெண்ணும் மனதால் சமம்
ஆணும் பெண்ணும் அறிவால் சமம்
ஆணும் பெண்ணும் பணிவாழ்வில் சமம்
ஆணும் பெண்ணும் உணர்வில் சமம்
ஆணும் பெண்ணும் இறையீயலில் சமம்
ஆணும் பெண்ணும் படைப்பாற்றலில் சமம்
ஆணும் பெண்ணும் அருளடையாளத்தில் சமம்

கிறிஸ்துவில் திருச்சபையும்
திருச்சபையில் கிறிஸ்துவும்

கணவனில் மனைவியும்
மனைவியில் கணவனும்
இணைந்திருந்தால்
சமத்துவம் என்னும் சரித்திரம் நிச்சயம் உருவாகும்

அரசனும் ஆண்டியும் ஆண்டவர்முன் ஒன்றே!
முதலாளியும் தொழிலாளியும் முதல்வன்முன் ஒன்றே!
நோயுற்றவனும் நோயற்றவனும் சுகம் தருபவர்முன் ஒன்றே!
நிலமும் நீரும் ஒளியின்முன் ஒன்றே!
நல்லோரும் தீயோரும் மழையின்முன் ஒன்றே!
ஆண்டானும் அடிமையும் அன்பிற்குமுன் ஒன்றே!
ஆண்டவன் பார்வையில் அனைத்தும் நன்றே!

௬

பவுல் சென்ற பாதை எல்லாம்
திருச்சபைத் தோன்றினாலும்
தொண்டும் போதனையும் செய்தாலும்
பிளவு கொண்ட மக்கள்
பிணக்கு நீக்கிச் சமத்துவமாய் வாழ
பாங்கான பதிமூன்று கடிதங்களும் மலர்ந்தது

சமரசநாயகன் பவுல் மாண்பையும்
மாண்பில் அன்பையும்
அன்பில் பண்பையும்
பண்பில் பணியையும்
பணியில் ஆசீரையும்
ஆசீரில் கிறிஸ்துவையும்
கிறிஸ்துவில் தன்னையும்
தன்னில் துன்பத்தையும்
துன்பத்தில் மனநிறைவையும்
மனநிறைவில் சமத்துவத்தையும்
சமத்துவத்தில் இறையாட்சியையும்
இறையாட்சியில் நற்செய்தியையும்
நற்செய்தியில் சேவையையும்

சேவையில் செம்மையையும்
செம்மையில் வாழ்வையும்
வாழ்வில் சாட்சியையும்
சாட்சியில் நம்பிக்கையையும்
நம்பிக்கையில் உறுதியையும்
உறுதியில் எதிர்நோக்கையும்
எதிர்நோக்கில் கிறிஸ்தவத்தையும் படைத்திட
சரீரத்தில் அவர் ஏற்ற விழுப்புண்கள் ஈராயிரம்

❼

என்இன மக்களே எனக்கெதிரி ஆனதாலே
அறிவு பெற்றிருந்தும் கிறிஸ்துவின் சமத்துவத்திற்கு அறிவிலியானேன்
சீரிய சிந்தனை தந்தேன் சிறையில் அடைபட்டேன்
கொடுமையை எதிர்த்தேன் கொடுமையாய் அடிபட்டேன்
பாவமே சாவென இருந்தவரைக் காத்தேன்
காத்ததால் சாவின் வாயிலில் நின்றேன்
நிறைவே சமத்துவம் என்றேன்
இதனால் ஐந்துமுறை நாற்பது அடி ஒன்று குறைய அடிபட்டேன்
மூடப்பழக்கங்களை கலைந்தேன் மும்முறை தடியடிப்பட்டேன்
மூலைக் கல்லான முதல்வனை விதைத்தேன் முதல் கல்லடிப்பட்டேன்
அகிலம் படைத்தவரை அறிவித்தேன் ஆழ்கடலில் அல்லலுற்றேன்
ஆறாலும். ஆட்களாலும், கள்வராலும், கயவராலும் காயப்பட்டேன்
கண்விழித்தேன் சமத்துவக்கண் திறக்க!
பசித்திருந்தேன் சமத்துவம் புசிக்க!
தாகமுற்றேன் சமத்துவச் சாரைப்பருக!
குளிரில் வாழ்தேன் வாழ்வைச் சமத்துவமாக்க!
ஆடையின்றி இருந்தேன் அகில்த்தைச் சமத்துவமாக்க!

சமத்துவத்தால் அவர்கள் எபிரேயரா?
நானும் எபிரேயன்
சமத்துவத்தால் அவர்கள் இஸ்ரேயலரா?
நானும் இஸ்ரேயலன்

சமத்துவத்தால் அவர்கள் ஆபிரகாமின் வழிமரபா?
நானும் அபிரகாமின் வழிமரபினன்
சமத்துவத்தால் அவர்கள் கிறிஸ்துவின் பணியாளரா?
நானும் கிறிஸ்துவின் பணியாளன்

ஆண்டவரின் அன்பாலும்
ஆவியானவரின் பண்பாலும்
தூயவரின் துணையாலும்
துன்பங்களைக் கடந்து புறப்பட்டேன்

சமத்துவம் படைக்கப் பந்தயம் ஓடினேன்
போராட்டம் என்னும் போதை உலகில்
சமத்துவத்தைக் காக்கச் சாதனைப் படைத்தேன்
ஓட்டத்தை முடித்தேன் நம்பிக்கை என்னும்
சமத்துவச் சமுதாய இறையாட்சியைக் காத்தேன்
கர்த்தரின் கரம் சேர்ந்தேன்
தூயவரின் குழு சேர்ந்தேன்
சேர்ந்தேன் செம்மறியின் நிறைவாழ்வில்
நேற்றும், இன்றும் என்றும் கிறிஸ்துவின் சமவாழ்வில்
பவுலின் பணிவாழ்வில் சமத்துவம் கண்டேன்!

எ. சீடத்துவம்

சகோ. பன்னீர் ராஜா
இறையியல் முதலாமாண்டு
மதுரை உயர் மறைமாவட்டம்

❶

திருச்சபையின் ஏற்றத்திற்கும்
திரளான மக்களின்
திடமான நம்பிக்கைக்கும்
திட்டங்களை வகுத்து
தீர்க்கமாய்ச் செயல்படுத்தி
திருஅவையின் தூணாய்
இன்றளவும் விளங்குபவர்
தூய பவுல்...

கிறிஸ்தவம் என்போரை
கிழித்தெறி என்பதை
கீதமென இசைத்தவர்
கிறிஸ்துவின் சந்திப்பால்
சவுல் மனமாறி
கிறிஸ்தவன் நான்என
மார்தட்டிச் சொன்னவர்
தூய பவுல்...

பல்லாயிரம் மைல்கள்
பயணம் செய்து
பகலவன் கிறிஸ்துஎன
பறைசாற்றி மகிழ்ந்து
பாருக்கு உணர்த்துவதை
பணியென ஏற்று
திருத்தூதரனார்

தூய பவுல்...
கிறிஸ்துவின் பெயர் விளங்க
திருத்தூதுப் பணியினை ஏற்றார்
பவுலின் பணி பிற
இனத்தார்க்கு நற்செய்தி அறிவித்தலே
நற்செய்தி அறிவிப்போரின் பாதம்
எத்துனை அழகாய் இருக்கிறது

❷

கிறிஸ்துவின் சீடர் என்போர்
கிறிஸ்துவின் ஊழியர் ஆவதே (உரோ 15:16)
மக்களின் மடமை போக்கி
மங்கா நம்பிக்கை ஊட்டி
மாண்புற உதவுவதே சீடத்துவம் (1 கொரி 3:5)

நற்செய்தி அறிவித்து நன்மக்களாய்
கிறிஸ்துவில் ஈன்றெடுத்து உண்மையாம்
கிறிஸ்துவின் ஒளியின் வழி
வாழ நடத்திச் சென்று
இருப்போரிடம் பெற்று அதனை
இல்லாதோர்க்கு அளிப்பதும் சீடத்துவமே

எல்லா மக்களுக்கும் நம்பிக்கையூட்டி
நற்செய்தித் தொண்டர் ஆதல்
நல்லதொரு சீடத்துவப் பணியே (எபே 3:7)

நம்பிக்கை அடிப்படையாய் அமைய
நன்னிலமாய் மாற்றிடத் துணிந்தார்
நற்செய்தி அறிவித்து மனமாற்றி
நம்பிக்கை மக்களுக்கு வழங்கினார்

சீடத்துவ வாழ்க்கை சிக்கலானது
சிறை வாசமும் மரிப்பும்
துரத்தி வரும் நிகழ்வுகளென
தூய பவுல் உணர்த்துகின்றார்

இறையருள் பெற்று விளங்கும்
இன்பம் நிறை வாழ்வே
இயேசுவின் சீடத்துவ வாழ்வு
திருத்தூதரோ மக்கள் அளிக்கும்
தீர்ப்பைக் கருத்தில் கொள்ளார்
ஆண்டவர் ஒருவரின் தீர்ப்பையே
ஆகமமாய் எண்ணத்தில் கொள்வார் (1 கொரி 4:2)

அவமதிப்பிற்கு அன்பினை வழங்கவும்
குப்பை போன்று கூடையின்
கடைசியில் கிடந்து உழல்வதும்
திருத்தூதரின் பணி வாழ்வே (1 கொரி 4:13)

❸

இறைவனின் வாக்கைத் தனது
இன்சொல் வாயிலாக இனிமையும்
இடித்துரைத்தலும் கூடவே எடுத்துரைப்பதும்
சீடத்துவப் பணியின் மகத்துவமே (கொலோ 1:25)

போலியை உணர்த்தி மக்களை
மனம்திருப்பி இறை உறவாக்குவது
சீடத்துவ பணியின் மகத்துவமே (கொலோ 2:7)

கடவுளுக்கு உகந்த வாழ்வை
காணும் மக்களுக்கு உணர்த்தலும்
திருத்தூதுப் பணியின் மகத்துவமே

தூய மனச்சான்று கொண்டு
விசுவாச மறைபொருளைக் காத்தலும்
திருத்தூதுப் பணியின் மகத்துவமே

உலகப் போக்கினை விட்டொழித்து
இறைப் பற்றிலே வளர்வதும்
சீடத்துவப் பணியின் மகத்துவமே
பாவம் செய்வோரைக் கடிதலும்

பாவப் பட்டோரை ஏற்றலும்
திருத்தூதுப் பணியின் மகத்துவமே

❹

சீடர் ஏற்கும் துன்பங்களே
சீடத்துவ வாழ்விற்கு மற்ற
சிலருக்கு விடுக்கும் அழைப்பே (எபே 3:13)

எதிர்ப்பினைக் கண்டு அஞ்சாமல்
ஏற்றமிகு வாழ்வு வாழ
ஏற்ற துணிவை இறைவனிடம்
இருந்தே பெறுவர் திருத்தூதர் (1தெச 2:2)

கடவுள் சீடருக்கு அளித்தது
கோழை உள்ளம் அல்ல
கட்டுப்பாடு, வல்லமை, அன்பும்
கொண்ட உள்ளம் தான்...
இவையே சீடத்துவத்தின்
தலையாய பண்புகள்...

ஏ. துன்பம் எனக்குத் துணைவன்

திருத்தொண்டர் தொன் போஸ்கோ
இறையியல் நான்காமாண்டு
வேலூர் மறைமாவட்டம்

❶

அறிவிலியெனத் தனைத்தாழ்த்தி
தரணியெங்கும் தனக்கென
தனித்துவத்தைத் தந்தவர்
புறவினத்தாரின் திருத்தூதர்
தூய பவுல்!

அகந்தையாய் அலைமோதி
ஆர்ப்பாட்டம் அரங்கேற்றி
ஆதவன் படைப்பிலே
அந்நியனாய் அலைந்தது போதுமென
அவருக்காக அனைத்தையும்
துறக்கத் துணிந்தவர்
துயரைச் சற்றுக் கேளுங்கள்!

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த
நினைத்தவர்
கிறிஸ்துவுக்காக துன்புற்றார் – என்ற
உண்மையைச் சொல்லட்டும் எந்தன்
துன்ப அனுபவங்கள்!

தலைவனின் துன்பத்தில்
ஒரு சிலுவையாவது
அனுபவிப்பதில் ஆனந்தம்!

பண்படாத நிலத்தில் பலனை
எதிர்ப்பார்ப்பதெங்கே இவ்வுலகில்

இந்த நிலம் பண்பட்டது
தமஸ்கு போகும் வழியில்!
துன்பத்தைத் தூசி தட்டித்
துணிச்சலாய்த் தோள் மேல் போட
துணை நின்றது அந்த வழிப் பயணம்!

அவர் துன்பம் பார்க்கையில்
என் துன்பம் வெறுமையாய் நின்றதுதான்
உண்மை!

வீணாய் விலகிப் பொகும் வேதனைக்காக
இதய வீணையில் எழும் நற்செய்தியிசைக்கு
வேலி போடமுடியுமோ?

துன்பமில்லாமலிருந்தால்
இயேசுவின் உன்னத அன்பை
அனுபவிக்காமலே
அடங்கியிருப்பேன் மண்ணுக்குள்!

துன்பமில்லாமலிருந்தால்
யான் கொண்ட ஈடில்லா அன்பை
சொல்லாமலே மாண்டிருப்பேன்!

என்னோடு வாருங்கள்
என் பயணத்தின் படியில் எத்தனை
முட்கள் எனக் காட்டுகிறேன்!

ஐம்முறை ஒன்று குறைய நாற்பது
சாட்டையடிகள் - யூதர்கள்
ஏதோ சாதித்ததாகச் சோர்ந்து விழுந்தனர்
சாட்டையைப் போல!

கல்லின் கனத்தையும் தரம்பார்த்தது
என் கண்கள்
கல்லின் நிறத்தையும் நிறமாற்றியது
என் குருதி
கல்லுக்குள் ஈரமில்லை கள்வர்களுக்குள்ளும்

ஈரமில்லை - இன்னும்
இரத்தத்தின் ஈரம் மட்டும் காயவில்லை
நான் ஒரு முறை கல்லடி பட்டபோது!

கண்முன்னே கயவர்கள் கல்லடிகள்
ஸ்தேவானின் நற்செய்திப் பணிக்கு
கல்லறை கட்டிவிடலாமென்ற
மடமையை நினைத்து
வேதனைப்படுகின்றேன்!

அன்று
புரிந்தது அம்மனிதனின் வேதனை
நான் ஒருமுறை கல்லடி பட்டபோது!

கல்நெஞ்சம் கொண்ட
கயவர்களுக்குத் தெரியாது
கடமைக்காகக் கலங்காமல் கல்லாய்
நிற்போமென்பது!

சிறையிலடைத்துச் சிறையிடத்
தெரிந்தவர்க்குத் தெரியாது
நின் சிந்தனை
சிறையில் சிறைபட்டுவிடாதென்பது!
சிறையில்தான் எழுந்தது
சில மறைகள்
கிழித்தது இதயத்திரைகள்
அழித்தது பாவக்கறைகள்!

என் வேதனை நிச்சயம் இருக்கும்
உங்களுக்கும்...

❷

அனாதையாய் ஒரு நிமிடம் இருந்துபார்
சிறை வேதனை புரியும்!

விதவையாய் ஒரு நிமிடம் இருந்துபார்
சிறை வேதனை புரியும்!
ஏழையாய் ஒரு நிமிடம் இருந்துபார்
சிறை வேதனை புரியும்!
பெண்ணாய் ஒரு நிமிடம் இருந்துபார்
சிறை வேதனை புரியும்! - ஆனால்
உள்ளம் மட்டும் சிறைபடாமல் பார்த்துக்கொள்!

எந்தன் பன்முறைச் சிறையனுபவம்
தரும் செய்தி இது!

நற்செய்திக்காய் நற்செயலுக்காய்
விரட்டி அடித்தார்கள்
சாவின் விளிம்பு வரை

நன்மை செய்பவனுக்குக் கிடைக்கும் பரிசு
இதுதான்!
என் வலி நிச்சயம் உண்டு உங்களுக்கும்
இரத்தம் குடிக்கும் ஒரிசா மண்
தாகம் தீராமல் தலைவிரித்தாடுகிறது
கிறிஸ்தவர்களுக்கெதிரான
வன்முறையில் - அங்கே
சாவின் வாயிலில்
சோறு உண்கிறார்கள்
சுருண்டு படுக்கிறார்கள்
சுக்கு நூறாகிறார்கள்!

உம்மில் தொடங்கிய
இரத்தப் பயணம் யுத்தப் பயணம்
தொடர்கிறது இன்றும்
மதத்தின் பெயரால்!

சாவைச் சாதாரணமாய்ச் சந்திக்கும்
வித்தையைக் கற்றுக்கொள் - என்
துயரக் கிண்ணத்திலிருந்து!

எங்கே இந்த பவுல்
நம்மையும் பவுலாக்கிவிடுவாரோ
என்றச்சம் மேலிழுக்க
குற்றமதை வலுவாகச் சுமத்தி
ஐந்து முறை சலிக்காமல்
நாற்பது தடவைச் சாட்டையடி
பரிசாக்கினார்!
என் ஊனுடலைக் கிழித்தது – ஆனால்
உள்ளம் கிழியவில்லை!

அறிவிலிகள்...
உள்ளத்தில் ஒய்யாரமாய் அமர்ந்திருப்பவரை
ஒழித்துவிடலாமென நினைத்து
உடலைக் கிழிக்கிறார்கள்!
உடல் ஊனப்பட்டாலும்
உள்ளம் ஊனப்படாது!

என் வலி நிச்சயம் உண்டு உங்களுக்கும்
சாதியச் சமூகத்திடையே!

சமத்துவம் சமரசம் பேசி
சாமானியச் சமூகத்தினனை
சரித்திரம் முத்திரையிடுமளவுக்கு
சாதியச் சாட்டையால் எத்தனை முறை
கிழித்திருக்கிறாய் - மனிதனை
பிரித்திருக்கிறாய்!
மதச்சாட்டையால்
நிறச்சாட்டையால்
மொழிச்சாட்டையால்
எத்தனை முறை
கிழித்திருக்கிறாய் - மனிதனை
பிரித்திருக்கிறாய்

ஆனால் - நீ
உடலைக் கிழித்தாலும்

உள்ளம் கிழிந்துவிடாமல்
பார்த்துக்கொள்!

அன்றாடத் தேவைகள் - நிற்கிறது
அதிசயங்கள் வரிசையில்
உழைக்கும் மக்களுக்கு!
ஆனந்தக் கூத்தாடும் அந்நிய
செலாவணிக்கு
அலங்காரம் செய்யும்
அதிகார முதலைகள்
ஆறடி மண்தான் சொந்தமென
அறியாத அறிவாளிகள் - இன்னும்
எதைச் சேர்க்கலாமென்று
கழுகுப் பார்வை பார்க்கும்
பணக்கார முதலைகள்
இருக்கும் வரை
பசி பட்டினி ஏழ்மை உழைப்புத் தான்
இவர்கள் நிரந்தரச் சொத்து!

❸

நானும்
அதிகார முதலைகள் போர்வையில்
பட்டினி கிடந்தேன்
குளிரில் வாடினேன்
பன்முறை கண் விழித்துக் கிடந்தேன்!

ஆனால்
உழைப்பதாக நினைத்து வருந்தாதே
நீதியென்பதைத் தொடர்ந்து செய்
நிம்மதி தானே பின் தொடரும்!

ஆழ்கடலில் ஓர் இரவும் ஓர் பகலும்
அல்லலுற்றேன்!
எனது பயணங்கள்
சுகமான பயணங்களில்லை

சொந்த மக்கள் பிற மக்கள்
கள்வர்கள் போலித் திருத்தூதர்கள்
இடர்களுக்கு ஆளானேன்!
உரோமைக் குடிமகனை யூதர்கள்
மனந்திருப்ப அனுமதியில்லையென
காரணங்காட்டிச் சட்ட விரோதமென
சிறையிலிட்டார்கள்!

புறவினத்தாருக்கு
கோயிலில் அனுமதியில்லை
என்றிருக்க
தூய்மைச் சடங்கிற்காய் யாம் நுழைய
ஆலயம் புகுந்தனர்
யூதக் கிறிஸ்தவர்கள்
காரணம் கிட்டியவர்க்கு
பொய்ப் போதனையொன்று
கைது செய்யப்பட்டு
ஈராண்டு செசரியாவில்
சிறையிருந்தேன்!

மீராவிலிருந்து இத்தாலியா
நோக்கிய பயணமதில்
புயலின் பிடியில்
சிக்கிய கப்பல்
மால்தா கரை அருகே
உடைந்தது – பின்னர்
தங்கும் வீடே சிறையானது
உரோமை அரசால்!

4

இயேசுவுக்காகத் துன்புறுவதை
இன்பமாக எண்ணுகிறேன்
என் வலுவின்மையை நினைத்து
பெருமை பாராட்டுகிறேன்!

துன்பம் எனக்குத் துணைவன்
துவண்டுவிடாமல் என்னோடு
இருக்கிறான்!

ஆண்டவனுக்காகத் துன்பப்படுவது
அவர் மக்களுக்காக
துன்புறுவதாகும் - அதை
மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டேன்!

பஞ்சு மெத்தையென படுத்துறங்கலாம்
என்றெண்ணுபவர்க்குத் துன்பம்
பாடையாகிறது!
பஞ்சாப் பறக்கவிட்டு
துச்சம் என்றெண்ணுபவர்க்கு
துன்பம் தூக்கிப்பிடிக்கும்
மேடையாகிறது!

என் துன்ப மேடையில்
எனக்கான கதாப்பாத்திரம்
நொறுங்கிடவில்லை – உங்களுக்கு?

ஐ. அழைப்பு விடுக்கும் அழைப்பு

திருத்தொண்டர் பால் வேளாங்கன்னி
இறையியல் நான்காமாண்டு
வேலூர் மறைமாவட்டம்

கவிதையில் வடிக்க...

பவுலே
நான் உன்னை எழுதுகிறேன்
உன்னைத் தொட்ட ஒளி
என்னையும் தொடலாமே!
உனைப் போல் நானாக!

உருவமற்ற
பாறை ஒன்று
உருவமாக மாறியதை
காவியமாய்க் கனிந்த எனது
கவிதையில் நான் வடிக்க
கிடைத்த வாய்ப்பு என எண்ணி
மகிழ்கிறேன்!

கடந்த காலம்

சவுல்
இனத்தால் இஸ்ராயேலன்
குலத்தால் பென்யமின்
தர்சு நகரில் பிறந்தவன்
மொழியால் எபிரேயன்

கமாலியேலின் காலடியில்
கல்வி பயின்றவன்
திருச்சட்டம் பேசியதில்
பரிசேயன்

சட்டத்தில் பற்றிருந்ததால்
கிறிஸ்து நெறியை அழிக்க
ஆண்களையும் பெண்களையும்
சிறைபிடித்துச்
சாகும் வரை துன்புறுத்தியவன்!
இவைகள்
சவுலுக்கு
அர்த்தமற்ற வரவுகள்!

தமஸ்கு அனுபவம்

தமஸ்கு என்னும்
அழகு நகர்
கிறிஸ்தவர் எண்ணிக்கை
உயர்ந்த நகர்!

புதுநெறியாம்
கிறிஸ்து நெறியை
வாழ்ந்த மக்கள்
ஏராளம் ஏராளம்!
இதனைத் தாங்காமல்
சீறியெழுந்து சவுல்
தமஸ்கு வாழ்வோரை
எருசலேம் இழுத்து வர
குதிரையில்ப் பறந்தார்
தமஸ்கு நோக்கி!

அது
நண்பகல் நேரம்
எதிர்பார்க்கவில்லை
பேரொளி ஒன்று
வானிலிருந்து வந்து
சவுலைச் சூழ்ந்தது!
கவிழ்க்க விரைந்தவர்
தடுமாறிக் கவிழ்ந்தார்
பார்வை இழந்தார்!

குரலொன்று கேட்டது
சவுலே சவுலே!
ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?
குரல் கேட்டதும்
சவுல் யாதுமறியாது
ஆண்டவரே நீர் யார்? எனக் கேட்க
நீ துன்புறுத்தும்
நசரேத்து இயேசு நான்!
எழு!
புதியவனாய் எழு!
தமஸ்கு செல்
செய்ய வேண்டியது சொல்லப்படும்
என்றார் ஆண்டவர்!

பவுல்
எழுந்தார்
உடனிருந்தவர் வழிநடத்த
தமஸ்கு சென்றார்
அனனியா என்னும்
மனிதரைக் கண்டார்!
அவர்
"பார்வை பெறு" என்றார்
பார்வை பெற்றார் பவுல்

மாற்றத்தின் வாசலில்
காலடி வைத்ததால்
தடைக் கல்லொன்று
படிக்கல்லானது!
முள்ளொன்று மலரானது!
கரடு முரடு
பண்பட்டது
உருவமற்ற பாறை
சிலையானது!
வடித்தவன் ஆண்டவன்
வடிவானவன் பவுல்!

ஒப்பற்ற செல்வம்

கிறிஸ்தவரைத்
தொலைக்கத் துணிந்தவர் – தன்னைக்
கிறிஸ்துவுக்குள் இழந்தார்

சவுல் உருமாறியதால்
உதவாத வரவுகள்
கிறிஸ்துவின் பொருட்டு
இழப்பானது!
ஏனெனில்
கிறிஸ்துவின் அறிவே
ஒப்பற்ற செல்வம்
கிறிஸ்துவை ஆதாயமாக்க
மற்றவை குப்பைகளே!

ஆண்டவரின் குரல் கேட்டு
அழிவுப் பாதையை விட்டு
அழைத்தவனின் அடிமையாகி
அவரின் நெறி பரப்ப
அனைவர்க்கும் அனைத்துமானார்!

மாற்றம்
மனம் விரும்பினால் மட்டும்!
அதில்
கடவுளின் திட்டமும் நிறைவேறும்!

நற்செய்தித் தூது

அன்னையின் வயிற்றில்
கருவான நாள் முதலே
பரம்பொருள் இறைவன்
பவுலைத் தமக்கெனத் தேர்ந்தெடுத்தார்!
நசரேயனின் நற்செய்தி அறிவிக்க
திருவுளம் கொண்டார் இறைவன்!
தமஸ்கு அனுபவம்
மாபெரும் திருப்பம்

அது
கடவுளின் விருப்பம்!
பவுலின் அழைப்பு
ஒரு மறுபிறப்பு!

அழிவைப் பேசிய நா
வாழ்வைப் பேசியது!
அழிப்பதற்கெனப்
புறப்பட்ட பயணம்
நற்செய்தி அறிவிக்கும் பயணமானது!

சுவரொன்று
பாலமானது!

துன்புறுத்தத் தூதனாயிருந்தவர்
துன்புற்றவனின் தரிசனம் கண்டு
திருத்தூதனாய்
ஒரு புது அவதாரம்
புது சகாப்தம்
புது அத்தியாயம்!

விளிம்பு ஒன்று
மையமானது!

இறைவன் ஆட்கொண்டதால்
புதிய இலக்குப் பிறந்தது
அதை நோக்கியே
ஓட்டம் தொடர்ந்தது!
அது
பரிசு பெறும் ஓட்டம்!
அந்த ஓட்டத்தில்
இன்பம் இருந்தது
துன்பம் இருந்தது!
வறுமை இருந்தது
வளமை வந்தது!
சாட்டையடி கிடைத்தது
கல்லடியும் கிடைத்தது!

சிலர் ஏற்றனர்
சிலர் வெறுத்தனர்!
எச்சூழல் எனினும்
ஆவியின் ஆற்றல்
துணையிருந்ததால்
கடவுளின் அருள்கரம்
தாங்கிப் பிடித்ததால்!
நிம்மதி இருந்தது
நிறைவு இருந்தது!

இதனால்
தன் விசுவாசத்திற்கு
பேச்சாலும் எழுத்தாலும்
வியர்வையாலும் குருதியாலும்
உழைப்பாலும் வாழ்வாலும்
சான்று பகர்ந்தார் அழகாக!

இன்றைக்கு...

தமஸ்கு அனுபவம்
நிகழனும்
அனைவரிலும்...

சமய வெறியர்கள்
சறுக்கி விழனும்
பவுலைப் போல
புதியவர்களாய் எழனும்!

ஒடுக்கும் தலைவர்கள்
குருடராகனும்
பவுலைப் போல
புதிய பார்வை பெறனும்!

நசுக்கும் மனிதர்கள்
இடறி விழனும்
நசுக்கும் மக்களின்

வலியை உணரணும்!
சாதி வெறியர்கள்
கதறி அழணும்
மனித மாண்புக்கு
குரல் கொடுக்கணும்!

அடக்கு முறைகள்
அடங்க வேண்டும்
அட்டூழியங்கள்
அழிய வேண்டும்!
அநீதத் தீர்ப்புகள்
எரிக்கப்படணும்
அடிமைத்தனம்
மறைய வேணும்1

உரிமை மீறல்கள்
புதைக்கப்படணும்
ஏகாதிபத்தியங்கள்
ஏமாறணும்!

சாதிப் பெயரால்
ஒதுக்கப்படல்கள்
சமயப் பெயரால்
நசுக்கப்படல்கள்

பயங்கரவாதத்தால்
பயமுறுத்தப்படல்கள்
அரசியலால்
சுரண்டப்படல்கள்!

தலைவர்களால்
மிதிக்கப்படல்கள்
அரசுகளால்
அலட்சியப்படுத்தப்படல்கள்

உரிமைகள்
மறுக்கப்படல்கள்
ஆணாதிக்கத்தால்
அசிங்கப்படுத்தப்படல்கள்
இவைகள்
சுட்டெரிக்கப்படனும்
எரிந்து சாம்பலாகனும்
புதிய பாதை பிறக்கனும்
புதுவாழ்வு மலரனும்

அழைப்பு...

எல்லாருமே
புதிய பயணம் போகனும்
அதில் இறைவனைச் சந்திக்கனும்
அனுபவம் பெறனும்
மனிதத்தை மதிக்கனும்
புது நெறியில் வாழனும்
இறையாட்சி மலரனும்...

ௐ. தூய வாழ்வு

சகோ. ஜான் கென்னடி
இறையியல் முதலாமாண்டு
பாளையங்கோட்டை மறைமாவட்டம்

❶

மொட்டுக்குள் வீழ்ந்த
சூழ்கள் செய்த தியானம்
காய் கனியாய்ப் பரிணமித்து
விருட்சக மரமாய் உயிர்த்ததே
பவுல் என்னும் இதயத்தாமரையில்
உயிர்த்த அனுபவம் கருக்கொண்டு
கடிதங்களாய்ப் பரிணமித்து
கிறிஸ்தவச் சமூகமாய்ப் பரந்து விரிந்ததே.
மக்களின் வாழ்க்கைக் குழப்பங்களுக்கு
விசுவாசச் சருக்கல்களுக்கு
வழிகாட்டும் வாழ்க்கைக் குறிப்புகள்
வாழ்ந்து சொன்ன வார்த்தைகள்
அனுபவப் பதிவுகள்தான் - இந்த
பதிமூன்று கடிதங்கள்.

ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கிய
உயிர்த்த ஆண்டவரின்
உண்மையின் தரிசனத்தை
உருக்கொடுத்துக் கருவாக்கி
வழிகாட்டும் அறநெறியாக
வார்த்தெடுத்து வழங்கிய
வாழ்க்கை நெறிமுறைகள்
வாழப்பட வேண்டியவை

அன்பை ஆதாரமாக்கி
கிறிஸ்துவை ஆதாயமாக்கி
வாழ்க்கை வசப்படும் வரை
இலட்சிய இலக்கை நோக்கி
தடம்பதித்து ஓடிப்பரிசுபெற
முயற்சித்துப் பயிற்சியளித்தார்.
உண்டாலும் உழைத்தாலும்
வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும்
இறைவனின் அதிமிக மகிமைக்காய்
ஒப்புக்கொடுத்து உயர்வடைய
ஓயாது அறைகூவல் இட்டார்.
சிலுவையைச் சிம்மாசனமாக்கிய
ஆண்டவர் இயேசுவின்
பாடுகளின் பயணத்தை
மனதில் நிலைநிறுத்தி
சோதனைகள் தொடரும்போது
வேதனைகள் கூடும்போது
மகிழ்வோடு எதிர்கொள்ள
மனதைப் பக்குவப்படுத்துவோம்.

❷

துன்பத்தின் வழிதான்
மீட்பின் சுவை ருசிக்கப்படும்
உயிர்த்த இயேசுவில் துளிர்த்த
நம்பிக்கையின் விடியலுக்காய்
ஏற்றுக்- கொண்ட பணிக்காய்
உயிரைத் துச்சமென எண்ணி
வாழ்ந்து மடிந்தால்
இறைவனின் அங்கீகாரம்
அரவணைத்துச் செல்லுமே
உலகத்தை உருவாக்கிய
உழைப்பின் ஆசீரை
வாழ்க்கையில் இணைத்து

வளமை சேர்க்க வேண்டும்.

வெட்டிக் கதை பேசி
வீண் வம்புச் சண்டைபோட்டு
அயலாருக்கு இடரலாய்
துர்மாதிரிக் கிறிஸ்தவனாய்
வாழ்வது வீணே.

எப்படியும் வாழலாம் என்றால்
கிறிஸ்துவைப் பின்பற்றுவது எப்படி?
உணர்ச்சிக்குத் தீனிபோட்டு
தரம் தாழ்ந்து
அறநெறிகளைக் களைந்து
மனம் போன போக்கு வாழ்ந்தால்
சாக்கடைச் சமூகத்திற்கும்
தேர்ந்தெடுத்த மக்களுக்கும்
வேறுபாடு என்ன?

❸

பிரிவினைகளைக் கடந்து
பிளவுகளைக் களைந்து
உயிர்த்த ஆண்டவரின்
உண்மைச் சீடர்களாய்
பரிணமித்துப் பறைசாற்றிட
சாட்சிய வாழ்வு வாழ
அழைப்பு விடுத்தார்.

ஆண்டவரின் விருந்தை
அடையாளமாய் கொண்டாட
ஒன்றுகூடி வரும் போது
உயர்வு தாழ்வு நீக்கி
ஏழைகளை மதித்து
மனிதத்தை விதைத்து
மனிதனை மாண்போடு நடத்த

சுயமரியாதையாக வாழ
அறவியல் நெறிமுறைகளை
மக்களின் மனங்களில்
மடியாமல் பாதுகாத்தார்.
வலுவற்ற சகோதரருக்கு
தடைக்கல்லாய் வாழாமல்
குறைகளை நிறைவுசெய்து
இணைந்து பயணிக்க
இதயங்களைத் திறந்தார்.
குழப்பங்களின் மனநிலை
போராட்டமாக வெடித்தது
அறிவுக்குத் தெரிந்தது
மனதுக்குப் புரியவில்லை
மனதுக்குப் புலப்பட்டது
அறிவுக்கு எட்டவில்லை.

❹

உணாச்சிகளோடு உள்ளமும்
உள்ளத்தோடு உடலும்
உடலோடு அறிவும்
போராடித் தவிக்கிறது.
தத்தளித்து அலைக்கழித்து
கரை ஒதுங்கும் ஓடமாய்
காயப்பட்ட இதயங்கள்
கடவுளில் தஞ்சம்
விடைதெரியா வினாக்களுக்கு
உள்ளத்தின் குமுறல்களுக்கு
மனித அறிவு
பதில் மறுக்கும் போது
தூய ஆவியின் ஞானம்
நம்மைத் தேற்றி அரவணைக்குமே.
வாழ்வளிக்கும் வழிநடத்தும்
ஆவியின் அருளை

விரும்பித் தேட வேண்டும்
உள்ளங்களில் குடிகொள்ளும் ஆவி
நன்மை தீமையைப்
படம் பிடித்துக் காட்டுமே.
ஆவியின் கனிகளும் கொடைகளும்
வாழ்வை வளப்படுத்தும்
அரிய பொக்கிஷங்கள்.
தூய்மையாய் உண்மையாய் வாழ
துணையாளரின் துணைவேண்டுமே.
உள்ளத்தைத் தூய்மையாக்கி
இறைவன் உறையும் ஆலயமாக
உடலை உருவாக்கும்
உன்னதச் செயலே
ஆவியின் அடையாளம்.

❺

தூய ஆவியின் துணைகொண்டு
எதையும் செய்ய முடியும்.
உலகத்தின் மடமை
இறைமையின் ஞானம்
சாதாரண சாமானியச் சவுல்
கடவுளின் அழைப்பாக
அனுப்பப்பட்டவராய் அதுவும்
புறவினத்துப் போதகராய்
திருச்சபையின் தூணாய்
வாழ்ந்து மடிந்தார்.
தூய ஆவியின் அருள்வாழ்வைத்
துணையாகக் கொண்டு
பயணங்கள் பலசெய்து
கிறிஸ்தவத்தைத் தழைக்கச் செய்த
பவுலின் பிறப்பின் இரண்டாயிரம் ஆண்டு
அரைகூவல் விடுக்கும் சவால்கள் என்ன?

உயிர்த்த ஆண்டவரின்
விழுமியப் போதனைகள்
இறையாட்சிக் கனவுகள்
உலகத்தில் நிறைவேற
கருவிகளாய் உருவாக
உள்ளமும் உடலும்
பக்குவம் பெற்றுப் பரிணமிக்க
உன்னையே தயார்படுத்த வேண்டுமே.
தூய்மையான வாழ்வும்
தூய ஆவியில் வாழ்வும்
உள்ளத்தில் வேரூன்றி
அனுபவமாக உருமாறி
சாட்சியப் போதகனாக
சாமானிய மனிதர்கள் நாமும்
சரித்திரம் படைப்போம்
சாதனையாளர்களாவோம்.

பவுல்
ஒரு சகாப்தம்

- வாளைத் தொலைத்தவன் வீரனாய்ப் போனான்
  அவன் ஆயுதம் இல்லா நிராயுதபாணியல்ல
  அவனுக்கு அன்பு ஆயுதம் ஆயிரம் அம்புகளாய்

- நித்தம் உழைத்து நித்திரை தொலைத்து வாழும்
  சித்திரம் இங்கே வீழும் சரித்திரம் சகியோம்!
  அறிவு புகட்டவா - பவுலே அறிவு புகட்டவா

- அரசனும் ஆண்டியும் ஆண்டவர் முன் ஒன்றே!
  முதலாளியும் தொழிலாளியும் முதல்வர் முன் ஒன்றே!
  ஆண்டானும் அடிமையும் அன்பிற்கு முன் ஒன்றே!
  ஆண்டவன் பார்வையில் அனைத்தும் நன்றே!

தேடல் வெளியீடு
தூய பவுல் இறையியல் கல்லூரி
திருச்சி - 620 001. ☎ 0431 - 2402500, 2402501